# பரிமள கேசவன்




வை. மு. கோதைநாயகி அம்மாள்

# பரிமள கேசவன்

வை. மு. கோதைநாயகி
அம்மாள்

**மின்னூல் வெளியீடு :**

**http://FreeTamilEbooks.com**

உரிமை - CC0 கிரியேடிவ் காமென்ஸ்.

எல்லாரும் படிக்கலாம், பகிரலாம்.

பதிவிறக்கம் செய்ய - http://FreeTamilEbooks.com/ebooks/parimala_kesavan

அட்டைப்படம் - லெனின் குருசாமி - guruleninn@gmail.com

மின்னூலாக்கம் - ஐஸ்வர்யா லெனின் - aishushanmugam09@gmail.com

கணியம் அறக்கட்டளை

(kaniyam.com/foundation)

This Book was produced using LaTeX + Pandoc

# மின்னூல் வெளியீடு

மின்னூல் வெளியீட்டாளர்: http://freetamilebooks.com

அட்டைப்படம்: லெனின் குருசாமி - guru-leninn@gmail.com

மின்னூலாக்கம்: ஐஸ்வர்யா லெனின் - aishushanmugam09@gmail.com

மின்னூலாக்க செயற்திட்டம்: கணியம் அறக்கட்டளை - kaniyam.com/foundation

# Ebook Publication

Ebook Publisher: http://freetamilebooks.com

Cover Image: Lenin Gurusamy - guru-leninn@gmail.com

Ebook Creation: Iswarya Lenin - aishushan-mugam09@gmail.com

Ebook Project: Kaniyam Foundation - kaniyam.com/foundation

# பொருளடக்கம்

Acknowledgements: . . . . . . . . . . . . 9

ஸ்ரீ பரிமள கேசவன் . . . . . . . . . . . 11

1-வது அதிகாரம் - பட்ட காலிலே படும்; கெட்ட குடியே கெடும் . . . . . . . 12

2-வது அதிகாரம் - எத்தன் கையில் சிக்கிய உத்தமி . . . . . . . . . . . 43

3-வது அதிகாரம் - பற்றுடையோரன்பு - சிற்றின்பத் துன்பம் . . . . . . . . 63

4-வது அதிகாரம் - பிறைமதி - நிறைமதி 131

5-வது அதிகாரம் - புதையல் கண்டெடுத்த நிதிகள் . . . . . . . 182

6-வது அதிகாரம் - அன்பை அழிக்கும் துன்பப் பேய்கள் . . . . . . . . . . 237

7-வது அதிகாரம் - சினிமா நடிப்பு- இனிய சந்திப்பு . . . . . . . . . . . 284

8-வது அதிகாரம் - உயிரினும் இனியது உண்மைக் காதல் . . . . . . . . . 359

9-வது அதிகாரம் - விவாக மகிழ்ச்சி-
விபரீத நிகழ்ச்சி . . . . . . . . . . . . 420
10-வது அதிகாரம் - கிலியே கொல்லும்-
புலியே வெல்லும் . . . . . . . . . . 495
11-வது அதிகாரம் - பகலவனைக்
கண்ட பனி . . . . . . . . . . . . . . . 559
கணியம் அறக்கட்டளை . . . . . . . . . . 595

# Acknowledgements:

Our Sincere thanks go to Tamil Virtual Academy for providing a scanned PDF of this work.

This e-text has been prepared using Google OCR online tool and subsequent proofeading of the output file. Our sincere thanks go to Mr. R. Navaneethakrishnan for his assistance in this task.

Preparation of HTML and PDF versions: Dr. K. Kalyanasundaram, Lausanne, Switzerland.

© Project Madurai, 1998-2023.

Project Madurai is an open, voluntary, worldwide initiative devoted to preparation of electronic texts of Tamil literary works and to distribute them free on the Internet.

Details of Project Madurai are available at the website https://www.projectmadurai.org/

You are welcome to freely distribute this file, provided

this header page is kept intact.

**கலைமகள் துதி**

வெண்டா மரையுறையும் மெல்லியலே என்னுளத்துத்

தண்டாது நின்று தனிக்காக்கும் –வண்டார்

பரிமள கேசவனாம் பண்புடை இந்நூலை

உரிமையுடன் செய்ய உவந்து.

**கணபதி துதி**

பரிமள கேசவனைப் பன்னுதற்கென் னெஞ்சில்

கரிமுகனே வந்தருள்வாய் காப்பு.

# 1-வது அதிகாரம் - பட்ட காலிலே படும்; கெட்ட குடியே கெடும்

“பிராணநாதா! நான் எத்தனை நாட்களாகச் சொல்கிறேன். அதை அடியோடு மறந்து, மதியாது அலக்ஷ்யம் செய்கின்றீர்களே! பாழுங் குடியும்,வேசியும் ஒரு ஆளைக் கொள்ளும் யமனல்லவா! நமது குடும்பம் முன்னர் பெரியார் நாளில் எவ்வித செழுமையாக இருந்தது? இப்போது எந்த கதியை அடைந்திருக்கின்றது? இந்த சாப்பாட்டுச் சமயத்தை விட்டால் தங்களைப் பார்ப்பதற்கே அரிதாக இருக்கின்றதே ! இவ்விதம் இருந்தால் நான்கு குழந்தைகளும் நானும் எக்கதியாவது? இந்த துர்ப்பழக்கத்தை ஒழியுங்கள்; இனி வேண்டாம். இந்த புட்டியை நான் கட்டாயம் உடைத்தே தீருவேன்” என்று கூறிச் சாராயப் புட்டியைக் கணவனின்

கைவிலிருந்து கோமதி என்ற மின்னாள் பிடுங்க முயன்றாள்.

அட்டகாஸமாக வாய்ப் பேச்சைக் கொட்டி, சட்டதிட்டமாக அளந்து விட்டு சமயம் கிட்டி முட்டி வருங் காலையில் கிட்ட செருங்காமல் கை விட்டு எட்டிச் சென்று வேடிக்கை பார்க்கும் மட்டு மரியாதை யற்ற கட்டைகளும் சிலர் உண்டு.

புட்டி புட்டியாகக் குடியைத் தள்ளும் குண்டோதானின் முன்பு சாமானிய எளிய பேதையின் பலம் சாயுமா! அவன் அவளை இழுத்துத் தாறுமாறாகத் தள்ளி உதைத்து "திமிர் பிடித்த நாயே ! எனக்கு புத்தி சொல்ல வேண்டாம் என்று நான் எத்தனை தரம் சொல்வது. இன்னும் இந்த அகம்பாவத்துடன் இருக்கிறாயா! இனி இப்படிப் பேசாதே. என் இஷ்டம். என் மனம் விரும்புகிற விதந்தான் நான்இருப்பேன், சீ விலகு" என்று தள்ளிவிட்டு, புட்டியிலிலிருந்த சாராயத்தைப் பொட்டு

விடாது குடித்து விட்டுத் தாசி லோகாம்பாளின் வீட்டிற்கு ஓடினான்.

கோமதி என்ற மடந்தைக்கு வயது 18 இன்னும் பூர்த்தியாக வில்லை. இதற்குள் 4 குழந்தைகள். அவள் தனது 13-வது வயதிலிருந்து குழந்தைகளைப் பெறும் யந்திரமாயும், வீட்டு வேலை செய்யும் எந்திரமாயும் குடிகாரனிடம் சிக்கிக்கொண்டாள். கேவலம் சிறிய வயது முதல் குழந்தைகளைப் பெற்றுக் குடிகாரனின் உதைகளுக்கும், வெறி கொண்ட செய்கைகளுக்கும், வீட்டு வேலைகளுக்கும் இலக்காகியதால் மிக்க மெலிவடைந்து தேக புஷ்டியும், ரத்த வலிவும் குறைந்து கேவலம் க்ஷீண திசைக்கு அவள் வந்து விட்டாள்.

அவள் தன்னாலான வரையில் அவன் குடிப்பதையும், தாசி வீடு போவதையும் எத்தனை தடுத்தும் அந்தப் படுபாவி அதை

சட்டை செய்யாது தன் வேலையிலேயே கண்ணுக் கருத்துமானான்.

“எனக்கு என்ன குறைவு? என் சினேகிதனே எனக்கு விவாகத்தை முடித்து வைப்பதாகச் சொல்லி விட்டான்” என்று தைரியமாகப் பெண் பேசியாகிய பிறகு சினேகிதனிடம் தெரிவித்தால், ”நான் சொல்லியது உண்மைதான். இச் சமயம் எனக்கு இவ்வித செலவு வந்து விட்டது. என்ன செய்வேன்?

அவன் தச்ச வேலை செய்து, தினம் கிடைக்கும் கூலியில் பெரும் பாகம் தன்னிரு செலவுகளுக்கும் போக எஞ்சிய சிறு அணாத் தொகையைக் குடும்பத்திற்குக் கொடுத்து வந்தான். அந்த சிறு தொகை குடும்பத்திற்குப் போதாமல் அனேக நாள் பட்டினி கிடக்க நேரும். குடிகாரன் தான் பணங் கொடுக்காத குற்றத்தை மறந்து “சாப்பாடு வயனமாக

நான்குவகை ஏன் செய்யவில்லை?” என்று மனைவியை உதைப்பது வழக்கம். இவ்விதமே வெகு நாட்களாகத் தொந்தரவு செய்து கொண்டிருந்தான்; நாளா விருத்தியில் சிறு தொகை கொடுப்பதையும் நிறுத்தி விட்டான். பின்னும் சில மாதத்தில் சாப்பிட வருவதையும் நிறுத்தி விட்டான்.

நான்கு குழந்தைகளுடன் ஒரு பேதை என்ன செய்வாள் பாவம்! இரண்டு வீடுகளில் வேலை செய்ய ஆரம்பித்தாள். அதோடு ஆபீஸ்களுக்கு நான்கு பேருக்குச் சாப்பாடு எடுத்துச் செல்வதை ஏற்பாடு செய்து கொண்டாள். தினம் காலை வீட்டு வேலைகளைச் செய்து விட்டு, பகல் 10 மணிக்கு நான்கு வீட்டிற்கும் சென்று சாப்பாடுகளை வாங்கி வருவதற்குள் பதினோரு மணியாகிவிடும். ஒவ்வொரு மூலையில் ஒவ்வொரு வீடு, அதுபோலவே

ஆபிஸும் ஒவ்வொரு இடமாக அவள் துரதிருஷ்டத்தினால் அமைந்தது.

பகல் பட படக்கும் வெயிலில் சென்னையிலுள்ள தார் ரோட்டில் தலையில் பெரிய பாரத்துடன் நடப்பதென்றால் அந்தோ! பரி தாபம்! பரிதாபம்! அந்தக் கண்ராவியை அனுபவித்தால் தான், கண்ணால் கண்டால் தான் தெரியும், வயிற்றுக் கில்லாக் கொடுமை யினாலும், நான்கு குழந்தைகளின் போஷணைக்காகவும் கோமதி அத்தகைய கொடிய வெயிலில் நடந்து, கால்கள் கொப்புளிக்கச் சாப்பாட்டை எடுத்துச் செல்லலானாள்.

நீ எப்படியாவது விவாகத்தைச் செய்து கொள். பிறகு உனக்கு நான் உதவி செய்கிறேன்.” என்று கூசாது சொல்லிவிட, நம்பிய மனிதன் அந்த மனிதன் வார்த்தையினால் வெம்பிப் போய்

விக்னேச்வார் விவாகம் செய்து கொண்டது போலச் சந்தியில் நிற்க நேருகின்றது.

ஒவ்வொருவரும் சாப்பிட்டு மிகுந்த சாப்பாட்டை எடுத்துக் கொண்டுவந்து குழந்தைகளுக்குப் போட்டுக் கணக்கு மிஞ்சினால் புசிப்பது; இல்லையேல் பட்டினி கிடப்பது. இவ்விதமாகவே தன் காலத்தைக் கடத்தனாள். வெயிலின் கொடுமையினால் அவள் கடந்து செல்வதற்குச் சற்று நேரமாகி விட்டால் அவளை அதட்டி வைது தடபுடல் படுத்துவார்கள் சாப்பாட்டு ராமன்கள்.

இவள் வேலை செய்யும் வீடுகளில் ஐந்து ரூபாய் கிடைக்கின்றது. நான்கு எடுப்புக் காப்பாட்டில் ஐந்துரூபாய், ஆக பத்து ரூபாய் கிடைப்பதில்,வீடு குடிக்கூலி மூன்று ரூபாய் போய் விட்டால் 7 ரூபாயும், எடுப்புச் சாப்பாட்டில் மிகுந்த சாப்பாடும், பத்து தேய்ப்பதில் மிகுந்த சாப்பாடுங் கொண்டு நான்கு குழந்தைகளும்

அவளும் ஆக ஐந்து பேர்கள் ஒரு மாதம் பூராவும் புசிந்து வாழுவதென்றால் இந்த பட்டினத்தின் சாத்யமானதா என்பதை யோசித்துப் பாருங்கள். இவ்விதமாக எத்தனை ஏழைப் பெண்கள் வருந்துவதை நாம் கண்ணால் காண்கிறோம். இந்த ஏழ்மை நிலை என்றுதான் நமது பாரத நாட்டை விட்டு ஒழியுமோ? என்றுதான் பாரத மாதா வின் அருள் பிறக்குமோ ?..........

---

இப்படியே சில வருடங்கள் வேலை செய்து வந்தாள். மூத்த பையனுக்கு 10 வயதாயிற்று. அப் பையனை ஏதேனும் வேலை செய்யும்படியாகக் கோமதி எத்தனை கூறியும் அந்த சோதாப் பபல் தகப்பனுக்கு இரண்டாவதாக ஆய் விட்டதால் பிடிவாதம் செய்துத் தாயை இம்சித்தான். தாயார் மனம் நொந்து கடிந்து திட்டினால் எங்கேனும்

ஓடி விடுவது; சாப்பாட்டிற்கு வராது அழ வைப்பது. பிறகு கோமதி கண்ணீர் பெருகத் தேடியலைந்து இழுத்துக் கொண்டு வந்து பெத்த மனம் பித்து என்பது போல உணவிட்டு உபசரிப்பது. அந்தப் பையனை நல்ல வார்த்தை சொல்லி சித்தாள் வேலைக்கு அனுப்பினாள்.

“வரம்பு கடந்து பேசினால் பல்லை உடைத்து விடுவேன்” என்கிறான் ஒருவன். அவனை வரம்பு கடக்கும்படியான ஆத்திரத்தைத் தானே உண்டாக்கி விட்டதை அவன் மனம் நினைப்பதே இல்லை.

சித்தாள் வேலைக்குக் கிடைக்கும் ஆறு அணாக் கூலியை அவன் கண்டபடி ஏதேனும் வாங்கித் தின்று விடவும்,சரியாகக் கொண்டு தாயிடம் கொடாமல் சண்டித்தனம் செய்யவும் தொடங்கினான். அவ்வாறு செய்யும் திருட்டுத்தனத்தை யறிந்த கோமதி

நேரே மேஸ்த்ரியிடம் சென்று “கூலியைப் பையன் கையில் கொடுக்க வேண்டாம்; என்னிடம் கொடுங்கள்” என்று கூறிவிட்டாள். இதையறிந்த பையன் தாயார் பணம் வைக்கும் இடத்தை யறிந்து திருட வாரம்பித்தான். மகனோ திருட்டுக் கொட்டு; மணவாளனோ குடிகார வேசிக் கள்வன். இத்தகைய இருவரையும் படைத்த நங்கையின் கதி எவ்விதம் தானிருக்கும்?

இரண்டாவது பையன் சற்று அடங்கியவன். அவனுக்கு 9 வயதாகிறது. அப் பயல் தரும பாடசாலையில் சேர்ந்து படிக்கத் தொடங்கினான். அதற்கடுத்தது 7 வயதுப் பெண். கையிலிருப்பதும் பெண் குழந்தை. இந்த ஏழு வயதுப் பெண் குழந்தை தாயார் வேலை செய்யப் போகையில் சின்ன குழந்தையை வைத்துக் கொண்டிருப்பது. இவ்விதமே, பின்னும் சில காலம் சென்றது.

அக் குடிகாரப்பாவி என்றைக்கேனும் வீட்டுக்கு வருவது; கோமதி காலணா, தம்பிடி சேர்த்து வைத்திருந்தால் அதை சண்டையிட்டுப் பிடுங்கிக் கொண்டு போவது. இந்த வழியை மட்டும் அவன் விடாது செய்து வந்தான். கோமதியின் தேக பலம் ஏற்கெனவே குன்றி விட்டதோடு இத்தனை வேதனைகளுக் கிடையில் அதிக வேலை செய்வதும், எடுப்புச் சாதங் கொண்டு நடப்பதனால் தரின் சூடும், வெய்யிலின் வெப்பமும் ஒன்றுகூடி நாளுக்கு நாள் அவள் மிகவும் நலிந்து விட்டாள்.

வெளியூர்ப் பிரயாணம் வெகு ஜோர்தான். கண் காட்சிகள் அதி மனோ கரமே! ஊரும் நிரம்ப சுகமே! ஆனால் ஆறுமாதத்திற்குத் தன் ஊரில் செலவாகும் பணத்தை ஒரு மாத வெளியூர்ப் பிரயாணத்தில் செலவழிக்க நேர்ந்து விடுகின்றது. இதுதான் பெரிய கஷ்டம்.

இந் நிலைமையில் அவளுடைய கணவன், எத்தளை சொல்லியும் கேளாது அவளை இம்சிப்பதுடன் விடா மூர்க்கமாகவே இருந்தான். கோமதி தன் விதிப்பயனால் மீண்டும் கர்ப்பவதியாகி விட்டாள். கர்ப்ப சின்னத்தின் முதல் ஆரம்பமாகிய மசக்கை என்னும் நோய் பலமாகப் பீடித்து அவளை எழுந்து நடக்கவொட்டாது தசையோடு தள்ளிவிட்டது. அந்தோ ! ஏற்கெனவே கர்ப்பிணி; மேலும் கர்ப்பிணி என்ற வாக்கியம் உண்மையாகி விட்டதால் குழந்தைக ளெல்லாம் “பசியோ! பசியோ!” என்று கத்துகின்றன. எடுப்புச் சாப்பாடு நின்று விட்டதால் அதனால் பெறும் வருமானமே குறைந்து விட்டது. வீட்டு வாடகை ஒரு மாதத்திற்குச் சேர்ந்து விட்டது.

அபலையான கோமதி இந் நிலைமையில் என்ன செய்வாள்? தனக்கோ எழுந்து நடக்க

முடியவில்லை. குழந்தைகளின் பசியையோ தீர்க்கும் மார்க்கமில்லை, கணவனோ இவளது கேவல நிலைமையைச் சற்றும் கவனியாது, இங்கு வருவாய் ஏதுமில்லை என்பதை யறிந்து வீட்டிற்கு வருவதையே அடியோடு விட்டு விட்டான்.

வீட்டு வாடகை கொடாமையினால் வீட்டுக்காரரர்கள். “வாடகையை முதலில் கீழே வைத்துவிட்டு உடனே காலி செய்து விடு. இரண்டு மாத வாடகை பாக்கியாகி விட்டதால் நீ இன்னும் எப்படி பணத்தைக் கொடுப்பாய். ஆகையினால் உடனே காலி செய்துவிடு” என்று தாக்ஷண்ய மின்றிப் பேச வாரம்பித்தார்கள்.

அந்தோ! துர்ப்பாக்யவதியான கோமதி அவர்கள் காலில் விழுந்து “அம்மா! தாயே! எந்நிலைமையறித்தும் என்னைக் கடிந்து கொண்டால் இந்த நேரம் நான் என்ன

செய்வேன்? எங்குய்வேன்? என் மீது இரக்கங் கொண்டு சற்று பொறுத்துக் கொள்ள வேண்டும்” என்று எத்தனை சொல்லியும், கெஞ்சியும் அவர்கள் கேளாது மிக்க கடினமாகவே கூறி விட்டதால் கோமதி மனந் தவித்தவாறு எழுந்து நடக்கவும் மாட்டாது, தள்ளாடி தடுமாறிக் கொண்டே தாசி லோகாவின் வீட்டிற்குச் சென்றாள்.

தன் ஊரில் 10 அணாவுக்கு ஒரு டஜன் வாங்கக் கூடிய பழத்தை வெளியூரில் ஒரு ரூபாய் கொடுத்து வாங்கிப் புசிக்க நேருகின்றது. இங்கு காலணா வண்டிச் செலவிற்கு யோசிக்கிறோம். அங்கு 5 ரூபாய் வெள்ளரிப் பழத்தைப் போலக் கொடுத்து விடுகிறோம். இவ்விதமே அதிகப் பணம் கரைந்து விடுகின்றது.

அங்கு சென்று பார்க்கையில் அவ்வீட்டில் ஒரு முதலியார் குடித்தனம் செய்வதைக்

கண்டு திடுக்கிட்டு அவர்களை விசாரித்ததில் தாங்கள் நேற்றுதான் குடித்தனம் வந்ததாயும், தங்களுக்கு எதுவும் தெரியாதென்றும் அவர்கள் கூறிவிட்டார்கள். இதுகேட்டு மனமுடைந்த கோமதி அவ் வீட்டிற்கு எதிரில் உள்ள சோடாக் கடைக்குச் சென்று “இத் தாசி எங்கே?” என்று விசாரிக்கையில் அக் கடைக்காரன் அவளுடைய இனத்தினர்கள் ஜாதிப் பிரஷ்டம் போட்டு விட்டதால் அவள் அவர்களின் முன்னிலையில் இருப்பதற்கு வெட்கிச் சிதம்பரத்திற்குக் குடியேறியதாகச் செய்தி தெரிந்தது” என்றான். இது கேட்ட கோமதி மிகுந்த துக்கத்தை யடைந்து “ஐயோ! இதுவும் ஒரு விதியா! என் காலக் கொடுமையே அவளை ஊரை விட்டுத் தள்ளியதோ! ஹா! கடவுளே!” என்று விசனித்த வாறு வீட்டை யடைந்தாள்.

அத் தருணம் வீட்டு வாசலில் அதிகக்

கூட்டமாக இருப்பதைக் கண்டு “இங்கென்ன ஆபத்து வந்து விட்டது?” என்று எண்ணி உள்ளே சென்று பார்க்கையில் கோமதியின் பெரிய மகனை ஒரு போலீஸ் சேவகன் பிடித்துக் கொண்டு உதைக்கிறான். அவன் எதிரில் சுமார் 5 வயதுள்ள குழந்தை “இவன்தான் என் கைக் காப்பைக் கழற்றினான்.” என்று சொல்லிக் கொண்டிருந்தது. இந்த வேடிக்கையைப் பார்ப்பதற்கு நூற்றுக் கணக்கில் கூட்டம் கூடிவிட்டது.

மைசூரிலுள்ள வீதிகளே ஓர் தனித்த அழகு. அரசர் வாசம் செய்யும் இடங்களின் மகிமையே அபூர்வ வசீகரம் பெற்றிலகும் போலும், கடவுளும் காவலனும் ஒன்று என்பது போல இடமும் அமைகின்றது.

கோமதியின் மனம் ஏற்கெனவே எரிந்துகொண்டிருந்ததற்கு இன்னும்

எண்ணெயை ஊற்றியதுபோல இங்கு தம் மகன் திருடனென்று பிடிக்கப்பட்டு நிற்கும் கண்ராவியைக் கண்டதும் அவள் மனம் தாங்கவியலாத துக்கந்தையும், ஆத்திரத்தையும் அடைத்து பொங்கிவிட்டது. “ஐயோ கடவுளே! என்னை இவ்விதம் வைத்து ஆட்டுவதைவிட உன்னடி சேர்த்துக்கொள்ளலாகா? குடியும் வேசிப்பித்தும் பிடித்த கணவனும், திருடனும் சோம்பேறியுமாண மகனும் வேண்டுமென்று நான் எத்தனை நாள் தவம் செய்தேன்! ஐயோ! இப்பூவுலகில் என்னைப்போல எத்தனை ஏழைகள் கஞ்சிக் கில்லாது பஞ்சைகளாக வாழவில்லை. அவர்கள் தங்கள் குடும்பத்துடன் சீராகவில்லையா! என் கதிதானா இவ்லிதம் பலவிதத்திலும் துன்பமும், துக்கமும், அவமானமும் நிறைந்திருக்கவேண்டும். ஹா! சர்வேசா!

சண்டாளியின் வயிற்றின் இத்தகைய புத்திகள் பிறக்கவும், நான் இக்கோரமான காட்சியைக் கண்டு சகிக்கவும் இன்னும் உயிருடன் வாழுகின்றேனே!" என்று கண்ணிமை ஓடவிட்டுக் கதறியவாறு மூர்ச்சையானாள்.

சில நிமிஷங்களில் மூர்ச்சை தெளிந்து எழுந்தாள். இதற்குள் போலீஸார் "அம்மா! உங்கள் மகன் திருடிய காப்பு இதோ அவன் மடியிலேயே அகப்பட்டுவிட்டதால் அவனைக் கைது செய்து கொண்டு போகிறோம்" என்று கூறிவிட்டுப் பையனை இழுத்துக் கொண்டுபோசு வாரம்பித்தார்கள். கேவலம் 10 வயதுதான் நிரம்பிய பையனாகையினால் அவன் மிக்க பயந்துபோய் "அம்மா! அம்மா! நான் தெரியாமல் செய்துவிட்டேன். இனிமேல் செய்ய மாட்டேன். அம்மா! அம்மா!" அம்மா! அம்மா!' என்று கத்தினான். திருடன்

எத்தனை கத்தினாலும் விடுபவர் உண்டா! சற்று நேரத்திற்கெல்லாம் அவர்கள் போலீஸ் ஸ்டேஷனை அடைந்தார்கள். தான் எவ்வளவு சொல்லியும் கேளாமையால் ஒரு தடவை தண்டனையடைந்த பிறகாவது திருந்துவாள் என்று நினைத்து கோமதி அவனுக்குப் பதிலே பேசாது மௌனம் சாதித்து உள்ளே சென்றாள். அவளுடைய துக்கத்தின் எல்லையை அறிந்தவர் கடவுள் ஒருவர்தான்.

அலங்காாவதிகளான பெண்கள் இடையில் ஒரு குழக்கதையைத் தாங்கிச் செல்வதும், ஆண்கள் ஒரூ குழந்தையைத் தாங்கிச் செல்வதும் தனித் தனி யான அழகுடன் விளங்குகின்றது.

இந்த நிலைமையில் கோமதியைக் கண்ட வீட்டுக்காரர்கள் “நீ உடனே காலி செய்கிறாயா! உன் சட்டிப்பானையை எடுத்து வீதியில் வைக்கட்டுமா! எங்கள்

வீட்டில் எத்தனையோ பண்டங்கள் இதுபரியாதம் காணாதுபோனதை எல்லாம் உன் மகன் நான் களவாடியிருப்பான் என்று இப்போதுதான் எங்களுக்குத் தெரிந்தது. இனி அரை விநாடியும் இவ்வீட்டில் இருப்பது கூடாது, உன்னுடைய ஓட்டை உடைல்சல்களை எடுத்துக்கொண்டு நட” என்று கண்டிப்பாய் கூறி அவளுடைய சட்டிபாளைகளை எடுத்து முற்றத்தில் போட்டார்கள்.

“அந்தோ! பட்ட காலிலே படும்; கெட்ட குடியே கெடும். என்பதுபோல என் கதி இவ்விதமாகவா ஆய்விட்டது?” என்று வருந்திய கோமதி அவர்களை நோக்கி “என் அன்புடையீர்! நான் இதோ சாமான்களைக் காலி செய்துவிடுகிறேன். ஆனால் இந்த நிலைமையில் நான் உங்கள் வாடகைப் பாக்கியை எவ்விதம் செலுத்துவேன். அந்தப்பணம் செலுத்துதற்கான மார்க்கம்

ஒன்றுமே புலப்படவில்லையே! என் பர்த்தாவைப் பார்க்க எண்ணிச் சென்றேன். அவர் ஊரைவிட்டே சென்று விட்டனராம். என்னுடைய பரிதாபத்திற்கு இறங்கி நீங்கள் ஓர் வழி செய்யவேண்டும். என்னிடம் 5 ரூபாய் பெறுமானமுள்ள பாத்திரங்கள்கூட இல்லையே! நான் என்ன செய்வேன்?” என்று கண்ணீர் உதிரக கேட்டாள்.

இது கேட்ட வீட்டுக்காரி “அதோ உன்னிடம் ஒரு மரப் பெட்டி இருக்கிறதே அதையும், தண்ணீர் மொள்ளும் தவலை ஒன்று இருக்கிறதே அதையும் கொடுத்துவிட்டுச் செல்லு. மற்றவைகளை வேண்டுமானால் நான் ஐயோ பாவமென்று மன்னித்துவிடுகிறேன்.” என்று வெகு தாராளமாய்ப் பதில் கூறி அவ்விரண்டையும் எடுத்து வைத்துக்கொண்டாள். பரதேசியான கோமதி மிச்சமுள்ள

கந்தல் பொந்தல்,தட்டுமுட்டு, ஓட்டை உடைசல் முதலியவற்றை எடுத்து வீதியில் வைத்துக்கொண்டு தனக்கு உபயோகமற்றதை வீசி எறிந்துவிட்டு வீட்டுக்காரர்களுக்கு நமஸ்காரம் செய்து உத்தரவு பெற்றுக்கொண்டு வீதியில் வந்தாள்.

உண்மைக் காதலுடைய கணவன் தன் மனைவியை கோக்கி ” என் கண்மணி! மூன்று தினங்களாக உன் கையினால் அன்னமிட்டுப் புசிக்காததால் என் பசியாறவே இல்லை. இன்றே என் வயிறு நிறையப் பசியாறப் புசித்தேன்” என்கிறான்.

அந்தோ! “மூன்று மக்களுடன் கர்ப்பிணியான பேதை எங்கு செல்வது என்னவிதம் இனி உய்வது?” என்ற பெரும் துக்கம் அவளது தொண்டையை அடைத்துக் கொண்டது. அச்சமயத்தில் அவளுடைய சிறிய மகன் தாயின் துயரைக் கண்டு சகியாமல்

“அம்மா! வருந்தாதே! எப்போதும் ஈசன் சோதனை செய்யாது நன்மையளிக்கமாட்டார். நாம் பரதேசியாக அலைவது நரஜென்மங் கொண்டவர்களுக்குக் கண் தெரியாவிடினும் சர்வாந்தர்யாமியாகிய அச்சுதனுக்குத் தெரியவில்லையா! அவனை நம்பி நாம் இப்போதே கிளம்புவோம், வா!” என்று கூறி சட்டிப்பானைகளை எடுத்துக்கொண்டு தங்கையிடம் சிலவற்றைக் கொடுத்து எல்லோரும் நடக்கவாரம்பித் தார்கள்.

அப்போது சரியான உச்சி வேளையாதலால் வெய்யில் வெகு தீக்ஷண்யமாகக் காய்கின்றது. “அவ்வீட்டுக்காரரர்கள் காட்டிய கடின இருதயத்திற்கு நான் தோற்கவில்லை” என்று சூரியன் போட்டியிடுவது போலிருக்கின்றது. ஆனால் இந்த அநாதைப் பரதேசிகளைக் கண்டு இரக்கங்காட்டிச் சூரியனிடம்

சிபார்சு செய்யவருவதுபோல மேகங்கள் தாராளமாகத் தண்ணீரைக் குடித்துவிட்டு குளிர்ந்த முகத்துடன் சூரியனருகில் சென்று, வெப்பத்தை மறைத்துத் தணிக்க வாரம்பித்தன. இந்த நிலைமையில் எங்கு செல்வதென்று தெரியாது சிறிது தூரம் சென்றதும் கோமதிக்கு அசாத்யமான துக்கத்தினாலும்,அப்போதிய நிலைமையின் பலஹீனத்தினாலும் அதற்குமேல் நடக்கமாட்டாது கால் துவண்டு கீழே தள்ளவாரம்பித்துவிட்டது.

வினா:- அமுத மொழிக் கிள்ளையே! உனக்கு மிகப் பிரியமான பொருள் நான் கொண்டு வந்திருக்கிறேன். அது எது ?
விடை:- அன்பு நிறைந்த அரிய முத்தாஹாரம் தான் ராதா! அதற்கே அடியாள் எதிர் நோக்குவது.

இவளுடைய நிலைமையைக் கண்ட

கேசவன் மிக்க மனம் வருந்தி "அம்மா! உன்னால் நடக்க முடியவில்லை என்பதை யறிகிறேன். என் மனம் தத்தளிக்கின்றது. இதோ ஓர் மரம் இருக்கின்றது. இதனடியில் சற்று உட்கார்ந்திருப்போம். உன் களை தெளிந்ததும் பிறகு நடக்கலாம்." என்று கூறி அம்மரத்தடியில் சாமான்களை வைத்துவிட்டுத் தாயாரை உட்காரச்செய்தான். கோமதியின் தரித்திர திசையில் முதல் நாள் இரவு முற்றும் சுத்த பட்டினியாகையினாலும், அன்று காலை முதல் அலைச்சல் அதிகரித்ததனாலும் அவளுக்குத் தாங்கவியலாத களைப்பு மேலிட்டுவிட்டது. இந்நிலைமையில் மகா போக்கிரியாகிய முதல் மகன்மீது நினைவு தாவிப் பதிந்தது. இத்தகைய சோகத்தினால் அவள் மயக்கத்தி லாழ்ந்தாள்.

மகா உத்தம புத்திரனாகிய கேசவன் அவளுடைய நிலைமையைக் கண்டு

பரிதபித்துத் தன் தங்கையை நோக்கி “பாலா! நான் வெளியில் சென்று அம்மாவுக்குச் சிறிது ஆகாரம் வாங்கிக்கொண்டு வருகிறேன். இங்கு ஜாக்கிரதையாக அம்மாவைப் பார்த்துக்கொள்” என்று கூறி, ஒர் தகரக் குவளையைக் கையில் எடுத்துக்கொண்டு சென்றான். எங்கு செல்வதென்பதை யறியாவிடினும் தாயிடத் துள்ள பாசத்தினால் விரைவில் ஓர் காபி ஒட்டலை அடைந்தான். அப்போது அகாலமாகையினால் ஓட்டலில் ஒன்றும் தயாராக இல்லை. அதைக் கண்டு வருந்திய கேசவன் அவ்வோட்டலுக்கு அடுத்திருந்த வீட்டிற்குச் சென்று “அம்மா! பரதேசி ஏழை; ஒரு கவளம் அன்னம் கொடுத்தால் மிக்க புண்ணியமுண்டு” என்று கேட்டான்.

வினா:- கண்ணே! புத்தகப் படிப்பினால் நீ என்ன விஷயம் தெரிந்து கொண்டாய்?

விடை: நாதா! என்னுடைய ஆயுள்காலம் பரியத்தம் நான் தங்களுக்கு அடிமையாக விருந்து பெறும் பேற்றைத் தெரிந்து கொண்டேன்.

இந்த குரல் கேட்டு வெளிவந்த வீட்டுக்காரி “ஏனடா கொட்டாப்புளி தடியா! பிச்சைக்காரன் போல வந்து ஏதேனும் அகப் பட்டதைச் சுருட்டிக் கொண்டு போக நினைக்கின்றாயா! ஒடு வெளியில்’’ என்று அதட்டினாள். அந்தோ! சுடுச்சரம் போன்ற அவ் வார்த்தையைக் கேட்ட கேசவன் மன முருகிப்போய்,”தாயே ! ‘பிச்சை இல்லை’ என்றால் நான் போய் விடுகிறேன். வீணான வார்த்தைகளைக் கூறி மனத்தை நோகச் செய்ய வேண்டாம்; போய் வருகிறேன்” என்று கூறி வெளியில் வந்தான். கேவலம் சிறிய பாலகனாக விருப்பினும் அவனுடைய மன வேதனையினால் அவன் பெரிய குடும்பஸ்தன் போலவே தவிக்கலானான்.

அவ்வீடு விட்டதும், இனி தான் எங்கு செல்வதென்று யோசித்துப் புலம்பியவாறு நடக்கையில் எதிரில் ஒரு ஸைகில் வண்டி வந்தது. அதற்குப் பக்கத்தில் ஒரு மோட்டார் வந்து விட்டதால் கேசவன் தட்டுத் தடுமாறி மத்தியில் நின்று விட்டான் ஸைகிலில் வந்த மனிதன், திடீரென்று போட்ட பிரேக்கினால் கீழே விழுந்து விட்டான். விழுந்தவன் எழுந்து “அடேய் தடிப்பயலே. உனக்குக் கடவுள் கண் கொடுக்க வில்லையா! வீதியில் பார்த்து நடக்காமல் என் வண்டியில் மோதும்படி அஜாக்கிரதையாக நடந்து வந்து என் வண்டிக்குச் சேதம் உண்டாக்கினாயே கழுதை!” என்று கூறிக் கேசவனை இழுத்து முதுகிலும்,கன்னத்திலும் நான்கு அறைகள் விட்டு “ஓடு நாயே !” என்று கூறிவிட்டுச் சென்று விட்டான்.

அந்த மகானுபாவன் கையில் மோதிரம்

போட்டுக் கொண்டிருந்தான். அம் மோதிரத்தின் கூர்மையானது உள் பக்கம் திரும்பி யிருந்ததைக் கவனிக்காது ‘பளீர் பளீர்’ என்று அடித்ததால் அது முதுகில் நன்றாகக் கீறி ரத்தம் பீறிட்டுக் கொண்டது. கேசவன் இந்த பாதையைக் கூடப் பொருட் படுத்தவில்லை. தன் தாயாரைத் தனித்துவிட்டு வந்த நினைவு அதிகமாய் மனத்தில் வேலை செய்ததால் அதையே நினைத்து “இதுவும் நம் தலைவிதி” என்று நடக்க வாரம்பித்தான்.

வினா:- கணவன் மனைவி என்றால் என்ன அர்த்தம்?

விடை:- கனியும் ருசியும் என்றால் என்ன அர்த்தமோ அதே அர்த்தம் தான். கணவன் கனியாயும் மனைவி கனியின் ருசியாயும் இருக்கவேண்டு மென்பதே பொருள்.

ஓர் வீட்டுத் திண்ணையில் மேளம் அடிப்பதைக் கண்டு அங்கு ஓடி “ஐயா! என்

தாயாருக்கு அதிக களைப்பாக இருக்கிறது. கொஞ்சம் ஏதேனும் ஆகாரம் வேண்டும்” என்று செஞ்சிக் கேட்டான். சமையற்காரனே மனமிரங்கி சில பக்ஷணங்களும், காப்பியும் கொண்டு வந்து கொடுத்தான். கேசவன் பரம சந்தோஷத்துடன் அதை வாங்கிக் கொண்டு தன் தாயை நோக்கி ஓடிவந்தான்.

மரத்தடியில் ஒருவரும் இல்லாததைக் கண்டு திடுக்கிட்டு “ஹா! அம்மா எங்கே சென்றிருப்பாள்?” என்று மிக்க விசனத்தோடு நாற்புறமும் பார்த்தான். குழந்தையையும் காணவில்லை; தாயாரையும் காணாமையினால் கேசவன் மனத்தில் பலவிதமான எண்ணங்கள் உதிக்க வாரம்பித்து விட்டன. “தாங்க வியலாத களைப்பினால் தாயார் இறந்து விட்டாளோ! இறந்த சவத்தை யாரேனும் குழந்தைகளுடன் தூக்கிக்கொண்டு போய் விட்டனரோ!

அன்றி மனக்கிலேசத் தினால் அவள் தானே தற்கொலை செய்து கொண்டாளோ! ஒன்றும் தெரியவில்லையே! ஹா! அம்மா! அம்மா! பாலா! என் கண்ணே! லீலா! லீலா! எங்கு சென்று மறைந்து விட்டீர்கள் ? என் செல்வத் தங்கைகளே! என் அரிய அன்னையே!" என்று துடிதுடித்து அப்படியே புலம்பியவாறு நின்று விட்டான்.

வினா:- கணவனுக்கு மனைவி முக்கியமா! மனைவிக்குக் கணவின் முக்கியமா!

விடை :- கரும்புக்குச் சாறு முக்கியமா 1 சாறுக்குக் கரும்பு முக்கியமா! ஒன்றுக்காக மற்றொன்று அவசியம். அதே போல இருவரும் முக்கியமாகும்.

## 2-வது அதிகாரம் - எத்தன் கையில் சிக்கிய உத்தமி

மரத்தடியில், களைப்பு மேலீட்டினால் கிடந்த கோமதியைக் கண்ட பாலாவென்ற 7 வயதுச்சிறுமி தன்னை யறியாது புலம்பிக்கொண்டே தாயாரின் பக்கலில் உட்கார்ந்திருந்தாள். கேசவன் சென்று வெகு நேரமாகியும் வராமையினால் பாலாவின் கலக்கம் அதிகரித்தது. “அவன் எங்கு சென்றானோ! இன்னும் வரவில்லையே!”அம்மா! அம்மா! மயக்கம் தெளிந்ததா! கண்ணைத்திறந்து பாரேன். லீலா கத்துகிறாளே! அண்ணா கேசவனை இன்னும் காணவில்லையே!” என்று பரிதாபமாகக் கத்தினாள்.

சற்றுநேரங் கழித்து கோமதி சற்று களை

தெளிந்து கண் விழித்தாள். "இன்னும் கேசவன் வரவில்லையே!" என்று மன வருத்தத்துடன் உட்கார்ந்திருக்கையில், அவ்வழியே சென்ற சிலர் "ஐயோ! சிறிய பையன் அநியாயமாய் மோட்டாரில் அகப்பட்டுக் கொண்டான்....என்ன அநியாய உலகம்! இதில் எத்தனை விபத்துக்கள் இந்தப் பாழும் மோட்டார் யமனால் நடக்கின்றன!" என்று சொல்லிக்கொண்டே செல்வதைக் கேட்ட கோமதி திடுக்கிட்டாள். "ஐயோ! என்னவோ பையன் மோட்டாரில் அகப்பட்டதாகச் சொல்கிறார்களே! ஒருவேளை நமது கேசவனாக விருப்பானோ! பாலா! அவர்களருகில் சென்று விசாரித்தால் தெரியும்" என்று கூறியவாறு அவர்களருகில் சென்று "ஐயா! எங்கேயோ பையன் மோட்டாரில் அகப்பட்டதாகச் சொன்னீர்களே! எங்கே? எந்தப் பையன்? என் மகன் வெளியில்

சென்றான், இன்னும் வரவில்லை. அதனால் கேட்கிறேன்” என்று வெகு பரிதாபகரமாகக் கேட்டாள்.

வினா:-‘உனக்குப் பற்றுதலே உண்டாக வில்லையே’ என்று என் பெற்றோர்கள் திட்டுகின்றார்களே! அதென்ன?
விடை:-மனைவியைக் கைப்பற்றி விட்டால் சகல பற்றுதலும் உடனே உண்டாகி விடும். அதுதான் பற்றுதல்.

இது கேட்ட வழிப் போக்கர்கள் “அம்மா! இந்த சென்னைப் பட்டினத்தில் தினம் இத்தகைய விபத்துக்கள் கணக்கின்றி நடக்கின்றன. இதற்கொரு கேள்வி முறையும் கிடையாது. வண்டி யோட்டிகளில்;சிலர் நன்றாகக் குடித்து விட்டுத் தலைகால் தெரியாமல் வண்டியை விட்டுக் கொண்டு செல்வதால் இத்தகைய கோர சம்பவங்கள் தினம் நடைபெறுகின்றன. உங்கள்

மகனோ,யாரோ! நாங்கள் எதைக் கண்டோம். 10 வயதிருக்கலாம்; சிறு பையன் வண்டியில் அகப்பட்டுக் கொண்டான். பையன் அழகாக இருக்கிறான். சைனா பஜார் தெருவில் இந்த விபத்து நடந்தது. உடனே பையனை ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு தூக்கிக்கொண்டு போனார்கள். அங்கு போய் விசாரித்துப் பாருங்கள்" என்று சொல்லிக்கொண்டே போய் விட்டார்கள்.

இது கேட்ட கோமதி, காலையில் ஒரு புதல்வனை சிறைக் கோட்டத்திற்கு அனுப்பியாயிற்று, இப்போது ஒருவனை யமனுலகத்திற்கு அனுப்பி விட்டோமா!" என்று மிக்க வருத்த மடைந்தவாறு, பாலா, லீலா இருவரையும் அழைத்துக் கொண்டு அந்த சாமான்களைத் தூக்க மாட்டாது தூக்கிக் கொண்டு பதைத்த மனத்துடன் ஜெனால் ஆஸ்பத்திரியை நோக்கி நடக்கலானாள்.

அதற்கும், இவள் இருக்குமிடத்திற்கும் ஒரு மைல் தூரமிருக்கும், இந்த மைல் தூரத்தையும் பொருட்படுத்தாது வெகு ஆவேசத்துடன் நடந்து ஆஸ்பத்திரியை அடைந்து விசாரிக்கையில் அன்று மோட்டாரில் அகப்பட்ட பையன் ஒரு பிராம்மணப் பையனென்றும் அவனை அவனுடைய பெற்றோர் வந்து ஒப்புக் கொண்டார்கள் என்றும் தெரிந்த உடனே கோமதியம்மாள் அந்த பெருந்திகிலிலிருந்து விடுதலையாகி மீண்டும் முன்பிருந்த இடத்திற்குப் போகலானாள். வழியில் இவளுடைய பலஹீனத்தினால் சற்று உட்காருவதும், படுப்பதும், நடப்பதுமாகச் சிறிது தூரம் சென்றாள்.

வினா:- தாயின் அன்பிற்கும், தாரத்தின் அன்பிற்கும் என்ன பேதம்?

விடை:- குழம்புப் பாலுக்கும் திரட்டுப் பாலுக்குமுள்ள பேதம் போலத்தான்.

அங்கு வழியில் ஒருவன் சின்ன மாட்டு வண்டியில் போய்க் கொண்டிருந்தான். அவன் வண்டியை நிறுத்தி ”அம்மணி! உங்களைப் பார்த்தால் பிராணன் இப்போதே போய்விடும்போலிருக்கிறதே! என்ன உடம்பு! நீங்கள் எங்கே செல்லவேண்டும், சொல்லுங்கள். இந்த வண்டியில் கொண்டு விட்டுவிடுகிறேன்!’’ என்று வெகு உருக்கத்தோடு கேட்டான்.

இதுகேட்ட கோமதி “ஐயா! எனக்கு வண்டியும் வேண்டாம்; நொண்டியும் வேண்டாம். என்னுடைய பையனைக் காணாமல் நான் தேடி யலைகிறேன். எனக்கு எங்கும் போக்கிடம் இல்லை. உலகத்தில் சகல இடமும் என்னுடைய சொந்த இடந்தான்” என்றாள். இதுகேட்ட அம்மனிதன் “தாயே! நான் உங்களுடைய பரிதாபத்தைக் கண்டு கேட்டேன். நீங்கள் பையனை எங்கே

யனுப்பினீர்கள்? அல்லது அவனாக எங்கேனும் சென்றுவிட்டானா?” என்றான்.

கோமதி:- எனக்கு சற்று முன் மயக்கம் அதிகரித்ததனால் சிறிது ஆகாரம் வாங்கி வருவதாகச் சென்றான். இன்னும் வாராமை யினால் தேடுகிறேன்.

வந்தவன்:- ஓகோ! அந்தப் பையனா! என் வீட்டிலிருக்கிறான். அங்கு வந்து சாப்பாடு கேட்டான். தாயாருக்கு மயக்கம் என்றும் சொன்னான். சாதம் அவனுக்குப் போடச் செய்து கையிலும் கொடுக்கச் சொன்னேன், அவன் சாப்பிட்ட உடனே தன்னால் தடுக்க வியலாத மயக்க மேலீட்டால் தன்னை யறியாது அப்படியே படுத்து விட்டான், பாவம் பையன் களைத்துவிட்டான் என்று நானும் பேசாதிருந்து விட்டேன். என்னுடைய வீடு சமீபத்திலேயே இருக்கிறது. வாருங்கள்; அழைத்துச் செல்கிறேன். அதற்குள் வழியில்

பையனைப் பார்த்தால் அங்கேயே இறங்கி விடுங்கள் - என்றான்.

வினா:-சகோதர வாஞ்சை சிறந்ததா! சினேகித வாஞ்சை சிறந்ததா?
விடை :- ஒவ்வொரு சமயத்திற்கு ஒவ்வொன்று சிறந்தது.

இதுகேட்ட கோமதி அதற்கிசைந்து வண்டியில் தன்னிரு பெண்களோடு அமர்ந்தாள். வண்டி செல்லலாயிற்று. சுமார் ஒரு மைல் தூரம் சென்றதும் வண்டியை ஒரு வீட்டின் வாசலில் நிறுத்தி அவன் “பையன் எழுந்து போய்விட்டானா!” என்று வீதியிவிருந்த கிழவியைக் கேட்டான். அதற்குக் கிழவி “பையன் நம்முடைய பங்களாவுக்குப் போயிருக்கிறான்” என்றாள். இது கேட்ட மனிதன் கோமதியை நோக்கி “அம்மா! உங்கள் மகன் என்னுடைய பங்களாவுக்குச் சென்றிருக்கிறானாம்.

வாருங்கள்; அங்கேயே போகலாம்” என்று கூறினான்.

கோமதிக்கோ, “நம் மகன் விரைவில் ஆகாரம் கொண்டு வருவதாகக் சென்றவன் இவ்விதம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறானே!” என்ற கோபமும் சற்று உண்டாயது, அதை அடக்கிக் கொண்டு அவனோடு பங்களாவிற்குச் செல்ல இசைந்தாள். வண்டி பின்னும் பலத் தெருக்களில் சென்று ஓர் பெரிய சவுக்குத் தோப்புக்குள் சென்றது. இருபுறமும் சவுக்கு மரங்கள் அடர்ந்திருந்தன. அந்த சவுக்கு மரங்கள் நல்ல செழிப்பாயும் உயரமாயும் வளர்ந்திருந்தமையினால் அவ்விடத்தில் சூரியனுடைய ரஸ்மி பூமியில் படாதவாறு நிழலாக இருந்தது. அந்த அடர்ந்த இடத்தில் வண்டி செல்கையில் கோமதியின் முகத்தில் உண்டான மாறுதலைக் கண்டு அந்த மனிதன்,

“அம்மா! அதோ தெரியும் பங்களாதான் என்னுடையது. இந்த சவுக்குத் தோட்டமும் அந்த பங்களாவும் அதைச் சுற்றியுள்ள அனேக தோட்டங்களும் என் சொந்தமானவை. கடவுள் எனக்கு ஏராளமான செல்வம் கொடுத்திருக்கிறார்” என்று பேசிக்கொண்டே யிருக்கையில் பங்களாவின் முன்பு வண்டி நின்றது.

வினா:- யாரைக் கண்டாலும் கோபம் வருகின்றதே! என்ன செய்வது?
விடை:- எல்லா மனிதர்களையும் விட்டு அன்னிய தேசத்திற்குச் சென்றிருந்துவிட்டு வந்தால் கோபம் தணியும்,

வண்டியினின்றும் அம்மனிதன் இறங்கி, கோமதியையும் இறங்கச் செய்து உள்ளே அழைத்துச் சென்றான். அப் பங்களா வாசலில் நின்றிருந்த வேலைக்காரன் இவர்களை வெகு மரியாதை யோடு அழைத்துச்

சென்றான். வந்த மனிதன் அவனை நோக்கி "பையன் உள்ளே இருக்கிறானா?" என்றான். "இருக்கிறான்" என்கிற பதிலைப் பெற்றதும் கோமதி மனம் மகிழ்ந்து "கேசவா! என் கண்மணீ! கேசவா! கேசவா!" என்று வெகு பக்ஷத்துடன் அழைத்துக்கொண்டே உள்ளே சென்றாள். பதில் ஒன்று மில்லாமையினால் தன்னை அழைத்துக்கொண்டு வந்த மனிதனை நோக்கி "ஐயா! என் குழந்தை எங்கே! இங்கிருப்பதாகத் தெரிவித்தீரே! என் குழந்தையைக் கூப்பிடும். நான் செல்லவேண்டும்" என்றாள்.

இதுகேட்ட அம் மனிதன் "அம்மா! நீங்கள் முதலில் சாப்பிடுங்கள்; பிறகு பேசிக் கொள்வோம்." என்று கூறி கோமதிக்கும் பாலா, நீலா இருவருக்கும் சாப்பாடு செய்து வைத்தான். அரை மனதோடு உண்ட கோமதி "ஐயா! என் மகனெங்கே! என் குழந்தையைக்

கூப்பிடுங்கள்.” என்றாள்.

வந்த மனிதன்:-பெண்ணே! உன் மகனாவது அவனாவது? அதெல்லாம் இனி நினைக்காதே! உனக்கு இப்போது பேஷான நல்ல காலம் பிறந்துவிட்டதென்று கூறவேண்டும். நீயும் உன் மக்களிருவரும் கஞ்சிக்கின்றிப் பஞ்சாகப் பறக்கிறீர்களே! இந்த பஞ்சம் அறவே ஒழியும் காலம் வந்துவிட்டது. உனது மகன் எவ்விதமேனும் பிழைத்துக் கொள்வான். நீ உன் மக்களுடன் அதோ அவ்வறை-யிலிருக்கும் ஜனங்களுடன் கப்பலேறி வெளி நாட்டிற்குச் செல்லவேண்டும். அங்கு உனக்குச் சரியான கூலி கிடைக்கும். எத்தனையோ சௌகரியமாக வாழலாம்; கொஞ்ச காலம் சென்றபிறகு இந்த நாட்டிற்குத் திரும்பிவிடலாம்- என்று கூறினான்.

“நான் தொழில் செய்யும் காலத்திலும் உன்னுடைய பிம்பமே என் மனத்தில் தோன்றி

என்னை மகிழ்விப்பதால் என் வேலையில் நான் சிறப்படைகின்றேன். என் கண்ணே! எனக்கு உற்சாகமளிக்கும் சக்தி உனது பிம்பத்தி லேயே இருக்கின்றது.” ஒரு காதலன்

இந்த சுடு சரம் போன்ற கடுமையான மொழியைக் கேட்ட கோமதி இடியோசையைக் கேட்ட நாகம் போல நடுநடுக்கலுற்று, “ஆ! அடே பாதகா! உன் வஞ்சகத்தைக் காட்டி விட்டாயா! என்னை அயல் நாட்டிற்கு அனுப்புவதற்கோ நீ இத்தனை மோசமாக அழைத்து வந்தாய்! சண்டாளா! உன் மோச வலையில் சிக்கவோ என் விதி அமைந்தது. நான் அதற்கு ஒருபோதும் சம்மதிக்க மாட்டேன். என்னுடைய குழந்தைகளுடன் பிச்சை எடுத்தேனும் இங்கு தான் ஜீவிப்பேன். நீ என்னைக் காப்பாற்றவேண்டாம். நாசகாலா!” எனத் திட்டியவாறு “பாலா! லீலா! வாருங்கள்” என்று இருவரையும் கையில் பிடித்துக்கொண்டு

நடக்க வாரம்பிக்கையில், படீரென்று அவளிருந்த அறையின் கதவு பூட்டப்பட்டது. வேடன் கையிலகப்பட்ட மாடப் புறாவைப் போல இரு குழந்தைகளுடன் பரிதபித்த வண்ணம் அவள் நின்றுவிட்டாள். தன் விதியை எண்ணிப் புலம்பினாள்; கதறினாள். தான் எவ்விதம் தப்புவது என்பதறியாது தத்தளித்தவாறு மூர்ச்சையாகி விட்டாள்.

பிறகு கோமதி கண் திறந்து பார்க்கையில் தானும் தன் மக்களும் பல ஜனங்களுக்கு மத்தியிலிருப்பதாகத் தோன்றியது. நன்றாகக் கண் விழித்துப் பார்க்கையில் ஏதோ வண்டியில் நகருவது போலத் தோன்றியது கண்டு திடுக்கிட்டு அருகிலிருந்தவர்களை விசாரிக்கையில் "நாம் இப்போது கப்பவில் நடுக் கடலில் போய்க் கொண்டிருக்கிறோம்" என்றார்கள். அந்தோ! கோமதியின் மனக் கொதிப்பையும், அளவிட வியலாத

துக்கத்தையும் கூறவேண்டுமா! நெருப்பிடை மெழுகென உருகினாள்; தத்தளித்தாள். “ஐயோ! சண்டாளா! எத்தனை பேர்களை இவ்விதம் ஏமாற்றியும், மோசம் செய்தும் அழைத்துச் செல்கிறீர்களோ! நேட்டாலில் கஷ்டப்பட்டேன். ரப்பர் தோட்டத்தில் இம்சைப்பட்டேன். தேயிலைத் தோட்டத்தில் வதைப்பட்டேன்.” என்று ஜனங்கள் சொல்லக் சொல்லக் கேட்டிருக்கிறோமே! ஹா! அந்த கஷ்டம் நமக்கே வந்துவிட்டது. ஏ பரம் பொருளே! ஒரு குழந்தையைக் கண்முன்பு கண்டவாறு பிரிந்தேன்; இன்னொரு குழந்தையைக் காணாது பிரிந்துவிட்டேனே! என் வயிறு செய்த பாவமா இது! ஐயோ! என்ன செய்வேன்? புருஷன் குடிகாரனாகவும்: வேசிக் கள்வனாகவும் இருப்பதனாலன்றோ என் கதியும் என் மக்களின் கதியும் இவ்விதமாயிற்று, ஏ பாழுங் குடியே! வேசிப்

பேயே! என் கண்ணீர், உன்னை விடுமா! என் சாபம் உன்னைத் தாக்காது போகுமா?” என்று கண்ணீர் விட்டாள்.

“நாதா! தங்களுடைய அன்பையே நான் என் மனத்தில் கொண்டு வேலை செய்வதால் சமையல் வெகு ருசிகரமாக அமைகின்றது. நான் பெரியோரிடத்தில் பெரும் புகழ் பெற்று விட்டேன். அன்பே அனைத்திற்கும் காரணம்.”

அருகிலுள்ளோர் “ஏன் கத்துகின்றாய்! நாம் அங்கு சென்றால் வெகு சுகமாக வாழலாம். இரு பிள்ளைகளும் செத்துப் போய்விட்ட தென்று எண்ணிவிடு” என்று வெகுவாய்த் தேறுதல் கூறினார்கள். என்ன சொல்லியும் சமாதான மடையாத கோமதி அந்த கடலிலேயே குதித்துவிட எண்ணினாள், தன்னிரு பெண் மக்களையும் நோக்கிப் பேசாது அந்த எண்ணத்தை மாற்றிக்கொண்டாள்.

கப்பல் துறைமுகத்தை அடைந்தது, கூலிகள் எல்லாம் இறக்கப்பட்டு அந்த முதலாளி வசம் ஒப்புவிக்கப் பட்டார்கள். அந்த தீவில் தனியே யகப்பட்டுக்கொண்ட கோமதியின் நிலைமை முன்னிலும் அதிகரித்து பலஹீனமாகிவிட்டது. அங்கு நடக்கும் கொடுமைகளும், இம்சைகளும் கூறத் திறமன்று, “கூலி நிரம்ப கிடைக்கும்” என்று ஏமார்ந்து வந்துவிட்ட கைதிகளெல்லாம் மிக்க விசனத்தை யடைந்து பரிதபிக்கலானார்கள் என்றால் கோமதியின் கதியைக் கூறவேண்டுமா! தன் விதி இது என்றும், மீள வழி இல்லாமையினாலும் தன் மக்களுடன் அங்கு உழைத்து ஒரு வருடத்தைக் கடத்தினாள். இத்தகைய விசனத்தின் பலனாக அவளது கருப்பம் குறை மாதத்தில் சேதமாகிவிட்டது.

கோமதி யாருடனும் பேசுவதில்லை.

எந்த நேரமும் தன் கண்ணீரையும் இரு பெண்களையுமே தனக்குத் துணை கொண்டு வேலை பார்த்துவந்தாள். அங்கு வந்தவர்களில் சிலருக்குத் துன்பம். சிலருக்கு இன்பம்; இன்பப்படும் கோஷ்டியில் சேர்ந்தவர் அந்த இடத்து எஜமானுக்கும் மற்றோருக்கும் அடங்கித் தமது உயிரினும் இனிய கற்பைக் கொள்ளை கொடுத்த பெண்டீர்களே யாவர். அவர் ஆணைக்கும் ஏவலுக்கும் உட்பட்ட ஆள்களும் சிலர் துன்பமற்றிருந்தார்கள். அந்த வகையில் சேராத எத்தனையோ பெண்மணிகள் அவர்களால் கொடுமைபட்டுத் துன்பத்திற் கிலக்காகி இருந்தார்கள்.

“சுருட்டு குடிப்பது மிகுந்த தேக ஆரோக்யம்” என்று ஒரு வைத்தியர் கூறுவதோடு தானே குடித்தும் பழகுகின்றாராம். வேலியே பயிரை மேயும் சங்கதியில் இதுவும் ஒன்று போலும்.

இந்தக் கொடிய தொத்து நோயாகிய

நரசோரத்திற்குள் பெருஞ் சோரமாகிய கற்பைப் பங்கம் செய்ய எண்ணும் புண்ணியவான்களின் கண்ணில் நமது கோமதி இங்கு வேலைக்கு வந்து சுமார் ஒரு வருடத்திற்கு மேல் படாமலிருந்தாள்; எனினும் அதற்குமேல் அந்த பாதகர்கள் தங்கள் எண்ணத்தை வெளியிட்டுக் கூறியதை அறிந்த கோமதி அவர்களைத் துரும்பிலும் துரும்பாக மதித்து வெகு அலக்ஷ்யமாகப் பேசி உதாசீனம் செய்து “ஏ பாதகர்களே! உங்கள் அநியாயத்தைக் கண்டிக்க எந்த தெய்வமும் முன்வரவில்லை; உங்களுடைய பேய்க் குணத்தை அடக்க எந்த கவர்ன்மெண்டும் கவனிக்கவில்லை என்னும் மமதை உங்களை இத்தகைய அடாத செய்கையில் புகுத்துகின்றது. இதையழிக்கக் கடவுள் பார்த்துக் கொண்டு தானிருப்பார். என்னுயிரை இழந்தாலும் இழப்பேன். என் கற்பை உங்களுக்கு

அர்ப்பணம் செய்யமாட்டேன்” என்று முறைப்பாகக் கூறிவிட்டாள். இதுகேட்ட அவர்களுக்கு ஆத்திரம் மூண்டுவிட்டது.... இந்த ஆத்திரத்தினால் அவளை இன்னும் கொடுமையாக நடத்தினார்கள். அந்தத் தீவை விட்டு வருவதற்கு ஒருவித வழியும் தெரியாமல் விழித்தவாறு கடவுளை வேண்டிக்கொண்டு தன் காலத்தைக் கடத்தலானாள். இக் குழந்தைகளுடன் அங்கு கோமதி யடைந்த துன்பத்தை நேரில் கண்டவர்கள் தானறிவார்கள்.

“சந்தாதாரர்கள் மறுமாதம் முதல் தேதி என்று வரும்? சஞ்சிகை எப்போது படிப்போம்” என்று எதிர்பார்க்கிறார்கள். பத்திராதிபரோ “மாதம் முடிந்து விடப் போகிறதே! இன்னும் வேலை முடியவில்லையே!” என்று ஏக்கம் கொள்கிறார்.

## 3-வது அதிகாரம் - பற்றுடையோரன்பு - சிற்றின்பத் துன்பம்

மரத்தடியில் தாயைக் காணாது தத்தளித்த கேசவன் அக்கம் பக்கத்தில் விசாரித்தான். ஒரு தகவலும் தெரியவில்லை; கண் கலங்கினான், “ஐயோ! என் தாயே! என்னை விட்டு நீ எங்கு சென்றாய்? உன்பொருட்டு நான் எத்தனை வேகமாய் வந்தும் உன் முகதரிசனம் கிடைக்காது உன்னையே பறிகொடுத்தவன் போலத் திண்டாடுகின்றேனே! ஹா! அம்மா! அம்மா! பாலா! லீலா!” என்று கதறினான். கேசவன் தந்தையை என்றும் அதிகமாக பக்ஷத்துடன் நேசித்தறியமாட் டான். தாயிடத்திலேயே பெரும் பாசம் வைத்திருந்தான். ஆதலால்

தாயின் பிரிவும், தங்கைகளின் பிரிவும் அவன் சிறிய பாலகனாயினும் அபாரமான துக்கத்தை பளித்தன. இனிமேல் தான் தங்கைகளையும், தாயாரையும் எங்குத் தேடுவது? தான் யாரிடம் அண்டி விசாரிப்பது, என்ற கட்டுமீறிய கலக்கத்தினால் விம்மி விம்மிப் புலம்பிக்கொண்டே வழியோடு செல்லலானான்.

வழியில் பார்ப்பவர்களெல்லாம் “ஏனப்பா அழுகிறாய்?” என்று கேட்டால் “என் தாயாரைக் காணவில்லை” என்று தன் கதையைக் கூறுவான். இவன் தாயாரைக் கண்டவர்கள் யார்? இக் கலியின் முதிர்ச்சியில் செல்வவந்தர்களைச் சிறப்பித்து ஆதரிப்பதும், தனத்தின்மேல் தனத்தைத் தேடிப் புதைப்பதும், தன்னுடைய சுய நலத்தை மட்டும் கவனித்துப் பிறரின் விஷயத்தில் எது எவ்விதமாயினும் அக்கரை, இன்றி

அதிலும் ஏழை என்றால் சற்றும் இரக்கமின்றி அவர்களை அலக்ஷ்யம் செய்துத் திட்டி வேலை வாங்குவதுமாக இருக்கும் நிலைமையில் இந்த அனாதைச் சிறுவனைக் கவனிப்பார் உண்டா! விசாரிப்பதும் விலகுவதுமாகவே வெகுபேர்கள் சென்று விட்டார்கள்.

அவசர அவசரமாக நடந்துசென்றாலும், செல்லும் இடம் சமீபத்தில் இருப்பதாயினும், அவசரத்தின் வேகத்தினால் இடம் வெகு தூரம் போலக் காணப்படுகின்றது. அவசாம் செய்யும் கூத்து அனேகம்.

இவனுக்குத் தான் படித்த இலவச பாடசாலையின் உபாத்தியாயரையும் சில பையன்களையும் தவிர வேறு யாரையும் தெரியா தாகையினால் தனது பாடசாலையை நோக்கி நடந்து உபாத்தியாயரைக் கண்டு அவரிடத்தில், நடந்த சகலமான விஷயங்களையும்

தெரிவித்தான். உபாத்தியாயர் கேசவனின் புத்தி சூக்ஷ்மத்தைக்கண்டு என்றும் அவனிடம் பக்ஷமாயிருப்பவராதலால் கேசவனின் கதையைக் கேட்டதும் மிக்க துயரமடைந்து “அப்பா! நான் இவ்விஷயத்தைப் போலீசாரிடத்தில் தெரிவிக்கிறேன். உன்னுடைய தாயார் வரும்வரையில் நீ என் வீட்டிலேயே சாப்பிட்டுக்கொண்டு பாடசாலையில் படித்துவா; பிறகு பார்க்கலாம்” என்றார்.

இது கேட்ட கேசவன் அதற்கு ஒப்புக்கொண்டு, அவர் வீட்டிலேயே இருந்தான். அவனுடைய உபாத்தியாயரும் இவன் தாயார் விஷயமாகப் போலீசாரிடம் தகவல் கொடுத்தார். கேசவன் வீட்டில் இருப்பதால் வாத்தியாருக்கு வேட்டி துவைப்பது, வென்னீர் விளாவுவது, கடைக்குச் செல்வது முதலிய வேலைகள் குறைந்தன.

அவற்றைக் கேசவன் வெகு பக்ஷத்துடன் செய்துவந்தான். குருவின் பத்தினிக்கு கேசவனுக்கு உணவிடுவது, பெருத்த வெள்ளத்தில் செல்வம் அடித்துக்கொண்டு போய்விடுவது போலாய்விட் டது. அதை வெளியில் பலவிதத்தில் சொல்லியும் பார்த்தாள். உபாத்தியாயர் கேளாமையினால் அந்த அம்மாள் மிக்க கோபமடைந்து தினம் கேசவன்மீது ஒவ்வொரு குற்றத்தைச் சொல்வதும் அவனை வீட்டிலுள்ள பத்து பாத்திரங்கள் தேய்க்கவும், தண்ணீர் மொள்ளவுமான வேலைகளைச் செய்யச் சொல்லவும் ஆரம்பித்தாள்.

அவசாத்தில் ஒரு வார்த்தையைக் கூறிவிட அது பெருத்த அநர்த்தமாகி சண்டையை மூட்டிவிடுகின்றது. என்றும் மாறாத பகையாகவும் சில சமயம் ஆய்விடுகின்றது.

உத்தமனான கேசவன் இந்த

கஷ்டங்களையும் பொருட்படுத்தாமல் வெகு பொறுமையோடு செய்துகொண்டே தன் பாடங்களை இராக்காலத்தில் படித்து வந்தான். இவ்விதமே சில வருடங்கள் சென்றன. கேசவனின் துரதிருஷ்ட-வசத்தினால் அவனுடைய குரு காலகதி யடைந்துவிட்டார். அவராலேயே நடத்திவந்த அச்சிறு பாடசாலையின் வேலை நிர்வாகத்தைப் பிறகு கைப்பற்றும் கர்த்தாக்கள் இல்லாமையினுல் பாடசாலையும் எடுபட்டுவிட்டது. புருஷன் இருக்கையிலேயே வயிறெரிந்த உத்தமி பிறகு ஒரு அனாதையை ஆதரிப்பாளா!

வீட்டை விட்டு வெளியேறி விட உத்தரவு பெற்ற கேசவன் -பன்னிரண்டு வயதுடைய பாலகன் - அழுதுகொண்டே வெளியில் வந்தான். தன் தாயாரின் விஷயம் ஒன்றுமே தெரியாமையினாலும் தான் தனித்த பரதேசியானதாலும் அளவற்ற துக்கத்துடன்

“இனிமேல் நான் எவ்விதம் பிழைப்பது? யாரிடம் செல்வது? இவ்விதம் அவஸ்தைப் படுவதைவிட உயிரை விட்டுவிடுதல் மேல்” என்று தீர்மானித்தான். சென்னை ஹைகோர்ட்டுக்கு எதிரிலுள்ள கடற்கரையில் ஒரு நாள் விசனமே வடிவமாக உட்கார்ந்திருந்த கேசவன் தன்னைமீறிப் புலம்பியவாறு “இன்று இருள் சூழும் வரையில் இங்கு இருந்து கடலில் விழுந்து உயிரை விடுவது” என்று தீர்மானித்தான்.

அன்று அந்த கடற்கரையில் பொதுக்கூட்டம் ஒன்று நிகழப் போவதால் அதற்காக ஆயிரக்கணக்கான ஜனங்கள், ஆண்களும் பெண்களும் குழுமிவிட்டார்கள். கூட்டத்தின் ஆரம்பத்தில் தேசீய கீதம் பாடப்பட்டது. அந்த கானத்தின் ஒலியைக் கேட்ட கேசவன் சங்கீதத்தினால் கட்டுப்பட்டு அவ்விடம்விட்டு கூட்டத்தினருகில் வந்தான்.

தேசீய கீதம் வெகு இனிமையாகப் பாடினவனும் தன்னைப்போன்ற சிறுவனேயாகையினால் “நானும் அவனைப்போல பாடிக்களிக்கும் காலம் வருமா?” என்று ஏங்கினான். அத்தருணம் அங்கு கூட்டத்தில் உட்கார்ந்திருந்த ஓர் மாது “கேசவா!” என்று அழைத்தாள்.

அவசரமாக ஒருவரை காணச் செல்கையில் அவர் யாருடனோ முக்கியமாகப் பேசிக்கொண்டிருக்க, சென்றவன் அவசரத்தின் வேகத்தால் தடாரென்று உள்ளே நுழைந்தால் அந்த மனிதருக்கு அந்த அவசரப் பிரவேசம் கோபத்தை உண்டாக்கிவிட அது ஒருவிதமான கூத்தாக முடிகின்றது.

இக்குரல் கேட்ட கேசவன் திரும்பிப்பார்த்து அங்கு ஓடினான். அந்த அம்மாளைப் பார்த்ததும் “அம்மா! நமஸ்காரம். என்னை தங்களுக்கு நினைவு இருந்ததா!” என்றான்.

அம்மாது அவனை நோக்கி “கேசவா! நீ அனாதையாக நின்றுவிட்ட செய்தியறிந்தேன். உன்னுடைய கதையைக் கேட்டு மிக்க விசனப்பட்டேன். என்னுடைய பெண்ணுக்கு ஓர் வேலைக்காரன் தேவை; அவ்வீட்டில் நீ வேலை செய்து கொண்டிருக்கிறாயா?” என்று கேட்டாள். கடவுளே தனக்குப் பிழைக்கும் வழி காட்டியதைத் தட்டக்கூடாதென்று நினைத்து அவன் அதற்கு ஒப்புக் கொண்டான். பிறகு கூட்டம் நடந்தேறியதும் அம்மாதுடன் அவள் வீட்டிற்குச் சென்று அன்று முதல் அந்த வேலையை வெகு ஒழுங்காகவும், பக்தியோடும் செய்து வந்தான்.

தினந்தோறும் வேலை ஓய்ந்த நேரத்தில் மாலைப்பொழுதில் கடற்கரையில் உட்கார்ந்து வெகு ஆநந்தமாகப் பாடிக்கொண்டிருப்பதும், பிறகு வீடு செல்வதுமாக இருந்தான். இவ்விதமே சில மாதங்களாய் விட்டன. இவன்

தினம் பாடிக்கொண்டே வருவதை அங்கு வரும் அனேகர் கேட்டு ஆனந்திப்பது வழக்கம். அவ்விதம் கேட்போரில் பலர் அவனைத் தம்தம் வீட்டிற்கு அழைத்துச்சென்று பாடச்சொல்லிக் கேட்பார்கள்.

கௌரவமான சிலரை ஒன்றுகூட்டி ஒரு சபையை ஏற்படுத்தி அதில் நாடகம் ஆடுவதும், பாட்டுக்கச்சேரி நடத்துவதுமாகச் சில வருஷங்களாக பொன்னுசாமி என்னும் (ஒருவர் நடத்தி வருகிறார். அவர் ஒரு தினம் கடற்கரையில் கேசவன் பாடுவதைக் கேட்டு ஆனந்தித்துக் கேசவனைத் தமது நாடகத்திற்குச் சேர்த்துக்கொள்ள ஆசைப்பட்டு அவனை அழைத்து "எங்கள் சபைக்கு வருகிறாயா! நாங்களே உனக்குச் சாப்பாடு போட்டு வைத்துக்கொள்கிறோம்" என்று கூறினார்.

மிகவும் அவசரச் செலவுக்குப் பணம்

வேண்டி காளைக்கே கொடுப்பதாகக் கூறி ஒருவரிடம் கடன் வாங்கி அவசரத்திற்குச் செலவிட்டுப் பின் கடனைத் திருப்பிக் கொடுக்க தாமதமாகிவிட்டால் அந்த இடத்தில் அவசரம் செய்யும் வேடிக்கை யொரு தினுசு.

தான் அன்று கூட்டத்தில் பாட்டு கேட்டபோதே தனக்கும் அம்மாதிரியாக பாடக்கூடிய சமயம் வருமா என்று ஏங்கிக்கொண்டிருந்தானாகையினால் அவன் உடனே முழுமனத்தோடு சம்மதித்தான். வேலை செய்துகொண்டிருந்த வீட்டில் உத்தரவு பெற்றுக் கொண்டு அவரோடு சென்றுவிட்டான். கேசவனுக்கு வயது 12 தான் ஆகிறதென்றாலும் பார்வைக்கு நன்றாகவும், வசீகரமாகவும் இருப்பான். ஆகையினால் அவனுக்கு கிருஷ்ணன் வேஷங்கொடுத்து நடிக்கச்செய்தால் மிக்க பொருத்தமாயும், அழகாயுமிருக்கும் என்று நினைத்து

கிருஷ்ணலீலையே முதலில் நடத்தத் தீர்மானித்து அன்று முதல் கேசவனுக்கு வீட்டிலேயே இருக்க இடங் கொடுத்து விட்டார்.

கேசவன் இந்த இடத்தில் வந்துசேர்ந்த பிறகு விளையாட்டுப் புத்தியுடைய சிறு பையனாதலால் தன் விசனத்தையே மறந்து வெகு சந்தோஷத்தையடைந்தான்; எனினும் தன் தாயார், தங்கைகளைப்பற்றி நினைக்காத நாள் இல்லை. அவர் தான் சொல்லிக்கொடுக்கும் பாடல்களையும், நடிக்கும் விதங்களையும் நன்றாகக் கற்றுக்கொள்ளச் செய்வதோடு அவனை நன்றாக முன்னுக்குக் கொண்டுவர எண்ணி பள்ளிக்கூடத்திலும் இலவசமாகவே படிக்கச் சிபார்சு செய்தார்.

கேசவன் வெகு ஆநந்தத்துடனும், முழுமனத்துடனும் கிருஷ்ணலீலா நாடகத்தைக் கற்றுக்கொண்டதால்

இரண்டுமாத காலத்திற்குள் வெகு நன்றாகப் பாடம்செய்து ஒத்திகையில் முதல் தரமாக நடித்து சபையோரைக் களிப்பித்ததனால் உடனே நாடகத்தைப் பகிரங்கமாக நடிக்க ஏற்பாடு செய்து மாஸ்டர் கேசவன் கிருஷ்ணனாக நடிப்பான் என்று விளம்பரங்கள் செய்துவிட்டார்கள்.

அவசரத்தில் கண் மண் தெரியாமல் ஓடுவதால் அவசரப் பேய் அடி படவும் செய்கின்றது. நடு வீதியில் தடுக்கி விழுந்து அவமானமுறவும் செய்கின்றது.

கிருஷ்ணன் குழலூதுவதுபோல புகைப்படம் பிடித்து அதை நோட்டீஸில்; பிரசுரம் செய்தார்கள். படத்தில் வெகு அழகாக அமைந்துள்ள கிருஷ்ணனைப் பார்த்து எல்லோரும் நாடகத்திற்குத் திரள் திரளாக வந்தார்கள். கொட்டகை நிரம்பி இடமில்லாதபடி ஆய்விட் டது.

ஜனத்திரளின் பயனாக ஆயிரமாயிரமாகப் பணம் வசூலாகிவிட் டது. அன்று நடந்த கிருஷ்ணலீலையில், கேசவன் ஆயிரக்-கணக்கான ஜனங்களின் மனத்தை ஒருங்கே கொள்ளையடித்துவிட்டான். அவனைப் பற்றிப் போற்றாதோர் இல்லை. “அடாடா! என்ன அழகாய் நடித்தான்! என்ன இனிமையான சாரீரம்!” என்று புகழ்ந்தவாறு எல்லோரும் வீடு திரும்பினார்கள்.

கேசவனின் கஷ்டகாலம் விமோசனமே ஆய்விட்டது எனலாம். அதே கிருஷ்ண-லீலையை அடுத்தடுத்துப் பத்து முறை நடித்தார்கள். கேசவனுக்கு அந்த நாடகத்திலேயே எண்ணற்ற மெடல்கள் கிடைத்ததுடன் நல்ல கீர்த்தியும் உண்டாகிவிட்டது இத்தனை பெரும் புகழ் தனக்கு வந்துவிட்டதனால் சந்தோஷம் ஒரு புறம் கொண்டான்; எனினும்

இவைகளைப் பார்த்துச் சந்தோஷப்பட தன் தாயார் இல்லையே என்ற ஏக்கம் மட்டும் அவனது மனத்தை வாட்டியது. கடவுளைக் குறித்து இது விஷயமாகச் சதா பஜனை செய்து கொண்டே இன்னும் பல நாடகங்களையும் கற்றுக்கொண்டு படிப்பையும் கவனித்து வந்தான். இவ்விதமே பின்னும் சில வருடங்களாயின. கேசவன் மெட்ரிக்குலேஷனையும் பாஸ் செய்தான். அதற்குமேல் காலேஜிலும் சேர்ந்தான். வயது 16 ஆயிற்று. சென்னையில் கேசவனின் பெயரை யறியாத குழந்தைகள் கூட இல்லை.

அவசாமாகப் பேசுவதால் முக்கியமான விஷயத்தில் தடபுடலாகச் சொல்லும் வார்த்தைகள் சரியானபடி அர்த்தம் தெரியாமல் பெரிய அனர்த்தமாக முடிந்து, அவசரம் சுடு சரமாகவும் சில இடத்தில் நேர்ந்துவிடுகின்றது.

சென்னைக்குத் தெற்கேயுள்ள கடலூரில் ஓர் பெரிய தனவந்தர் இருந்தார். அவருக்கு செல்வத்திற் கேற்ற சந்தானமும் நிரம்பி இருந்தது. வாய் வாழைப் பழம்; கை கரணைக் கிழங்கு என்பது அவருக்கே தகும். தன்னுடைய மக்களுக்கே வயிறு நிரம்பச் சாப்பாடு போட மாட்டார். அவருக்கு இத்தனை செல்வம் எந்த வகையில் சேர்ந்ததெனில் அவர் ஓர் நாடகக் கம்பெனி வைத்து அதற்குத் தலைவராக விருந்து ஏராளமான பொருள் திரட்டிவிட்டார். அவர் வீட்டில் வேலை செய்துகொண்டிருந்த ஓர் பெண் பார்ப்பதற்கு நல்ல வசீகரமும், அழகுக் கேற்ற கூந்தலுடன் மா நிறமுமாக விருந்தாள். அவளுக்கு சுமார் பத்து வயதிருக்கும். அந்த வீட்டில் அப்பெண் இரண்டு வருடங்களுக்கு முன்னால் அந்த நாடகக்காரருக்குத் தெரிந்த வேறொருவரின் சிபார்சின் பேரில் வேலைக்கு வந்தாள். வீட்டு வேலைகளை எல்லாம்

செய்வதோடு நாடகக் கொட்டகையில் நாடகத் தன்று கூடவே சென்று அங்கு பெருக்குவதும், ஜமக்காளம் போடுவதும், நாடகத்தில் நடித்தபிறகு துணி மணிகளை வாரி மூட்டை கட்டுவதுமான வேலையையும் அப் பெண்ணே செய்யவேண்டும். இத்தனை வேலை செய்யும் பெண்ணுக்கு அவர் மாதம் 5 ரூபாய் சம்பளமும், இரண்டு வேளைச் சாப்பாடும் வெகு தாராளமாகப் போட்டு வந்தார்.

பிரதி நாடகத்திற்கும் அந்தப் பெண் சென்று பெருக்கிவிட்டு அங்கு ஓர் மூலையில் சாமி ஆடிக்கொண்டே உட்கார்ந்திருப்பாள். அந்தப் பெண் தூங்குவதைக் கண்ட முதலாளி வெள்ளென்று நாய் போலக் குலைத்துச் சீறி விழுந்து “எ தடிப் பெண்ணே! இதென்ன மூதேவித் தூக்கம். இங்கு தூங்குவதற்காகவா வந்தாய்? தினம் இரண்டு வேளை சோற்றைக்

கொட்டிக்கொள்ளவில்லையா? தின்ற மயக்கத்தில் தூக்கம் வந்துவிட்டதோ! மாதம் 5 ரூபாயை வாங்கி முடிந்துகொண்டு மூதேவி போலத் தூங்குகிறாயா?” என்று அதட்டுவார்.

இந்த லோபியின் மிரட்டலுக்குப் பயந்த அந்த சிறுமி தூங்கி வழிந்துகொண்டே உட்கார்ந்திருக்கையிலும் இங்கு நாடகத்தில் பாடும் பாடல்கள் அனேகம் அவளுக்குப் பாடமாக வந்துவிட்டன. சங்கீதத்தில் மிக்க பிரேமையுள்ள அப் பெண் பிறகு நாடக தினத்தில் தூங்காமலேயே விழித்திருந்து நாடகத்தைக் கவனிக்க வாரம் பித்தாள். சங்கீதத்தினிடம் வசியமாகாதவர்கள் உலகிலுண்டா! அந்தப் பெண் வீட்டில் வேலை செய்யும்போதும், இன்னும் மற்ற நேரத்திலும் இந்த நாடகத்தில் கேட்ட பாடல்களைப் பாடிக் கொண்டே இருப்பாள்.

அவசர அவசரமாகச் சாப்பிடுவதால்

தையல் இலையாயின் ஈர்க்கு தொண்டையில் மாட்டிக் கொள்ளவும், சாதம் மாரில் அடைத்துக் கொள்ளவும் விக்கல் எடுப்பதுமான உபத்திரவங்கள் உண்டாகி விடுகின்றன.

நாம் முன்னர் தெரிவித்த சொந்தக்காரர் ஒரு காரியமாக் கடலூருக்கு வந்தார். அவர் எப்போது வந்தாலும் இந்த தனலோபி வீட்டிலேயே இறங்குவது வழக்கம். அப்படி வந்தவர் இவர் வீட்டிலிருக்கையில் அந்தப் பெண் வீடு பெருக்கும்போதும், பாத்திரம் தேய்க்கும்போதும் ஓயாது பாடுவதைக் கண்டும் அந்தப் பெண்ணின் இனிமையான சாரீரத்தைக் கேட்டும் ஆச்சரியமடைந்து அந்தப் பெண்ணை அருகிலழைத்து “அம்மா! நீ யார்? எங்கிருப்பது? உனக்கு வயதென்ன ஆகிறது? உன் பெற்றோர்கள் எங்கே இருக்கிறார்கள்? எத்தனை நாளாக இங்கு வேலை செய்கிறாய்?” என்ற கேள்விகளை அடுக்கடுக்காகக் கேட்டார்.

அதுகேட்ட அந்தப் பெண்மணி வெகு மரியாதையுடன் “ஐயா! நான் இந்த வீட்டில் இரண்டு வருடங்களாக வேலை செய்கிறேன்; நாங்கள் தற்போது இந்த கடலூரில் தான் இருக்கிறோம். இதற்கு முன்னர் பெரியவர்கள் வேறு ஊரில் இருந்தார்களாம். என் தாயாரும், எனக்கொரு தங்கையும் தானிருக்கிறார்கள். என் தங்கை கேவலம் சிறியவள். என் தாயார் காச நோயினால் மிக்க பலஹீன மடைந்துவிட்டார்கள். என் தந்தையின் விஷயமே தெரியாது. என் தாயும் அது பற்றி எதுவும் தெரிவிப்பதில்லை. என்னுடைய இந்த சம்பளத்தினால் எங்கள் தாயாரும் தங்கையும் ஏதோ கஞ்சி குடித்துக்கொண்டும் பட்டினி கிடந்தும் ஜீவிக்கின்றார்கள்” என்று தன் முழு விருத்தாந்தத்தையும் மிக்க வருத்தத்தோடு கூறினாள்.

அவசரத்தில் சாமான்களை ஒழிக்கச்

சென்றால் தடார் புடார் என்று பண்டங்கள் கீழே விழுந்து கொட்டி இறைந்து, உடைந்து, சின்னா பின்னமாகக் காரியமே சிதறி விடுகின்றது.

வந்தவர்:- அம்மா! உன் விஷயம் கேட்க மனம் மிகவும் வருந்துகின்றது. உன் பெயரென்ன?

பெண்மணி:- பெரியவரே! குடிக்கத் தண்ணீர் கொடாத மகராஜிக்கு கங்கா பவானி என்று பெயராம் என்கிற பழமொழிப் படிக்கு ஒருவிதத்திலும் பரிமள மற்ற அனாதையாகிய எனக்கு என் தாயார் பரிமளா என்று பெயர் வைத்து அழைக்கிறாள். என்னுடைய இந்த நிலைமையில் பரிமளா என்று என் பெயரைச் சொல்லி கொள்ள வெட்கமடைந்து என்னைக் கேட்போருக்கும், இந்த வீட்டுக்காரர்களுக்குங் கூட என் பெயரை நான் கூறாது கன்னி என்று கூறி வருகிறேன். தாங்கள் ஏதோ என் பேரில் அனுதாபத்துடன் அழைத்து விசாரித்ததால்

நான் எனது நிலைமையைப் பூர்ணமாக உங்களிடம் கூறினேன்” என்று மிகக் கண் கலங்கியவாறு கூறினாள்.

இதைக்கேட்ட பொன்னுசாமி உண்மையிலேயே மனமுருகிப் போய் “பரிமளா! நான் உன் தாயாரைப் பார்க்கவேண்டும். அங்கு அழைத்துச் செல்கிறாயா!” என்று கண்ணீர் உதிரக் கேட்டார். அதற்குப் பரிமளா சம்மதித்து அவரை யழைத்துக் கொண்டு வீடு சென்றாள். காச நோயினால் மிக்க மெலிந்து கிடக்கும் பார்வதியம்மாள் வெகு சிரமத்தோடு எழுந்து உட்கார்ந்து மரியாதை செய்து “வாருங்கள்; உட்காருங்கள்” என்றாள். பொன்னுசாமியும் உட்கார்ந்து அவளை நோக்கி “அம்மா! உங்கள் வரலாற்றைக் குழந்தையின் மூலமறிந்தேன். உங்கள் மகள் வெகு இனிமையாகப் பாடுவதைக் கேட்டு நான் மிக்க

சந்தோஷமடைந்தேன். நான் உங்களுடைய மகளின் சங்கீதத்தைக் கேட்டது முதல் என் மனம் உங்கள் குழந்தையை என் கூடவே வைத்துக் கொள்ளப் பிரியப்படுகின்றது. உங்களுடைய சகலமான செலவையும் நான் பார்த்துக் கொள்கிறேன். நான் ஓர் நாடகக் கம்பெனி வைத்திருக்கிறேன். அதில் உங்கள் குழந்தையைக் கொண்டு சேர்க்க என் மனம் இச்சிக்கின்றது. உங்கள் சம்மதத்தை அறிந்து உங்களை அழைத்துச் செல்வதற்கே வந்தேன். உங்கள் சம்மதத்தைத் தெரிவித்தால் அதன்படியே செய்கிறேன்" என்றார்.

அவசர அவசரமாகப் பரிமாறினால் சாப்பிடுகின்றவர்கள் எதை முதலில் சாப்பிடுவது என்பதே தெரியாமல் எல்லாவற்றையும் வைத்து விழித்துக் கொண்டு கடைசியில் வயிறு நிறையாமல் எழுந்து விடுகிறார்கள்.

ஏற்கெனவே தன் குழந்தை அங்கு கஷ்டப்படுவதை பறிந்து “அந்த கஷ்டத்திினின்றும் விடுதலை பெற்றால் போதும். சிறிய குழந்தையாகிய அவள் கஷ்டப்படாது எவ்விதமாவது பிழைக் கட்டும்” என்று நினைத்து அவள் அதற்கு இசைந்தாள். உடனே தான் அவர்களை அழைத்துச் செல்வதாக ஏற்பாடு செய்து அந்த நாடகக்காரனிடமும் சொல்லிவிட்டு அவர்களைத் தன்னுடன் அழைத்துச் சென்று அவர்களைப் பிரத்யேகமான இடத்தில் வைத்து, அவர்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து வைத்து, அன்றே தனது கம்பெனியில் உள்ளோருக்கு இவர்களைப் பற்றி அறிமுகம் செய்துவைத்தான்.

முதலில் ஸ்ரீ வள்ளி நாடகத்தை நடிக்கச் செய்ய ஏற்பாடு செய்து, வள்ளியின்

நடிப்பை பரிமளாவுக்குக் கற்றுக் கொடுத்தார்கள். பரிமளா தன்னுடைய நடிப்பையும், பாடல்களையும் வெகு விரைவில் பாடம் செய்யத் துவக்கினாள். கேசவன் சுப்பிரமணியனாகவும், பரிமளா வள்ளியாகவும் நடிக்க ஏற்பாடாகிவிட்டது. பரிமளவல்லி தன் திறமையினால் முதல் முதலிலேயே உயர்ந்த பாத்திரமாகிய வள்ளியம்மையாக நடிக்க இசைந்து சுமார் இரண்டு மாதத்திற்குள்ளாகவே வள்ளி நாடகம் நடிக்கத் தயாராகி விட்டாள். ஒத்திகையில் மிகவும் திருப்திகரமாக பரிமளா நடித்ததால் அபரிமிதமான விளம்பரங்களைக் கம்பெணிக்காரன் செய்து “தேதியை எதிர் பாருங்கள்; எதிர் பாருங்கள்”. என்று பிரசுரித்து விட்டான்! சுவர்கள், விளக்குத் தூண்கள், டிராம் வண்டிகள் முதலிய இடங்களில் பெரிய எழுத்துக்களில் “நீங்கள் இதுவரையில்

கேட்டிராத, பார்த்திராத அற்புத நாடக ரத்தினத்தின் இனிமையான கானத்தைக் கேட்கத் தவறாதீர்கள். பரிமளம் மிகுந்த பரிமளா ஸ்ரீ வள்ளியாயும், நாடக உலகத்தில் நற்கீர்த்தி வாய்ந்த மாஸ்டர் கேசவன் சுப்பிரமணிய வேடனாயும் நடிக்கப் போகும் தேதியை எதிர் பாருங்கள்.எதிர்பாருங்கள்" என்று தடபுடலாய் முதலில் போட்டுப் பிறகு நாடகத் தேதியைக் குறித்து விளம்பரம் செய்தான்.

தங்கள் வீட்டுக்கல்யாணத்தில் தமக்கே வேலை சரியாகிவிடுகிறது. வந்தவர்களோடு நிம்மதியாக உட்கார்ந்து பேசுவதற்குப் பொழுது கிடைப்பதில்லை பிறர் வீட்டு விவாகத்திற்குச் சென்ற காலையில்தான் குதூகலமாக எல்லோரும் கூடிப் பேசி மகிழ நேருகின்றது.

நாடகத்தன்று ஏராளமான கூட்டம் கூடி

விட்டதால் கொட்டகையில் நிற்கவும் இடமின்றி, டிக்கட்டுக்களை வாபீஸ் செய்யும்படி யாகவும் ஆய்விட்டது. நாடகம் ஆரம்பித்தாயிற்று. பரிமளா வள்ளி யாகத் தோன்றும் பொழுது தேவகானமோ, கந்தர்வகானமோ' என்று ஐயுறும் படியாகப் பாடிக்கொண்டே பிரஸன்னமானாள்.

கேவலம் பத்து வயதுப் பெண் குழந்தை என்பதை அப்போதே பார்த்த சபையோர்கள் அவளுடைய அற்புதமான சாரீரத் தின் இனிப்பையும், அழகின் மேம்பாட்டையும், பாடும் திறமையையும் கண்டு வியப்புற்று ஆநந்த சாகரத்தில் மூழ்கி அடிக்கடி கர கோஷம் செய்து ஒன்ஸ் மோர் (once more) என்று கத்தினார்கள். வள்ளி ஆலோலம் என்று பாடுகையில் உண்மையில் கொட்டகையில் நிசப்தம் குடிகொண்டு விட்டது. பிறகு வள்ளிக்கும் சுப்பிரமணியனுக்கும் நடந்த

தர்க்கம் சபையோர்களை பிரமிக்கச் செய்து விட்டது. நாடகம் வெகு ருசிகரமாக நடந்தேறியது. அந்த முதல் நாடகத்திலேயே பரிமளாவின் பெயர் உலகில் பறக்க வாரம்பித்து விட்டது.

சிறிய பெண் இத்தனை சாமார்த்தியமாகப் பாடி நடிப்பதைக் கண்டு மிக்க பூரித்த கனதனவான்கள் அவளுக்கு மெடல்களும், பரிசுகளும் கொடுத்தார்கள். பிறகு சாவித்திரி, சீதாகல்யாணம், கண்ணகி, அல்லி, பவளக் கொடி, பாமா விஜியம், பாரிஜாதம் முதலிய பல நாடகங்களில் பரிமளா பிரக்யாதி அடைந்ததோடு நந்தனார் சரித்திரத்தில் முதல் பரிசு பெற்றாள்.

நாம் இப்பொழுது அந்த நாடகக் கம்பெனியின் நோக்கத்தை முக்கியமாகக் கூறவேண்டியது அவசியமாதலால் அதைப் பற்றிச் சிறிது கூறுவோம். பொன்னுசாமி

என்பவன் மிக்க செல்வம் படைத்த வம்சத்தில் பிறந்தவன். அவனுடைய பெற்றோர்கள் தங்கள் வம்ச வழக்கத்தை முன்னிட்டுப் பொன்னுசாமிக்கு யுக்த வயதில் ஓர் அழகிய பெண்ணைப் பார்த்து விவாகம் செய்து வைத்தார்கள். பொன்னுசாமிக்குக் கூடிய வரையில் கல்வி கற்று வைத்தார்கள். பொன்னுசாமி பாலியத்தில் செல்வத் திமிரினால் மைனர் ஜமீந்தார் தோரணையில் ஆடம்பரமாக உண்டு களிப்பதும், தினுசு தினுசாக உடை தரிப்பதும், சதா பத்து சினேகிதர்களுடன் குசாலாக உலாவித் திரிவதும் தவறாது சினிமா, ட்ராமா முதலியவற்றிற்குப் போவதும், ஆடம்பரத்துடன் உயர்தர மது வகைகள் குடிப்பதும், வேசி வீட்டுறவு கொள்வனுமான முதலிய லீலைகளைச் சலிக்காது செய்து வந்தான்.

அவனுடைய பெற்றோர்கள் இந்த ஆடம்பா தடபுடலைத் தடுப்பதற்கு எத்தனை சொல்லியும் கேளாது அவன் தத்தாரியாகத் திரியலானான். அவனுடைய பாலிய லீலைகளின் பயனாக பெற்றோரின் செல்வம் சிறுகச் சிறுகக் கரைய வாரம்பித்தது. விவாகமாகிய மனைவி பக்குவமாகி வீட்டிற்கு சம்சாரத்திற்கு வந்து விட்டாள். பெரியோர்களின் நிர்ப்பந்தத்தினால் சோபனக் கல்யாணத்திற்கு ஏற்பாடாயிற்று. பொன்னுசாமி அன்றைய தினமும் வேண்டியபடி குடித்துவிட்டு ஆடிப்பாடிக் கூத்தடித்த பின்னரே சயன அறைக்குச் சென்றான்.

சரி சமானமாக இருப்பதற்கு அனேகர் ஆசைப்படுகிறார்கள், யாருடன் சரிசமானமாக இருக்க வேண்டுமென்று நினைக்கின்றோமோ அவர்கள்

இந்த பதவிக்கு வருவதற்குமுன் எத்தனை கஷ்டங்கள் பட்டுப் பெரியாரிடத்தில் பணிவுடன் நடந்து அனுபவப் பட்டிருப்பார்களென்றதை நினைக்கவேண்டும்.

பொன்னுசாமியின் மனைவியான குணவதி என்பவள் இயற்கையான லஜ்ஜையுடன் தலை குனிந்து நிற்பதைக் கண்டு அவன் கோபித்து “சீ நாட்டுப்புறக் கழுதை! கட்டிலின் கீழே புகுந்து கொள்” என்று கூறிவிட்டு அப்போதே கதவைத் திறந்துகொண்டு தன் ஆசை நாயகியாகிய மோகனாவின் வீட்டை யடைந்தான். இச் செய்கையினால் எல்லோரும் மனம் வருந்தி பொன்னுசாமியைத் திட்டினார்கள். மனைவி என்கிற பாசத்தை அவன் சிறிதும் கொள்ள வில்லை.

எந்த நாடகத்திற்குத் தான் சென்ற

போதிலும், தாசி மோகனாவுக்கும் முதல் வரிசை சோபாவில் தனிக் கட்டணத்துடன் ரிஸர்வ் செய்து விட்டு, நாடகம் சரியாக ஆரம்பிக்கும் தருணம் இருவரும் வந்து சேருவார்கள். வந்த இடத்தில் உயர்தர சுருட்டுவகைகள், குடிவகைகள் முதலிய செலவிற்கு மட்டும் 5 ரூபாய் செலவிடுவான். இந்த விதத்திலேயே இத்தகைய அநாவசிய செலவு செய்யும் பொன்னுசாமி தன் வைப்பாட்டியின் மற்ற விஷயங்களில் எத்தனை விரயம் செய்திருப்பான் என்பதைக் கவனித்துப் பாருங்கள். நாடகத்தில் யாரேனும் சற்று நன்றாகப் பாடிவிட்டால்—நடித்து விட்டால்- பொன்னுசாமியினுடைய மெடல்தான் அவர்களுக்கு முதலில் கிடைக்கும். அதுவன்றியில் நாடகத்தில் நடிக்கும்போ தெல்லாம் தனக்கு இஷ்டமான நடிகர்களுக்கு 10 ரூபாய் நோட் டுக்கள் தினம்

4-5-க்குக் குறையாமல் விழும். நாடகத்தில் எத்தகைய ஆடம்பரமான உடை தரித்துக் கொள்கிறார்களோ அதைப் பார்த்த மோகனா அதே போலத் தனக்கு உடை வேண்டுமென்று வாங்கிக் கொள்வாள். இதைத் தவிர பெரிய கொள்ளையாகிய குதிரைப் பந்தயத்திற்குத் தன் வைப்பாட்டியுடன் செல்வதும் தாராளமாகப் பணத்தைத் தோற்பதும் குறைவில்லை. இதுவும் தவிர மோகனாவின் ஜாதியில் சற்று தேர்ச்சி பெற்ற நாட்டியக்காரிக்கோ, பாட்டுக் கச்சேரி செய்பவளுக்கோ, கதை செய்பவளுக்கோ முதல் தாம்பூலம் மோகனாவே கொடுத்து தன் வீட்டில் மேற்படியாரை வர வழைத்து மெடல்,சேலை, ரூபா முதலியன இஷ்டமானபடி பரிசு கொடுத்தனுப்புவாள்.

நாட்டுப்புறத்திற்கு விவாகார்த்தம் ஒரு நாள் சென்றாலும் அவ்வூரின் அழகும்,

சிறிய கோயிலும், குளமும், அக்ராகாரமும், மனிதர்களின் போக்கும் பார்ப்பதற்கு வெகு ஆநந்தமாக விருக்கிறது. இவ் வானந்தத்திற்குக் காரணம் மனமொத்த சினேகிதர்களோ, உறவினர்களோ ஒன்றாகச்செல்வதே யாகும்.

பொன்னுசாமியின் ஆடம்பரம் முற்ற முற்ற அவன் பெற்றோரின் மன நிலைமை கேவலம் முறிந்து விட்டது. எத்தனையோ பாடு பட்டுத் தங்கள் முன்னோர்கள் தேடிய பொருளுடன் தாங்களும் சம்பாதித்துச் சேர்த்து அதை வெகுவாய்க் காப்பாற்றி வந்தார்கள்.

மகனின் துராக்குதமான நடத்தைக்குப் பயந்து அவனைப் பல விதத்திலும் திருத்திப் பார்த்தார்கள். ஒன்றிலும் பயன் படவில்லை. வீட்டில் வந்த மருமகளின் பொறுமையையும் அவளுடைய நற்குணத்தின் மாதிரியையும் கண்டு மாமியாரும் மாமனாரும் அவளைத் தம்

சொந்த மகளாகவே பாவித்து, அன்பு காட்டி, வேண்டிய நகைகளைச் செய்து போட்டார்கள். பொன்னுசாமி தன் மனைவியை மிரட்டி, அடித்து, இம்சித்து நகைகளைக் கழற்றிக் கொண்டு போவதோடு தாயாருடைய உடம்பிலிருப்பதையும் லண்டத்தனம் செய்து வாங்கிக் கொண்டு போய்விடுவான். இந்த உபத்திரவத்திற்காகவே பொன்னுசாமியினுடைய மனைவி தனக்கு எதும் நகையே வேண்டாமென்று கூறிவிட்டாள். தினந்தோறும் தன் வேலைகளைச் சரிவரச் செய்வதும், மாமி மாமனை வணங்குவதும், தன் வருத்தத்தை எண்ணிப் புலம்புவதுமாகவே அவள் காலம் நடக்கின்றது.

கல்யாண வீட்டில் பெண்ணின் பிறந்த வீட்டினரை முதலில் உபசரிக்க வில்லை என்று அவர்களுக்குக் கோபம். பிள்ளையின் மனிதர்களை மரியாதையாக நடத்தவில்லை

என்று இவர்களுக்குக் கோபம். இவ்விரண்டு கோபமும் ஒன்று கூடிக் கல்யாண வீட்டுத் தலைவனுக்கும் தலைவிக்கும் சனியன் பிடித்து விடுகிறது.

அந்தப் பெண்ணின் துயரத்தைக் கண்டு அவள் மாமியார் “அம்மா! குணவதீ! என் வயிறு செய்த பாபத்தினால் நீயும் இவ்விதம் கஷ்டப்படுகின்றாயே! உன்னுடைய இவ் வயதில் எத்தனை மேன்மை பாயும் இன்பமாயும் இருக்க வேண்டும், இக்காலத்தில் நீ தனித்த சன்யாசினி போல விருப்பதைக் காண என் மனம் துடிக்கின்றதே? நான் ஆதியில் என் மாமியிடத்திலும் நாத்தியிடத்திலும் பட்ட சிறுமையும் இம்சையும் அளவிட வியலாது. அத்தகைய இம்சையை அடைந்து தவித்தேன். ஆனால் என் பர்த்தா மட்டும் என்மீது பிரியமாக விருந்ததனால் நான் உயிர்

தரித்து வாழ்ந்தேன். என் புருஷன் என்னுடன் பேசுகின்றார்; அன்பாயிருக்கிறார் என்கிற வயிற்றெரிச்சலால் எங்களிருவரையும் சாபமிட்டுக் கொட்டுவார்கள். நான் இம்சைப் படும் காலத்தில்"ஐயோ! நமக்கு இந்த இம்சை போதும். நமக்கொரு மருமகள் வந்தால் கண்மணியைப் போல வைத்துக் கொண்டு மகிழ வேண்டும்" என்று நினைப்பேன்.

அப்படியே மகன் பிறந்தான். மகன் பிறந்த பிறகே என் மாமி, மாமன் மாண்டார்கள். அவர்கள் காலத்திற்குப் பிறகு எனக்கு நல்ல காலமும் செல்வாக்கும் உண்டாயது, என்னுடைய அதிகாரத்தில் குடும்பம் நடக்கத்தலைப்பட்டது, என்ன சுகமுண்டாகி என்ன! பையன் ஆரம்பத்திலேயே பெரும் துயரத்தை விளைவிக்கும் கோடரிக்காம்பாகி விட்டான். எத்தனை சொல்லியும் கேட்க வில்லை. விவாகத்தைச் செய்தால் சற்று

குணவானாக விருப்பானோ வென்று அதையும் செய்தோம். பலனில்லாது போயிற்று, நாளாக ஆக வரவா வெகுதூரம் விஞ்சிவிட்டது. இந்த உபத்திரவம் சகிக்கக் கூடவில்லை. ஆகையினால் நாங்கள் காசி முதலிய புண்ணிய க்ஷேத்திரத்திற்கு யாத்திரை போகலாம் என்று நினைக்கின்றோம். நீ இங்கிருந்து சுகப்படுவது கடவுளுக்குத்தான் பிரீதி! ஆகையினால் நீ உன் தாயாரகத்திற்குச் சென்றுவிடு. உனக்கான செலவிற்குப் பணமனுப்புகிறேன். நான் திரும்பிவந்தவுடன் உன்னை அழைத்துக்கொள்கிறேன். நீ இங்கு ஏன் தனியாக வாடவேண்டும்?" என்று வெகு அனுதாபத்துடன் கூறினாள்.

ஒருவர் மனத்தில் களங்க மிருப்பதும் இல்லாததும் கடவுளே யறிவார். அவர்களின் செய்கையோ பிறரின் மனத்திற்கு

வெறுப்பையும் அருவருப்பையும் கொடுத்து விடுகின்றது. இதனால் பின்னர் பழைய பழக்க வழக்கத்திற்கு மாறுதல்கள் உண்டாகி விடுகின்றன.

இது கேட்ட குணவதி கண்ணீர் வழிந்தவண்ணம் "அம்மா! நீங்களறியாத விஷயம் நான் ஒன்றும் சொல்லப் போவதில்லை. என்னுடைய தலைவிதி இவ்விதமிருக்கிற-தென்பதை உலகமே அறியும். எனினும் எதற்கும் ஒரு மதிப்பென்பது பொது உடைமையாக இருக்க வேண்டும். அந்த உடைமை எப்படி இருந்தால் இருக்கு மென்பதும் நீங்களறிவீர்கள். எனக்கு ஆயிரம் சிறுமையும் மனக்கிலேசமும் இருப்பினும் என்னுடைய உரிமையுள்ள வீடாகிய தங்கள் வீட்டில், தங்கள் பாதுகாப்பில் இருந்தால் தான் எனக்கு மதிப்பேயன்றி பெற்ற அன்னையாயினும்

நான் அங்கு சென்றால் என் வருத்தம் பதின்மடங்கு அதிகரித்து இன்னும் சிறுமை யுண்டாகுமேயன்றிப் பெருமை இல்லை. இதைக் கண்முன்பாக எத்தனையோ பேர்களிடத்தில் பார்த்திருக்கிறேன். கணவன் வீட்டி விருந்து தாய்வீடு செல்கிறவர்களுக்குக்கூட, உடனே திரும்பிவிடக் கூடியவர்களுக்கு அதிகமான மதிப்பும் தடபுடலான உபசாரமும் நடக்கின்றன. பின்னும் நான்கு நாள் தங்குகின்றவர்களுக்கு சற்று ஏற்றம் குறைந்து சிடுசிடுப்புப் பாணத்தை அவர்கள்மீது ப்ரயோகிக்க வாரம்பித்து விடுகிறார்கள். தாய் வீடே கதி என்று கணவன் விலைக்கிவிட்ட பெண்ணின் பரிதாபத்தைக் கூறவேண்டுமா! அந்தோ! அவ்வாறு சிறுமைபட்டு வாடுவதைவிடத் தற்கொலை செய்துகொண்டு இறந்து விடலாம். எந்தெந்த காலத்தில் யார் யார்

ஆதீனத்திலிருக்க வேண்டுமோ, அவ்வாறு இருந்தால்தான் பெற்ற தாயாயினும் தந்தையாயினும் மதிப்புடன் பெயரைச் சொல்லியழைப்பார்கள். இல்லையேல் மதிப்பெல்லாம் கால் மிதிப்பாய் விடும். நான் கண் கண்ட அனுபவத்தின் வரையில் எல்லா விஷயங்களையும் பார்த்தாய் விட்டது. என்னுயிர் போவதாயினும் இந்த இடத்தில் இப்படியே போய்விடட்டும். நான் உங்களை விட்டுப் போகமாட்டேன். என் கணவன் இவ்விதமிருந்தபோதிலும் அவருடைய நிழலில் இருந்து அவர் இடும் கூழோ கஞ்சியோ குடித்து என் காலத்தைக் கடத்தி விடுகிறேன். அம்மா! என்னை கைவிட்டு விடாதீர்கள். என் கதி உங்கள் பாதத்தில் முடியட்டும்.” என்று வெகு உருக்கமாகக் கூறினாள்.

“என்ன தடபுடலோ! எந்தநோமும்

சண்டைதானா! வீட்டில் அமைதி இல்லையா?” என்று வீட்டுத்தலைவன் மற்றவர்களைக் கேட்கிறான். தன் வீட்டில் தான் இத்தகைய போராட்ட மென்று நினைத்து விடுகிறான். பிறர் வீட்டில் இத்தகைய வேடிக்கை-களையே பார்க்கும்போது தன் வீடே மேலென நினைத்துக் கொள்கிறான்.

இதைக் கேட்ட லக்ஷ்மியம்மாளுக்கு மனம் மிகவும் உருகிப் போய்விட்டது. “ஐயோ! குணவதி! உன்னரிய மொழிக்கு நான் என்ன பதில் சொல்வேன்? என் கண்ணே! நான் உயிருடன் இருக்கும் வரையில் உன்னைக் கைவிடமாட்டேன். இது சத்தியம். உன்னுடைய கஷ்டம் என்று தான் விடியுமோ எனக்குத் தெரியவில்லை. உன் பொறுமை உன்னைக் காக்காது போகாது. உன்னை நான் தனித்துவிட்டுச்செல்ல மனமிசையமாட்டேன். உன்னையும் கூடவே

காசி யாத்திரைக்கு அழைத்துச் செல்கிறேன்". என்று தீர்மானித்தாள்.

பின்னர் 10 தினங்களில் கணவன், மனைவி, மருமகள் மூவரும் யாத்திரைக்குப் புறப்பட்டுச் சென்றார்கள். வீட்டில் யாருமே இல்லாமையினால் பொன்னுசாமிக்கு இன்னும் குசால் பிறந்துவிட்டது. வீட்டை அடியோடு மறந்தான். காசியாத்திரை போனவர்கள் வீட்டில் வேலையாட்கள் இருவரைக் காவல் வைத்துவிட்டுச் சென்றார்கள். இவர்கள் சென்று ஒரு வாரத்திற்குப் பின் ஒரு தினம் இரவு நாலைந்து கள்வர்கள் அவ்வீட்டில் புகுந்து பூட்டுக்களை உடைத்தும், வேலையாட்களைக் கட்டிப்போட்டும் கிடைத்த சகலமானதையும் மூட்டைக் கட்டிக்கொண்டு போய்விட்டார்கள். மறுதினம் காலையில் வேலைக்காரி வீடுகூட்ட வந்தபிறகு இந்த அலங்கோலத்தைக்

கண்டு ஓலமிட்டு வேலைக்காரர்களின் கட்டையவிழ்த்து மூர்ச்சைதெளியச் செய்தாள். அச்செய்தியை பொன்னுசாமிக்குத் தெரிவித்தாள்.

அதிகமான பிரிய மிருப்பதாக எண்ணி ஏமாறும் சுபாவத்தினரே உலகில் அதிகம். சினேகிதர்களிடம் அதிகப் பிரியத்தை வைத்து ஏமாறுவதைவிட உறவினரிடத்தில் அத்தகைய சம்பவம் நேரிடினும் அவர்கள் உறவின் மனஸ் தாபம், பங்காளிச் சண்டை என்று பிறர் கூறி விடுகிறார்கள். சினேகிதரின் பிரிவினைக்கு என்ன சொல்வது....

அது கேட்ட பொன்னுசாமி அவ் விஷயத்தில் சிரத்தையே எடுத்துக்கொள்ளாது “போனால் பீடை போகட்டும்” என்று கூறித் தாசி மோகத்தில் ஐக்யமாகிவிட்டான். பிறகு வேலைக்காரர்களே இத் திருட்டு விஷயத்தைப்

போலீஸாரிடம் தகவல் கொடுத்தார்கள். காசிக்குச் சென்றவர்கள் ஒரு மாதத்தில் திரும்பி வந்ததும் இக் கொள்ளையைக் கேட்டுத் திடுக்கிட்டார்கள். வீட்டிலிருந்த பாத்திரங்கள், பண்டங்கள், சில நகைகள் எல்லாம் களவாடப்பட்டிருப் பதைக் கண்டு கண்ணீர் வடித்ததுடன் அன்றைய சமையலுக்குப் பாத்திரமின்றி கடையில் வாங்கும்படியாக நேர்ந்தது. இத்திருட்டு விஷயத்தில் சற்றும் கவனியாத மகனை நொந்து அழுதார்கள்.

இதே ஏக்கத்தினால் பின்னும் சில வருடத்திற்குள்ளாக பொன்னுசாமியின் தந்தை நோயினால் பீடிக்கப்பட்டுப் படுத்துவிட் டார். “ஒரே ஒரு மகனாகவிருந்தும் தமக்கு அனுகூலமில்லாது போய்விட்டதே” என்ற மனநோயே லக்ஷ்மியம்மாளையும் தாக்கிவிட் டதால் ‘இருவரில் யார்

முன்னால், யார் பின்னால்’ என்ற நிலைமைக்கு வந்துவிட்டார்கள். தன் விஷயத்தில் அனுகூலமாய் ஆதரவுகாட்டி. வந்த மாமி, மாமனின் கதி இவ்விதம் படுக்கையாகிவிட்டதைக் கண்ட குணவதிக்குப் பெருந்துக்கம் பொங்கிவிட்டது.

அன்று பொன்னுசாமி வீட்டிற்கு வந்தான். அவனை வழி மறித்துக்கொண்ட குணவதி, அன்றே முதல்முதல் அவனெதிரில் தைரியமாகப் பேசத்துணிந்து “நாதா! உங்களை ஈன்றெடுத்த தாய் தந்தையர்கள் பாயும் படுக்கையுமாகி விட்டார்களே! இன்னுமா நீங்கள் கவனியாதிருப்பது. இது அடுக்குமா! நான் தான் வேண்டுமானால் தங்களுக்குச் சத்ருவாகத் தோன்றலாம். உங்களைப் பத்து மாதம் குட்சியில் வைத்துச் சுமந்து ஈன்ற அன்னையல்லவா! அவர்கள்மீது உங்களுக்குத் தானாக

உண்டாகக்கூடிய அன்னை என்கிற பாசம் எங்கே மறைந்துவிட்டது? தாயன்பின் மகிமையைப்பற்றி பெரிய, பெரிய துறவிகள் எல்லாம் எப்படிக் கூறி இருக்கின்றார்கள். பட்டினத்துப் பிள்ளையின் செய்கையிலிருந்து தாயின் மாசிலாத அன்பு கூறத் திறமுள்ளதா! அவர்களை நீங்கள் பார்க்காமலேயே போகின்றீர்களே.” என்று ஏதேதோ சொல்வதற்குள் பொன்னுசாமி அளவுகடந்த ஆத்திரத்தையடைந்து “சீச்சி! விலகு. பெரிய புராணிகர்போலப் பேசவந்துவிட்டாய்! கழுதை!” என்று உதைத்துத் தள்ளினான்.

அனேக மாத காலமாகக் கண்ணாலும் பாராது, ஒரு கடிதத்திற்கும் விதியற்றுவிட்ட சினேகிதை தன் வீட்டு வழியோடு. போகும்போது அழைப்பென்ன? குலாவலென்ன? இவை பரிகஸிக்கத் தக்க செய்கைகளல்லவா... ஹ! சினேகமே...

அப்போதும் குணவதி அவனை விடாது காலை கெட்டியாகப் பிடித்துக்கொண்டு “என்னைத் தாங்கள் என்ன செய்தபோதிலும் சரியே! நான் இனி துணிந்துவிட்டேன். என்னைத் தாங்கள் இவ் விதமான இம்சை - சித்திரவதை - செய்வதை விட என்னுயிரைத் தங்கள் கரத்தினாலேயே தாராளமாக வாங்கி விடுவது வெகு நலம். அச் செய்கையினால் மிக்க மகிழ்ச்சியை அடைவேன். நான் எடுத்த ஜன்மத்திற்கு இந்தப் பலனையேனும் அடையும்படியான வரனை யளிப்பீர்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன். தங்களுடைய இக்காலத்து பால்ய லீலைகளின் பலனைத் தாங்கள் இப்போதில்லா விடினும் மற்றொரு காலத்தில் அதுபணித்து ஏங்காமலிருக்க மாட்டீர்கள். நாதா! உயிர் நீங்கிவிடின் அவர்களைத் தவம் செய்தாலும் கண்ணால் காண்பதற்கு

முடியாதென்பதை மறக்கவேண்டாம்” என்று கூறிக்கொண்டே இருக்கையில் பொன்னுசாமி ஆவேசத்துடன் பேசத் தொடங்கி “போதும் உன் வார்த்தைகளை நிறுத்து. தாயின் அன்பு எனக்குத் தெரியும். அவளுடைய கடின சித்தத்தினால் என்னை வருத்திக் காசு கொடாது உபத்திரவிப்பது வீண் போகுமா?” என்று கூறிக்கொண்டே போய்விட்டான்.

எத்தனையோ ஏழைகளாக விருந்தவர்களே செல்வத்தில் துளைவதையும், செல்வத்தில் துளைந்தவர்கள் கூழுக்கு அலைவதையும் இவ் வுலகத்தில் இன்னும் காண்கிறோம். இந்நிலை யறியாது செல்வ வந்தரின் வயிற்றில் பிறந்துவிட்ட கர்வத்தையே சிலர் முக்கியமாகக் காட்டுகிறார்கள்.

பொன்னுசாமியின் இரும்பு போன்ற சித்தத்தின் போக்கைக் கண்டு குணவதி

மிக்க விசன மடைந்தாள். மோகனா ஒரு கச்சேரியின் நிமித்தம் வெளியூருக்குச் சென்றிருக்கையில் குணவதிக்கு திடீரென்று ஜூரங் கண்டுவிட்டது. சில நாளையில் இந்த ஜூரம் டைபாயிடு என்று டாக்டர் கூறிவிட்டார்.

குணவதியினுடைய நிலைமையைக் கண்ட அவள் மாமி, மாமனுக்கு மிக்க பயம் பிடித்து விட்டதால் அவர்கள் தங்கள் நோய் குணமாகிவிட்டதாக நினைத்து மருமகளைக் கவனிக்க வேண்டிய வேலைகளையே செய்துவந்து வெகு அக்கரையாகப் பாடு பட்டார்கள். குணவதியோ தான் பாயில் விழுந்த நாள் முதலாக அவளுடைய மனம் ஒருபுறம் மிக்க சந்தோஷத்தையும், மற்றொரு புறம் கரை காணா விசனத்தையும் அடைந்தது.

ஏனெனில் தான் இந்த நோய் குணமாகாமல் இப்படியே இறந்துவிடவேண்டும் என்று சந்தோஷித்தாள்.

ஆனால் தன்மீது உயிரையே வைத்திருக்கும் மாமி, மாமனின் கதி அதோகதியாகி அவர்கள் பின்னும் துக்கத்தி லாழ்ந்து விடுவார்களே; என்கிற விசனம். இவ்விரண்டு விதமான உணர்ச்சிகளினால் மிக்க தத்தளித்து வருந்துகின்றாள். அவளுடைய விசனத்தை வெளியிடவும் அஞ்சுகிறாள்.

வாய் பிதற்றல் முற்றும் "என் புருஷன் வந்தாரா, வந்தாரா!" என்று கத்துவது. இவளுடய நிலைமையைக் கண்டு மனமுருகும் மாமி "அம்மா! குணவதீ! உன் பெயருக்கேற்ற குணத்தை உன்னிடமே கண்டோம். என் செல்வமே! நாங்கள் உன்னையே நம்பி இருக்கின்றோமே! எங்களை மோசம் செய்துவிடுவாயோ! மகா பாபத்தைச் செய்துள்ள எங்கள் கதி என்னவாகுமோ! ஹா! சர்வேசா! குணவதியை எங்களுடைய ஆயுள் உள்ள பரியந்தமாவது அளிப்பாய் அப்பனே!"

என்று வேண்டுகிறாள்.

அனாதைப் பரதேசி என்று ஒருவருக்குச் சோறு போட்டு வளர்க்கையில் அவ்வனாதையே இவர்களுக்கு யமனாகி விடுகிறான். வீட்டு ஜோலியிலும் உத்யோக தோரணையிலும் கொள்ளிக்கட்டையாகி விட்டதை யறிந்த எஜமானன்' மனத்தில் பசை நிற்குமா :...

அவர்களுடைய கஷ்டத்தைக் கண்டு சகியாத குணவதிக்கோ தான் இனி பிழைப்பது துர்லபம் என்று தெரிந்துவிட்டது. ஆனால் அவர்களுக்கதை அறிவிக்கவும் மனம் கூசினாள் ; எனினும் தன் மனத்திற்குள்ளேயே வைத்துக்கொண்டு வாடுவதற்கு மாட்டாது தன் மாமியை நோக்கி "மாமி! மகா கொடிய பாவி ஒருத்தி உலகிலிருந்து சில தினத்தில் மறைந்துவிடப் போகிறாள். அவளுக்காக விசனப்படுபவர்களை

கேவலம் மூடர்களேன்றே கடவுள் மதிப்பார். அவளுடைய ஆன்மா நீங்கிய அன்னாளை நன்னாளாகக் கொண்டாட வேண்டுவதே கடவுளின் மனோல்லாசமான காரியமாகும். கேவலம் ஓர் பேதையாகிய என்மீது நீங்கள் உயிரையே வைத்திருப்பது மிக்க மதியீனமாகும். உலகில் ஒருவருக்கொருவர் சத மன்று; அநித்தியம். என்பதை எத்தனையோ உதாரணங்களோடு பெரியார் வெளியிட்டுள்ளார்கள். ஆகையினால் என்றைக்கிருப்பினும் அழிந்து போகக்கூடிய இவ் வுயிரை நீங்கள் இனி விரும்ப வேண்டாம்.

என் தாயே! என்னுயிர் நீங்கிவிடும் என்று என் மனச் சாக்ஷி சொல்லுகின்றது; ஆதலால் நீங்கள் கவலையை இப்பொழுதே ஒழித்து என் முடிவைத் தைரியமாயும், சந்தோஷமாயும் எதிர் பாருங்கள். கவலை வேண்டாம். இந்த பிரியத்தை எம்பெருமான் மீது செலுத்துங்கள்.

பரமபதவி கிடைக்கும். மறுமைக்கு எல்லை யில்லா பாக்கியம் கிட்டும். என்னுடைய கர்மா என்னோடு தொலைந்து போகட்டும். என்னுயிர் நீங்குவதற்குள் நான் உங்கள் மகனைப் பார்க்க விரும்புகிறேன். என் கடைசி விருப்பம் இதுதான். அவர் முகத்தைப் பார்த்த உடன் நான் நிம்மதியாகி விடுவேன்" என்றாள்.

இந்த துக்ககரமான வார்த்தைகளைக் கேட்ட அந்த அம்மாள் மிக்க இடிந்துபோய் "ஆ! என்ன இது குணவதி! உன் வாயிலிருந்து இத்தகைய மொழிகளையா வெளியிட்டாய்! ஐயோ! உன்னை இழப்பதையா நன்னாளாகக் கருதுவது ........... அதைவிட எங்களை இழப்பதைக் கூறினும் ஒப்புமே! என் செல்வமே! உன்னை வேண்டி நாங்கள் உயிர் வாழ்ந்தோமே! எங்களைக் கைவிட்டு விடுவதையா நீ விரும்புகின்றாய்....அந்தச் சண்டாளப் பாவி ஊரிலேயே இல்லை

யாமே! ஐயோ என்ன செய்வேன்?”....என்று வருந்தினார்கள்.

பொன்னுசாமியை அழைத்துவரும்படியாக வேலைக்காரனை அனுப்பினார்கள். அன்றே பொன்னுசாமி ஊரிலிருந்து வந்தான். வேலைக்காரனைக் கண்டதும் சீறி விழுந்து “வெளியே போ; வருகிறேன்” என்று கூறியனுப்பிவிட்டுப் பின்னர் வீட்டிற்கு அன்று பூராவும் வராது மறுநாள் வந்தான்; குணவதி படுக்கை-யிலிருப்பதைக் கண்டான்.

எண்ணற்ற ஜனத்திரளைப் பார்த்தாலே வெகு ஆனந்தம், அத்திரளில் தமக்கு வேண்டியவர்களே அனேகர் இருந்து விட்டால் அவ்வானந்தம் வேறு ருசிதான். அதற்கே ஓர் தனி மதிப்புதான்.

அவனைக் கண்ட குணவதி இரு கண்களிலும் நீர் பெருகியவாறு, “நாதா!

என்னுடைய அந்திய காலம் சமீபித்துவிட்டது. இந்த தருணத்திலாவது என் கண்முன் சந்தோஷமாக உங்கள் முக தரிசனங் கொடுக்க மாட்டீர்களா! இனியுமா என்மீது வர்மம்? என்னை இனி நீங்கள் வெறுத்து விலக்கினாலும் இன்னும் சில தினங்கள் வரையில் தான் வெறுக்கலாம், அதற்குமேல் என்னாவி இவ்வுலகை விட்டு மறையும், நாதா! உங்கள் அழகிய கரத்தைக் கொடுங்களேன். என் கடைசி ஆவலையாவது தட்டாது பூர்த்திசெய்ய மன மிரங்க வேண்டும்." என்று பின்னும் ஏதோ சொல்வதற்குள் பொன்னுசாமி அதிக ஆவேசத்துடன், "அடீ! எனக்குத் தெரியும் உன் கதைகளெல்லாம். சில தினங்கள் முன் என் பெற்றோருக்கு ஏதோ ஆபத்து வந்துவிட்டதென்று கூறி என்னை மடக்க எண்ணினாய்; இப்போது உனக்கே வந்துவிட்டதாக நாடகம் நடிக்கின்றாய்!

இந்தக் கட்டுப்பாடான முன்னேற்பாடுகளை நானறியாத மூடனன்று, சீச்சி! பாசாங்குக் கள்ளீ! என் பெற்றோர்கள் இறந்தது போலத் தான் நீயும் இறப்பாய். வீணாக என் நேரத்தைக் கெடுக்கின்றாய் மூதேவி!” என்று வைதவாறு, சற்றும் இரக்கமற்று அவளுடைய பலஹீனமான நிலைமையில் அவனைக் காலால் எட்டி உதைத்துவிட்டு, அவ்விடம் விட்டு வேசி மனையில் புகுந்தான்.

அந்தோ! இவ் விபரீதமான :செய்கையைக் கண்ட அவன் பெற்றோர்கள் அவனைத் தாறுமாறாக வாயில் வந்தவாறெல்லாம் திட்டினார்கள். அன்று அவளுடைய கேவலமான நிலைமையில் அந்தச் சண்டாளன் முரட்டுத்தனமாக உதைத்ததால் உடனே அவள் மூர்ச்சையானாள். அன்று முற்றும் அம் மூர்ச்சை தெளியாது வெகு பயங்கரமாகிவிட்டது. இதே நிலைமையில்

அடுத்த நாள் செல்ல, சற்று மயக்கம் தெளிந்ததும் “அம்மா! இந்த செய்கையை யாரிடமும் சொல்லவேண்டாம். வெட்கக் கேடு; வெளியாகா திருப்பதே நலம்......நான் இறப்பினும் இவ்விஷயத்தை வெளியிடா தீர்கள்.” என்று உறுதியாகக் கூறினாள்.... அன்று இரவே மகா குணவதியாகிய அவ் வுத்தமியின் உயிர் மாயமாய் மறைந்தது.

வயதில் சிறிய பெண்ணாயிருப்பினும் சில சித்திராங்கிகள் தம் அண்ணனையும், அண்ணியையும் ஏமார்ந்த ஓர்ப்படியையும், நாத்திகளையும் இன்னும் மற்ற உறவினர்களையும் பற்றி ஓயாது தூஷிப்பதும் அனியாயமாய்க் குற்றங் கூறுவதுமே காரியமாகி விடுகிறார்கள். இந்த சிறுக்கியின் வயதென்ன. இவள் பேசும் பேச்சென்ன ” என்று பிறர் பரிகஸிப்பது அந்தக் குடும்பத்தினர்க்கே தெரிவதில்லை.

குணவதியின் ஆவி பறந்து போய்விட்டபின் மிச்சமான சவத்தின் மீது அவள் மாமியும் மாமனும் விழுந்து புரண்டு கதறுகின்றார்கள். “ஐயோ! குணவதி! எங்கு சென்றாயடீ! என் கண்ணே! எங்களைப் பரதேசியாக விட்டு விட்டாயே என் கண்மணீ! குணவதி! உன் முகத்திற்காக நாங்கள் உயிர் வாழ்ந்தோமே! எங்களை நட்டாற் றில் விட்டு விட்டாயே! ஐயோ! நாங்கள் என்ன செய்வோம்? இனி எவ்விதம் உயிர் வாழ்வோம்? மதியை இழந்த வானம் போலவும் நீரற்றப் பயிர் போலவும் ஆய் விட்டோமே! ஹா! குண மணியே! குணக்குன்றே! கோதிலா மாணிக்கமே!” என்று தன்னிறையழிந்து புலம்பி முட்டிக் கொள்கிறார்கள்.

அண்டை அயலில் உள்ளவர்கள் அவர்களுக்கு ஆறுதல் கூறவும் மாட்டாது குணவதியின் அபாரமான

குணத்திற்கும், பொறுமைக்கும் கண்ணீர் விட்டார்கள். இந்த உத்தமி இறந்த செய்தியை அச்சண்டாளனுக்குச் சொல்லி யனுப்பினார்கள். அவன் ஊரிலில்லை என்றும், எங்கு சென்றான் எப்போது வருவான் என்பது ஒன்றுமே தெரியவில்லை என்றும் பதில் கிடைத்தது.

சவத்தை வைத்துக்கொண்டு புலம்பும் இருவருக்கும் "அவனை எங்குத் தேடுவது, எந்த விடத்திற்குத் தந்தி யடிப்பது? ஐயோ! வேசிக் கள்வனின் இருப்பிடத்தை எங்கு கண்டு பிடிப்பது?" என்கிற பெரும் விசனமும் கூடப் பாதித்தது. குணவதியினுடைய மரணத்தினால் அவ்வூரே அல்ல கல்லோலலப்படுகின்றது. "அவளை இழந்த பின் இனி உயிருடனும் உலவ வேண்டுமா!" என்று கிழவர்கள் துடித்தவாறு சவத்தைக் காத்தார்கள்.

பொழுது விடிந்ததும், வேசி வீட்டிற்குப் பலதரம் ஆளனுப்பிப் பார்த்தும் தகவலே கிடைக்கவில்லை; கதவு பூட்டப்பட்டிருந்தது. அந்தப் படுபாவியின் தகவலை யறியக் கூடாது தத்தளித்தவாறு அன்று இரவு வரையில் பிணத்தை வைத்துக் கொண்டிருந்தார்கள். அக்கம் பக்கத்திலுள்ளோர் பிணத்தை சீக்கிரம் எடுத்துவிட வேண்டும் என்று கூறியதோடு சவத்தின் நிலைமையும் கேவலமாகி, அசங்கியமாகி விட்டதால் “அவன் வந்தாலும் வராவிடினும் சவத்தை எடுத்து விடுவது” என்று தீர்மானித்துச் சகல காரியமும் செய்து எடுத்து விட்டார்கள்.

படித்த முட்டாள்கள் இவ்வுலகில் மலிந்து கிடப்பதைக் கண்கூடாகப் பார்க்கிறோம். ஆயிரக் கணக்கான ஜனங்கள் ஏறும் ரயில் வண்டியில் நூற்றுக் கணக்கான ஜனக்கூட்டம் ஒரு வண்டியில் அடைபட்டுச் செல்கையில்,

அநியாயமாக சில தடியர்கள் “என்மேல் இடித்துக்கொண்டு சென்றாள்” என்று கூசாது சொல்கிறார்களாம். அந்த மடயரின் படிப்பைக் கொண்டு உடைப்பில் போட. அவர்களின் அறிவு இந்த அற்ப விஷயத்தில் வளருவதற்கா ஆயிரமாயிரமாகப் பணத்தைக் கொட்டிப் படிக்கவேண்டும். தூத்தூ! இத்தகையோர் வேறு எதைத்தான் சொல்ல அஞ்சுவார்கள் ?

அந்தோ! குணவதியின் உடலில் உயிரிருந்த காலையில் அவளுக்கு ஒரு வினாடியும் நிம்மதி என்பதே இல்லாது தவித்தாள். அத்தகைய உத்தமி இந்த உலகைவிட்டு மறைந்த பிறகே சவமாகிய பிறகே - நிம்மதியான நிலைமையை அடைந்து விட்டாள். அவளுடைய சவ ஊர்வலத்திற்கு கொட்டு முழக்கும், காந்த விளக்குகளும் நிரம்பி விட்டன. கதறித் துடிக்கும் ஜனங்கள் வெகு பேர் திரள் திரளாகப் பின்னே

செல்லலாயினர்.

அப்போது இராக் காலமாகையினால் குளிர்ச்சியான காற்று வீசுகின்றது. அன்று பூர்ணமான சந்திரன் பிரகாசிக்கக் கூடிய பௌர்ணமியாக விருந்தும் குணவதியின் மரணத்திற்கு வருந்தி துக்கங் கார்ப்பவன் போலவும், அவளுடைய சவக் கோலத்தைக் கண்டு சகிக்க மாட்டாதவன் போலவும் மேகத்திடை மறைந்து விட்டான். மேகங்களோ இந்த அபாரமான துக்கத்தை—கணவனால் மனம் நொந்து உயிர் விட்ட உத்தமியின் சரிதையை - உலகினருக்கு எடுத்துக் கூறுவது போல வெகு வேகமாய் இங்குமங்கும் ஓடியாடி விசனிக்கின்றன.

அந்த நிலைமையில் சவம் ஒரு வீதியில் போய்க் கொண்டிருக்கையில் ஒரு பெரிய மாடி வீட்டின் மாடியில் உல்லாசமாய்க் காற்று வாங்கிக் கொண்டிருந்த பொன்னுசாமி அங்கு

ஏதோ ஊர்வலம் வருகிறதென்று கொட்டு முழக்கினாலும், விளக்கின் ஒளியினாலும் எண்ணி அதைப் பார்க்கலானான். வெளியூருக்குச் சென்றிருந்த அவனும் மோகனாவும் அன்று நேராக அந்த வீட்டில் நடக்கும் தேக் கச்சேரியில் சங்கீதக் கச்சேரி செய்வதற்காக வந்து விட்டார்கள்.

மோகனா உள்ளே ஆநந்தமாகப் பாடிக் கொண்டிருக்கையில் பொன்னுசாமி மாடியில் காற்று வாங்கிக் கொண்டிருந்தான். அச் சமயத்தில் குணவதியின் சவம் அவ்வீட்டின் சமீபத்தில் வரவே அதை அப்போதே சவமென்று அறிந்து உற்றுப் பார்த்தான். அந்தச் சவம் குணவதியினுடையது என்பதை யறிந்ததும் உண்மை யிலேயே அவனால் தாங்க முடியாமலும் தடுக்க முடியாமலும் திடீ ரென்று ஒருவித (Shock)மன அதிர்ச்சி உண்டாகி விட்டது. அவ்வளவுதான் அவன்

தன்னை மீறி, “ஆ! இந்தச் சவம் என் மனைவியான குணவதியல்லவா! ஐயோ! குணவதி இறந்து விட்டாளா! குணவதியின் சவம்தானா இது!...ஆ! அதோ! என் பெற்றோர்........ ஐயோ!.... மோசம் போய் விட்டோமே!....” என்று கதறிக்கொண்டே ஒட்டமாகக் கீழே இறங்கி வீதியில் வந்து நடு ரோட்டில் தடா ரென்று விழுந்தான்.

தன் உடன் பிறந்த பைசாசங்களின் ஆபாஸ ஊழலைப் பற்றி உலகமே நகைக்கையில் அதை யறியாத முட்டாள் அன்னியப் பெண்களின்மீது அபாண்டப் பழி சுமத்த வெட்க மின்றி வருகிறான். இவனுக்கெல்லாம் படித்த பட்டதாரி என்ற பெயரிருப்பதானது விளக்கெரிவதற்கு ஒப்புதான்.

பெற்றோரை நோக்கி, “என்னரிய குணவதியைச் சண்டாளன் நேற்று முன் தினமே காலால் உதைத்துத் தள்ளி வந்தேனே!

என் பெற்றோர்களே! மகா கொடிய பாதகனாகிய நான் இனி என் குற்றத்தை யுணர்ந்து யாது பயன்.? ஐயோ! என் மதியில் சிற்றின்ப மென்கிற இருள் சூழ்ந்து என்னைக் கேவலம் படுகுழியில்-அன்பற்ற நரகத்தில்-தள்ளி விட்டதே! ஐயோ! குணவதியின் வார்த்தைகளை அலக்ஷியம் செய்தேனே! பெற்றோரைப் புறக்கணித்தேனே! அவள் உத்தமி-யாகையினால் அவள் வாக்கு பலித்துவிட்டதே! என்ன செய்வேன்?” என்று கதறினான்; முட்டிக் கொண்டான்.

இவனுடைய மாறுதலைக் கண்டு சகலமானவர்களும் பிரமித்து விட்டார்கள். அவர்களுடைய வெறுத்த மனமும் உருகும்படியான நிலைமையில் பொன்னுசாமி மாறிவிட்டான். பிறகு எத்தனையழுது என்ன உபயோகம் ? தான் செய்த அக்கிரமத்தை எல்லாம் தானே கூறிக் கதறினான்.

குணவதியின் சவத்தை தகனத்திற்கும் கொடாது கட்டிப் புலம்பினான். பிறகு சவச் சடங்குகள் முடிந்தன.

அந்த நிமிடத்தில் மாறுதலடைந்த பொன்னுசாமியின் மனம் பரிபூர்ணமான வைராக்கியத்தில் திரும்பிவிட்டது. தாசியை அடியோடு வெறுத்தான். “ஹா! ஏ சிற்றின்பப் பேயே!....மோகனாஸ்திரப்பிரம்ம ராக்ஷஸே! உன்னாலன்றோ, நான் சகல விதத்திலும் கழி பட்டேன். கண்ணான பெற்றோரையும், குணக் குன்றாகிய மனைவியையும் உயிருடனிருக்கையிலேயே இழந்திருந்தேன்; இப்போது அடியோடு இழந்து விட்டேன். ஹா! குணவதி! உன்னை சகல உரிமையுடன் நான் அடைந்தும், உன் குணத்தின் மணமறியாப் பாதகனானேன்.” என்று பலவாறு வருந்தினான்.

இந்த விசனத்தைத் தாங்காது அவன்

பெற்றோர்கள் அப்போதும் பொன்னுசாமியை முற்றும் நம்பாது வெறுத்தார்கள். இவ் விடத்திலிருக்க மனம் சகியாது மீண்டும் யாத்திரை கிளம்பி விட்டார்கள். அவர்களோடு பொன்னுசாமியும் உலகையே வெறுத்து யாத்திரை கிளம்பினான்.

“அந்தப் பெண் ரவிக்கை இப்படி போட்டுக்கொண்டிருக்கிறாள். இந்தப் பெண் இத்தனை வளையல் அணிந்து கொண்டிருக்கிறாள். இவள் குங்குமம் இப்படி வைத்துக் கொண்டிருக்கிறாள்.” என்று வம்பளப்பதைச் சிலர் தங்கள் கடமையாகக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் படித்த படிப்பின் பலன் இதுபோலும்.

# 4-வது அதிகாரம் - பிறைமதி - நிறைமதி

பரிமளவல்லியின் புகழ் வளர்பிறை மதியம் போலப் பிரகாசிக்கத் தொடங்கியது. பரிமளாவும் கேசவனும்- சிறுமியும் சிறுவனும் - நடிக்கும் திறனும், பாடலின் எழிலும் பொது மக்களின் மனத்தை முக்கியமாகக் கவர்ந்தன. அதோடு அந்த நாடகத்தின் பணம் முற்றும் முக்கியமான தர்ம ஸ்தாபனங்களுக்கே செல்வதால் அது விஷயத்தில் பொது ஜனங்களுக்கு ஓர் வெறுப்பேற்படாமல் விருப்பும் வாஞ்சையுமே ஏற்பட் டது. அதனால் கம்பெனிக்கு அபரிமிதமான செல்வமும், செல்வாக்கும், கீர்த்தியும் உண்டாகி விட்டது.

ஆதி காரணமாகக் கம்பெனி ஆரம்பித்ததை உத்தேசித்து ஜனங்கள்

முதலிலிருந்தே நல்ல ஆதரவு கொடுத்துதவினார்கள். பொன்னுசாமி தன் பெற்றோருடன் யாத்திரை சென்று விட்ட பின்னர் அவனுடைய மனச் சாக்ஷியே அவனை பலமாகக் கண்டித்து நல்வழியில் திருப்பி விட்டது. சுமார் ஒரு வருட காலமாக அவர்கள் யாத்திரை செய்தார்கள். மன வேதனையின் பலனாக பொன்னுசாமியின் பெற்றோர்கள் ஒவ்வொரு ஊரில் ஒவ்வொருவர் உயிர் நீத்து விட்டார்கள். பொன்னுசாமி தனித்துப் பரதேசியாக நின்றான்.

எந்த விஷயத்தையேனும் அனுபவப்பட்டவர்கள் அதைக் கண்டித்தால் அவ்விஷயத்தில் ஆராய்ச்சியுள்ளவர்களுக்கு விபரீதமான கோபம் திடீரென்று உண்டாகிப் பொங்கி வழிகின்றது. அவர்களின் இயற்கை நிலைமையே மாறு பட்டு வாயில்

எதிர்பாராத வார்த்தைகளையும் அந்த ஆவேசம் கொட்டிவிடுகின்றது.

பிறகு தன் ஊர் திரும்பினான். அவன் அனேக இடங்கள் யாத்திரை செய்ததின் பயனாக அனேக ஏழைப் பரதேசிகளின் துயரத்தையும் ஆங்காங்கு மக்கள் படும் கஷ்டத்தையும் கண்டு எவ்விதத்திலாவது அவர்களுக்கும் அவ்வகையோரான இன்னும் மற்றையோருக்கும் உதவி செய்ய வேண்டும் என்று மனத்தில் நினைத்து வெகுவாய் யோசனை செய்ததில் ‘பணம் லகுவில் திரட்டக் கூடிய வகையில் நாடகக் கம்பெனியே சிறந்தது’ என்று அநேகர் யோசனை கூறி நன்றாகச் சங்கீதம் தெரிந்த பெரிய மனிதர்கள் எல்லாம் இனாமாக நடிப்பதாக ஒத்துக் கொண்டு ஆதரவளிக்க முன் வந்தார்கள்.

அதன்மேல் கம்பெனி ஆரம்பமாகி வெகு சிறப்பாக நடந்து கொண்டு வந்தது. அந்த

பணத்தில் தர்ம பாடசாலை, வைத்திய சாலை, ஏழைக் குழந்தைகளை - அனாதைக் குழந்தைகளை- வளர்க்கும் சங்கம் முதலியன வெல்லாம் ஸ்தாபனம் செய்தான். கேசவன் வந்து சேர்ந்த பிறகு பொன்னுசாமியின் மனோபாவத்திற்கு உதவியாக வேண்டிய பொருள் கிடைக்கத் தலைப்பட்டது, அவன் அனேக விதமான தானங்களை கை சலிக்கச் செய்யத் தொடங்கினான். பரிமள-வல்லியினால் முன்னிலும் அதிக பரிமளம் அந்த கம்பெனிக்கு உண்டாகி விட்டது.

எந்த காரியம் செய்யப் புகினும் அதில் விக்கினமேற்படுவதோ அன்றி சண்டை, பூசல் முதலியன உண்டாவதோ உலகத்தில் சகஜமல்லவா! அதேபோல நற்குண நாடகக் கம்பெனியிலும் சிற்சில மாறுதல்கள் உண்டாகத் தலைப்பட்டன. “கேசவன் மீதும், பரிமளாவின் மீதும் முதலாளி அதிகப் பிரியம்

வைத்துப் பலவிதத்திலும் ஆதரிக்கின்றார். நம்மை அவ்வாறு கவனிப்பதில்லை“ என்கிற பொறாமை உதயமாகி விட்டது. அதை அடிக்கடி ஜாடை மாடையாகப் பேசவும் சிலர் ஆரம்பித்தார்கள், கேசவனிடத்தில் தங்களுடைய கசப்புத் தன்மையைக் காட்டத் துவக்கினார்கள்.

சிலரின் மனப்போக்கை முற்றிலும் அறியாது அவர்களைப்பற்றி வித்யாச மாகவே நினைத்து. அவ்வழியிலேயே நடந்துகொள்கிறவர்கள் பிறகு உண்மை வெளியாகும் காலத்தில் தம்மையேதாம் நொந்துகொள்கிறார்கள்,

பரிமளவல்லி கம்பெனியில் சேரும்போது 10 வயதுச் சிறுமியாக விருந்தாள். அவள் சந்தோஷ மற்று, மிக்க துன்புற்று,வறுமையினால் பீடிக்கப்பட்டு ஒரு வீட்டில் அடிமை வேலை செய்து

கொண்டிருந்ததால் மன வருத்தத்தினால் தேகம் வளர்ச்சி குன்றிப் போய் ஒளி மங்கிக் கிடந்தாள். கம்பெனியில் வந்து சேர்ந்த பிறகு அவளுடைய கஷ்ட காலம் விமோசனமாகி விட்டது. அந்த சந்தோஷத்தினால் மேனியும் முகமும் வசீகர முற்றுப் பிரகாச முண்டாயது. கம்பெனியின் சொந்தக்-காரரின் அன்பு இவர்கள் குடும்பத்தைப் பூர்ணமாகத் தாங்கியது. நாடகத்தில் நற்கியாதி பெற்ற பரிமளா தன் காலத்தை வீணே கடத்தாமல் தனது அறிவு வளர்ச்சிக்கான ஓர்செல்வத்தையும் சேமிக்க எண்ணி முதலாளியினுடைய ஆதாவில் உபாத்தியாயர் ஒருவரை நியமித்து அவரிடம் கல்வியைக் கற்கலானாள்.

சங்கீதமும் கல்வியும் சமமாக விருத்தியடையப் பெற்ற பரிமளாவினால் கம்பெனி செழித்து ஓங்கி

விருத்தியடைவதைக் கண்டு சந்தோஷித்த முதலாளி பரிமளாவின் குடும்பத்தை ஒரு வருடமாக ஆதரித்து வந்த மட்டுடன் நிறுத்தாமல் பரிமளாவுக்கு மாதம் இத்தனை ரூபாய் என்று சம்பளம் போலவும் கொடுக்கலானார். கம்பெனியில் சேருங் காலத்தில் கட்டக் கந்தையற்றுக் கிடந்த பரிமளவல்லிக்கு மூன்று வருடங்களுக்குள்ளாகவே சொந்தமாக உயர்ந்த ஆடைகள், ஆபரணங்கள் எல்லாம் உண்டாகி விட்டன. ஆநந்தப் பெருக்கினால் பரிமளா வளர்பிறை மதியம் போலப் பிரகாசித்து எல்லோருடைய விழிகளுக்கும் பேராநந்த விருந்தளித்தாள்.

பரிமளாவுக்கு வயது பதின்மூன்று நடக்கின்றது. அவளுடைய இயற்கை, செய்கையாகிய எழிலுடன், இனிமையான சங்கீதத்தின் ருசியும் ஒன்று கூடி அவளைக்

காண்போரின் மனத்தைக் கவர்ந்தது. உருண்டு திரண்டு இளம் வாழைத் தண்டுகளைப்போன்று பக்குவப் பட்டிருந்த மேனி பிரமிப்பை பளித்தது. எந்த வேடத்தில் எந்த விதமாகத் தோன்றிய போதிலும் அச் சிறுமியின் வனப்பும் பொருத்தமான நாடக நடிப்பும் வெகு அற்புதமாக விளங்கின. அத்தகைய நங்கையின் நடிப்பையும், வனப்பையும், கானத்தின் இனிப்பையும் காண ஒவ்வொரு நாடகத்திலும் ஏராளமான கூட்டம் கூடி விடுவார்கள்.

அந்தரங்கமான அன்பு இருக்கலாம். அதைக் காட்டும் வழிஞ்சிலருக்குத் தெரிவதே இல்லை. பேசுவது இன்னதென்று தெரியாமல் உளறி விழிக்கின்றார்கள்.

பரிமளவல்லி தான் சிறிய பிராயத்துப் பெண்ணாயிருப்பினும் ஒழுக்கத்தை மீறியோ, ஆபாசமான முறையிலோ ஒரு போதும்

நடிக்க மாட்டாள். ஆபாசமான நாடகத்தை அக் கம்பெனியிலேயே நடிப்பதில்லை என்ற ஓர் திட்டம் கம்பெனியின் ஆரம்ப நோக்கமேயாகும். செல்வவந்தர்கள் பரிமளாவின் நடிகத் திறமையையும், சங்கீத சாரத்தையும் கேட்டுக் களித்து ஒவ்வொரு தினமும் நோட்டுக்களாகவே வீசி எறிவார்கள்.

ஆனால் நமது செல்வி அந்த வெகுமதிகளைக் கண்டு பேராசையும், அல்ப மதியும் கொள்ளாது இவ்வாறு தனக்குக் கொடுப்பது பற்றி வருத்தமே கொண்டாள். அந்தப் பணத்தையும் எடுத்து முதலாளியிடமே கொடுத்து அதையும் தரும வழியில் செலவிடும் படியாகக் கேட்டுக் கொள்வாள். தன்னுடைய சொந்த பிதாவைப் போலவே பொன்னுசாமியைப் பரிமளா நேசித்து வந்தாள்.

அக் கம்பெனியில் நடிக்கும்

நடிகர்களிடத்தில் அனாவசியமாகவோ அடிக்கடியேர் பேசவும் சந்திக்கவும் மாட்டாள். கேசவன் ஒருவனை மட்டும் அவள் தன்னை யறியாத ஓர் அன்புடன் நேசித்து அவனிடம் தனக்கு ஓய்ந்த நேரத்தில் பேசுவது, நடிக்கப் பழகுவது, பாடங் கற்றுக் கொள்வது, சங்கீதம் கற்றுக் கொள்வது முதலியன செய்து வந்தாள். கேசவனுக்கும் இயற்கையிலேயே ஒழுக்கம் செழித்திருந்தது. பரிமளாவினுடைய முதல் சந்திப்பிலிருந்தே அத்யந்த அன்பு தெய்வத் தன்மையாக உதித்து மனத்திடை நீறு பூத்த நெருப்புப் போலப் பிரகாசியாமல் நின்றது.

எதிர்பாராத கோபாவேசத்தை முக்கியமானவர்களிடத்தில் வித்யாஸ மான மொழியுடன் - தொனியுடன்-கண்டபிறகு அவ்வமயம் மற்றையோரின் நிலைமை பதில்பேசுவதுகூடாது என்ற உறுதியில் வந்துவிடுகிறதோடு மனமே கூறவியலாத

விதமான மாறுதலை யடைகின்றது.

ஏற்கெனவே கேசவன் மீது பொறாமை கொண்டிருந்த மற்றவர்கள் கேசவனும் பரிமளாவும் அன்பொழுக விருப்பது கண்டு ஆத்திரங் கொண்டார்கள். பரிமளவல்லியின் வீட்டிற்கு அனேக கடிதங்கள் வரத் தொடங்கின. நாடகத்தில் நடிப்போரும் இதரர்களும் அவளுடைய மோக வலையில் சிக்குண்டு தம் தம் மனம் போனபடி யெல்லாம் கடிதங்கள் மூலம் பிதற்ற வாரம்பித்தார்கள். பரிமளா கேவலம் சிறுமியாயினும் அவளுடைய அறிவு தனிச் சுடர் போலப் பிரகாசிக்கின்ற-தாகையினால் இக் கடிதங்கள் அவளுடைய மனத்தைப் புண் படுத்தின. "தினந்தோறும் தபால்காரன் தன் வீட்டிற்கு வராது போகக் கூடாதா?" என்று எண்ணுவாள். அவளுடைய இவ் வேதனையை யாரிடம் வெளியிடுவது" என்று ஏங்கி அஞ்சி சில நாள் வாளா

விருந்தாள்.

பரிமளாவுடன் நடிப்பதில் நான்நீ என்று போட்டிகளும் உண்டாகும். பரிமளா ஒருத்தியே அங்கு பெண்பாலாதலால் மற்றைய பெண் வேடங்கள் தாங்குவ-தெல்லாம் ஆண் பிள்ளைகளே யாவர். பரிமளாவின் தாயாகவும், தோழியாகவும் பலவிதமான நடிகர்களாகத் தோன்றுவோரிடத்திலும் பரிமளா நெருங்கி நடிக்காமல் தன்னுடைய மனத்திலடங்கியுள்ள வெறுப்புடன் விலகியே நடிப்பாள்.

அவ்வாறான காலங்களில்தான் பரிமளாவின் மனத்தில் அபூர்வமான ஓர் அறிவு உதய மாயிற்று. அது யாதெனில் “நான் ஒர் நாடகமாதாக இருக்கிறேனே” என்கிற ஓர் ஏக்கமே. அவ்வாறு உதயமானதோடு தான் தினம் நடிக்கும் உயரிய நாடகங்களின் வேடத்துப் பாத்திரத்தைப் போல தான்

உண்மையிலேயே கற்புடனும் நீதியுடனும் ஒழுக வேண்டும். தான் நடிப்பது பிறர் கண்டு புத்தி பெறுவதற்காகவன்றோ? அந்த உண்மை தன் நடத்தையிலும் சாவித்திரி, சீதை, வள்ளி, தமயந்தி, அனுசூயை முதலியவர்களைப் போல இருக்க வேண்டும் என்ற ஓர் தீவிரமான எண்ணம் உதித்து விட்டது.

காதலுக்கு பயப்படாதவர்கள் உலகில் யாரிருக்கின்றார்கள்? உலகம் முற்றும் மயங்குவது அதற்கே என்கிறார்கள் சிலர். ஆனால் உத்தமமான குண மும், இனிமையான சங்கீதமும் பவ்யப் படுத்துவது போல வேறு எதுவும் முடியாதென்பதுதான் உண்மை.

அங்ஙனம் உதித்த எண்ணத்தினால் அவள் அந்த விஷயத்திலேயே இரவு பகலாக மனத்தைச் செலுத்தி அனேக உயர்ந்த க்ரந்தங்களையும் மேலான நாவல்களையும் படித்துக் கற்பரசிகளின் திண்ணிய திடத்தைத்

தன் மனத்தில் உறுதி கொண்டாள்.

பரிமளா ஒரு தினம் தன் வீட்டில் இருக்கையில் சில கடிதங்கள் வந்தன. அவைகளைப் பிரித்துப் படிக்கலானாள். அவற்றில் ஒன்றில்,

"என்னுயிரைக் கொள்ளை கொண்ட பரிமள சுந்தரியே!

உனக்கு இக் கடிதத்திற்கு முன்பு பல கடிதங்கள் எழுதியும் நீ பதில் விடுக்கா திருத்தலின் காரணம் எனக்குத் தெரியவில்லை. நான் சாமானிய மனிதனென்று நினைக்காதே! நான் ஓர் ஜமீந்தாரரின் புதல்வன்; மைனர் ஜமீந்தார் என்பதை நினைத்துப் பார். நான் உன்னைப் பார்த்த நாள் முதல் உன்னையே மணக்க ஆசிக்கின்றேன். நீ பெரிய ஜமீந்தாரிணி யாவதைக் கவனித்து எனக்கு உடனே பதில்

போடு. கேவலம் நாடகக்காரப் பெண்ணாகிய உன்னை ஓர் ஜமீன்தார் தேடிவருவதானது உனது பூர்வ ஜன்மப் பயன் என்று நினைத்துக் கொண்டு, மறுக்காது பதில் தெரிவிக்கவும்.

இங்ஙனம்

.......................

மைனர் ஜமீந்தார்.

என்று வரைந்திருந்தது. அதைப் படித்துக் கண்ணீர் உதிர்த்தாள். பிறகு மற்றொன்றைப் படிக்கலானாள். அது பின் வருமாறு:-

தலைமுறை தலைமுறையாக வறுமையினால் பீடித்தாலும் சிலருக்கு அவர்களின் பெருந் தன்மை மட்டும் மாறுவதில்லை. அதே போல செல்வத்தில் திளைந்தாலும் சிலருக்கு அல்ப குணம் அகலுவதில்லை.

”நாடகக்காரியாகிய நாரீயே!

உனது தொழில் நாடகம் நடிக்கும் இழிவாகவிருந்த போதிலும் உன்னுடைய பேரானந்த எழிலும் சங்கீதமும் ஒன்று கூடி என்னை உன் வயப படுத்தி விட்டதால் நான் உனக்குப் பல பதக்கங்களும், தோடாவும் பரிசு கொடுத்திருக்கிறேன். நான் ஓர் ரத்தின் வியாபாரி. என்னுடைய ஆசை நாயகியாக உன்னை அடைய மனம் தாவுகின்றது. நான் என்னுடைய அவாவைக் கடிதத்தில் தெரிவிக்க எடு இடம் தராது. நீ ஓர் உயர்தரக் கம்பெனியில் நடித்தாலும் நாடகக்.காரி என்கிற ஓர் பெயர் வந்து தாக்காது நிற்காது. எது எவ் விதமிருப்பினும் என்னுடைய மனோ வேட்கையினால் நான் உன்னை என் மனத்திற்கிசைந்த மனைவியாகச் செய்து கொள்ளத் தீர்மானித்தேன். நான் உன்னை நேரில் வந்து காண ஆசைப் படுகிறேன். என்று வரலாம், எப்போது வரலாம். என்ற

விஷயத்தை அடுத்த தபாலில் கீழ்க் காணும் விலாசத் திற்குத் தெரியப் படுத்தவும்.

இங்ஙனம்

..........................

ரத்ன வியாபாரி.

அந்தக் கடிதங்களைப் போலவே இன்னும் அனேகக் கடிதங்களிருந்தன. அவற்றுள் அந்த நாடகத்திலேயே நடிக்கின்றவன் ஒருவன் எழுதியதின் சாரம் பின் வருமாறு:-

"பரிமளா ! உன் பெயருக் கேற்ற இன்பப் பரிமளம் உன்னிடத்தில்தான் ததும்புகின்றது. உன்னைப் போன்று எழிலும் சகல அம்சங்களும் பொருந்திய புவனசுந்தரி நீதான் என்பதை எவராலும் மறுக்க முடியாது. நீ உன்னழகையும் ஆநந்த சுகத்தையும் எந்த வகையில் தக்க யோக்யதா பக்ஷமானவர்களிடம் அர்ப்பணம் செய்ய

வேண்டுமென்ற பகுத்தறிவு தெரியாது,

நீ சிறு பிராயத்தின் அறியாமையினால், கேவலம் பிச்சைக்காரப் பயலாயும்-வேலைக்காரப் பயலாயும்—சமையல்காரனாயும் இருந்த கேசவனிடத்தில் உனது மேலான அன்பை வைத்திருப்பதானது மிகவும் விசனிக்கவும் பரிகஸிக்கவும் இடமுண்டாகின்றது. நான் உன்னுடன் பலமுறை நடித்திருப்பதை இங்கு குறிப்பிட வேண்டாம். உனக்குப் பல விதத்திலும் தக்க யோக்கியதை யுடைய என்னை நீ விரும்பாதவளாக இருப்பது உன் துர்ப்பாக்கியமே யாகும். அதை நான் குற்றமாக மதிக்கவில்லை. நீ இப்போது இன்னம் புத்தி யறியாத சிறுமியாக இருந்தாலும் இன்னும் சில வருடத்திற்குள்ளாக நீ பெரிய மங்கையாய் விடுவாய்! அப்படி ஆகும் காலத்தில்

உன்னழகும் சங்கீதமும் எத்தனை உயர்வாக இருந்தாலும் நீயொரு நாடகக்காரி என்பதை உன்னால் மறைக்க முடியாது. உன்னைக் கண்டு காமுறும் ஜனங்கள் கோடிக் கணக்கிலிருக்கி றார்கள். அவர்களால் உனக்கு எத்தனையோ துன்பங்கள் நேரிடலாம். அவைகளுக்கு இலக்காகாமல் என்னுடன் வந்து விடு. ரங்கோன் முதலிய இடத்திற்குப் போய் நாம் சுகமே வாழலாம். இதற்குப் பதிலை நான் உன் வீட்டிலேயே எதிர் பார்க்கிறேன்; இன்று மாலை வருகிறேன்.

இங்ஙனம்

..................

அன்பன்."

ஒருவரோடொருவர் அதிகமாக சினேகத்தினால் அடிக்கடி சந்தித்தால் அதற்கு வம்பு பேசும் கர்த்தாக்கள் காத்திருக்கிறார்கள். வம்பு செயலற்று உலக விஷயத்தில் பாடு

படுவதற்கோ அவர்களின் மனத்தில் இடம் இல்லை.

அக் கடிதத்தைப் படித்த பரிமளாவின் மனத் துயரம் அவள் என்றும் கண்டிராத வகையில் பொங்கி விட்டது. ”ஹா! நான் ஓர் கூத்தாடியா! நாடகக்காரியா! அவ்விதமா நம்மை ஏளனம் செய்வார்கள். என்ன அனியாயம்! சீச்சீ! என்ன வாழ்க்கை நாம் வாழுகின்றோம். நாம் நமது வறுமையினாலும் சிறிய குழந்தைப் பருவத்தின் விளையாட்டினாலும் இது பரியந்தம் இவ்விதம் கவுரவ மாக நடித்ததெல்லாம் இப்படி பல ஜனங்களின் மனத்திற்கு விரோதமாகவா ஆய் விட்டது?

மாதா மாதம் பேப்பருக்கும், அச்சாபீஸுக்கும், பயிண்டருக்கும், தபால் தலைகளுக்கும் நூற்றுக் கணக்கான பணத்தைக் கொடுப்பதை வெளியார் அறிவதில்லை. வாபம் எத்தனை ஆயிரம்

என்ற கேள்விகளை மாத்திரம் கேட்கின்றார்கள். அவரவர் பட்டால்தான் தெரியும்.

ஹா! கடவுளே! என் மதியை எனக்கு அறிவிக்க நீ ஏன் இதுகாறும் தாமதம் செய்தாய்!.. நான் இன்னும் என்னுடைய நிலையை அறியாமலிருப்பதைக் கண்டு தான் பல ஜனங்களின் மூலம் எனக்குப் புத்தி பிறக்கச் செய்தாயோ!.... ஐயோ! இப்பாழும் பெண் ஜென்மம் எடுத்ததனாலன்றோ, என் கதி இவ்விதமாகி விட்டது! உத்தமர்களின் சகவாசத்துடன் சிறுமியாக நடிப்பதுவும் என்னைத் தாக்கி விட்டதே. சீச்சீ! நாடகத்திற்கு வரும் மக்களின் மனத்திற்கு இத்தகைய ஆபாச எண்ணத்தை ஏன் அளிக்கின்றாய் என்னப்பனே! எனக்கு இன்னும் 14 வயது நிரம்பப் பெறாதிருப்பினும் என்னுடைய துயரம் என்னை வாட்டி வருத்துகின்றதே! சர்வேசா! என் மனம் இக்கடிதங்களினால்

தத்தளிக்கின்றதே! இதனின்றும் விடுதலையடைய ஒர் மார்க்க மில்லையா!

ஆபத்ரக்ஷகா! எனக்கு வயதோ இன்னும் கேவலம் கொஞ்சமாக இருக்கிறது. இதற்குள் நான் எனது ஏழ்மை நிலைமையைக் கண்டு முதலில் ஒருவிதமாக வருந்தி கஷ்டப்பட்டுப் பின்னர் சற்று சுகமடைந்து தெம்பாகவிருந்து அந்த சந்தோஷம் வெகுநாள் நீடிப்பதற்குள்ளேயே என்னுடைய பிற்காலத்தின் நிலைமை, கண்ணாடியில் தெரிவதுபோலப் பிரகாசித்து என் துயரத்தை எடுத்துக் காட்டிப் பெருக்குகின்றதே! இதை நான் யாரிடத் தில் எடுத்துக்கூறுவேன்? எனக்கு வயது சிறியதாக இருந்தபோதிலும் என் நடிப்பில் நான் பணத்தையும் புகழையும் மட்டும் லக்ஷ்யம் செய்யாமல் நான் எடுத்துக்கொண்ட பாத்திரங்களாகிய சாவித்திரி, ஸீதை, நளாயணி, வள்ளி,

சந்திரமதி, ருக்மிணி முதலியவர்களைப்போல எனது அனுபவத்திலும் தினசரி வாழ்க்கையிலும் நடந்துகொள்ளவேண்டும் என்கிற எண்ணமே மனத்தில் புகுந்து கொண்டிருக்கிறது. அதேபோல நான் என்னால் கூடியவரையில் சாவித்திரியைப் போல கற்பினும், சந்திரமதியைப்போல சத்தி யத்திலும், நளாயினியைப்போல பொறுமையிலும் பதி பக்தியிலும் இன்னும் மற்ற சற்குணங்களையும் கையாண்டு வருவதையன்றோ நான் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறேன்.

லாபத்தை எண்ணி வியாபாரம் செய்யப் புகுந்தோருக்கு நஷ்டம் தான் பலன் கிடைக்கிறது. கண்மூடித்தனமாக வியாபாரம் செய்பவருக்குத் தான் எதிர்பாராத லாபம் கிடைத்து அளப்பரிய சந்தோஷம் கிடைத்து விடுகிறது.

இந்தக் கடிதங்கள் அவற்றைக் குலைத்திடும் வழியிலல்லவோ என் பிற்காலத்திய நிலைமையை பயங்கரமாக எடுத்துக்காட்டுகின்றன. சீ! குழந்தைப் பருவமாக நாம் நாடகம் நடித்தது போதும். இனி நமக்கு நாடகம் வேண்டாம்” என்று மனந்தவித்துப் பலவிதமான யோசனையோடு உட்கார்ந்து விட்டாள்.

பரிமளவல்லியின் மீதுள்ள பிரியத்தினால் பொன்னுசாமி அவளை அடிக்கடி வீட்டில் வந்து சந்திக்கும் வழக்கப்படிக்கு அன்றும் வந்தார். அப்போது பரிமளா தன்னந்தனியாகத் தன்னறையில் உட்கார்ந்து சோகித்திருப்பதைக் கண்ட பொன்னுசாமி திடுக்கிட்டு அருகில் சென்று “செல்வீ! பரிமளா! என்ன இது! ஒரு நாளும் நான் கண்டறியாத நிலைமையில் விசனித்து வீற்றிருக்கிறாய்? கலக்கம் யாது? என்னிடம்

தியங்காது சொல்வாய் அம்மா!” என்று வெகு வாஞ்சையோடும், உண்மையான பரிதாபத்துடனும் கேட்டார்.

இதுகேட்ட பரிமளா தனது சொந்த தந்தையைப்போல எண்ணி இருக்கும் பொன்னுசாமியின் இரு கரங்களையும் பிடித்துக்கொண்டு சிறிய குழந்தையைப்-போல் கோவெனக் கதறியவாறு “என்னரிய பெரியாரே! நான் உருவத்திலும், வயதிலும் சிறுமியேதான். ஆனால் மனோ துயரத்தில் மிகமிகப் பெரியவளாகி விட்டேன். என்னுடைய சுகத்தையும் துக்கத்தையும் சமமாகக் கவனிக்கக்-கூடியவர்கள் தாங்களும், என் தாயுமே ஆவீர்கள். ஆதலால் எனக்குற்ற விசனத்தை நீங்கள் அறிவதால் எனக்கு நன்மையேயன்றி தீமை இல்லை, அதோ என் தாயும் வருகிறாள். அம்மா! உட்காருங்கள். போஷகரே! இதோ இக்கடிதங்களை நீங்க

ளிருவரும் பாருங்கள்.” என்று பணிவாகக் கூறி, அதையவர் கையில் கொடுத்தாள்.

சிலருக்கு சதா காலமும் வாயில் ஏதேனும் அரைத்துக் கொண்டே இருக்க வேண்டும். அதற்கு ஒரு தினம் தடை வந்து விட்டால் கோபமோ தலைக்கு மேல் ஒரு முழம் போய் அவர்கள் ஆடத் துடங்கி விடுகிறார்கள்.

கடிதத்தை வாங்கிய பொன்னுசாமி படித்து முடித்து மனந் தாங்காத துயரத்தை யடைந்து அதைப் பார்வதியம்மாளிடத்தில் கொடுத்தார். அந்த அம்மாளும் அதைப் படித்துத் திடுக்கிட்டாள். இருவரின் மனமும் கடிதங்களினால் கலங்கின. இதையறிந்த பரிமளா அதிகாரியை நோக்கி “என் பிதாவுக்குச் சமமானவரே! என் விசனத்திற்குக் காரணம் தெரிந்ததா! இதுபோன்ற கடிதங்கள் விஷபாணங்கள் போன்று வரத்தொடங்கி வெகுநாட்களாயின. அன்றுமுதல்

இன்றுவரையில் அந்த பாணங்களாலேயே என் மனமும் தேகமும் மெலிவுற்று மிக்க வேதனைக் குள்ளாகிக்கொண்டே இருந்தது. நான் இந்நாள்வரையில் பொறுத்துப் பார்த்தேன். இனி என்னால் பொறுக்க முடியாது. நான் எனது இளமைப் பிராயத்தின் வருத்தத்தை முன்னிட்டு நாடகத்தில் நடிக்க வாரம்பித்தது எனக்குப் பெருத்த புதைபாணம் போன்ற துன்பங்கள் நேரிடும்போலிருக்கிறது. என் தாயே!... பெரியவரே! நான் இனி நாடகத்தில் நடிக்க விரும்பவில்லை. என்னுடைய பிற்காலத்தின் நன்மையைக் கோரி நான் விலகிக்கொள்கிறேன். என்னை மன்னிக்க வேண்டும்.” என்று மிக்க நயமாகச் சொன்னாள்.•

பொன்னு- ஹா! என் கண்மணி! பரிமளவல்லீ! உன்னறிவுக்கு என்னுள்ளம் பொங்கிக் களிக்கின்றது. நீ புத்தியிலும்

தீர்க்காலோசனையிலும் மகா பெரியவள். உன்னுடைய அபாரமான அறிவை நான் பன்முறைகளில் கவனித்திருக்கிறேன். இன்று பூர்ணமாகப் பார்த்துவிட்டேன். அந்தோ! நாடகம் என்பது பூர்வம் எத்தகைய மேன்மையான நோக்கங்கொண்டு ஆரம்பிக்கப்பட்டது தெரியுமா!

பலஹீனம் என்பது வியாதியஸ்தர்கள், கர்ப்பிணி, அதிக உழைப்பாளிகள், முதலியோருக்கு இருப்பது சகஜம். பல் தேய்ப்பதற்கு முதல் ஜலம் கொண்டு கொடுக்கக் கூடிய நிலையில் உட்கார்ந்திருக்கும் அம்மாமார்களுக்கோ சாப்பாட்டை எடுத்து வாயில் போடுவதற்குள் ஆயாஸ்மும் பெரு மூச்சும் வந்து விடுகின்றது. என்ன வேடிக்கை!

பகவத் விஷயங்களையும் பக்தர்களின் விஷயங்களையும் கல்வியறிந்தவர்கள்

நன்றாகப் படித்து அறிந்துவிடுகிறார்கள். எனினும் உலகத்துள்ள பல்கோடி மக்களின் போக்கும் ஒன்றுபட்டு வராது. சிலருக்குப் படித்தால் மனத்தில் பதிந்துவிடும். சிலருக்குக் கேட்டால் பதியும்; சிலருக்குப் பார்த்தால் பதியும். சிலருக்கு எதிலும் பதியாது. பல வேறுபட்ட பேதங்களிருக்கின்றன. அதை உத்தேசித்துத்தான் எல்லோருக்கும் நன்றாகக் கண்கூடாகப் பார்த்தால் நல்ல விஷயங்களை படிக்கத் தெரியாதவர்களுக்குக்கூட மனத்தில் பதியும் பொருட்டு நடித்துக் காட்டுவது என்று பெரியார் நாடகங்களை ஏற்படுத்தியதாகப் பெரியாரே சொல்ல நான் கேட்டிருக்கிறேன். பகவானுடைய குணங்களும், செய்கைகளும், பாகவதர்களின் பக்திப் பிரபாவமும் உலகத்தில் சகல ஜனங்களுக்கும் நன்றாக விளங்கவேண்டி சத்விஷயமான சரிதைகளையே நாடகமாக

நடித்துப் பெரும் பயனை விளைவித்தார்கள். அந்த அரிய நாடகம் காலக்கிரமத்தில் அதன் கவுரவமே குறைந்து கேவலமாக மதிக்கக் கூடிய நிலைமையில் வந்துவிட்டது. அந்த இழிவு நமது நாட்டில் தினே தினே விருத்தியாகும்படியாக அனேக ஆபாசங்களும் விபரீதங்களும் உண்டாகிவிட்டன.

ஆனால் மேல் நாட்டில் இன்னும் நாடகத்திற்கும் நடிகர்களுக்கும் பேராதரவும் பெரும் புகழும் கொடுத்துவருகிறார்கள். அதனாலேயே அந்நாட்டில் நாடக உலகம் நலம் பெற்று விளங்குகின்றது. பரிமளா! உனது யோசனை என்னவோ மிகவும் ச்லாக்யமானதே! உன் மனத்திற்கு விரோதமாக நான் ஏதும் சொல்லத் தயாராக இல்லை. இக்காரியங்கள் செய்திருப்பது கேவலமான காலாடிக் கூட் டங்கள் என்பது உனக்கு நன்கு தெரியும்,

அத்தகையோரிடத்தில்தான் அதிகமான ஜாக்கிரதையுடன் இருக்கவேண்டும். என்னுடைய கம்பெனிக்கே ஓர் பரிமளத்தை அளித்த நீ நின்றுவிடுவதால் நாடகப் பிரியர்கள் மிக்க விசனிப்பார்கள். எல்லாம் காலச் சக்கரத்தின் சுழல்வு. இதை எண்ணி விசனிப்பதில் பயனில்லை. அம்மா! நீ நடிப்பதை நிறுத்திவிட்டதனாலேயே நான் உன்னை மறப்பேனென நினைக்காதே! உன்னாலும் கேசவனாலுமே என் கம்பெனிக்குப் புது மணமும் புத்துயிரும் உண்டாயது. ஏராளமான செல்வத்திற்கு கம்பெனி உரித்தாயது. தருமங்களைச் செய்ய சாதனமாயது. ஆதலால் உனது குடும்பத்தை நான் கைவிடமாட்டேன்.

சிலரிடத்தில் ஒரு ரகஸியமான விஷயத்தைச் சொல்லி வெளியிட வேண்டாமென்று பலதரம் கூறினாலும் அவ்

விஷயம் அடுத்த நாள் சந்தைக் கடையில் விற்பனைக்கு வந்து விடுகிறது. அதனால் வரும் அனர்த்தமோ.....

பரிமள - அன்பார்ந்த பெரியவரே! நான் இதுகாறும் இத்தகைய நிலைமைக்கு வந்தது முற்றும் தங்களின் கிருபையினால் என்பதை மறவேன். நான் இனி அநாவசியமாய் உழைப்பின்றி உங்கள் பொருளுக்கு உரியவளாதல் பிழையேயாகும். என் மனம் அதற்குச் சம்மதப்படாது உங்கள் தயவினால் வாங்கப்பட்ட அனேக விலையுயர்ந்த ஆடையாபரணங்கள், பிறரால் வழங்கப்பட்ட பரிசுப் பொருள்கள் இவை எல்லாம் எனக்குத் தேவையில்லை. அவை பயனின்றி என் பெட்டியிலேயே தூங்குவதைவிட தாங்களே ஸ்வீகரித்து உபயோகப்படுத்திக் கொள்ள என் மனம் விரும்புகின்றது. தங்களின் அன்பு என்மீதிருக்குமாயின்

ஒருவித குறைவுமில்லை, எனக்குத் தாங்கள் மாதம் 150 ரூபாய் சம்பளமாக இந்த இரண்டு வருடங்களுக்கு மேலாகக் கொடுத்து வந்ததில் நான் அதிகமாக எதுவும் செலவிடாமல் அதில் மிச்சம் செய்து இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாய் என் தாயாரின்பேரில் பாங்கியில் போட்டு வைத்திருக்கிறேன். அதுவும் உங்களுக்குத் தெரிந்ததே! அந்த ரூபாயில் எனக்கு மாதம் கிடைக்கக்கூடிய வட்டியைக்கொண்டு என் காலத்தை நான் தாராளமாகக் கழிக்கலாம். பெரியவரே! என் விருப்பப்படி இவைகளை ஸ்வீகரிக்கவேண்டும்" என்று வேண்டினாள்.

அதே யோசனைக்கு அவள் தாயாரும் இசைந்ததால் பொன்னுசாமியும் அதற்கு உடன்பட்டான். பிறகு வெகுநேரம் பேசிய பிறகு அவர் கண்ணீர் பெருக "பரிமளா! நான் ஒரு விஷயம் வேண்டுகிறேன். அதாவது"நீ

கடைசீயாக இன்னும் ஒரு நாடகம் மட்டும் நடித்துவிட்டு அதோடு இந்த வேலையை விட்டு விலகிக்கொள்” என்று கெஞ்சிக்கேட்டார். அதற்குப் பரிமளா யோசித்து இசைந்தாள். பிறகு பொன்னுசாமி போய்விட்டார்.

பிறர் விஷயத்திலேயே கண்ணும் கவலையுமாக இரூக்கும் வம்பர் கூட்டத் தாரைக் கவனிப்பதற்கு ஒர் பிரத்தியேகக் கூட்டம் மறைந்திருக்கும் என்பதை அவர்களறிவதில்லை.

பரிமளா வெகு கலக்கத்தோடு வீற்றிருந்தாள். அவளூடைய சகோதரியை ஆரம்பம் முதலே நல்ல கல்வி மார்க்கத்தில் பயிலுவிப் பதிலேயே பரிமளா இச்சித்திருந்தாளதலால் அவள் கல்வி கற்று வருகிறாள். சகுந்தலா என்கிற அப்பெண்மணியும் பரிமளாவைப் போலவே ஒழுக்கத்தில் பிறவிக்குணமாகவே

அமைந்துவிட்டாள். அன்று நாடக நாள் அல்லவாகையினால் கேசவன் பரிமளாவின் வீட்டிற்கு வந்தான்.

சாதாரணமாக, கேசவன் பரிமளாவின் வீட்டிற்கு வருவது பழக்கமாதலாலும் அவனை அறியாத ஓர்விதமான அன்பு அவன் இதயத்தில் பதிந்துவிட்டதனாலும் அவ்வன்பாகிய கயிற்றால் கட்டுப் பட்டு பரிமளாவுக்குப் பாடம் சொல்லுவது, சங்கீதம் கற்பிப்பது முதலியன செய்துவந்தான். அவனுடைய அன்பிற்குக் காரணம் அவனுக்கே தெரியாது. அன்று பரிமளாவினுடைய மாறுதல் கேசவனுக்குச் சிறிதும் தெரியாது. தன் போக்காக வந்த கேசவன் பரிமளாவின் மாறுதலையும், முக-வாட்டத்தையும், புலம்பிய கண்களின் குன்றிய ஒளியையும் கண்டு திடுக்கிட்டு “பரிமளா! என்னவிது! அன்றலர்ந்த தாமரையைப்போன்றிருக்கும்

உனது வதனம் கலக்க முற்றுக் கண்ணீர் வடித்திருக்கின்றதே! காரணம் என்ன? நான் அறியலாகுமா!” என்று கேட்டான்.

பரிமளா.- உட்காருங்கள். நான் தங்களை எல்லாம் விட்டுப் பிரியுங்காலம் வந்துவிட்டது. அதை எண்ணியே விசனிக்கின்றேன். நாம் ஓர் நாடகம் நடிப்பதுபோலக் கடவுள் நம்மையே ஓர் நாடகமாக நடிக்கிறார். நமது பிரிவுக்காக என் மனம் வருந்துவது சகஜ மல்லவா!

வஞ்சம் நினைத்துத் துரோகம் செய்து லிட்டப் பாவிகளை பிறகு பார்ப்பதற்கும் நினைப்பதற்கும் விஷமாக ஆய் விடுகிறது. ஒப்பிலாத உதவியை அனேக நன்மைகளைச் செய்தவர்கள் செய்தாலும் அவைகள் பொருட்படுவதில்லை. நன்மையை எண்ணியே மனம் அவர்களை மறக்கக் கூடாது போராடுகின்றது.

கேசவன் - என்ன! என்ன! பரிமளா! நீ பேசுவது எனக்குப் புரியவில்லையே! நாம் பிரியவேண்டுமா! ஏன்! என்ன காரணம்? நான் எனக்குத் தெரிந்து ஒருவிதமான குற்றமும்- தவறுதலும்- உன்பால் செய்ததாகத் தெரியவில்லையே! பரிமளா! அவ்வாறு நான் ஏதேனும் என்னை யறியாது செய்துவிட்டேனா! அதை விளக்கிக் கூறு. என்னை நான் திருத்திக்கொள்கிறேன். உன் முகவாட்டங் கண்டு என் மனம் பதறுகின்றதே!

பரிமளா - ஹா! தாங்கள் குற்றமிழைத்ததாகவா நினைக்கின்றீர்கள். அப்படிக் கொன்றுமில்லை. இதோ! இந்தக் கடிதங்களாகிய பாணங்களினால் நான் வெதும்பிப் போய்விட்டேன். நான் கேவலம் பெண்பிள்ளை. அதிலும் ஓர் நாடகக்காரி. நான் இனி கலங்காது சந்தோஷமாக விருப்பதற்கு எவ்விதம் இடமுண்டு.

கேசவன்.-(கடிதங்களைப் படித்துவிட்டு) ஹா! பரிமளா! இப்போது விளங்கியது. உனக்கு நமது கம்பெனியினின்று எழுதிய ஆசாமி யார் என்பது. நாராயணன்தான் நம்மிருவர் பேரிலும் பெரும் பகை வைத்திருக்கிறான். அவனுடைய பகையின் பாணம் தான் இது.... இதற்காக நீ ஏன் பிரிவு காலம் என்று கூறினாய்?

பரிமளா:- நண்பரே! நான் இனி நாடக மேடையில் நடிக்கப் பிரியப்படவில்லை. என் மனம் முற்றும் முறிந்து விட்டது. என்னுடைய தற்போதிய நிலைமையில் நான் எனது வாழ்க்கையைக் கூட வெறுக்கக் கூடியவளாக இருக்கிறேன். நாடகம் நம்மைச் சேர்த்தது. அதுவே நம்மைப் பிரித்தது. இப்போதே முதலாளி வந்திருந்தார். அவரிடம் சகலமான விஷயங்களையும் பேசி முடித்தாய் விட்டது. கடைசியாக ஒரு நாடகம் நடிக்க இச்சையுற்றார்;

அதற்கு மட்டும் இசைந்தேன். நான் முதலில் நாடக அரங்கத்தில் தோன்றியது வள்ளியம்மையாக; அதே வேடத்துடன் மறைகிறேன்” என்றாள்.

விடியற் காலம் 5 மணிக்கு எழுந்தாலும் சிலர் தம் வேலைகளைக் கவனிக்காது சோம்பேறியாக உட்கார்ந்திருந்து 8 மணிக்கே தம் காரியத்தைச் செய்கிறார்கள். சுருசுருப்பு இருந்தாலன்றோ!

இதைக் கேட்ட கேசவன் உண்மையிலேயே தன்னை யறியாத விதமாய்க் கண்ணீர் உதிர்த்தான். பரிமளா! உன்னைப் பிரிய வேண்டுமா! உன்னைப் பாராதிருக்க வேண்டுமா! இவ்விதமான ஏற்பாடுகள் உண்மையில் நடந்தேறி விட்டனவா! என்ன ஆச்சரியம்! இந்த நான்கு வருடங்களாக நாம் ஒன்றாக நடித்துப் பிரியமான நண்பர்களாகும்படிச் செய்த கடவுள் நம்மைப்

பிரித்து விடவா எண்ணி விட்டார் ! ... பரிமளா !... பரிமளா ["....... என்று மேலே பேச மாட்டாது அவள் முகத்தை நோக்கியவாறு தம்பித்து விட்டான்.

கேசவனின் ஆழ்ந்த அன்பையும், பரிதாபகரமான நிலைமை யையும் கண்ட பரிமளா மனமுருகினாள். அவள் தன்னை யறியாத துக்கமேலிட்டால் தன்னிரு கரங்களினாலும் தன் முகத்தை மூடிக் கொண்டு கவிழ்ந்தவாறு மேஜையின் மீது சாய்ந்தாள். பரிமளாவின் கண்ணீர் மேஜையின்மீது சொட்டி அதை நனைக்க வாரம்பித்தது. அன்றைய மனோ வேதனையினால் அவள் தலை கூட வாராதிருந்ததனால் சிகை தாறுமாறாகக் கலைந்து கிடந்தது. இத்தனை இளம் பிராயத்தில் இச் சிறுமி உலகானுபவம் முற்றும் விசன ரூபமாயறிந்து கலங்க நேரிட்டதை

எண்ணிக் கேசவன் மனந்தாங்காது வருந்துகிறான். “பரிமளா! பரிமளா! நான் இங்கு இப்பொழுது எதற்கு வந்தேன், எவ்விதம் முடிந்தது. ஐயோ! என் மனத்தில் என்னரிய தாயாரையும், சகோதரிகளையும் எண்ணிப் புலம்பிக் கொண்டிருந்தேன். நேற்றிரவு கண்ட கனவினால் இன்று முற்றும் விசனக் கடலில் மூழ்கினேன். என் மனத்தின் துயரத்திற்கு ஓர் ஆறுதல் செய்து கொள்ளும் பொருட்டு இங்கு வந்தால் உனது இனிய சங்கீதத்தையும், இன்ப மொழிகளையும் கேட்டு மகிழலாம் என்ற எண்ணத்துடன் வந்தேன். வந்த விடத்திலோ எனது வேதனையை விடப் பதின் மடங்கு அதிகரித்த மனக் கிலேசத்தை யடைந்து விட்டேன். என் அன்பான பரிமளா! எழுந்திரு; விசனத்தை விலக்கு.” என்று மிக்க வாஞ்சையோடு கூறினான்,

தம் மனிதரைப் பார்க்க வேண்டு மென்று

வெகு ஆவல் மனத்தில் உதய மாகி விட்டால் அது தீவிரமாகப் பறக்கின்றது. பார்த்த பிறகே மனச் சாந்தி யடைகின்றது.

இதைக் கேட்ட பரிமனா, தலை நிமிர்ந்து கண்ணில் தாரை பெருகியவாறு, “நண்பரே! நான் எவ்விதமான தென்பைக் கொண்டு மனந் தேறுவேன்? இனி எனக்கு மகிழ்ச்சி என்பது உண்டா! என்னுடைய இப்போதிய மன நிலைமையில் என் வாழ்க்கையே முறிந்து விட்டதாயும், நான் நடைச் சவமாகி விட்டதாயும் என்னை யறியாது யாதோ சொல்லுகின்றது, என் விதியே எனக்கு இவ்விதம் சொல்லுகின்றதோ, அன்றி எனது முடிவைக் கடவுள் தான் சொல்லுகி றாரோ தெரியவில்லை. நான் கேவலம் ஓர் நாடக மாது என்றும், கூத்தாடி என்றும் பெயர் வாங்கி இனி பூமியில் இருப்பதைவிட மாண்டு மடிவது எனக்கு மெத்த சந்தோஷமாகத்

தோன்றுகின்றது.” என்று கூறி முடிப்பதற்குள் கேசவன் இடை மறுத்து “ஹா! பரிமளா! என்ன சொன்னாய்!.... இத்தனை இளம் பிராயத்தில் உனக்கு இத்தகைய பார யோசனையும், பார புத்தியும் எவ்விதம் உண்டாகியது? வேண்டாம். இத்தகைய விபரீத சித்தம் வேண்டாம், நீயோ புத்தியறியாத சிறுமி, உனது குழந்தைப் பருவத்தில் நீ அனேகம் வினையாட்டுக்கள் விளையாடியதாக எண்ணு. இதை நீ விபரீதமாக நினைத்தல் கூடாது. உன் விருப்பப்படி நீ இந்த நாடகத்திலிருந்து விலகி விடு, அதற்கு மேல் உன்னுடைய தாயாரும் நமது முதலாளியும் சொல்லுவது போலக் கேட்டு நடந்து கொள், பரிமளா! பொறாமையும், காமமும் நிறைந்த இக் கடிதங்களை மட்டும் நம்பி உன் மனத்தைப் பாழடித்துக் கொள்ளாதே. இவைகளைக் குப்பைக்குச் சமமாய் உதைத்துத் தள்ளு, இந்த

சனியன் பிடித்த வார்த்தைகள் மறையட்டும். பரிமளா! உன் மனம் சற்று தேறும் பொருட்டு கடற்கரைக்கு எஜமானருடன் சென்று வரலாம்; வருகிறாயா?” என்றான்.

முதலில் பஜனையைப் பழித்தவர்கள் பிறகு அதில் தாமே கலந்து கொள்கிறார்கள். அவர்களுடைய காரியம், நடத்தை முதலிய யாவும் இப்படித்தான் இருக்கும் போலும்.

இது கேட்ட வனிதை “என் மனம் மகிழ்வதற்குக் கடலில் நான் கலக்க வேண்டும். அன்றி எனக்கு அக் கடலின் அலைகளைப் போன்ற சந்தோஷம் பொங்க வேண்டிய மார்க்கத்தைக் கடவுள் அளிக்க வேண்டும். இவ்விரண்டு மன்னியில் வேறு வகையில் எனக்குச் சந்தோஷமில்லை. நண்பரே! என் பிறவி இவ்வித மாகுமென்று நான் கனவிலும் கருதவில்லை.” என்றாள்.

கேசவன்:- பரிமளா! நீ சொல்வது உனக்குள்ள விசனத்தினால்; அதன் நன்மை தீமை நீ யறியவில்லை. உயிர் உன் ஸ்வாதீனமன்று, அவன் பிறப்பித்தான்; அவனே அழைத்துக் கொள்ளுகிறான். நீ முயற்சித்தாலும் உன்னால் எக் காரியமும் நடத்திவிட முடியாது, தற்கொலை எண்ணத்தை விட்டு விடு.” என்று அவன் சொல்லிக் கொண்டிருக்கையில் பரிமளாவின் சகோதரி ஒடி வந்து ’’அக்கா! இந்த அறையின் ஜன்னல் கதவருகில் வீதிப் பக்கத்தில் யாரோ ஒருவன் நின்று நீங்கள் பேசுவதை எல்லாம் ஒட்டுக் கேட்கிறான். அதை நான் இப்போதுதான் கவனித்தேன். அவன் என்னைப் பார்த்து “குழந்தை! இங்கே வா!” என்று கூப்பிட்டான்; நான் போனேன். என் கையில் ஒரு பொட்டணத்தைக் கொடுத்து இதைச் சாப்பிடு. உன் சகோதரியினிடத்தில்

நான் பேச வேண்டும். அதற்கு எப்போது சமயம் கிடைக்கும். அதை எனக்குத் தெரிவித்தால் நான் உனக்கு இன்னும் ரூபாய் கூடத் தருவேன்” என்று கேட்டான். இது கேட்ட எனக்கு ஏதோ ஒரு மாதிரியாகி விட்டது. அதனால்தான் “நான் இதோ வருகிறேன்” என்று கூறி விட்டு ஓடி வந்தேன். அதோ பார்; ஜன்னலின் பக்கம் அவன் இருக்கிறான்” என்றாள்.

இவ்வதிசயமான சம்பவத்தைக் கேட்ட இருவரும் நெடுக்கலுற்று, ஆச்சரிய-மடைந்து விட்டார்கள். ஏற்கெனவே இருந்த கலக்கத்தோடு இச் செய்தியும் கூடப் புகுந்து கொண்டதால் இன்ன செய்வதென்பதை யறியாது நிமிட நேரம் தத்தளித்தார்கள். உடனே கேசவனுக்கு ஓர் யோசனை தோன்றியது. அதாவது பரிமளாவின் சகோதரியை அழைத்து ’அம்மா! நீ வீதியில் சென்று அந்த ஆசாமியைக் கண்டு “இன்று

இரவு 9 மணிக்கு வந்தால் என் சகோதரியைப் பார்க்கலாம்” என்று சொல்லிவிட்டு வா” என்றான்.

”அன்பு இருக்கிறது; இருக்கிறது.’ என்று சிலர் வாய்ப் பறை சாற்றுகின்றார்கள். அந்த வாய்ப் பறையாளர் அன்பின் அடையாளமான ஒரு வார்த்தையோ, அன்றி கடிதமோ அளிக்க மனம் இல்லை......

பரிமள:- ஏன்! தாங்கள் எதற்காக இவ்விதம் சொல்கிறீர்கள்? எனக்கு மிக்க பயமாக விருக்கிறதே! அவன் ஏன் இங்கு வந்து என்னைக் காண வேண்டும். எனக்கு விளங்க வில்லையே!

கேசவன்:- பரிமளா! பயப்படாதே! என்னுடைய வார்த்தையைப் பூர்ணமாக நம்பு! ஒரே உறுதியாயும் கடைசி வார்த்தையாயும் நான் சொல்கிறேன். என்னுடைய உயிர்

நீங்கிய பின்னரும் என் சவங்கூட உன்னை மறக்க முடியாது. என்னாவியைக் கொடுத்தேனும் உன்னைக் காப்பாற்ற நான் முயற்சி செய்வேன். உன் கண்கள் நீரைக் கக்கவும், மனம் விசனத்திலாழவும், தேகம் மெலிந்து வாட வும், முகம் சோர்ந்து வதங்கவும் நான் ஒரு போதும் பார்த்துச் சகிக்க மாட்டேன். என் மனத்தின் உண்மையை நீ அறிந்திருப்பினும் சரி; அறியாதிருப்பினும் சரி கடவுளறிய நான் உனக்கு என்னாலான உதவியைச் செய்து காப்பாற்ற ஒரு போதும் பின்னடையேன், பரிமளா ! நீ பயப்படாதே. நான் ஏதோ காரணமாகத் தான் சொல்கிறேன்." என்று நயமாகக் கூறினான்.

பரிமளா ஏதும் பதில் பேசவில்லை. உடனே சகுந்தலா வீதியில் சென்று அந்த மனிதனிடத்தில் கேசவன் சொல்லியது போலச் சொல்லி விட்டாள். அம் மனிதனும்

மட்டற்ற மகிழ்ச்சி கொண்டு அவ்விடம் விட்டுச் சென்றான். பிறகு கேசவன் “பரிமளா! நீ என்னுடன் சற்று எஜமானர் வீட்டிற்கு வருகிறாயா! அன்றி நான் மட்டும் சென்று வாட்டுமா?” என்றான். பரிமளா தானும் வருவதாகத் தெரிவித்தாள். அதன் பிறகு இருவரும் வண்டியிலமர்ந்து முதலாளியின் வீட்டிற்குச் சென்றார்கள்.

ஆடம்பரமான பட்டுப் பட்டாடைகளை உடுத்திக்கொண்டு தடபுடலான அலங்காரத்துடன் ஒய்யார நடை நடந்து சங்கீதக் கச்சேரிக்கு வருகையில், தமக்கு ஒரு காலத்தில் சினேகிதமாகத் தோன்றிய மனிதர்களைப் பார்க்கையில் கசந்ததோ, புளித்ததோ என்ற பார்வையுடன் சிலர் விசாரிக்கின்றார்கள் பாவம். இந்த விசாரணை இல்லை என்று யார் வருந்தினார்கள்?

இவ்விருவரையும் கண்ட முதலாளி மிக்க ஆச்சரியமடைந்து “என்ன பரிமளா! கேசவா! இருவரும் ஒன்றாக எங்கே வந்தீர்கள்? விஷயம் என்ன! உட்காருங்கள்.” என்று அன்போடு கூறினார். உடனே இருவரும் நமஸ்காரம் செய்து விட்டு உட்கார்ந்தார்கள்.

கேசவன்:- தந்தையே! எங்களிருவருடைய போஷகராகிய நீங்கள் இருக்கையில் எங்களுக்கு ஒரு விதமான குறைவு மில்லை. இன்று சற்று முன்னர் இப்படி நடந்தது. நான் இப்படிச் சொல்லியனுப்பினேன்- என்று நடந்த விஷயங்களை எல்லாம் கூறினான்.

இது கேட்ட பொன்னுசாமி ஆச்சரிய மடைந்து ”அப்படியா! அந்த ஆசாமி யார் தெரியுமா! அவனை இன்னாரென்று காண முடிய வில்லையா! சரி; இருக்கட்டும்.. என்று சில விஷயங்களை அவ்விருவருக்கும் சொல்லி விட்டு அவர்களுடன் தானும்

புறப்பட்டுப் பரிமளாவின் வீட்டிற்கு வந்து சேர்ந்தார். அனேக ஏற்பாடுகள் ஆயின.

இரவு மணி ஒன்பது அடித்தது, பரிமளா தன்னறையில் உட்கார்ந்திருந்தாள். அப்போது ஒரு மாது முக்காடிட்டுக்கொண்டு பரிமளவல்லியின் அறையில் நுழைந்தாள். அவளைப் பார்க்கும் போதே பரிமளாவின் மனம் ஆச்சரியமுற்று, திப்பிரமை யடைந்தது.

இலவசமாகப் புத்ததம் பெறும் புண்ணியாத்மாக்களுக்கு ஒரு மாதம் தவறினால் சந்தா செலுத்தியவர்களை விட அதிகமான கோபம் உண்டாகின்றது. பேச்சும் வலுத்து விடுகின்றது. என்ன வேடிக்கை!

## 5-வது அதிகாரம் - புதையல் கண்டெடுத்த நிதிகள்

வனவாசம் செய்வது போலச் சென்ற கேசவனின் தாயாகிய கோமதியின் மனத் துயரம் இன்ன தென்று விவரிக்க வியலாத விதம் தினே தினே பெருகிக் கொண்டே சென்று அதன் பயனாக அவளை மிக்க துன்பத்திற் கிலக்காகும்படியாகச் செய்து விட்டது. அவள் தனது இரு பெண்களையும் வைத்துக் கொண்டு படும் பாதையை விவரிக்கவே இயலாது, தன் மனக் குறையை முறையிடுவதற்கு ஓர் தக்க துணை இன்றி பரிதபிக்கின்றாள். கோமதிக்கு ஒவ்வொரு தினமும் ஒவ்வொரு நிமிடமும் அவளை யறியாத திகிலும் பயமும் சதா மனத்தில் தோன்றி வருத்திக் கொண்டே இருக்கின்றது. எந்த நிமிடத்தில் தனக்கு எந்த விதமான

ஆபத்து நேருமோ என்ற பீதி அவள் மனத்தில் அதிகரிக்க அதிகரிக்க அவள் பலம் குன்றி விட்டது, வேர்ப்புழு ஓர் செடியின் வேரைத் துளைக்க வாரம்பித்ததும் அச் செடி எப்படி பட்டுப் போய் பாழாகி விடுகிறதோ அது போல திகிலும் பீதியும் மன வருத்தமும் ஒன்று கூடி வேர் பூச்சியைப் போலக் கோமதியின் உயிரை வாட்டத் தொடங்கின. அதனால் அவள் அன்னமும் கொள்ளாது மெலிவுற்று தேக பலம் குன்றி வியாதியின் வசமானாள்.

‘வேலை செய்வதற்குச் சீவனில்லை, மானமிழப்பதற்கும் மனமில்லை’ என்கிற நோக்கத்தை யறிந்த தோட்டக்காரர்கள் பின்னும் அதிகமான கொடுமைகளைச் செய்வதோடு அடிக்கவும் தலைப்பட்டார்கள். எத்தனைத் துன்பங்களைச் செய்த போதிலும் தன்னையவர்கள் அடித்த போதிலும் கோமதி வாய் திறந்து ஏதும்

பேசுவதையே விட்டு விட்டாள். அடியைப் படும் போதெல்லாம் “ஐயோ! அம்மா!” என்று கத்தாமல் கடவுளின் திருநாமங்களையே உச்சரித்துக் கண்ணீர் வடிப்பாள். பலஹீனம் அதிகரித்ததனாலும், மனோ வேதனையினாலும், புத்திர சோகத்தினாலும் அவள் வேலை செய்ய மாட்டாது விழுந்து விட்டாள். அந்நிலைமையிலும் அவளைக் கஷ்டப் படுத்தியே வந்தார்கள்.

எந்த விஷயத்தைப் பற்றி யோசித்தாலும் சில தினத்தில் குழப்பமும் பெரும் சந்தேகமுமே உண்டாகி வேலையில் மூளையைச் செல்லவிடாது தடுக்கின்றது. அதே காரியம் பிறகு ஒரு தினம் திடீரென்று முடிந்து விடுகின்றது. எல்லாம் வேளையின் பயன்.

இவ்வித வேதனைகளைப் பல்லைக் கடித்துக் கொண்டு பொறுத்திருக்கும் கோமதியின் காலம் அத் தீவில் சில

வருஷங்கள் சென்றன. அவளுடைய பெண்கள் இருவரும் பெரியவர்களானார்கள். கோமதி படுக்கையிலேயே படுத்து விடும் நிலைமைக்கு வந்து விட்டாள். அன்னிலைமையில் அப் பெண்கள் தாயின் வேலையைச் செய்து பொருள் தேடித் தாயைக் காப்பாற்றி வந்தார்கள். கோமதியின் மூத்த மகள் பக்குவமான பாவையாக இருப்பதால் அவளையும் முன் கூறிய சனியன் பிடித்து ஆட்டத் தொடங்கியது. இந்த வேதனையைச் சகிக்கக் கூடாத அச்சிறுமி வருந்துகையில் ஒரு தினம் ஒரு கிராதகன் அப் பெண்ணை

வழிமறித்துக் கடுமையான வார்த்தைகளால் பேசி இம்சிக்க எத்தனிக்கையில் அப்பெண் தன் மானத்தைக் காப்பாற்றிக் கொள்ளும் பொருட்டு தைரியமாயும் வீரமாயும் கையிலிருந்த தோட்ட வேலை செய்யும் சிறிய இரும்பு ஆயுதம் ஒன்றினால்

அந்த துராத்மாவின் மண்டையில் ஓங்கி யடித்ததோடு அவனை நகா விடாது காலிலும் நன்றாகக் குத்திவிட்டு அவ்விடம் விட்டு ஓட்டமாக ஓடித் தன் வீட்டை படைந்தாள்.

அப்போது மாலை 6 மணி சுமாருக்கு இருக்கலாம். சூரியன் அஸ்தமித்து விட்டான். எங்கும் சிறு இருள் சூழ வாரம்பித்தது. பக்ஷி ஜாதிகளெல்லாம் தம் தம் கூடுகளில் அடைந்து கொள்ள ஆநந்தமாய்ப் பாடிக் கொண்டும், கொக்கரித்துக் கொண்டும் ஓடுகின்றன. மந்த மாருதம் அந்தமாக வீசுகின்றது. இன்னிலைமையில் அச் சிறுமி தனது கற்பைக் காத்துக் கொள்ளும் பொருட்டு அத் துட்டனை ஓங்கி அடித்து விட்டு அவன் மூர்ச்சையுற்றுக் கீழே விழுந்த வளவில் "அடேய் பாதகா! நான் ஒரு கொலை செய்யவும் அஞ்சேன். என் கற்பை இழக்க முன் வருவேன் என நினைக்காதே" என்று கூறியவாறு ஓடி

வீட்டிற்குள் புகுந்தாள்.

‘அன்யோன்யமான சினேகத்திற்கு ஆபத்தே வராது’ என்கிறார்கள் சிலர். ‘அத்தகையோரிடத்தில்தான் பேராபத்து நேரிட்டு சினேகம் சிதறி விடுகின்றது.’ என்கிறார்கள் மற்றும் சிலர். இரண்டில் எந்த வித அனுபவம் யாருக்கு இருக்கிறதோ! அதையவர்கள் கூறுவதுதான் உண்மை.

கோமதிக்கு இருமல் நோய் கண்டுவிட்டதால் இரைப்பும் மூச்சுத் திணறலும் வதைக்கின்றன. அச் சமயத்தில் பாலா வென்கிற அம்மாதாசி பெருமூச்சு விட்டுப் பதறிய வண்ணம் அங்கு ஓடி வந்து தன் தாயின் இரு கரங்களையும் பிடித்துக் கொண்டு “அம்மா! நான் கூறப்போகும் விஷயத்தைக் கேட்டுக் கலங்காதே; மனம் சிதறாதே! என் மீது வெகு நாட்களாகக் கறம் வைத்திருந்த கங்காதரனை நீ அறியாய். அவன் இன்று

என்னைப் பலாத்கரித்து என்னைக் கெடுக்க முயன்றான். நான் எனது கற்பைக் காத்துக் கொள்ளும் பொருட்டு என் கையிலிருந்த ஆயுதத்தினால் அவன் தலையிலும் காலிலும் அடித்துக் கீழே தள்ளி விட்டுவந்து விட்டேன். அவன் மண்டையில் ரத்தம் வெள்ளமாக வந்து விட்டது. நான் அவ்விடத்தில் நிற்காது ஓடி வந்துவிட்டேன்.; நான் செய்து விட்ட குற்றத்தை யாரேனும் பார்த்திருந்தால் எனக்குப் பேராபத்து சம்பவிக்கப் போகின்றது. அந்த ஆபத்துக்களை நான் திருணமாய் மதிக்கின்றேன். அந்த ஆசாமியின் உயிர் நீங்கி இருக்குமாயின் நான் தூக்கு மேடை ஏறவும் தயாராக விருக்கிறேன். என் கற்பை நான் அற்பமாக எண்ணமாட்டேன். அம்மா! என் செய்கை கடினமானதுதான்; எனினும் அதை விடக் கொடிய செய்கையைச் செய்யவந்த கள்ளனுக்கு இதுவே தக்க சிக்ஷை

என்று என் மனச்சாட்சி கூறியதால் நான் செய்தேன். என் தாயே! இதனால் எனக்கு எந்த நேரம் எத்தகைய ஆபத்து வந்தாலும் வரும். நீ கலங்காதே; கவலைப்படாதே” என்று கூறினாள்.

அவசரத்தில் சில பண்டங்கள் ஒன்றுக்கொன்று தெரியாமல் சிலர் உப்பு போடுவதற்குச் சர்க்கரையும் பாயசத்திற்கு மிளகாய்ப் பொடியும் போட்டு சமைத்து விட்டு நாசமடித்து விடுகிறார்கள்.

இந்த எதிர்பாராத சம்பவத்தைக் கேட்ட கோமதிக்கு ஒரு புறம் ஆச்சரியமும், ஒரு புறம் துக்கமும் தொண்டையை அடைத்துக் கொண்டது. அந்த விஷயங்களில் முக்கியமாகத் தான் எதைக் கவனித்துப் பேசுவது என்பதையே அறியாது தியங்கினாள். பின்னர் பாலாவை நோக்கி, “பாலா! உன் மனோ தீரத்திற்கும்

வீரத்தனமான செய்கைக்கும் மெச்சினேன். இன்னிலைமையில் உன்னை யாரேனும் வந்து கண்டு பிடித்து விடுவார்களோ! அப்படிக் கண்டு பிடித்துக் கைதியாக்கி விட்டால் நான் என்ன செய்வேன். என்னுடைய நிலைமையோ மிக்க கேவலமாகி விட்டது. நாளைக்கு நாள் பேசவும் கூடவில்லை. அத்தகைய பலஹீனமாகிக் கொண்டே வருகிறது. இது சமயம் நான் எவ்வாறு உன்னையும் பிரிந்து உயிர் வாழ்வேன்? அதற்குத்தான் நான் வருந்துகிறேன்." என்றாள்.

பாலா:- அம்மா! நீ என்ன கோழையாகப் பேசுகிறாய் + என்னுடைய விதியின் படிக்குத்தான் யாவும் முடியும். என்னைக் கண்டுதானா நீ உலகத்தில் உயிர் வாழுகிறாய்! நம்மைக் காப்பதற்குக் கடவுள் ஒருவரில்லையா! அவரை மறந்து விட்டாயா! அவரை மறந்து விட்டால் பிறகு

நாம் வாழுவதெங்ஙனம்? அம்மா! உன்னுடைய தேக நிலைமையைப் பார்த்தால் நீ கட்டாயம் பிழைப்பாய் என்று கூறுவதற்கு இடமில்லை. இந்த விஷயத்தைக் குறித்து நீயும் நானும் மனோ தைரியமா யிருக்க வேண்டியது நமது கடமை யாகிவிட்டது.. உலகத்தில் சகலமான பிராணிகளையும் படைத்தலும், காத்தலும், அழித்தலும் ஆகிய எல்லாவற்றையும் செய்யும் கர்த்தா எவனோ அவனது தாள் தொழுது போற்றுவது-தான் நாம் செய்யக் கூடிய வேலையாகும்.

அவசரத்தில் கடையில் ரூபாயை மாற்றிக் கொண்டு சில்லரை சரியாக விருக்கின்றதா என்பதையும் பார்க்காமல் ஓடி வருவதும் பிறகு கணக்குக் குறைவது கண்டு கடைக்காரனைக் கேட்டால் ‘நான் அப்போதே சரியாகக் கொடுத்து விட்டேன். நீ அவசரத்தில் எங்கு போட்டு விட்டாயோ!’ என்று அவன் கூறிவிட

நஷ்டத்தை அடைய நேருகின்றது.

இம்மைக்கும், மறுமைக்கும், மற்றெதற்கும் சாதன மனிக்கக் கூடியது அந்த தாரக நாமந்தான் என்று அன்று ஒரு புத்தகத்தில் படிக்க வில்லையா! எனக்குற்ற குற்றத்திற்குத் தண்டனை விதிக்கவோ, தூக்கு மரத்தில் தொங்கச் செய்யவோ கடவுள் திருவுள்ளப்படியேதான் நடக்கும். இவைகளுக்காக நீ சித்தம் சிதறாதே! வருந்தாதே! சதா கவலை கொள்ளாதே! உன் விஷயத்திவ் நான் கவலைப் பட்டும் ஆவதொன்றுமில்லை. கர்மாவின் வழியே காரியம் நடக்கும். ஆதலால் எல்லாவற்றிற்கும் தைரியமாக இருக்க வேண்டும். என்னுடைய செய்கையை ஒருவரும் கவனிக்கவில்லை என்று நான் எண்ணுகிறேன். ஆயினும் சொல்வதற்கில்லை. அப்படி ஏதேனும் சம்பவம் நேர்ந்தால் நீ கதறாதே; பதறாதே!” என்று பல

விதமான தேறுதல்களைக் கூறினாள்.

கோமதிக்கு மனத்திற்குள் எத்தனையோ விசனம் அழுத்தியதெனினும் பாலாவின் பொன்னுரைகளைக் கேட்டுத் தன் கவனத் தைக் கடவுள் பேரில் செலுத்தித் தியானிக்கலானாள். பாலா தினந் தோறும் தன் வேலை முடிந்ததும் விளக்கு ஏற்றி வைத்துவிட்டு லக்ஷ்மி, ஸரஸ்வதி முதலிய படங்களை வைத்துப் பூஜை செய்து பாடுகிற வழக்கம். அதே போல அன்றும் தன்னுடைய மாறுதலைக் காட்டிக் கொள்ளலாகா தென்கிற நோக்கத்துடன் படத்தருகில் பாட உட்கார்ந்தாள். அவள் சகோதரியாகிய நீலாவும் சேர்ந்து இருவரும்,

("கோரீபஜிந்துனு" என்ற மெட்டு)

வாரீஜ லோசனா! பாப விமோசனா ! மார ஜனக கோபாலா—வா

தாரக நாமா! பாரினில் எம்மை சீருடன் காக்கும் பிதாவே
நந்த குமாரனே! நவநீத சோரனே! பந்த மகற்றி யருள்வாயே
செங்கண் மாலா! மங்கை லோலா! பங்கய மலர் பொற்தாளா-
பார்த்தன் தேரோட்டிய நாதா-

அவசரத்தில் குலம், கோத்திரம், வம்சாவளிகள், குணம், பணம் முதலிய எவையும் தீர விசாரியாது சம்மந்தத்தைச் செய்த பிறகு அதிலுள்ள ஊழலைக் கண்டு கலங்கும்படியாகி விடுகின்றது.

(“சத்யவதே” என்ற மெட்டு)

1. பாண்டவநேய சகாயா! மாயா!
   ஆண்டருள் செய்திடுவாய் அன்பர் தூயா-பா

2. தேவாதி தேவா! ஸ்ரீ வாஸு தேவா! பாவன

நாம ஶ்ரீ பரந்தாமா!

சேவடி தந்தின்பம் சேர்க்திடச் செய்வாய்

3, பார்த்தனுக்குரைத்த பண்புள்ள கீதையில்

“மார்கழி மதி யான்” என்று இயம்பிய

மாதவனே பஜனைக் கிரங்கிவோய்

4. உன்னரும் மக்கட்கு உணர்ச்சி யளித்திட
இன்னமும் தாமதம் ஏற்குமோ கண்ணா!
பன்னக சயனா! பரிவுடன் வா வா-

5. தேசம் செழித்திட கேசவ நின் திரு
மாசற்ற நோக்கருள்வாய் மனோல்லாசா!
பூசுரர் போற்றிடும் புவனப் பிரகாசா !

என்கிற இரண்டு பாடல்களையும் பாடினார்கள். கோமதி இச்சங்கீத ஆனந்தத்தினால் மிக்க மகிழ்ச்சி யடைந்தாள். பிறகு பாலா “எந்த சமயத்தில் யார் வருவார்களோ!” என்கிற பெரும்

குழப்பத்துடனேயே ஒவ்வோர் நிமிடமும் எதிர் பார்த்தாள். மனம் அலைந்து கொண்டே இருந்தது. இரவும் சமீபித்தது. அன்றிரவு நித்திரை என்பதே கொள்ளவில்லை, ஏதேதோ பலவிதமான எண்ணத்துடன் தத்தளித்தாள். ஒருவரும் வரவில்லை. ஒரு விஷயமும் தெரியவில்லை. ஆகையினால் இந்த சம்பவம் அறியாதவாறே மறைந்து விட்டதாகத் தாயும் மகளும் எண்ணினார்கள்.

உதயமாயிற்று. பாலா வழக்கம் போல வேலைக்குச் செல்லும் நேரம் சமீபித்தது. வேலைக்குச் சென்ற விடத்தில் என்ன விஷயம் காதில் விழுமோ! எவ்விதமான செய்தி எட்டுமோ! என்கிற பெரும் பீதியோடும் கலக்கத்தோடும் அவள் சென்றாள். தன் மனத்திலுள்ள எண்ணங்களினால் முகத்தில் ஏதேனும் மாறுதல் தெரிந்து விடப் போகிறதே என்கிற கவலையினால் தன்னால்

கூடியவரையில் ஒரு சிறு மாறுதலையும் காட்டிக் கொள்ளாது தன் வேலையைச் செய்யப் புகுந்தாள்.

அவசரத்தில் பார்க்காமல் காய் கறிகளை வாங்கி வந்து விடுகின்றது, பிறகு அதிலுள்ள சொத்தல், புழுத்தல், முத்தல், விரை முதலியவற்றைக் கண்டு வருந்துவது.

முதல் நாள் தன்னால் அடியுண்டவன் அன்று வேலைக்கு வராமையைக் கண்டு மனத்திற்குள்ளேயே எண்ணறியாத கலக்கமும் விசனமும் உண்டாகியது. இவ் விஷயத்தைப் பிறரைக் கேட்கவும் அஞ்சினாள். அப்படியே தன் வேலைகளை முடித்துக் கொண்டு வீடு வந்தாள். மகளைப் பார்த்த உடன் கோமதி “அம்மா! உன்னுடைய செய்கை அப்படியே மறைந்து விட்டதா! ஏதேனும் விசேஷ முண்டா?” என்று கேட்டாள்.

இதுகேட்ட பாலா “அம்மா! இது பரியந்தம் ஒருவித தகவலும் தெரியவில்லை. எவ்விதமான பேச்சும் பிறக்க வில்லை. அந்த ஆசாமியையே காணவில்லை. காரணம் என்னவோ கடவுளுக்குத் தான் தெரியும். நானும் இது விஷயமாக யாருடனும் எதுவும் பேசவோ, கேட்கவோ இல்லை.’ இனி போகப் போகத்தான் தெரியும்” என்றாள். பிறகு ஒருவித விசேஷமுமின்றி அமைதியாக அவ்விரவு கழிந்தது,

மறுதினம் உதயமாயிற்று. பாலா வேலைக்குப் புறப்படு முன்னர் ஓர் கிழவி அங்கு வந்து ஒரு கடிதத்தைக் கொடுத்து “அம்மா! இக் கடிதத்தைத் தம்மிடம் கொடுக்கும்படியாக கங்காதரன் கூறினார்.” என்று கொடுத்துவிட்டு உடனே சென்றாள். இதைக் கேட்ட தும் பாலாவுக்குக் குலை நடுக்கம் எடுத்துக் கொண்டது, தனக்கு

ஏதோ ஆபத்து உதயமாகி விட்டதாகவே அவள் மனத்தில் தீர்மானமாகத் தெரிந்து விட்டது. அக் கடிதத்தைப் பிரித்துப் படிக்கவும் நடுங்கினாள். அவளால் கூடுமான தைரியம் செய்து கொண்டு கடிதத்தைப் பிரித்துப் பார்த்தாள்.

அவசரத்தில் குழந்தையை தடார் புடார் என்று புடைத்து விட்டு அந்த உதை தாங்காது குழந்தை ஜ்வரத்துடன் படுத்த பிறகு வருந்திப் பயன் யாது?

"பாலம்மாளுக்கு :

இக் கடிதம் கண்ட தக்ஷணம் இதிலுள்ள விலாசத்திற்கு உடனே வர வேண்டியது. அங்ஙனம் தவறினால் பேராபத்து நேருவது நிச்சயம். போலீஸ் பக்ஷிகள் வட்டமிட்டுக் கொண்டிருப்பதை மறக்க வேண்டாம். உடனே வரவும்.

கங்காதரன்.”

அக் கடிதத்தைப் படித்ததும், அவளுடைய திகிலும், குழப்பமும் முன்னிலும் நூறு மடங்கு அதிகரித்து விட்டன. அவளுடைய தலை சுழலுகின்றது. தான் செய்துவிட்ட காரியத்தின் பலனாகிய சூரியன் தன் கண்ணெதிரில் பிரகாசிப்பதாக நினைத்து விட்டாள். அவளுடைய பரம சங்கடமான நிலைமையோடு தன் தாயாரருகில் வந்து கண்ணீர் பெருகியவாறு கடிதத்திலுள்ள விஷயத்தைத் தெரிவித்தாள்.

இது கேட்ட கோமதி மிக்க விசனத்தை யடைந்து, “ஹா! பாலா! என்னமோ பெரிய ஆபத்து வந்து விட்டதாகவே என் மனமும் கூறுகின்றதே! என்ன செய்வேன்? எவ்விதமாக முடியுமென்று எனக்குத் தெரியவில்லையே! ஐயோ! என்ன செய்வேன்! கண்ணே! நீ

தயங்காதே ! இக் கடிதத்தை தீயிட்டுப் பொசுக்கிவிட்டுப் பேசாமலிருந்துவிடு. விஷயமே அறியாதவள்போல நீ உன் வேலைக்குச் சென்றுவிடு, இவ்விதம் செய்தால் என்ன?” என்று வெகு அன்போடு கேட்டாள்.

பாலா:- அம்மா! என்ன இது இவ்விதம் பேசுகின்றாய்! கடவுளுக்குப் பொதுவாக நான் நடந்து கொள்ள வேண்டாமா! ஏன் பயப்படுகின்றாய் பயப்படாதே! என் விஷயத்தில் அந்த மனிதனும் பெரும் குற்றவாளி; என் கற்பைக் காத்துக் கொள்ள நான் செய்தது சரி எனினும் அதுவும் அவனுக்குக் குற்றமாகத் தோன்றலாம். வருவது வழியில் தங்கி விடாது. நான் இன்று பயந்து கொண்டு போகாது வீட்டிற்குள்ளேயே புகுந்து கொண்டிருப்பின் என்னை நாளை போலீஸ் காரர்கள் வந்து வாரண்டுடன்

அழைத்துச் சென்றால் அப்போது என்ன செய்வது? அது மட்டும் சரியானதா! ஆகையினால் நீ சற்றும் கவலைப்படாதே!

அவசரத்தின் வேகத்தினால் முக்கியமான சாமானை வைத்து விட்டு மறந்து செல்வதால் அங்கு சென்ற பிறகு மீண்டும் ஒடி வந்து அதை[ எடுத்துச் செல்ல நேருகின்றது.

அம்மா! உயிருடன் என்னருமை கேசவனை இழந்தோம். மூத்த அண்ணனையும் பிரிந்தோம். அவ்விருவர்களை இழந்த உனக்கு என்னைப்பற்றிக் கவலை ஏன்? என் விதி முடிவின்படி என்னையும் நடத்து. இதற்கெல்லாம் ஏன் வருத்தப்படுகிறாய்? நான் கட்டாயம் சென்று வருகிறேன். எதற்கும் பயப்படவேண்டாம். விதியை வெல்ல எவராலுமாகாது; தைரியமாக இரு. நான் சென்று வருகிறேன்." என்று கூறித் தைரியம் சொல்விவிட்டு அவ்விடம் விட்டு வெகு

துணிகரமாயும் பரபரப்புடனும் கடிதத்தில் கண்டுள்ள விலாசத்திற்குச் சென்றாள்.

அங்கு கடிதம் கொண்டு கொடுத்த கிழவியே வாசலிலிருந்தாள். “வாருங்கள்.” என்று மரியாதையாகவே அழைத்துக் கொண்டு சென்று உள்ளே படுத்திருக்கும் ஆசாமியிடத்தில் பாலாவின் வருகையைத் தெரிவித்தாள். உடனே அவன் “இங்கே யனுப்பிவிட்டு வெளிக்கதவைத் தாளிடு” என்று உத்தரவு செய்தான். இவ்வார்த்தைகள் நமது பெண்மணியின் செவியில் விழுந்ததும் அவள் குலை ஈடுங்கியது. “ஹா! ஏதோ மோசம் வந்துவிட்டதே!” என்று வயிற்றில் இடி இடித்தது. அவ்வறையின் கதவருகிலேயே பாலா நின்று “கதவை ஏன் தாளிடவேண்டும்? நான் இவ்விடத்திலேயே நின்று பேசுகிறேன். என்னை வரவழைத்த காரணம் யாது? அதை இப்படியே கூறலாம்.” என்று முடுக்காகவே

கேட்டாள்.

கங்காதரன்.- அம்மா! என் தாயே! பாலா! இதோ இப்படி என்னருகில் வா! உன் திருமுகத்தை என் கண் முன்பு தாராளமாகக் காட்டு. உன் முகத்தில் பயக்குறியும் கவலைத் தோற்றமும் ஜ்வலிக்கின்றது. அப்படியெல்லாம் கவலைப்படாதே! நீ குற்றமற்ற குணவதி, பழியற்ற பாம சிரேஷ்டை. கற்பைக்காத்த காரிகை. என்னுடைய தீய வினையை எனக்கறிவித்த தெய்வப்பெண்; என் கண்ணே! பாலா!" என்று ஏதேதோ சொல்லிக்கொண்டே மெல்ல படுக்கையை விட்டு எழுந்து நடக்கமாட்டாது தத்தித்திணறி நடந்துகொண்டே பாலா அருகில் வந்து அவள் காத்தைப்பற்ற முயன்றான்.

தூங்குகின்றவர்களைப் பார்த்தால் விழித்திருப்பவர்களுக்குத் தூக்கம் தானாக வந்துவிடுகிறதாம். விழித்தவர்களை

தூங்குகின்றவர்கள் பார்த்தாலன்றோ! அவ்வாறு பார்த்தாலும் விழிக்கமாட்டேனென்கிறதாம்.

இச்செய்கையை அறிந்த பாலா “ஐயா! இதற்குத்தானா என்னை அவ்வளவு பிகுவுடன் அழைத்தீர்; உம்முடைய மோச எண்ணம் இன்னும் மனத்தைவிட்டு அகலவில்லை போலும். சேச்சே! என் கரத்தைப் பற்ற வரும் வெட்கம் கெட்டவரே! விலகும் தூர! என்னுடைய கரம் இவ்வல்ப மதியினருக்கு இலகுவில் கிடைக்கு மென்று நினைக்க வேண்டாம். நான் சென்று வருகிறேன். இதுகாறும் சொல்லிய வார்த்தை என்ன! ‘கண்ணே! பெண்ணே!’ என்கிற குலாவல் என்ன? உமக்கு மூளை கலங்கி விட்டதாகத்தான் தோன்றுகின்றது. என்னைச் சுற்றி போலீஸ் பக்ஷிகள் வட்டமிடுவதாக மிரட்டினீரே! உம்முடைய போலீஸ் பக்ஷிகளே என்னைக்

கொத்தித் தின்னட்டும். நான் அத்தகைய பக்ஷிகளுக்கு இரையாகிறேன். ஆனால் காமாந்தகாரமான பெருங்கடலில் மூழ்கித் தத்தளிக்கும் உம்முடைய களங்கமான கரத்திற்கு நான் அகப்படமாட்டேன். சத்தியம்." என்று கூறி வெளியே செல்ல முயன்றாள்.

இதற்குள் அம்மனிதன் "கண்மணி! நீ கூறுவதன் உண்மையை நான் அறிந்தேன். உன்னுடைய பாரமார்த்தீகத்தைக் கண்டு நான் உள்ளம் பூரிக்கின்றேன். மகா பாவி, சண்டாளன், கொடிய பாதகனாகிய நான் உன் கரத்தைத் தீண்டுதற்கு அருகதை இல்லை. இது சத்தியமே! உண்மையே! என்னிலைமை என்னையே வெட்கித் தலைகுனியச் செய்கின்றது, எனக்கு புத்தி கற்பித்த உத்தமியே! பயப்படாதே; என்னருகில் வா!....வா! ...வா!... என் கண்ணே! .....என் கரத்திற்கு விருந்தளி....வா.... அருகில்

வா. இப்பாவியின் உதிரத்தில்தான் நீ பிறந்தாய்! ....ஐயோ!...... எனது நாவால் கூறவும் வெட்கமாக விருக்கிறது... உன்னைப் பெற்ற தந்தையே உன் மீது பித்தங்கொண்டு சித்தம் சிதறியதை எண்ண என் ஜென்மம் கூசுகின்றதே! என் செல்வியே! என் பாலாம்பிகையே! என் கண்ணே! வா; என்னருகில் வா! உன் தந்தையை இனி உதாசீனம் செய்யாதே!” என்று கூறிக்கொண்டே பாலாவின் இரு கரங்களையும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டான்.

நவரஸங்களும் பொருந்தி நடிக்கும் காடகங்களைப் பார்த்தால் பிரம்மாகத்தமாக இருக்கிறது. நடிகர்களின் திறமையும் ரூபலாவண்ய அமைப்பும் ஒன்று கூடிவிட்டால் வெகு அற்புதமாக நாடகம் அமைந்துவிடுகின்றது.

இந்த அதியத்புதமான வார்த்தைகளைக் கேட்ட பாலாவின் நிலைமை திடுக்கிட்டு வியப்பே வடிவமாகிவிட்டது. அந்த மனிதனை ஏற இறங்கப் பலமுறை பார்த்தாள். தன் கையைத் திமிறிக் கொண்டாள். அந்த வார்த்தையை நம்பாது தவிக்கின்றாள். அவளுடைய அப்போதிய நிலைமையை ஊகித்தறிவதே வெகு பிரயாசையாகிவிட்டது. அவள் வெகு தைரியத்துடன் “ஐயா! இதென்ன ஆச்சரியம்! நீர் சொல்வதெல்லாம் எனக்கு வியப்பாயும் வேடிக்கையாயும் இருக்கிறதே! நீரா என் தந்தை! உமது உதிரத்திலா நான் பிறந்தேன்?....... இத்தகைய வார்த்தைகளால் பசப்பின், தந்தையென்று தளுக்குக் காட்டிச் சிந்தையின் எண்ணத்தை முடித்துக் கொள்ளலாமென்கிற தீர்மானமே! அங்ஙனம் ஏன் இருத்தல் கூடாது? திடீரென்று உம்மை நான் தந்தை என்று நம்புதல் எப்படி

சாத்யமாகும். இந்தக் கட்டுக்கதையை நான் ஒருபோதும் ஒப்ப முடியாது," என்றாள்.

கங்காதரன்.- -என் கண்ணே! உன் மனோ உறுதியையும் தைரியமான மொழிகளையும் காணக் காண எனக்குண்டாகும் மகிழ்ச்சிக்கோர் எல்லை இல்லை. நீ சொல்வது முற்றும் உண்மையே! நீ நம்புவது சாத்யமற்றதேயாகும். காமப் பார்வையோடும், காம எண்ணத்தோடும் நோக்கிய பாவி நான்தான். ஆயினும் பின்னர் எனது அவ்வெண்ணங்கள் தீக்கிரையாயின, நான் தற்போது அந்த களங்கத்தினின்று களையப்பெற்றுள்ளேன். உன்னை ஈன்ற தந்தையாக விருக்கிறேன்.

பிறர் வீட்டில் புசிப்பதற்கு சகஜமாக யாருக்கும் சங்கோஜம் உண்டாவது இயல்பு. பிறவியிலேயே சங்கோஜம் உள்ளவர்கள் அன்னியர் வீட்டில் புசிக்க நேர்ந்தால்

கேட்கவேண்டாம்; அன்று அவர்கள் பட்டினி என்றுதான் நினைக்கவேண்டும்.

என் கண்ணே! பாலா! கோமதி சுகமா! நீலா சுகமா! கேசவனும் மருதப்பாவும் சுகமா! என் விதி என்னை எவ்வெவ்விதம் ஆட்டியது என்பதை நீ கேட்டால் நகைப்பாய்; பெற்ற மகளைப் பெண்டாள எண்ணியத் துரோகியின் மற்றைய செய்கைகளைப்பற்றி நான் கூறவேண்டுவதில்லை. என்னைப்போன்ற கசடன் உலகத்தில் இருக்கமாட்டான் என்பது சத்தியம். என் செல்வமே! உன் திரு முகத்தை நான் காமப் பார்வையினால்தான் முதல் முதல் நோக்கினேன். குழந்தைப் பருவத்தில் என் விதி என்னை ஓர் தாசிக்கு அடிமையாக்கியதால் அவள் முகமன்னியில் மற்றைய முகம் பார்த்த தில்லை. உங்களைப் பெற்ற பாசமும் அக்காலைமுதல் இக்காலைவரை மறைந்திருந்தது. படுபாவி

நான் சொல்வதை நீ நம்பாமல் விழிப்பதை உன் முகங் காட்டுகின்றது. பெற்ற மகளைப் பெண்டாள நினைத்த சண்டாளனைக் கண்டாலும் பாதகமே; இதை உன் இதயம் உனக்கு எடுத்துக் கூறுகின்றது. என்னையும் குத்திக் காட்டுகின்றது. என் கண்ணே! பாலா!

என்னை நீ ஒரு நாளாயினும் நேரில் நன்றாகப் பார்த்ததில்லையாதலால் என்னுருவமே உனக்குத் தெரியவில்லை. உன் அன்னை என்னைப் பார்த்தால் தெரிந்துகொள்வாள்: ஹா!...... அந்த உத்தமியின் முகத்தில் எவ்விதம் நான் வெட்கமின்றி விழிப்பேன்?.... ஐயோர் என் முகத்தைக் காணவும் அவள் மனங் கூசுவாளே! கண்மணீ! பாலா! உன் தாயை நான் கடைசீமுறை விட்டுச் செல்கையில் நான்கு மாதம் கர்ப்பவதியாகவிருந்தாளே! என்ன சிசு பிறந்தது. அது உயிருடன் இருக்கிறதா!

உன் மூத்த அண்ணன் எங்கே இருக்கிறான்?” என்று ஏதேதோ பேசுவதைக்கேட்ட பாலா வின் மனம் இன்னதென்று விவரம் அறியாது தத்தளித்தது.

பழங்காலத்து விஷயங்களை நினைத்துக்கொண்டு படுத்திருப்பது ஒருவித ஆநந்தம். நிகழ்காலத்தை நினைப்பது ஓர் சந்தோஷம். வருங்காலத்து நிகழ்ச்சிகளை எண்ணி மனோதர்மமாகக் கோட்டை கட்டுவது எல்லாவற்றையும்விட இன்பக்கனவாகின்றது.

தான் என்ன விதமான பதில் சொல்வதென்று யோசித்தாள். பிறகு அம்மனிதனை நோக்கி “ஐயா! உம்முடைய முந்திய செய்கையின் அம்பே என் இதயத்தைத் துளைத்துப் பதிந்துவிட்டதால் தாங்கள் இப்போது சொல்வது எதுவும் என் மனத்தில் பதியவில்லை, நம்பிக்கையும் கொடுக்கவில்லை. நீர் என் பிதாவா, அல்லவா

என்பதை நானே நிர்ணயிக்கவும் என்னால் முடியாது. உமது வார்த்தையைக் கொண்டு தீர்மானிக்கவும் எனக்கு நம்பிக்கை இல்லை. ஆதலால் வீணான கால தாமதம் செய்ய வேண்டாம். நீர் என்னோடு என் தாயின் முன்பு வந்த.பிறகு என் தாய் தீர்மானிக்கின்றபடி நான் நடக்கத் தயாராக விருக்கிறேன். தயவு செய்து நீர் இப்போதே வாரும்" என்று வெகு முடுக்காயும் மனத்தில் பதியும்படியாயும் கூறினாள்.

அம்மனிதன் அதற்கு இசைந்தான்; எனினும் அவனுடைய மனத்தில் ஒரு புறம் அபாரமான வெட்கம் வந்து மூடிவிட்டது. "என் செல்வீ! உன் கையின் ஆயுதத்தினால் என் மண்டையில் நீ தைரியமாய் அடித்ததனால் என் தலையிலிருந்த துர்ச் செய்கைக்கு உதவியான திமிர் படைத்த ரத்தம் பெரும் பாகமும் கொட்டிவிட் டது, பிறகு எனக்கு

ஓர் பிரகாசமான புத்தியும், பழைய பாசமும், அறிவும் தோன்றின. அதனால் நான் இழந்த மக்கள் மனைவியை மீண்டும் அடைந்தேன். கண்ணே! உன் வார்த்தைக்கு மறு பேச்சில்லை. நான் அப்படியே வருகிறேன். உன் தாயார் என்னைக் கண்டு வெறுக்காமலிருப்பாளா! கட்டாயம் வெறுப்பாள்... அவ்வுத்தமியின் நற்குணங்கள் அறிந்து அனுபவிக்கப் பாவி நான் பாக்யம் செய்யவில்லை. அவள் என்னை: எட்டி உதைத்தாலும் நான் அதை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். கிளம்பு; போகலாம்.' என்றான்.

உடனே ஓர் வண்டியை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு அதில் பாலாவும் கங்காதரனும் ஏறிக் கொண்டார்கள். வண்டியும் கிளம்பியது. பாலாவுக்கு மட்டும் மனத்திற்குள்ளேயே பயந்தான். தன் வீடு சேருகிற பரியந்தம் வாய் திறவாது

மவுனமாகவே சென்றான். வண்டியும் பாலாவின் வீட்டை யடைந்தது. பாலா இறங்கி அவனையும் அழைத்துக் கொண்டு நேரே தன் தாயிருந்தவிடத்திற்குச் சென்று “அம்மா! இந்த விசித்திரமான விஷயத்தில் நீ தான் தீர்ப்பு அளிக்க வேண்டும். இதனால் மன அதிர்ச்சி அடையாதே. இதோ வரும் இம் மனிதர் யார் என்று கவனித்துப் பார்.” என்று கூறிக் கங்காதரனைக் காட்டினாள்.

உதயமானதும் குழந்தை தன் மழலைச் சொற்களுடன் வந்து எழுப்பும் ஆனந்தத்திற்கு நிகர் வேறெதுவுமே இல்லை எனலாம். அதன் முகத்தில் விழித்தவாறு, அதன் புன்சிரிப்பை நோக்கியவாறு எழுத்து அக்குழந்தையை முத்தமிட்டுப் பின் வெளியில் வந்தால் பண்ணிய பாவமும் தீரும்.

எதிர்பாராத இவ் வார்த்தைகளைக் கேட்ட கோமதி மெல்ல எழுந்து உட்கார்ந்து வந்த

மனிதனை உற்றுக் கவளித்தாள். அதற்குள் அம் மனிதன் “ஹா!....கோமதி! சண்டாளன் என்னை உனக்குத் தெரியவில்லையா!” என்று கூறிக்கொண்டே கோமதியின் இரு கரங்களையும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு கோவென்று கதறினான். கோமதிக்கு அவனை தூரவிருந்து பார்க்கையிலேயே தன் புருஷனின் ஜாடையாக விருப்பதைக் கண்டு ப்ரமித்தவளவில் இவ்விதம் அவனே கூறிக் கொண்டு அருகில் வந்ததும் உண்மையில் கோமதிக்கு ஒன்றுமே தோன்றாது மன அதிர்ச்சியினால் மௌனமானாள்.

ஐந்து நிமிடநேரம் எவ்விதமான சந்தடியுமின்றி மூச்சுப் பேச்சற்று அவ்விடம் நிசப்தமாக விருந்தது. பிறகு கோமதி சற்று தெளிவுற்று, “தங்கள் நினைவில் இவ்வனாதைப் பரதேசிகள் இப் பூவுலகில் இருக்கிறார்கள் என்பது உதயமாயிற்றா!

அன்றி இதுவும் வேஷந்தானா! இதென்ன முகத்தில் தழும்புகள் இருக்கின்றனவே!.... வேசி மோகமும்...குடியின் கோரமும் தங்களை விட்டதா! என்ன ஆச்சரியம்.... பெற்ற மகளையா பெண்டாள நினைத்தீர்கள். ஐயோ! கலிகாலக் கொடுமையே!" என்று கூறி முடிப்பதற்குள் பாலா "அம்மா! இவரா என் பிதா! உண்மையில் என் பிதா தானா! இத்தகைய காமுகனாயும் குடியனாயுமுள்ள இவர் உதிரத்திலா நான் ஜெனித்தேன்!" என்று வியப்பே வடிவமாக நின்றாள்.

ஒரு காரியத்தைச் செய்ய ஆரம்பித்தால் அதை உடனே தடங்கலின்றி செய்தால் அக்காரியம் சீர்பெறும்; அதற்கு ஆரம்பத்திலேயே ஆயிரம் தடங்கல் களும் "நீதான் செய்; நீதான் செய்". என்கிற போட்டியும் ஏற்பட்டுவிட் டால் காரியம் எங்ஙனம் நடைபெறும்?

கங்காதரன்:- என்னுடைய கெடுமதியின் கொடுமையினால் நான் செய்த தீங்கிற்கு என்னை நீங்கள் என்ன சொன்ன போதிலும் நான் ஏற்றுக் கொள்ளத் தயாராக விருக்கிறேன். என்னுடைய பிழைப்பின் கேட்டிற்கு இதுமட்டுமல்ல; இன்னும் எதை வேண்டுமானாலும் கூறுவதற்கு இடமுண்டு. கோமதி! என்னைப் பிடித்து ஆட்டிய இரண்டு பைசாசங்களும் முன்பே என்னை விட்டு ஒழிந்தன. ஆனால் என்னுள் அவிவேகமாக நிறைந்து கிடந்த சிற்றின்பப் பேய் மட்டும் என்னரிய புதல்வியின் கை வாளினால் ஒழிந்தது. இனி நான் ஓர் புனிதன்தான். எனக்குற்ற இச் சம்பவத்தினால் புத்துயிர் பெற்றவனானேன்...

கோமதீ!...என் கண்ணே! பாலா!.... செல்வி!. நீலா!.... நான் இக் கதியை அடைந்ததற்குக் காரணமும் அந்த துராத்மா

வேசியின் உறவேயாம். என்னை நல்வழிப் படச் செய்ததும் அவ்வேசி உறவேயாம். மகா கொடிய பாதகத்தில், காள கோடி சர்ப்பத்தின் மத்தியில் நான் இருப்பதை யறியாது பேராநந்த சுக-போகத்திலிருப்பதாக மனமகிழ்ந்து அக்கினி சாக்ஷியாக மணந்த மனைவி-யையும் நான் பெற்ற மக்களையும் துறந்தேன். அவ்வேசியுடன் ஊரை விட்டுச் சென்றேன்.அவள் இழுத்துச் சென்ற விட மெல்லாம் நாய் போல லோல் பட்டேன். சில வருடங்கள் அம் மாதிரியாகக் கழிந்தன. அந்த வேசிக் கழுதை மற்றும் பலருடன் நட்பு கொண்டு என்னை அலக்ஷியம் செய்து விலக்கினாள், நான் அவள்பால் வைத்திருந்த ப்ரியத்தினால் வேலைக்காரனைப்போல வேனும் வீட்டிலேயே இருப்பதாகத் தீர்மானித்தேன். அந்த வேசியினுடைய மற்ற சினேகிதர்களுக்குள் பலத்த சண்டை

ஏற்பட்டது.

ஒரு தினம் காலையில் அவ்வேசி குத்தப் பட்டுக் கொலையுண்டு கிடந்தாள். இதைப் பார்த்து நான் நடுக்கலுற்றேன் அதே சமயம் அவளுடைய சினேகிதன் அங்கு வந்து தான் ஏதுமறியாதவன் போல அந்த கோரக் கொலையைக் கண்டு திடுக்கிட்டு “அடேய் எங்களுடன் அவள் சினேகமாக விருக்கிறாள் என்கிற ஆத்திரத்தினால் நீதான் இக் கொலையைச் செய்து விட்டாய்! உன்னையின்றி வேறு யாரும் இக் காரியம் செய்யமாட்டார்கள். இப்போதே உன்னை. போலீஸாரிடம் பிடித்துத் தருகிறேன்” என்றான்.

எங்கேனும் செல்வதற்குப் புறப்படுகையில்தான் சிலருக்கு சண்டையும், சச்சரவும், ஆக்ஷேபனை சமாதானங்களும், கோப தாபங்களும் உண்டாகி விடுகின்றன.

இந்த தடபுடிலில் சென்றவிடத்தில் காரியமும் மிஞ்சிவிடுகின்றது. கண்காட்சியாயின் பாதி கடந்துவிடுகின்றது.

இது கேட்ட எனக்குப் பெருத்த அதிர்ச்சியும் ஆவேசமும் உண்டாகி விட்டது. அவனுக்கும் எனக்கும் பலத்த சச்சரவும் சண்டையும் நடந்தது. நான் அவனை அடித்துப் போட்டுவிட்டு அந்த நிமிடமே அவ்விடத்தை விட்டு ஓடோடியும் வந்து விட்டேன். குற்றமோ கொலைக் குற்றம். என்னை எப்படியும் போலீஸார் கண்டு பிடித்து விடுவார்களே என்கிற ஓர் யோசனையினால் நான் என் முகம் அடையாளம் தெரியாமலிருக்கும் பொருட்டு நெருப்பினால் முகத்தைச் சுட்டு இவ் வடுக்களுண்டாக்கிக் கொண்டேன். நான் வெகு தூரம் சென்று ஓர் ஊரில் தங்கினேன். அங்கு ஓர் கங்காணி சில பிரயாணிகளை அழைத்துக் கொண்டு இத்

தீவுக்கு வருவதற்குத் தயாராக விருந்ததைக் கண்டு நானும் என் பெயரை கங்காதரன் என்று மாற்றிக்கொண்டு அக் குற்றத்திற்குப் பாத்திரமாகாது தப்பித்துக் கொள்ள இங்கு வந்தேன். இங்கு நான் வந்து ஒரு மாத காலந்தானாகிறது" என்று கூறி முடிப்பதற்குள் கோமதி "ஐயோ! மோசம் வந்து விட்டதா! பாழும் குடியும், வேசியும் மகா கொடிது விஷம் என்பதை அறிந்தும் அதிலிறங்கி பெரும் பாபத்திற்கு ஆளாகியதோடு கொலைக் குற்றமும் சாற்றப்பட்டீரா!.... ஐயோ! கொலையாளி என்.ற பெயருடனா இங்கு ஒளிந்து வருகிறீர் ?" என்று கூறிச் செயலற்று விட்டாள்.

கங்காதரனுக்கோ இன்னதென்று தெரியாதவிதமான துக்கம் தொண்டையை அடைக்கின்றது. கோமதியின் இரு கரங்களையும் பிடித்துக் கொண்டு, "என்

கோமதீ ! உண்மையில் நான் ஒருவித குற்றமும் செய்தவனன்று. நான் கடைசீப் பாகமாகிய கொலையில் சம்மந்தப் பட்டவனேயன்று, கடவுள் மீது ஆணையாக நான் கொலை யாளியல்ல. என்மீது வீணான பழிவந்து தாக்கிவிடப் போகின்றதே என்கிற எண்ணத்தினால் நான் இந்த பக்கம் வந்துவிட்டேன். நேரே உங்களிடம் செல்லவும் எண்ணினேன்.

சில நாடகங்களுக்குச் சென்றால் அக்காடகத்தைப்பற்றிய கதை முழுதும் கடப்பதில்லை; நாடகத்திற்கு முக்கிய லக்ஷணமான நடிக்குக் திறமையோ முழு தும் பூஜயம் போட்டா போட்டி பாட்டுக் கச்சேரியாகவே முடிந்துவிடுகின் ற்து. இதற்கு நாடகம் என்ற பெயர் எதனாலே?

நீங்கள் எங்கே இருக்கி றீர்கள், என்ன செய்கிறீர்கள் என்ற தகவல் ஒன்றுமே தெரிய

வில்லை. அது சமயம் விகாரித்தறிவதற்கும் நேரமில்லை. நிலைமையோ பகைவரின் கத்தி முனையில் இருந்ததால் நான் அது காலை ஊரைவிட்டு வெளி யேறுவது தான் உசிதம் என்று தோன்றியதால் நான் உடனே இங்கு வந்து வேலைக்கு ஒத்துக் கொண்டேன். ஒரு மாதமாக நான் இங்கு வேலை செய்தும் நீங்கள் இங்கிருப்பதை நான் அறியவில்லை. ஆனால் நான் கொலைக் குற்றம் என்ற ஒரு பெரிய பட்டத்தோடு வந்திருப்பினும் என்னை இதுகாறும் அழுத்திக் கொண்டிருந்த சிற்றின்பப்பித்து என்னை விட்டு அகலாதிருந்ததால் நான் பெற்ற சிறுமி என்கிற வித்யாசமும் தெரியாமல் காமத்துக்குக் கண்ணில்லை என்கிற பழமொழிப்படிக்கு என்னைச் செய்துவிட்டது.

பார்ப்பதற்கு வெகு சிறியவளாக விருந்தபோதிலும் என்னிடம் அவள் பேசிய

பேச்சும், காட்டிய வீரமும், செய்த சூரச் செய்கையும் என்னையே திடுக்கிடச் செய்தது. மகா கொடிய காமுகனாகிய என்னுள்ளத்திலேயே இவ்வீர நங்கையின் செய்கை மிக்க மகிழ்ச்சியையும் என்னையறியாத ஓர் உணர்ச்சியையும் கொடுத்தது. நான் அந்த காயத்துடன் வீட்டிற்குச் சென்றேன். கைமருந்து களையே போட்டுக் கட்டு கட்டிக்கொண்டேன். அன்று அதிக நோய் தெரியவில்லை; எனினும் ரத்தம் பெரும்பாகமாகச் சென்றதால் களைப்பு மேலிட்டுவிட்டது. கால் நடக்கக்கூடவில்லை. என்னையறியாத மயக்கம் வந்துவிட்டதால் படுத்துவிட்டேன்.

இரவு முற்றும் அவ்வீரப் பெண்மணியின் உருவமும், அவள் சொல்லிய மொழிகளும், அவள் காட்டிய தீரச்செயலும் என் கண் முன்பு தோன்றி நாடகமாடிக்கொண்டே

இருந்தன. இந்த சிற்றின்பப் பேயை ஒட்டுதற்கே அச்சிற்றிடை மாதரசி தோன்றினாள் என்று என் மனத்தில் பட்டுவிட்டது. அத்தகைய நாரீமணி யார்? அவனைக் கண்டுபிடிக்க வேண்டுமென்ற மனவெழுச்சியும் உண்டாகியது. உடனே நான் அதை எவ்விதமாயினும் அறிவதென்கிற தீர்மானங்கொண்டேன். இரவு தொலையப் போகின்றதா! என்று எதிர் பார்த்து அதைத் தொலைத்தேன்.

நாம் யாரிடத்தில் ஒரு விஷயத்தைப் பற்றிப் பேசுவதில் யாதொரு குணமுமில்லை என்று நினைக்கின்றோமோ அவர்களாலேயே அக்காரியத்திற்கு உதவி சற்றும் எதிர்பாராவிதமாகக் கிடைத்துவிடுகின்றது.

நேற்று பொழுது விடிந்தது. எனக்கு இக்காயங்களின் வலி அதிகமாய்விட்டது. கூடியவரையில் பொறுத்தும் நடக்கக்கூட

வில்லை. பிறகு இரவு வரையில் பொறுத்தேன். தடுக்கி விழுந்து அடி பட்டதாகவும் லீவு வேண்டுமென்றும் எஜமானுக்கு எழுதியனுப்பினேன். நான் எழுதியது உண்மையாயல்லவா! என்று பார்ப்பதற்கு ஓர் கங்காணி வந்தான் அவன் வெகு நேரம் பேசிக்கொண்டிருந்தான். அவனிடத்தில் பேசும்போது வார்த்தைப் பராக்கில் பாலா விஷயத்தைப்பற்றிக் கேட்டேன். அவன் உங்கள் சகலமான வரலாற்றையும் கூறினான்.

அந்தோ! அதைக் கேட்டதுமே, என்னாவி துடித்தது. என் பழைய கதைகள் முற்றும் நினைவிற்கு வந்தன. என்னுடைய தீச் செயல்கள் கண் முன்பு தாண்டவமாடின. எல்லாவற்றையும் விடப் பெற்ற மகளையே பெண்டாள நினைத்த பெரும் பாதகமே ஆயிரக் கணக்கான அம்புகள் போல என் அங்கம் முற்றும் குத்தியது. என்னுடைய சகலமான

நாடிகளும் அடங்கிவிட்டன. அப்போது தான் சிற்றின்பத்தின் கேடும், “காமம் செத்த நாயையும் பெற்ற பெண்ணையும் விடாது” என்கிற பழமொழியும் என் இதயத்தில் தைத்தன. என் மாறுதலை அவர் அறியாதவாறு சமாளித்துக் கொண்டு பின்னும் சற்று பேசிவிட்டு அவரை யனுப்பிவிட்டேன்.

எனினும் நான் கேட்ட விஷயங்கள் மெய்தானா என்பதை அறியும் பொருட்டு ஒரு வண்டியமர்த்திக் கொண்டு மெல்ல இரவு இவ்விடம் வந்தேன். நேரில் பார்க்கும் எண்ணத்துடன் நான் வந்த சமயம் பாலா ஏதோ சங்கீதம் கர்ணாமிருதமாகப் பாடிக் கொண்டிருந்தாள். நீ படுக்கையில் கேவலமான நிலைமையில் கிடந்ததை வெளிப் புறத்துப் பலகணி வழியாகக் கண்டேன்.

வெறுமனே பிச்சை கேட்டால்

போடுகிறவர்கள் சிலரே. ஆனால் பாட்டு பாடியோ, ஏதாவது வேடிக்கை செய்தோ கேட்டால் அநேகர் தங்களை யறி யாது கொடுத்து விடுகின்றார்கள்.

நீ என்னை மணந்த உத்தமி கோமதி என்பதை அறிந்ததும் உள்ளே வர நினைத்தேன். ஆனால் என் மனச்சாக்ஷி என்னைத் தடுத்தது. உடனே நான் வீடு திரும்பி இரவு முற்றும் யோசனை செய்தேன். எந்த விதமாக உன்னைக் காண்பது என்று புலப்படாது தத்தளித்தேன். பிறகு இந்த யோசனை தான் சரி என்று பட்டதும் காலையில் கடிதமனுப்பினேன். கடிதத்தைக் கண்டு எங்கே அலக்ஷியமாய் வராதிருந்துவிடப் போகிறாளோ! என்று போலீஸ் பயங்காட்டி எழுதினேன்; பிறகு உங்களை அடைந்தேன்.

கோமதீ! உனது பொன்னுரைகளை

ஆதியில் கேளாது அனாதரித்ததற்குக் கடைசீப் பலனாக கொலைக் குற்றத்தையும், பெற்ற பெண்ணைப் பெண்டான நினைத்த பரம பாதகத்தையும் அடைந்தேன். கடவுள் எனக்கு அறிவு கொடுத்திருந்தும் என் மதி யழிந்தது; மான மழிந்தது, மாண்பு குலைந்தது, மதிப்பு மடிந்தது, மகிழ்ச்சி ஒழிந்தது. எல்லாம் அழிந்த கட்டையானேன். என் வாழ் நாள் முற்றும் நரகக் குழிக்கு நாற்றங்காலாகிவிட்டேன். பாழ் நாளாகக் கழித்தேன்.... பாலா!.... இனியேனும் என்மீது நம்பிக்கை பிறந்ததா! என்னைப் பிதாவென்று ஏற்றுக் கொள்வாயா?” என்று கெஞ்சிக் கேட்டான்.

இது கேட்ட பாலா ஒருவிதமான நகைப்புடன் ”இந்த பூமியில் ஒரு உயிர் ஜெனித்த வளவிலேயே அதற்குத் தாய் என்றும் தந்தை என்றும் இரு பொருள்கள் முன்பே இருக்க வேண்டும் என்பது கடமையல்லவா!

அக் கடமையின்படிக்கு என் தாயை இது காறும் தெரிந்துகூட எனக்குத் தாய் தந்தையர் சாக்ஷாத் அம்பிகையும் பரமேச்வானும்தான் என்று நான் நினைத்திருக்கிறேன். அவனன்றி தாய் தந்தையர்கள் வேறில்லை என்பதே என் துணிபு. உம்முடைய உதரத்தில் ஜெனித்ததை யறியா முன்னர் கவலையற்றிருந்தேன். அதை யறிந்ததும் என்னைப் பெருங் கவலை வந்து சுற்றிக் கொண்டது.

அச்சாபீஸில் வேலையில்லாது தூங்குகையில் வேலை கொடுப்பவர்களுக்கு அசௌகரிய மேற்பட்டுவிடுகின்றது. அவர்கள் வேலை கொடுக்கும் சமயத்தில் அச்சாபீஸில் வேலைகள் அதிகமாக வந்து சேர்கின்றன. இருவரும் சரிப்படுத்திக் கொண்டு வேலை அரிதமாக நடக்கையில் பேபர் பஞ்சம் வந்துவிடுகின்றது.

இத்தகைய உதிரத்தில் என்னை என்

ஜெனிக்கச் செய்தாய் கடவுளே என்று நான் வருந்துகிறேன். எனினும் பூத உடல் படைத்த தந்தையாகக் கடவுள் உம்மை நியமித்திருப்பதால் நீர் என் தந்தை என்று நம்புகிறேன். உம்மையும் உமது செய்கையையும் கண்டவர்கள் என்னைப் பார்த்தால் என்ன சொல்வார்கள்.......... இத்தகைய மனிதனின் - கொலைகாரனின்- பெண்ணாம் என்ற பட்டமல்லவோ எனக்கு வரும்!.... நான் ஏதோ செய்த தீரச் செய்கைக்கு ஏற்ற தந்தையாக எனக்கில்லையே என்ற வருத்தம் உண்மையில் என் மனத்தைப் பிளக்கின்றது. என்ன செய்வது? பூர்வ ஜென்ம சுகிர்தம்.” என்றாள்.

கோமதி:- பாலாம்பாள்! நீ சின்னத்தனமாகப் பேசுகின்றாய்! உன்னுடைய மனத்தில் ஆயிரம் எண்ணங்கள் உதிப்பினும் உன்னுடைய பிதா அவர்

என்பதை மறக்க முடியாது. அவர் மனம் ஏற்கெனவே புண்பட்டுத் தவிக்கும் சமயம் நீயும் இவ்விதமான சுடு சரத்தை விடாதே! அது தருமமன்று. அவ்வெண்ணத்தை மாற்றிக் கொள். உன்னுடைய தூய எண்ணத்தினாலும் செய்கையினாலும் அவருடைய மாசை ஒழித்து விடக் கூடும். அவ்வழியில் உன் எண்ணத்தைச் செலுத்து. இதுகாறும் அவர் எவ்விதம் இருந்த போதிலும் இப்போது அவர் நல்லறிவு பெற்று தன்னையே தான் நொந்து கொள்ளும் நிலைமைக்கு வந்து விட்டார். ஆதலால் இனி நாம் நமது கடமையில் தவறாது நடக்க வேண்டும். அவருடைய குற்றத்திலிருந்து மீட்கும் வழியை நாம் கட்டாயம் செய்து அவரைக் காக்க வேண்டும். அதற்கான வழியில் நாம் உழைப்பதே கடவுளின் முக உல்லாசமாகும். இனி துடுக்காகப் பேசாதே!

எந்த புத்தகம் கைவசமில்லையோ

அதைக் கேட்போர் பலர். அதை சீக்கிரம் அச்சிடுவோமென்று ஆரம்பித்தாலும் முடிவதற்குள் பல தடைகள் குறுக்கிடுகின்றன. அதிக காலதாமதமானால் முன் கேட்டவர்களின் மனம் மாறி விடுகின்றது.

கங்காதரன்:- கோமதி! குழந்தையைக் கடிந்து கொள்ளாதே. மகா கொடிய பாதகன் நான் காமுகனாய் என் செல்வியையே என் வாயினால் கண்டபடி உளறிய நாவைத் துண்டிக்கவும் அவள் மனம் விரும்பலாம். அதற்காக நான் கோபிக்கவில்லை. கோபிக்கவும் எனக்கு முகமிருக்கின்றதா ! இல்லை; இல்லை. பாலா! உனக்குத் தந்தை என்று கூறிக்கொள்ள எவ்விதமும் நான் அருகதையல்லன் என்பதை என்னுள்ளம் அறிகின்றது. கண்ணே! நீ கவலைப்படாதே! நான் இழந்த புதையலை உன்னால் கண்டெடுத்தேன். பெரும் நிதியை

அடைந்தேன். நான் உன்னால் பெரும் பாபத்தினின்றும் விடுதலை யடைந்தேன். புத்துயிர் பெற்றேன். இனிமேல் நான் புதிய மனிதன். அதை மட்டும் சத்தியமாக நம்பு.” என்றான்.

பிறகு கேசவன், மூத்த குமாரன் முதலியோரைப் பற்றித் தெரிந்து கொண்டு விசனித்தான். பிரிந்த கால வர்த்தமானங்களைக் குறித்து பேசிக் கொண்டே இருக்கையில் இவர்களிருக்கும் அறைக் கதவு இடிக்கப்பட்டது. யாரென்று பாலா கேட்டாள். உடனே, வெகு அட்டகாசமாயும் அதிகார தொனியுடனும் ஒரு குரல் ”போலீஸ்! கதவைத் திறவுங்கள்!....என்றதைக் கேட்ட உடனே அந் நால்வரும் இன்னதென்று விவரிக்க வியலாத நடுக்கலும் அபார மான குழப்பமும் அடைந்து ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்த

படியே தம்பித்துவிட்டார்கள்.

தேகபாதைகளையும் மனோபாதைகளையும் நிவர்த்திக்க மருந்துண்டு. ஆனால் எப்பொழுதும் சோம்பேறித்தனத்திற்கு அடிமையாயுள்ளவர்களைத் திருத்த மருந்து எது? அவர்கள் முடிவில் அடையும் அதோகதிதான்.

சுகம் துக்கம் இரண்டையும் ஆராய்ந்து பார்த்தால் அதிக சுகம் வேண்டு மென்று ஆசைப்படுவோருக்கே அதிக தூக்கம் கப்பிக் கொள்கின்றது. ஆகை யால் எதிலும் மிதமான ஆசைவைத்து விரலுக்குத் தக்க வீக்கம் என்கிற படி தன் சக்திக்குட்பட்ட சுகத்தையே விரும்பின் கடவுள் அதிக துக்கத்தைக் கொடுக்கமாட்டார்.

## 6-வது அதிகாரம் - அன்பை அழிக்கும் துன்பப் பேய்கள்

பரிமளவல்லியின் விடுதிக்கு வந்த பெண்பிள்ளையைக் கண்டு ஆச்சரியங் கொண்ட பரிமளா வந்த அம்மாளை உட்காரச் செய்துத் தானும் உட்கார்ந்தான். அந்த அம்மாளின் வருகை பரிமளாவின் மனத்திற்குப் பலவிதமான சந்தேகங்களையும் கலவரங்களையும் கொடுத்தது. “உண்மையில் இவள் பெண்பிள்ளைதானா! அன்றி ஆண் பிள்ளை பெண் வேடந் தாங்கி வந்திருக்கலாமோ!” என்கிற சந்தேகமும் மனத்திடை எழுந்தது. வந்த பெண்மணியின் முகத்திலோ களையற்று, ஒளி மங்கி விசனமே வடிவமாகச் சோர்ந்து கிடப்பதும் தெற்றெனவிளங்குகின்றது. “இராக் காலத்தில் இங்கு திடீரென்று வரும் இப்பெண் பிள்ளை

யார்? எதற்காக வந்தாள்?” என்று பலமான கேள்விகள் அவளது மனத்திடையே பிறக்க வாரம்பித்தன.

இத்தகைய யோசனைகளோடு அந்த அம்மாளிடம் எதுவும் பேசாமல் உட்கார்ந்திருந்த பரிமளாவை அங்கு வந்த அம்மாள் நோக்கி ”அம்மா! உன் மனத்தில் தோன்றியுள்ளன எண்ணங்களை உன் முகமே நன்கு எடுத்துக் காட்டுகின்றன. நீ யோசிப்பதுபோல நான் உனக்குத் தீங்கு எதுவும் இழைக்க வரவில்லை என்னுடைய வெட்கக்கேடான நிலைமையில் நான் வெளியில் வரவும், உன் போன்ற உத்தமியான சிறுமிகளைக் கண்டு மகிழவும் பாக்கியமற்றவள். இன்னும் ஓர் முக்கியமான காரணம் பற்றி நான் எனது வெட்கம், துக்கம் இரண்டையும் விட்டு இங்கே வந்திருக்கிறேன். பரிமளா!

நாம் என்று காலா காலத்தில் சாப்பிடவேண்டுமென்று நினைக்கின் றோமோ அன்றுதான் என்றுமில்லாத இடைஞ்சல்கள் ஏற்பட்டு முதலுக்கே மோசமாகி விடுகின்றது.

நான் பகிரங்கமான நாடக மேடையில் உன்னுடைய சங்கீதத் திறமையைக் கண்டு வியந்து ஆனந்த சாகரத்திலாழ்ந்திருக்கிறேன்; இருப்பினும் உன்னுடைய கோகில கானத்தை மீண்டும் நேரில் கேட்க மனம் ஆவல் கொண்டு தவிக்கின்றது ஒரு பாட்டு பாட முடியுமா?” என்று கேட்டாள்.

பரிமளா.- அம்மா! தாங்கள் வந்த காரியம் சங்கீதம் கேட்பதற்குத்தானா! அன்றி வேறு இருக்கின்றதா! அதையே முதலிலறியவில்லையே! தங்களுடைய விருப்பப்படிக்குப் பாடுகிறேன். முதலில் நீங்கள் யார், எங்கிருப்பது, எதற்காக

வந்திருக்கிறீர்கள் முதலியனவற்றைத் தெரிந்துகொண்டு பிறகு பாடுகிறேன்.

வந்தவள்.- அம்மா! நீ கேட்பது மிகவும் சரியே! உன்னுடைய கேள்விக்கு நான் பதிலளிப்பதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். என் கடமையை நான் செலுத்திய பிறகு உன்னுடைய வாக்கை நீ நிறைவேற்றாது மறுக்கக்கூடும். அதைப்பற்றி நான் இப்போது சொல்ல வேண்டாம். நீ உன்னுடைய இனிமையான கான விருந்தை முதலில் அளித்துவிடு; பிறகு நான் பேசுகிறேன்” என்றாள்.

இதுகேட்ட பரிமளா தன் தாயாரை அவ்விடத்திற்கு வரவழைத்துக்கொண்டு பிறகு பாடத் தொடங்கினாள்.

(“எத்தனை ஜென்மங்கள்” என்ற மெட்டு)

(1) அச்சுதன் காமங்கள் உச்சரித்தால் பெரும்

துச்சவினைகளும் தீர்ந்திடுமே-
பச்சைமா மேனியும் மெச்சுகை யாழியும்
பார்த்திடப் பாபங்கள் தீர்ந்திடுமே:
உச்சித பாதங்கள் உச்சிமேற் கொண்டிடில்
உள்ள கரும வினை தீர்ந்திடுமே!

ஒரு சமயம் மனோவியாகூலத்தினால் மெலிந்திருந்த மனிதர்கள் சில காலத்திற்குப் பிறகு பார்த்தால் சந்தோஷப் பெருக்கினால் சிற்றானைக்குட்டி போலக் காணப்படுகின்றார்கள். தேகத்தில் எவ்வளவு பருமன் ஏறி இருக்கின் றதோ அவ்வளவு மனோ மாறுதல்களும் உண்டாய்விடுகின்றன.

(2) ஏழை என்றோரது பாழ்வினை போக்கிடும்
இன்ப நாமம் துயர் தீர்த்திடுமே
ஆழ்கடல் மூழ்கினும் அனுதினம் போற்றிடில்
தாழ்வுறும் தீமைகள் தீர்ந்திடுமே:

(3) அந்தரங்க பக்தி சொந்தமாய்ச் செய்திடில்
முந்தி வினைகளும் தீர்ந்திடுமே:
மந்தகாசன் திவ்ய அந்தமாம் சரிதை
மனனம் செய்தால் துயர் தீர்ந்திடுமே:

(4) குன்றமெடுத்தோனை
அன்றலர்முகத்தோனைக்
கோரிடில் கொடுமைகள் தீர்ந்திடுமே
கன்றினோடாடிய காருண்ய மூர்த்தியின்
கழல் பணிந்தால் பிணி தீர்ந்திடுமே

(5) சுத்தசுதாமன்போல் பக்தி செய்தால் நித்ய
சொர்க்கப் பதவியும் கிட்டிடுமே
உத்தம பக்தர்போல் சத்திய நெறியுடன்
உழைத்திடில் கருணை கிட்டிடுமே!

("ஷடானன" என்ற மெட்டு)

1. தாயே கதி! நீயே துணை சேயான் போற்றிச்
செய்யுமுறை கேளாய்-

2. மாயவன்மன மகிழ்ராணியே!
   வேயர் போற்றும் தேவி! மேவும் ரங்கனாவி!- தா-

3. பங்கஜாஸனீ! பத்மலோசனீ!
   அங்கஜமாதே! அம்புஜபொற்பாதே
   மங்களவல்லி! மகிழ்வேதவல்லி!
   பொங்கும் அல்லிக்கேணி; புகழ்வாஸினீ- தா-

எந்த இடத்தில் நம்மை பிரீதியாக அழைக்கின்றார்களோ அந்த இடத்திற் குப் போக மனம் தாவுகின்றது. பொறாமைக்காரப் புண்ணியவான்களோ அதற்கெல்லாம் ஒரு கயிறு திரிக்க ஆரம்பிக்கின்றார்கன். ஐயோ! மாயை உலகமே!

அம்மா! நான் சங்கீதத்தின் கரையை அறிந்த கலாவதியல்ல. எனக்கு குருமுகமான பாடமும் இல்லை. ஏதோ அந்த

வாணியின் அருள் பிரசாதம் அவர் உண்மை பக்தர்களிடையே சிந்தியபோது ஒரு துளி என்னையறியாது என்மீதும் படிந்திருக்க வேண்டும். அன் னாளின் அனுக்கிரகத்தால் ஏதோ பாடுகிறேன். என்னுடைய சங்கீதத்தின்மீது விருப்பங்கொண்டு கேட்டதால் பாடினேன். இனி நீங்கள் வந்த காரியத்தைச் சொல்லலாமல்லவா?" என்று குயில் போலக் கூறினாள்.

வந்த மனுஷி அந்த தேவகானத்திற்கு ஒப்பான சங்கீதத்தைக் கேட்டு மட்டிலடங்காத மகிழ்ச்சியடைந்து ஆனந்தக் கண்ணீர் பெருக "பரிமளா! நானே மகா சண்டாளி! பெரும் பாவி! என்னைப் போல இவ்வுலகத்தில் யாரும் இருக்கமாட்டார்கள். என் செவிகளுக்கும் மனத்திற்கும் பேராநந்தத்தை வாரி யளித்த உத்தமச் சிறுமியாகிய உனக்கு நான் எவ்வகையிலும் கைம்மாறு செய்ய கடமைப்

பட்டிருக்கிறேன். எனினும் மகர கொடிய பாபத்தைச் செய்துள்ள எனது கைம்மாறை வயதில் சிறுமியாயினும் நன்னெறியோடு ஒழுகும் நீ எதிர்பார்க்கமாட்டாய்! உனது சங்கீதம் எத்தகைய இனிப்புடன் இருக்கிறதோ அதேபோன்று உன்னுடைய கீர்த்தியும் ஒழுக்கமும் பிரகாசிக்கின்றன. குழந்தாய்! இதோ என்னுடைய ஞாபகார்த்தமாக இச்சண்டாளியின் கர்ம வினைகள் அலையும் பொருட்டும் உத்தமர்களின் உள்ளத்தில் என்னுடைய நினைவு இருக்கும் பொருட்டும் இந்த கடிதத்தை வாங்கிக்கொள். காரணம் கேட்காதே! நீ சற்றுமுன் பாடிய பாடலில் அந்த ஆதிமூர்த்தியின் பாதம் போற்றினால், நாம மந்திரம் பஜித்தால், திவ்ய சரிதையைப் பாராயணம் செய்தால் பாபம் தீருமென்ற மார்க்கம் அறிந்தும் அறியாமல் பாபக்கடலில் மூழ்கி பாதகியானேன்! செல்வீ! பரிமளா!

நான் இவ்விடம் விட்டுச் சென்ற பிறகு இந்த கடிதத்தை உடைத்துப் பார். நான் சென்றுவருகிறேன்.” என்று கடிதத்தைப் பரிமளாவின் கையில் கொடுத்துவிட்டு மறு பேச்சுக்கு எதிர் பார்க்காது ஒரே விசையாக எழுந்துபோய் விட்டாள்

ஒரே பதம் ஒருவர் வாயிலிருந்து வரும்போது அவர்களுக்கு ஒருவிதமான கருத்தையளிக்கின்றது. அதைக் கேட்டபேருக்கு • வேறொரு விதமான கருத்தை உண்டாக்குகின்றது. இரண்டு பேருடைய மனோபாவத்தையும் ஒத்திட்டுப் பார்த்தால் மலைக்கும் மடுவிற்குமாக ஆய்விடுகின்றது.

கேவலம் சிறுமியாகிய பரிமளவல்லி ஒன்றுமே தோன்றாது- விவரம் தெரியாது - கலவரமடைந்தாள். க்ஷண நோத்திற்குள் அந்த அம்மாள் மறைந்துவிட்டாள். பிறகு

பரிமளா அந்தக் கவரை உடைத்தாள். அதில் ஒரு கடிதமும், ஒரு ஒட்டிய கவரும் இருந்தது கண்டு அக் கடிதத்தைப் படிக்க வாரம்பித்தாள்.

“வயதில் சிறுமியாயிருப்பினும் மன உறுதியில் மகிமை பெற்ற மங்கையே! பரிமளவல்லீ! இக் கடிதத்தை நான் எழுது வதற்கு முன்னர், சுமார் எத்தனையோ நாட்கள் - எத்தனையோ இரவுகள் - என் மனம் அலைபாய்ந்து தத்தளித்தது கண்ணீர் ஆறாய் ஓடிற்று. என்னுடைய பாபக் குவியல்களெல்லாம் ஒவ்வொரு கொடிய மிருகம் போன்று என்னுடைய கண் முன்பு தோன்றி என்னைக் கடிப்பதாயும், குத்துவதாயும் என் மீது பாய்வதாயும் என்னைச் சித்திரவதை செய்வதாயும் தோன்றி வதைத்தன. இதனால் எத்தகைய கொடிய பாபத்தைச் செய்திருப்பேன் என்று நீயே அறிந்து கொள்ளலாம். என்னுடைய சகலமான

செய்கைகளையும் கடவுள் பார்த்திருக்கிறான் என்கிற எண்ணம் எனக்கு உதயமாவதற்கே என் கன்மா இடங் கொடுக்காது சகடம் போலத் தடுத்தது. என் பாபக் குவியல்களை - பயங்கரத்தை-நீ படிக்கும்போதே உள்ளம் நடுங்குவாய்; அத்தகைய கொடுமையை நானே மனத் துணிந்து செய்திருக்கிறேன்.

பரிமளா அதிகமாக வளர்த்திக் கொண்டு போக என் மனம் இடந்தரவில்லை. என்னுடைய சரித்திரத்தின் சுருக் கத்தை அறிந்து கொள். என்னால் கெட்டு அனியாயமான- நிர் மூலமான, அதோகதியான - பூண்டற்று விட்ட

அதிர்ஷ்டம் என்பது எல்லாவிதத்திலும் அமைவதில்லை. சிலர் தங்களைப் பார்ப்பவர்கள் "அவர்களுக்கென்ன குறைவு சகல போக பாக்கியங்களுடன் இருக்கிறார்கள்" என்று நினைக்கக்கூடிய

விதமாக இருக்கின்றார்கள். ஆனால் உண்மையில் அவர்களை ஆராய்ந்து பார்த்தால் முக்கியமான விஷயத்தில் அதிர்ஷ்டம் எங்கோ மறைந்து கிடக்கின்றது. தூரத்து மலை பசப்பு போன்றுதான் உலகம்.

குடும்பங்கள் அநந்தம். என்னுடைய துராசையினாலும், சிற்றின்பப் பித்தினாலும், நான் என்கிற மமதையினாலும் உலகத்தையும் கடவுளையும் பாப புண்ணியத்தையும் அடியோடு மறந்து இறுமாந்திருந்ததனால் எனது ஏழேழு ஜென்மத்திற்கும் இழுக்கு தேடிக் கொண்டேன். என்னால் குடி முழுகிய ஜாபிதாவில் உனது எஜமானராயும், தற்போது தர்ம கர்த்தாவாக விளங்குபவருமான பொன்னுசாமி என்பவரும் ஒருவராவர். பரிமளா! இந்த வரியைப் படிக்கும்போது நீ திடுக்கிடுவாய்! அது இயற்கையே! பொன்னுசாமி என்பவரை அடியோடு பாழாக்கி

அவர் குடும்பத்தையும், தர்ம பத்தினியையும், செல்வத்தையும் உயிருடன் உரிஞ்சிய பூதம் நானே யாவேன். பணப் பேராசையினால் அவர் நேர் முகமாகக் கொடுத்த பணம் போதாமல், அவர் பெற்றோரில்லாத சமயம் எனது கையாட்களை விட்டு அவர் வீட்டில் கொள்ளையடிக்கச் செய்தேன். அவர் தன்னுடைய மனைவியின் முகம் பார்க்கா வண்ணம் மாயை வலையை வீசி மறைத்தேன். அவரை விடச் செல்வந்தர்களின் தொடர்பு கொண்டு அவருக் குத்துரோகம் பலவும் செய்தேன். ரத்தின வியாபாரியின் ரத்தினங்களை ஒரேயடியாகக் கொள்ளையிடும் நோக்கத்தில் அவருக்கு விஷத்தைக் கொடுத்து கொலையும் செய்தேன். ஐயோ!.... இந்த ஆபாஸங்களை -ஊழல்களை எல்லாம் சொல்லி உன் மனத் திற்கு வெறுப்பு உண்டாக்க

நான் சம்மதிக்கவில்லை. நான் செய்த அக்ரமங்களெல்லாம் எனக்குச் செய்யும்போது தெரியாவிடினும் பிறகு தெரிவதற்கு ஓர் காலமும் நேர்ந்தது.

அக் காலம் முதல் என் மனமே என்னை இடித்து இம்சை யுறுத்தியது. நான் கண் காணாது மறைந்தேன். நான் கொள்ளையடித்ததுபோல என் வீட்டில் கொள்ளைக்காரர்கள் கொள்ளையடித்தார்கள். என்னுடைய அருமைக் குழந்தைகளில் ஒன்று மோட்டாரில் நசுங்கி உயிர் நீத்தது.

நாம் ஒரு வஸ்துவிடத்தில் ஆசைகொள்ளும்போது அது நமக்குக் கிடைக்கக் கூடியதா இல்லையா என்பதை யோசித்து கிடைக்கக்கூடியதாயின் அதை அடைவதற்கு வேண்டிய மார்க்கங்களைத் தேடவேண்டும். கிட்டாத பொருளை அடைய விரும்புவது கானல் நீரைக் கண்டு மகிழ்வது

போலாகும்.

மற்றொன்று எனது பகைவன் கரத்தால் கொல்லப்பட்டது. மற்றொன்று நான் வேறு ஒருவனை எமனுலகமனுப்புதற்கு வைத்திருந்த விஷங்கலந்த பாலைக் குடித்து இறந்தது. இவ்விதம் என் கதியும் செய்கையும் கடவுள் அதோகதியாகச் செய்த பிறகே எனக்குப் புத்தி பிறந்தது. கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் எதற்கு? உயிர் துடித்தேன்; தத்தளித்தேன். விரக்தி கொண்டேன். என் கர்மம் தொலையும் பொருட்டு சில வருடங்கள் காசி க்ஷேத்திரத்திலேயே கங்கை நீராடிக் காலத்தைத் துலைத்தேன்.

என் மனம் சமாதானமாகவில்லை. என்னால் கொள்ளை டிக்கப்பட்ட செல்வத்தில் பெரும் பாகமும் பல வழிகளில் தொலைந்த தெனினும் இன்னும் ஒரு லக்ஷ ரூபாயிக்கு என்னிடம் இருப்பது எனக்குப் பெரும்

பாரமாக இருந்தது. அதை என்ன செய்யலாம் என்று நினைத்து அதே யோசனையிலிருக் கையில் ஒரு தினம் கனவில் ஒரு விருந்தர் தோன்றி, “மகா கர்ம சண்டாளியாகிய உன் பணத்தை தர்மத்திற்கு வாரி இறைத்தால் உன் பாபம் கொஞ்சம் கழியலாம்.” என்று கூறி னார். அன்று முதல் என்ன விதமான தருமம் செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கையில் இந்த நற்குண நாடகக் கம்பெனியை நடத்துவது அந்த புண்யவான் என்றும் அவருடைய மனம் விரக்தி மார்க்கத்தில் பறந்து விட்டதென் றும், தர்ம ஸ்தாபனங்கள் மலிந்திருப்பதையும், நீயும் கேசவன் என்ற சிறுவனும் நடிப்பதும் முதலிய பல விஷயங்களையும் நான் ஒரு தினம் பத்திரிகையில் படித்தேன்.

இந்த செல்வத்தில் பெரும் பாகமும் அந்த உத்தமராகிய பொன்னுசாமியினுடைய

தென்பதை இப் பாவியினுள்ளம் மறக்க முடியாது. அவ்வுத்தமரின் சொத்துக்கள் அவரிடமே சேரட்டும். அவருடைய கரத்தினாலேயே தரும வழியில் வினியோக மாகட்டும். இப் பாவியின் மிகுதி சொத்தும் பூவுடன் சேர்ந்த நாறும் மணம் பெறுவதே போல ஆகட்டும் என்கிற நோக்கங் கொண்டு அதை அவரிடமே சேர்க்க எண்ணி இவ்வூருக்கு வந்தேன்.

புலியைப் பார்த்து பூனை சூடு போட்டுக்கொள்வது போல சிலர் நல்ல ஸ்திதியில் இருக்கும் பிறரைக் கண்டு அம்மாதிரி தாங்களும் ஆகவேண்டு மென்ற அதிக ஆசை கொண்டால் அதிக நஷ்டம் அடைய வேண்டியே வரும் என்பதை முன்னால் அறிவதில்லை.

ஆனால் எனது வெட்கங் கெட்ட முகத்துடன், மான மிழந்த உருவத்துடன் அந்த புண்ணிய

மூர்த்தியின் எதிரில் வருவதற்கு மனங் கூசியது. இதை யாரிடம் எவ்வகையில் சேர்ப்பதென்று அறியாது தவித்தேன். தண்ணீராயுருகி னேன். உங்கள் நாடக நடிப்பைக் காண ஆவல் கொண்டு சில நாடகங்களையும் கண்டு களித்தேன். உனக்கு ஒரு வைர பதக்கமும் பரிசளித்தேன். பிறகு உன் மூலமாகவே இதை உன்னி டம் சேர்ப்பதென்று தீர்மானித்துக்கொண்டு என் வீட்டு வேலைக் காரனை யனுப்பி விசாரித்துவரச் செய்தேன். உன்னுடைய உத்தரவு கிடைத்த பிறகே இக் கடிதம் எழுதலானேன்.

பரிமளா! உன்னுடைய எஜமானரிடத்தில் இக் கடிதத்தைக் காட்டு. இதோடு இருக்கும் கவரினுள் மொந்த ரூபாயிக்கும் ஒரு செக்கு என் கை யெழுத்துடன் இருக்கிறது. அதையும் உன் எஜமானரிடம் சேர்த்துவிடு.

அவ்வுத்தமரிடத்தில் நான் மன்னிப்பு கேட்பதற்கும் அருகதை யற்ற பாவியாகி விட்டேன். அவர் மனம் போலச் செலவிட்டுக் கொள்ளட்டும். அதில் என் இறந்த புதல்வியின் ஞாபகமாக உனக்கு ஒரு பத்தாயிர ரூபாய்க்குத் தனியாக ஒரு செக்கு வைத்திருக்கிறேன். அதை நீ அங்கீகரிக்க வேண்டுகிறேன். “இத்தகைய பாவியும் உலகத்திலிருக்கின்றாளே” என்று ஆச்சரியப் படுவாய்; இனி என்னை- என் ப்ரேதத்தை - ஒருவரும் கண்ணாலும் காண முடியாது. இது நிச்சயம், பரிமளம் மிகுந்த பரிமளா! இதோடு நான் நிறுத்திக் கொள்கிறேன். மன்னிப்பாயாக,

இங்ஙனம்

மகா கொடிய சண்டாளி

கொலைகாரி

பரீக்ஷைக்குப் படிக்கையிலோ

அன்றி மும்முரமாக எழுதுகையிலேர சிலர் வந்து “நான் இப்போது வந்ததில் தங்களுக்கு இடைஞ்சலாக இருக்கும்; ஆகை யால் இதோ போய்விடுகிறேன்” என்று சொல்லிக்கொண்டே வீண் வார்த்தை களைப் பேச ஆரம்பித்து மணி நேரத்தில் நேரத்தைக் கடத்தி எல்லா வேலைகளை யும் பாழாக்கி விடுகின்றார்கள்.

இக் கடிதத்தைப் படித்த பரிமளாவின் உடல் உண்மையி லேயே ஆடிற்று. தலை கிறு கிறுத்தது. அவள் 10 நிமிட நேரம் பதுமை போலானாள். “ஆகா! இதென்ன ஆச்சரியம்! இப்படியும் நடக்குமா!?” என்று அபாரமான வியப்பு கொண்டாள். அக் கடிதத்திற்குள்ளிருந்த மற்றொரு கடிதத்தையும் உடைத்து செக்குகளைப் பார்த்தாள்; கூறவியலாத ஆச்சரியமடைந்தாள். உடனே அக்கடிதத்

துடன் அவ்வறையின் மற்றொரு கதவைத் திறந்து கொண்டு ஓடினாள். அங்கு வீற்றிருந்த பொன்னுசாமியினிடம் கடிதத்தை நீட்டி, “பெரியவரே! இதோ இதைப் பாரும்.” என்று கூறியவாறு கொடுத்து வியப்பே வடிவமாக நின்றாள்.

அன்றைய தினம் பரிமளவல்லியைப் பார்க்க வருவதாகச் சொல்லியவர்கள் பாராக விருக்குமோ, என்னவோ! ஏதேனும் தீங்கு செய்பவர்களாக விருப்பார்களோ என்கிற; ஒரே எண்ணத்தினால் அவ்வாறு ஏதேனும் நடக்கும் சமயம் வாய்த்தால் காப்பாற்றும் நோக்கத்துடன் கேசவனும், பொன்னுசாமியும் அவ்வறைக்குப் பக்கத்து அறையில் தயாராக உட்கார்ந்திருந்தார்கள். ஏதேனும் அபாயம் நேரும்போலத் தோன்றினால் உடனே ஒரு மணியை அழுத்தினால் அது பக்கத்தறையில் தங்களுக்குக் கேட்கும்; தாங்கள் ஓடி

வருவதாகச் சொல்லித் தீர்மானித்திருந்தபடி ஒன்றும் மணியடிக்காததனாலும், பரிமளா ஆனந்தமாகப் பாடியதாலும் ஆபத்து ஒன்றுமில்லை என்பதாக இருவரும் எண்ணி அவ்வறையில் உட்கார்ந்திருந்த தருணம் பரிமளா கடிதத்தைப் பொன்னுசாமியின் முன்பு நீட்டியதும், பொன்னுசாமி ஆச்சரியப்பட்டு அதை வாங்கிப் படிக்கலானான்.

அந்த கையெழுத்தைப் பார்க்கும்போதே அவனுக்குத் தூக்கி வாரிப்போட்டுவிட்டது. இது தனது குலத்தையே ஒழித்த கொடும் பாவியினுடைய கையெழுத்து என்பது தெட்டென விளங்கி விட்டது. உடனே அங்கு வந்தவள் அந்த சண்டாளி தான் என்று நன்கு தெரிந்துகொண்டான். அவ்வாறு தெரிந்துகொண்டதும் அவன் மனத்தில் பழய எண்ணங்கள் ஒன்றன்பின்னே ஒன்று

தோன்றின. குணவதியின் சாந்தமான முகம் கண்முன்பு அப்படியே கண்ணீர் வடிய நிற்பதுபோன்றும், உடனே நோய்வாய்ப்பட்டுக் கிடப்பதுபோன்றும், அடுத்த நிமிடம் தன்னைக் கெஞ்சுவதுபோ லும், மறு வினாடி சவக்கோலமாகச் சென்றதும் மாறி மாறி சினிமாப் படம்போலத் தெரிந்தன.

சில பணமுள்ள பெரிய மனிதர்கள் "முன்பண மனுப்புவதென்றால் கை வருவதில்லை; வி.பி. யில் அனுப்பினால் உடனே பெற்றுக்கொள்கிறோம்" என் பது; ஆனால் வி. பி. யைத் திருப்பிவிடுகிறது. இது ஒரு கௌரவம்போலும்.

அவ்வாறு தோன்றிய தோற்றத்தினால் தன்னை மறந்து "ஹா!" என்று கதறிக்கொண்டு தன்னிரு கைகளால் கண்களை மூடிக் கொண்டு கண்ணீரை ஓடவிட்டான். அருகிலிருந்த பரிமளாவிற்கும்

கேசவனுக்கும் விஷயம் இன்னதென்று விளங்காது இருவரும் தவித்தவாறு, “பெரியவரே! போஷகரே! ஏன் இக்கடிதங் கண்ட தும் முகம் மாறுபட்டதோடு புலம்புகின்றீர்கள்? இக்கடிதத்திற்கும் உமக்கும் என்ன சம்மந்தமிருக்கிறது?” என்று கேட்டு அவரையே உற்றுநோக்கியபடி நின்றார்கள்.

சற்று சமாதானமடைந்த பொன்னுசாமி இருவரையும் தன்னிரு கரங்களினாலும் இழுத்துத் தன் பக்கலில் அமர்த்திக்கொண்டே கடிதத்தைப் படித்து முடித்தார். வாய் பேசாது தேம்பித் தேம்பிப் புலம்பினார். “என் கண்மணிகளே! மறைந்து கிடந்த நாற்றக் குப்பை திடீரென்று துர்மணத்துடன் கிளம்பி உங்கள் நாசியில் புகுந்துவிட்டது. கேசவா! நீயும் அத் துர்மணத்தைப் பார்த்துவிடு. இதோ இக்கடிதத்தைப் படி”

என்றான். உடனே கேசவன் கடிதத்தைப் படித்தான். அடங்காத வியப்புடன் “தந்தையே! இதென்னவிது? இதில் எனக்குத் தகவல் ஒன்றும் விளங்கவில்லை; எனினும் உங்களை அதோகதியாக்கிய பாவி ஒரு உயிர் இருப்பதாக அறிகிறேன். அவ்வளவுதான் பரிமளாவும் அறிந்திருப்பாள். விஷயத்தை விளங்கச் சொல்லுங்கள்: உங்கள் மனம் இத்தகைய தத்தளிப்பையடைவ தற்குக் காரணம் யாது? எங்களுக்கு உரைக்கவேண்டும்.” என்று கேசவன் கேட்டான். பரிமளாவும் “தந்தையே! இதென்ன! தாங்கள் ஏன் மாறுதல்களை யடையவேண்டும்? அந்த அம்மாளிடத்தில் தங்களுக்குச் சம்மந்தம் இருந்ததாகக் கூறுவது உண்மையாக விருப்பினும் அதுபற்றி கவலையேன் அடையவேண்டும். எங்களிடம் விஷயங்களைத் தெரிவியுங்கள்.” என்று

கெஞ்சிக் கேட்டாள்.

மிகவும் சொல்பமான துகையை ஒரு நல்ல விஷயத்திற்குச் செலவிடத் தயங்குவது; உடனே நம்மை யறியாதோ அறிந்தோ ஒரு பெருந் தொகை நம் கையைவிட்டுப் போய்விடுகின்றது. இது முன்னர் செய்த தப்புக்குக் கை கண்ட பலன். தெய்வம் நின்று கொல்லும் என்கிற பழமொழி அன்று கொல்லும் என மாறிவிடுகின்றது.

பொன்னுசாமியின் மன நிலைமை மிகவும் கேவலமாகிவிட்டது. பிறகு அதைச் சமாளித்துக்கொண்டு தன்னுடைய ஜீவிய சரிதை முற்றும் ஒன்று விடாது கூறி “என் கண்மணிகளே! என்னுடைய பிறவியின் கேட்டைப் பார்த்தீர்களா? எஜமானனின் பவிஷு நன்றாகத் தெரிந்துவிட்டது. என் சரிதை இவ்விதம் இருக்குமென்று நீங்கள் கனவிலும் கருதி இருக்கமாட்டீர்கள். இந்த

பிசாசம் இங்கு வரும் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை. என்னுடைய பழைய கதைகளை நினைப்பூட்டுதற்கே இந்த மூதேவி இங்கு வந்தது.” என்று நிரம்பவும் விசனித்தார்.

இந்த வாலாற்றைக் கேட்டு இருவரும் கட்டு மீறிய ஆச்சரிய மும் பிரமிப்புமடைந்து “தந்தையே! நீங்கள் சொல்லிய விஷயங்கள் உண்மையில் நடந்தனவா! அல்லது நாவலில் படித்ததைக் கூறுகின்றீர்களா! குணவதியம்மாளின் பெயராலா இந்நாடகக் கம்பெனி நடை பெறுகின்றது. ஆகா! என்ன துக்ககரமான செய்தி! இதைக் கேட்கும் போதே எங்கள் மனம் பதறுகின்றது. இத்தனைத் துன்பங்களை யும் எவ்விதம்தான் அனுபவித்தீர்களோ! நீங்கள் தெய்வத்தன்மை பொருந்தியவர்கள் என்பது இப்போதுதான் தெரிகின்றது. பெரிய வரே! தாங்கள் எத்தனை தப்பிதம் செய்திருந்த போதிலும்

அவைகளின் தீமையை உணர்ந்து இப்போது ஓர் துறவிபோல ஆய்விட் டது மிகவும் போற்றத் தக்கதாகும். நாங்கள் இந்த விஷயங்களைத் தெரிந்துகொண்டதனால் ஏதோ மாறிவிடுவோம் என்று கனவிலும் கருதவேண்டாம். எங்களிருவருக்கும் புத்துயிரளித்துக் காப்பாற் றிய கர்த்தாவாகிய உங்களை நாங்கள் மறந்தோமானால்-உங்களிடம் வித்யாசம் நினைத்தோமானால் - எங்கள் கண்ணவிழ்ந்து திண்டாடுவோம். எந்த காலத்திலும் நாங்கள் தங்களை தெய்வமாகவே கொண்டாடுவோம். இது சத்யம். நீங்கள் வருந்தவோ, வித்யாசமாக சம்சயிக்கவோவேண்டாம். இந்த சம்பவத்தை நீங்கள் இப்போதே மறந்துவிடுங்கள். அந்த அம்மாளும் எவ்வளவோ மனம் வெறுத்து நொந்திருப்பதாக இக்கடிதம் காட்டுகிறது. இனி அதைப்பற்றி நினைக்கவே வேண்டாம்.

மேலே யாகவேண்டிய காரியத்தைக் கவனி யுங்கள். பொழுதுபோய்விட்டது. படுத்துக்கொள்ளுங்கள்." என்று வெகு உருக்கமாகக் கூறினார்கள்.

சிலர் தங்கள் மனத்திற்குத் திருப்தியுண்டாகும்படி எல்லோரும் நடந்து கொள்ள வேண்டுமென்று நினைத்துக்கொள்வது. அதனால் மற்றவர்க்கு எவ்வித கஷ்ட நஷ்டங்களுண்டாகு மென்பதைக் கணமும் கருதுவதில்லை; அவர்கள் மீது
பழி சுமத்துவது. இது என்ன சுபாவமோ.

இதுகேட்ட பொன்னுசாமி "என் செல்வங்களே! உங்களுடைய மேன்மையான புத்தியின் விசேஷத்தினால் இவ்விதம் என் மீது வெறுப்பு கொள்ளவில்லை. எனினும் என் மனமே என்னை வெறுக்காத நிமிடமில்லை. என்னுடைய பாபங்களை நினைத்துப்

பார்த்தால் என்னை அன்புடன் ஈன்றெடுத்து, ஆயிரம் பாடுபாட்டு வளர்த்த அன்னை, பிதாவின் அன்பை மதியாது அவர்களைக் கொலை செய்த பெருந்துக்கத்தையும், என்னையே நம்பி இருந்து என் முகம் பார்ப்பதற்கும் ஏங்கிய உத்தமியான குணவதியைக் கொலை செய்த சண்டாளத் தன்மையையும் நினைத்தால் என் அங்கமே நடுநடுங்குகின் றது. இரவுபகல் சதா என்னுடைய இதயத்தில் ஓர் அம்புகுத்துவது போல குத்திக்கொண்டே இருக்கின்றது. எந்த காலத்திலும் நான் செய்திருக்கும் அக்கிரமத்திற்குக் கடவுளினிடம் தக்க தண்டனை படையாமலிருக்க முடியாது. அந்த நாளை எதிர்நோக்கிக்கொண்டுதா னிருக்கிறேன். குணவதியின் திவ்ய முகத்தை நான் ஒருபோதும் நேரில் நோக்கியறியேன். சாந்தமாக ஒரு வார்த்தைகூடப் பதில்

பேசியறியேன்.

ஒருவர் நம்மைத் தேடிவந்தாலும், வேறொருவர் கூட இருப்பதால் நமக்குப் பேச முடிவதில்லை. யாதலால் பின்னவரை அவர்கள் நொந்து கொள்கிறோம். ஆனால் தனியாக வருகையில் நாமே வீட்டிலில்லாமலிருக்கும்படியாய் விடுகின்றது. அப்போது யாரைச் சொல்வதுர்

என் கரத்தால் தாலியைக் கட்டிய தோஷத்திற்காக அக்கரத்தினால் அவளை என்னறிவு அழிந்து வேண்டிய வரையில் நையப் புடைத்தேன். அந்த உத்தமியின் அழகிய கரத்தினால் என் காலைப் பிடித்து நலங்கிட்டதற்குப் பதிலாக காலினாலேயே உதைத்தது போதாமல் அந்தப் புண்யவதிபின் உயிர் போகும் தறுவாயிலும் காலினால் உதைத்துத் தள்ளினேன். அந்தோ! அதை நினைத்தால் என் மனம் இப்போதும்

நடுங்குகின்றது. அவ்வுத்தமியை ஒருபோதேனும் நான் இன்பமாக அழைத்து ஒரு வார்த்தை பேசாவிடினும் அடித்து உதைத்துத் திட்டியது எனது ஏழேழு ஜன்மாவிற்குந் தாங்கும். அவளுடைய பிணத்தைப் பார்த்தபிறகுதான் எனக்குக் குணம் திரும்பியது. அவளுடைய மணம் எனக்கு வீசியது. அக்கினி பகவானுக்கு இரையாக்கக்கூடிய சவத்தை என்ன செய்வது?

சவத்தை வைத்துக் கொண்டு கத்தினேன்; கதறினேன். பிணத்தின் மேல் விழுந்து புரண்டேன். மூன்று நாள் கண்ணை விழிக்காது கதறினேன். என் மனத்திற்கு முதலில் வேம்பாக இருந்த குணவதி பிணமாகிய பிறகு கரும்பாக இனித்தாள். அதை எண்ணி எண்ணி ஏங்கினேன். இன்னும் ஏங்கிக் கொண்டே என் பொல்லாத பொழுதைத் தள்ளுகிறேன். கேசவா!

பரிமளா! என் செல்வங்களே! தற்போது உங்களிருவரைத்தான் நான் என்னுயிராக மதித்துள்ளேன், என் குற்றத்தை மறந்து விடுங்கள்” என்றான்.

இதைக் கேட்ட இருவரும் கண்ணீர் வடித்தார்கள். பிறகு வெகு நேரம் மூவரும் பேசிக்கொண்டிருந்து நித்திரா தேவியின் வச மானார்கள். உதயமானதும் கேசவனும் பொன்னுசாமியும் வீடு போய்ச் சேர்ந்தார்கள், பரிமளாவினுடைய கவலைகளோடு அவள் எஜமானரின் ஜீவிய சரித்திரம் அவள் மனத்தை உருக்கியது. அதையே எண்ணிக் கொண்டு அன்று பூராவும் இன்பமும் துன்ப மும் அடைந்தாள்.

ஏதேனும் போட்டிகள் வைப்பதாயின் சிலர் லஜ்ஜை யின்றி “எனக்குப் பரிசு கொடுப்பதாயிருப்பின் நான் போட்டியில் கலந்துகொள்வேன்; இல்லை யேல்

வாமாட்டேன்” என்கிறார்கள். இது பெரிய வேடிக்கை யல்லவா

பின்னும் சில தினங்களாயின. முன்னர் தெரிவித்தது போலப் பரிமளாவும் கேசவனும் கடைசீ தரமாக நடிக்கும் நாடகத்தைப் பொன்னுசாமி தயார் செய்தார். ஊரெங்கும் நோட்டீஸ்கள் பறக்க வாரம்பித்தன.

=========

”நாடகத்தில் நற்சியாதி பெற்று வரும் சிறுவன் கேசவனும், சிறுமி பரிமளவல்லியும் சேர்ந்து நடிக்கும் கடைசி நாடகம் இதுவே யாகும்’ நாடகப் பிரியர்கள் பார்க்கத் தவறாதீர்கள். நிகரற்ற வள்ளி நாயசியாயும் சுப்பிரமணிய வேடனாயும் அவ்விரு சிறுவர்களும்; தோன்றி நடிக்கும் கடைசீ தரு ணம் இதுதான். இனிமேல் காணக்

கிடைக்காது, இனி மேல் நாடக மேடையில் இரு ரத்தினங்களையும் சேர்ந்து காண முடியாது: அனேக காரணங்களை முன்னிட்டு பரிமளா இனி நாடகம் நடிக்கப் போவதில்லை. நமது வேண்டுகோளுக்கிணங்கி இந்த வள்ளி நாடகம் ஒரே ஸ்பெஷல் நாடகமாக நடிக்க ஏற்பாடு செய்திருக்கிறது. இதுகாறும் நாடக உலத்தையே பிரமிக்கச் செய்து எல்லோருக்கும் கர்ணாநந்தமான சங்கீதத்தை அள்ளி இறைத்த சிறுமிக்கு நாம் கடைசீயாக ஏதேனும் கைம்மாறு செய்யக் கடமைப் பட்டிருக்கிறோம். அக் கடமையாவது, இந்த கடைசீ நாடகத்தில் வசூலாகக் கூடிய தொகையை அச் சிறுமிக்கு நன்கொடையாக அளிப்பதே அச் சிறுமியின் விஷயத்தில் நாம் இந் நன்றியறிதலைக் காட்ட வேண்டுவது முக்கிய மாதலால் நாடகாபிமானிகள் எல்லோரும்

தவறாது விஜயம் செய்வார்களென்று எதிர் பார்க்கப்படுகின்றது.

=======

சில தந்திரக் குள்ளாரிகள் எல்லோரிடத்திலும் நயமாகவே நல்லவர்களாகவே பழகிவிடுகிறார்கள். சமயம் நேரும்போது "நான் அப்போதே சொன்னதில் உஷாராயிரு" என்று குறிப்பாகத் தெரிவிக்கவில்லையா ! என் மேல் பிசகில்லை" என்று இரு புறமும் தாளம் போடுகிறார்கள்.

மேற்கண்ட நோட்டீஸ் ஊரெங்கும் ஒட்டப்பட்டும் வீட்டிற்கு வீடு கொடுக்கப்பட்டும் வந்தது. நாடகத் தேதியும் சமீபித்தது. பரிமளாவும் கேசவனும் வெகு பொருத்தமாயும் இனிமையான சங்கீதத்துடனும் நடித்துப் பார்க்கப் போவது இதுவே கடைசி யாகையினால் அனேக ஜனங்கள் திகள் திரளாகக் கூடிவிட்டார்கள். எட்டு மணிக்கே

கொட்டகையில் இடம் கிடைக்காது போய் விட் டது, பரிமளாவின் கானத்தைக் கேட்டு மகிழ்வதற்கு ஆயிரக்கணக் கான கூட்டம் எதிர் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

சரியாகக் குறித்த நேரத்தில் நமது பரிமளவல்லி

(இந்துஸ்தானி காபி ராகம்; ஏக தாளம்)

1. ஸ்ரீ ரகுநாதா! வாரிஜ பாதா!
   தாரக நாமஹரே! நானவர் காலா!— த-
2. இக்ஷ்வாகு வம்சா! லக்ஷ்மீ ப்ராணேசா!
   பக்ஷிவாகன நேசா! ஜெய சர்வேசா- ப-

3 அசுர சம்ஹாரா! சசிமுகதீரா!
வசுந்தர பரிபாலா! மங்கள லீலா- வ-

4. ஜானகி ரமணா! ஸரஸிஜ சரணா!
   தீனதயாபரணா!திவ்ய கருணா- தீ-

என்கிற பாடலை வெகு இனிமையாக

தேனோ, பாகோ, தெவிட்டா வமுதோ என்னும்படியாகப் பாடிக் கொண்டே தினைப்புனம் காக்கும் வள்ளியாகத் தோன்றினாள். இதுபரியந்தம் அமைந்ததை விடப் பன்மடங்கு அதிகரித்த இன்பகரமாக அன்று நாடகம் வெகு மனோகரமாக விருந்தது. கேசவனும் வெகு திறமையாக நடித்தான்.

நாடகம் முடிவடைந்தது, அன்றைய தினம் வசூலான பணத்தை பொன்னுசாமி அந்த நாடக மேடையின் மேலேயே அரியதோர் உபன்யாசம் செய்து அதைப் பரிமளாவுக்குக் கொடுத்து விட்டார். பரிமளாவும் பிரதி வந்தனம் கூறித் தான் இதோடு விலகிக் கொள்வதைப்பற்றி உருக்கமாகப் பேசிப் பின்னர் விடை பெற்றுக் கொண்டாள். நாடகம் கலைவுற்றது. எல்லோரும் வீடு போய்ச் சேர்ந்தார்கள். பரிமளவல்லிக்கு மட்டும் அன்று என்றுமில்லாத துக்கம் அவளை

யறியாது பொங்கி விட்டது; வீட்டிற்கு வந்து படுத்துவிட்டாள்.

ஒருவருக்குப் பலர் பலவிதமான தீங்குகளை இழைத்த பிறகு, வேறொருவர் அவர்களுக்கு உதவி செய்யத் தூய சிந்தையுடன் வந்தாலும் அவர்களையும் சந்தேகிக்க நேர்ந்து விடுகின்றது.

மறுதினம் காலையில் அனேகர் பரிமளாவைக் காண்பதற்காக அவன் வீட்டிற்கு வந்து "ஏன் நின்று விட்டீர்கள்?" என்று கேட்டார்கள். அவர்களுக்கெல்லாம் பரிமளா தன் தாயையே விட்டு ஏதோ தக்க சாக்குப் பதில் கூறி யனுப்பி விட்டாள். சில தினங்கள் வரையில் இந்த தொல்லை இப்படியே அதிகரித்திருந்தது.

நாடகம் நடக்கையில் கேசவன் அதன் காரணம் பற்றி பரிமளாவைச் சந்தித்து

வந்தான். நாடகம் நின்றுவிட்ட பிறகு பரிமளாவின் வீட்டிற்கு முன் போல அடிக்கடி செல்வதற்கும் சந்திப்பதற்கும் அஞ்சினான். ஒரு தினம் பரிமளாவின் வீட்டிற்குக் கேசவன் வந்தான்.

அவனைக் கண்ட பரிமளவல்லி அழைத்து உட்காரச் செய்து “ஏது! நான் நாடகத்தை விட்ட உடனேயே என்னை மறந்து வீட்டீர்களே! உங்கள் மனம் இதற்குத் துணிந்ததா!” என்று வெகு விசனத்துடன் கேட்டாள்.

கேசவன்:- பரிமளா! நான் எந்த காலத்திலும் உன்னை மறக்க மாட்டேன் என்பது அந்த கடவுளுக்குத்தான் தெரியும். ஆனால் நீறு பூத்த நெருப்பு எப்படியோ அப்படித்தான் இனிமேல் நாம் இருக்கவேண்டி இருக்குமென்று தோன்றுகின்றது. ஏனென்பதை நான் கூற வேண்டாம். மகா புத்தி நுட்பமுடையவளாகிய நீயே தெரிந்து

கொள்வாய். பரிமளா! எனக்குப் பேசவும் நாவெழவில்லை. என்னால் உனக்கு யாதொரு தீங்கும் நேரிடக்கூடாதென்பதே என்னுடைய நோக்கமாகும். உனக்கு ஒரு அணுப்பிரமாணமும் வருத்தமோ, வசையோ உண்டு பண்ண நான் சம்மதியேன். அபக்கியாதி என்கிற பெருங் காற்று உன் மீது அடிக்காதிருப்பதை நானும் கவனிக்கக் கடமைப் பட்டுள்ளேன். நாமிருவரும் நாடக பந்தத்திலிருந்து விலகி விட்டது. வெளி ஜனங்களுக்கு நன்றாகத் தெரியும். அப்படியிருக்க நான் இனிமேல் அடிக்கடி உன்னைச் சந்திப்பதால் உனக்கன்றோ ஓர் விதமான பெயர் உண்டாகும்........

தினம் அதிகாலையிலெழுந்திருந்து ஸ்நானஞ் செய்து பகவானைப் பஜித் தால் மனம் அதிக பரிசுத்தத்தை அடைவதுடன் அன்றைய வேலைகளெல்லாம்

வெகு ஒழுங்காக நடைபெறுகின்றன. கும்பகர்ணனின் வசப்பட்டு விட்டால் முதற் கோணல் முழுதும் கோணல் என்றபடியாகின்றது.

பரிமளா:- ஆஹா!....சரியான யோசனை!... இதற்கு நான் ஒப்புக்கொள்ள வேண்டியவளே யாவேன்.... மனத்தில் பதிந்து கிடக்கும் ஆழ்ந்த அன்பை நினைக்கின்... அந்தோ!.... மனம் பகீரென்கின றதே! நண்பரே!

கேசவன்:- பரிமளா! உலகம் நம்மைப் பிரித்துவிட நினைத்து விட்டது; ஆனால் அன்பு சேச்சே! நான் இந்த துக்ககரமான விஷயத்தைத் தெரிவிப்பதற்காகவோ இங்கு வந்தேன்.... பரிமளா !.. நான் சென்று வருகிறேன்.

பரிமளா - என்ன இது? என்னவோ பேசுகின்றீரே! எனக்குப் புரியவில்லையே!

தாங்கள் ஏதோ விஷயத்தை ஒளிப்பது போலப் பேசுகின்றீர்களே! அதென்ன! அதை எனக்குத் தெரிவிக்கலாகாதா! என்னிடம் என்ன வித்யாசம்? விவரத்தைக் கூறும்.

கேசவன்:- பரிமளா! ஒன்றுமில்லை. விசேஷமென்ன விருக்கிறது! கடவுளின் ஆணை எந்தெந்த விதமிருக்கின்றதோ அப்படித் தானே யாவும் நடக்கும்... பரிமளா!... என்னுடைய மனத்தவிப் பிறகு உவமை கூறச் சக்தி யற்றிருக்கிறேன். என்னாலான வரையில் உன்னைச் சந்திக்க வேண்டாமென்றே நினைத்தேன். ஆனால் மனந்தாங்க வில்லை. திடீரென்று நான் வராது நின்று விட்டால் நீ என்ன நினைப்பாயோ என்று எண்ணியே வந்தேன். நீ மகா யூகசாலி யாதலால் எனது நிலைமையைத் தெரிந்து கொண்டாய்! இனி நான் எவ்விதம் ஒளிப்பேன்? நம்மிருவருக்கும் இடையில் ஒரு பெரிய எமன்

இருக்கின்றது; இதோ தெரிந்து கொள்.” என்று ஒரு கடி தத்தை அவள் கையில் கொடுத்தான். பரிமளா வெகு வியப்புடன் கடிதத்தை வாங்கிப் படிக்கலானாள்.

பாட்டு பாடும்படிச் சிலரைக் கேட்டால் அவர்கள் “எனக்குத் தொண்டை சரியாக இல்லை; அதிக அவசரமாகப் போகவேண்டி யிருக்கிறது” என்று ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லி தட்டு கட்டி விடுகிறார்கள். ஆனால் வேறு சிலர் எப்பொழுது சொல்லப் போகிறார்களென்று காத்துக் கொண்டிருந்து உடனே பாடுகிறார்கள்.

”அடேய் கேசவா!

நீ உயிருடன் இப் பூவுலகில் வாழ வேண்டுமாயின் இனி மேல் பரிமளாவின் நினைவை மறந்துவிடு. அவளைச் சந்திப்பதை விட்டு விடு. இந்த கடிதத்தை ஏதோ ஓர்

விளையாட்டுக் கடிதமாகவோ, வம்புக் கடிதமாகவோ நினைக்காதே! இக் கடிதத்தில் கண்டபடிக்கு நீ நடக்காவிடின் இக் கடிதமே உனக்குக் காலன் என்பதை மறக்காதே ! இனி நீ அவளைச் சக்தித்தால் உனக்குப் பேராபத்து விளையும், அவ்வாபத்தில் சிக்கிவிட்டால் எமனு கில் சென்றுதான் மீட்சி யடையவேண்டும். ஜாக்ரதை! இக் கடிதம்தான் உனக்கு எச்சரிக்கை யாகும். உஷாராக விரு.

இங்ஙனம்

............

அதைப் படித்ததூம் அவள் திடுக்கிட்டாள். “ஹா! இதென்ன பெரும் மோசமாக விருக்கிறதே! ஐயோ! கடவுளே! இதுவும் ஒரு சோதனையா ?’ என்று அபாரமான சோகத்திலாழ்ந்தாள்

“பாடு” என்று சொல்லும்போது உடனே மாடாவிடில் சிலருக்குக் கோபம் வந்து

விடுகின்றது. தாமதத்திற்குக் காரணம் என்ன, அது சரியான தானா என்பதைக் கூட அவர்கள் கவனிப்பதில்லை.

# 7-வது அதிகாரம் - சினிமா நடிப்பு-இனிய சந்திப்பு

கோமதி,பாலா, கங்காதரன் ஆகியோர் “போலீஸ்” என்ற குரலைக் கேட்டு மிக்க கலக்கத்தை யடைந்து தத்தளிக்கின்றார்கள். கதவைப் பலமாகத் தட்டும் சத்தம் கேட்டதும் “ஐயோ! பேராபத்து வந்து விட் டதே! என்ன செய்வது? இவரை எவ்விதம் மறைப்பது?” என்ற கலக்கம் உண்டாகி விட்டது. “கதவைத் திறக்கின்றீர்களா, உடைத்து விடட்டுமா !” என்று வெளியில் குரல் கேட்டதும் பாலா ஒன்றுமே தோன்றாதவளாய் தம்பித்து விட்டாள்; எனினும் எப்படி யாவது தன் தந்தையை இச் சமயம் மறைத்து வைத்துத் தப்பித்துக் கொண்டு பிறகுதான் வேறு மார்க்கம் தேட வேண்டும் என்று தீர்மானித்து, உடனே ஒரு புடவையை எடுத்து

கங்காதானுக்கு உடுத்தி, முட்டாக்கு இட்டுத் தன் தாயின் படுக்கையில் அவனைப் படுக்க வைத்து, தாயை எழுந்து தைரியமாய் உட்காரச் செய்து, கங்காதானின் கால் பாகத்தில் கோமதியும், தலைப் பாகத்தில் பாலாவும் உட்கார்ந்து கொண்டார்கள். கங்காதரனை பலமாக “ஐயோ! அப்பா!’ என்று கத்தச் செய்ததோடு மஞ்சளும் சுண்ணாம்பும் குழைத்து முக க்ஷவரம் செய்த இடத்தில் அதை மறைக்கும் பொருட்டு நன்றாகத் தடவி விட்டதோடு”தலைவலி இன்னமும் தீர வில்லையா?” என்று கேட்டவாறு நீலாவைக் கதவைத் திறக்கச் செய்தாள்.

சிலர் பார்ப்பதற்கு வெகு முடுக்காகவும், கண்டிப்பாகவு மிருக்கிறார்கள். ஆனால் அவர்களுடன் நெருங்கிப் பழகிய பின் அவர்கள் மிகவும் இளகிய நெஞ்சை யுடையவர்களென்பது நன்றாகத்

தெரிகின்றது.

நீலா கதவைத் திறந்த உடனே போலீஸ்காரர்கள் இரண்டு பேர் உள்ளே நுழைந்து “எங்கே! எங்கே! அந்த திருட்டுக் கொலைக்காரன் எங்கே!” என்று கூறிக் கொண்டே சுற்று முற்றும் தேடுகையில் “ஐயோ! என்னைக் காப்பாற்ற வேண்டும்; காப்பாற்ற வேண்டும்” என்று கூனிக் கொண்டே இரு பெண்களும், ஒரு ஆண்பிள்ளையும் அவ் வீட்டுப் புறக்கடைப் பக்கத்திலிருந்து ஓட்டமாய் ஓடிவந்து “ஹா! ஹா!” என்று தத்தளித்தார்கள்.

அவ்விதம் நடக்கும் என்று சற்றும் எதிர்பாராத பாலா, கோமதி முதலியோர் நடு நடுங்குகின்றார்கள். வந்த பெண் பிள்ளைகளை அந்த ஆள் இழுத்து பலாத்காரம் செய்கிறான். “ஐயோ! அம்மா!” என்று இருவரும் கத்திக் கதறிக்கொண்டு மூலை

மூலையாக ஓடுகிறார்கள். ”எனக்கு ஆபத்தில் ஆதரிப்போரில்லையா! கடவுளே!’ என்று கத்தியவாறு ஒரு பெண் கீழே மூர்ச்சையாகி விழுந்து விட் டாள்.

இது கண்ட பாலா தட தடவென்று எழுந்து, “ஐயா ! இதென்ன அக்கிரமம்! போலீஸ்காரரின் முன்னிலையில் இத்தகைய அநியாயம் நடக்குமா? ஐயோ! போலீஸ்காரரே! இந்த சம்பவத்தை வேடிக்கை பார்த்துக் கொண்டு நிற்பதற்கா நீங்கள் வந்தீர்கள்! இந்த பெண்பிள்ளை மூர்ச்சித்து விட்டாளே! இந்த கதிகாலத்தில் இத்தகைய அக்கிரமங்கள் நடப்பது தான் தருமமா?” என்று கூறிக் கொண்டே இருக்கையில் இன்னும் இரண்டு தடியர்கள் வேகமாக வந்து போலீஸ்காரர்களைக் கட்டி உருட்டி விட்டார்கள். கீழே கிடக் கும் பெண்ணைப் பார்த்து, ஒருவன் “ஹா! கமலவல்லீ! பிண மானாயோ!

சண்டாளன் கைக்கு இரையானாயோ!" என்று புலம்பிய வாறு தன் மடியிலிருந்த துப்பாக்கியை எடுத்து முன் வந்தவனைச் சுட முயன்றான்.

இந்த விபரீதச் செய்கையைக் கண்ட பாலா முதலிய எல்லோ ரும் நடு நடுங்கி விட்டார்கள்; எனினும் பாலா வெகு தைரியமாய் "ஐயோ! இதென்ன அக்ரமம்! நீங்கள் யார்? இவ்விதம் அன்னியர்களின் வீட்டில் வந்து இத்தகைய விபரீதச் செய்கைகளைச் செய்கின்றீர்களே! துப்பாக்கிப் பிரயோகமென்ன! கொலை செய்வதென்ன! இதென்ன விபரீதம்!" என்று கூறியவாறு துப்பாக்கி பிடித்திருக்கும் மனிதனின் கரத்திலிருந்து வெடுக்கென துப்பாக்கி யைப் பிடுங்கிக் கொண்டாள்.

எப்பொழுதும் தேனொழுகப் பேசி உபசாரஞ் செய்பவர்கள் உண்மையில் அதிக அழுத்தமும், கன்னெஞ்சு முடையவர்களா

யிருக்கிறார்கள். “வெளுத்த தெல்லாம் பாலல்ல” என்பதை அது நிரூபிக்கின்றது.

அந்த மனிதன் பாலாவின் செய்கைக்கு நகைத்தவாறு, “ஆ! நான் விட்டேனா பாரு. இதோ கத்தி இருக்கிறது.” என்று கூறிக் கொண்டே கத்தியை எடுத்துக் குத்த முயன்றான். இதற்குள் கீழே விழுந்து கிடக்கும் பெண்மணி “தாகம் தாகம்” என்று சைகை செய்தாள். இதைக் கண்ட பாலா ஒடோடியும் தண்ணீர் கொணர்ந்து அந்த பெண்பிள்ளையின் வாயில் வார்க்கப் போகையில் பாலா திடுக் கிட்டாள். “ஹா! அம்மா! நாம் ஏமாந்தோம். இதில் ஏதோ மோச மிருக்கிறது. பெண்பிள்ளையாக நடித்தது ஓர் ஆண் பிள்ளையே யாகும்.” என்று பாலா கத்திக் கொண்டே விலகிக் கொண்டு மற்றொரு பெண்ணைப் பார்த்தாள். அவனும் ஆண்பிள்ளையாகவே இருப்பது

கண்டு நடுக்கலுற்றாள்.

இதைக் கண்ட எல்லோரும் கடகடவென்று நகைத்து, எழுந்து நின்றார்கள். பாலாவுக்கோ ஒன்றுமே அர்த்தம் விளங்க வில்லை; விழிக்கின்றாள். எனினும் தைரியத்தை விடாமல் “ஐயா! இதென்ன நகைப்பு! என்ன செய்கை! ஒன்றும் எனக்கு விளங்க வில்லையே!” என்றாள்.

அதற்கு அங்கு வந்தவர்களில் முதலாளியாகியவன் “அம்மணீ! பயப்படவேண்டாம்! எங்கள் வேலை முடிந்தது; நாங்கள் சென்றுவருகிறோம். எங்கள் வரலாற்றைத் தெரிவிக்காமல் சென்றால் தங்கள் மனம் எவ்விதம் சமாதானமாகும். அம்மணீ! இந்த ஊரில் ஓர் சினிமா படமெடுக்கும் கம்பெனி நாங்கள் வைத்திருக்கிறோம். அதில் முதன்முதல் ஒரு கதையை நடிக்கப் பழக்குகின்றோம்.

அக்கதையில் இத்தகைய சம்பவம் வருகின்றது. அந்த பாகத்தைத் திறமையாக நடிக்கின்றார்களா! அதனால் பிறருக்கு உண்மையிலேயே அதற்கு வேண்டிய பயம், அச்சம், முதலிய உணர்ச்சிகள் உண்டா கின்றனவா! என்று பார்ப்பதற்கே திடீரென்று ஒரு வீட்டில் புகுந்து இந்த பாகத்தை நடிக்கச் செய்தேன். உங்களுக்கேற்பட்ட உணர்ச்சி களையும், மற்றையோரின் பீதியையும் கண்டு இவர்களின் நடிப்பு நன்றாக விருக்கிறதென்று அறிந்தேன். அம்மணீ! அனுமதி இன்றி உள்ளே வந்ததற்குக் கோபிக்கவேண்டாம். நடிப்புத் திறமையைக் காணவே அங்ஙனம் செய்தோம். இங்கு நடித்ததால் உங்கள் மூலம் இன்னும் சில விஷயங்கள் நடிக்கக் கற்றுக்கொண்டோம். இக்கம்பெனியில் பெண்கள் பாகத்தை பெண்களே நடிப்பதற்கான ஏற் பாடு செய்திருக்கிறது.

பிரியமிருப்பின் நீங்கள் யாரேனும் சேரலாம். வித்தியாசம் எண்ணவேண்டாம்” என்றான்.

சங்கீதம் தெரிந்தவர்கள் இருவர் ஒரு இடத்தில் சந்தித்தால் “அவர்கள் தான் முதவில் பாடட்டுமே” என்று ஒவ்வொருவரும் சொல்லிக்கொண்டே இருந்துவிட்டுக் கடைசியில் ஒருவரும் பாடாமலே இருந்து விடுகிறார்கள்.

இதைக் கேட்ட பாலா முதலிய எல்லோருக்கும் பெரும் ஆச்சரியமுண்டாகி விட்டது. “அடாடா! ஒரு க்ஷண நேரத்தில் ஏமாந்து விட்டோமே! படக்காக்ஷிக்காரர்களா நீங்கள்! என்ன வியப்பு! என்ன சாமர்த்தியம். ஆகா! உண்மையிலேயே ஏதோ பெரிய விபரீதமான கொலை இவ்விடத்தில் நடக்கப்போகிறது. அதனால் எங்களுக்கும் பேராபத்து நோப்போகின்றது என்றல்லவோ நான் எண்ணிவிட் டேன். என்ன பயங்கரம்!”

என்றாள்.

வந்தவன்.- அம்மா! அந்த துப்பாக்கியைக் கொடுங்கள். அது வெறும் துப்பாக்கி. தோடா இல்லை. இக்கத்தியும் சாதாரண அட்டையில் செய்த கத்தி. இன்று நடிப்பின் திறமையைக் கண்டு கொண்டு நாளைய தினம் படம் பிடிக்கலாமென்று உத்தேசம். அம் மணீ! நாங்கள் உத்தரவு பெற்றுக்கொள்கிறோம். இன்று நடந்த சம்பவத்திற்கு எங்களை மன்னிக்கவும். இப்படியே ஏதேனும் ஒரு சமயம் நடிக்க சந்தர்ப்பம் கிடைத்தால் இவ்விடம் வருவோம். வித்யாசமாக எண்ணவேண்டாம்." என்று கூறி விடைபெற்றுக்கொண்டு எல்லோரும் போய்விட்டார்கள்.

நாம் யாரைக் கண்டு பேசுவதற்குப் பயந்தோ சங்கோஜப் பட்டோ பின் வாங்கி நின்றோமோ அவர்களிடத்திலேயே பின்னர் ஒரு காலத்தில் நெருங்கிப் பேசி

மிகவும் அக்தரங்கமான விஷயங்களிலும் அவர்களது ஆலோசனைப்படி நடக்க வேண்டி நேருகின்றது.

பிறகு பாலா பெரு நகை புரிந்தவாறு “அம்மா! உலகம் எவ் விதமிருக்கின்றது பார்த்தாயா! உண்மையில் போலீஸ்காரர்கள் தான் வந்துவிட்டதாக எண்ணி அப்பாவுக்கு இத்தகைய மொட்டச்சி வேஷங்கள் போட்டு நாமும் நடித்தோமே! இவ்விதம் திடீரென்று வந்து தடபுடல் செய்தால் என்ன நினைப்பது?” என்றாள்.

கங்காதரன்.கண்மணி! பாலா! எனக்கு ஓர் தோன்றுகின்றது. எந்தவிதமான சம்பவத்தை உண்டாக்கியபோதி லும் கடவுள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு நன்மையை வைத்திருப்பார் என்பது பெரியாரின் வாக்கு; இன்று இந்த அதிசயமான சம்பவத்திலும் ஒருவிதமான

நன்மை நமக்கு ஏற்படக்கூடுமென்று நான் நினைக்கின்றேன்! என் மனத்தில் கடவுள் அத்தகைய எண்ணத்தை உண்டாக்குகின்றார். அம்மனிதன் கேட்டதுபோல நாம் பிரியப்பட் டவர்கள் இந்தப் படக்காக்ஷியில் நடிக்கலாமல்லவா! என்னை என்னவோ ஒரு பெருங் குற்றம் சூழ்ந்துகொண்டிருக்கின்றது. நான் எந்த விடத்திலிருப்பினும் அவ்வாபத்து துடர்ந்து வந்தாலும் வரலாம். அவ்வாறு வந்தால் தப்புவதற்கு முடியாது, நான் இக்கம் பெனியில் சேர்ந்து அவர்களுடனேயே சுற்றிக்கொண்டிருக்கலாமா என்று தோன்றுகின்றது. ஏனெனில் படம் பிடிப்பவர்கள் ஒரே இடத்தில் எடுக்கமாட்டார்கள். பல இடங்கள் சுற்றுவார்கள். அவர்களோடு நான் சென்று சேர்ந்துவிடுகிறேன். அதோடு என்னைப் பார்த்தால் சாதாரணமாக அடையாளம்

தெரியாது. நான் என்னோடு நீலாவையும் அழைத்துக் கொண்டு அப்படக் காட்சியில் சேர்ந்து நடிக்கிறேன். அவளோ சிறுமி. என்னை யப்படி கண்டு பிடித்துக் கேட்டால் நான் நீலாவுடன் தப்பித்துக் கொள்ளலாம் என்று தோன்றுகின்றது. ஆதலால் என்ன சொல்கிறீர்கள்?

சில அச்சாபீஸ்களில் ஆரம்ப முதல் வேலையை வெகு ஒழுங்காகவும் திருப்திகரமாகவும் செய்து அது முடிவு பெறுகையில் ஒரு சிறிய விஷபத்தில் தப்பு செய்து முழு வேலையையும் கெடுத்து விடுகிறார்கள். குதிரைப் பந்தயத் தில் வெகு ஜோராக முன்னால் வந்த குதிரை கடைசி நிமிஷத்தில் திடீரென்று நின்றோ,கீழே விழுந்தோ அபஜெயத்தை யுண்டாக்குவது போலிருக்கின்றது

பாலா - இதென்ன திடீரென்று ஏதோ

பெரிய யோசனை செய்துவிட்டீர்களே! நீங்கள் குற்றவாளி என்ற பயத்துடனிருப்பவர்கள் ஒளிந்து மறைவிடத்தில் இருப்பின் நலமா! அன்றி பகிரங்கமாகப் படக்காட்சியில் சேருவது நலமா என்பதை யோசித்துப் பாருங்கள். நான் இது விஷயமாக உடனே பதில் கூறமுடியாது. சற்று நிதானித்து யோசித்துச் சொல்கிறேன்.

கோமதி;- பாலா! அப்பா சொல்வது எனக்கும் சரி என் தோன்றுகின்றது. ஏனெனில் அவர் எந்தவிதமாவது தப்பித்துக் கொள்ளும் வழியைச் செய்யவேண்டுவது நமது கடமையாகும். அவர் யாரோ சினிமாவில் நடிப்பவர் என்ற நிலைமையில் இந்த தீவை விட்டுக் கடந்து விட்டால் பிறகு நாமும் எந்தவித மார்க்கத்தைச் செய்தேனும் நமது தாய் நாட்டிற்குச் சென்றுவிடலாம். ஆதலால் அவருடைய விருப்பப்படிக்கு நீலாவையும்

உடன்கூட்டி யனுப்பு வோம். நீலா! என்ன சொல்லுகிறாய்! எந்த சமயத்திலும் உன் சகோதரியின் சாமார்த்தியத்திற்கு நிகராக நீயும் நடக்கவேண்டும். நீ உன் பிதாவுடன் தனித்துச் சென்ற பிறகு அவருடைய உயிரைக் காப்பாற்றக்கூடியவள் நீதான். தெரியுமா! என்ன சொல்லுகிறாய்?

நீலா - நான் எல்லாவற்றையும் கவனித்தேன் வாஸ்தவம்தான். அப்பா சற்றுமுன் தெரிவித்ததுபோல எந்த சம்பவத்திலும் கடவுளின் மறைந்த நோக்கமும் நன்மையும் இல்லாமலில்லை. அதாவது இங்கு வந்தவர்களை நீங்களும் கவனித்தீர்கள்: நானும் கவனித்தேன். நீங்கள் ஆட்களின் செய்கையை மட்டும் கவனித்தீர்கள். நான் ஆட்களையே கவனித்தேன். அவர்களில் ஒருவன் அதாவது பிறகு ஓடிவந்தவர்களில் ஒருவன்

முகம் அசல் அம்மாவின் முகம்போலவே இருக்கின்றது. அவ்வாறு அவனுக்கு நம்முடைய தாயாரின் முகம் இருக்கவேண்டிய காரணம் என்ன என்று யோசித்தேன்! அந்த தடபுடலில் அதை வெளியிடலாகுமா! கூடாதே என்று அஞ்சினேன்; பயந்தேன். அம்மா! நீ எங்களுடைய அண்ணன்மார் இருவரை இழந்துவிட்டதாக அடிக்கடி தெரிவிப்பாயே! அவர்களில் ஒருவனாக அம் மனிதனிருக்கக்கூடுமோ என்று என் மனம் அப்போதிலிருந்து சந்தேகப்படுகின் றது. முதலில் அந்த சந்தேகம் நிவர்த்தியான பிறகு நாம் மற்றைய விஷயங்களை யோசிக்கலாம் என்று எனக்குத் தோன்றுகின்றது” என்றாள்.

ஒரு காரியத்தைச் செய்ய வேண்டுமென்று ஒருவர் பலதரம் கெஞ்சிக் கேட்டும் அதற்கு ஒத்துக் கொள்ளாதவர், அதே காரியத்தைப் பற்றி வேறொருவர் கேட்கையில் முதல்

தடவையிலேயே அதற்குச் சம்மதித்துவிடில், அதனால் முதலில் கேட்டவர் மற்றவரை உயர்த்தித் தன்னை அவமதித்து விட்டதாக நினைக்கவேண்டி சேருகின்றது. ஆனால் உண்மையில் அவ்விதமில்லை; ஏதோ சந்தர்ப்பத்தை உத்தேசித்து அவ்வாறு செய்தது என்பது அவர்கள் அறிவதில்லை.

இது கேட்ட மூவரும் வியப்புற்று “ஆ அப்படியா! ஐயோ! இந்த தடபுடலில் நாங்கள் அவனைக் கவனிக்கவில்லையே! என் கண்மணி கேசவனோ! அன்றி மருதப்பாவோ! இருவரையும் இனி நான் உயிருடன் காண்பேனா! ஆ! நீலா! நீ இச்செய்தியைக் கூற பயப்படலாமா? இதை அப்போதே எங்களில் யாரிடமாவது சொல்லி இருக்கலாகாதா! இனிமேல் நாம் அவர்களை எங்கு காண்பது? ஐயோ! என் செல்வர்களில் ஒருவனாக விருந்து நான்

கண்ணால் கண்டால் உடனே என்னுடைய பிணி நீங்கிவிடுமே! கேசவா! மருதப்ப!” என்று கோமதி புலம்பவாரம்பித்தாள்.

பாலா - அம்மா! நீலா என்னை விடப் புத்திசாலி என்பதை இப்போதே நிதர்சனமாகக் காட்டிவிட்டாள். வந்தவர்களை நான் கவனியாது விட்டுவிட்டேன். இப்போதும் மிஞ்சி விடவில்லை. நான் எந்த விதத்திலாவது அவர்களைக் கண்டுபிடித்து அந்த மனிதனை உன் முன்பு கொண்டு நிறுத்துகிறேன். இதுவிஷயத்தில் நானே ஆண் பிள்ளைகளைப் போலத் துணிகரமாக வேலை செய்கிறேன். நீ பயப் படாதே!” என்று தேறுதல் கூறினாள்.

நாம் ஒருவரோடு பேசியதைப் பற்றி அவர்களைச் சேர்ந்தவரிடத்தில் சொன்னால் ஏதாவது அவர்கள் நினைத்துக் கொள்ளப் போகிறார்களே யென்று நாம் அவரைச்

சந்திக்கவே யில்லையென்று மனச் சாக்ஷிக்கு விரோதமாகப் பொய் சொல்ல நேருகின்றது.

பிறகு தினந்தோறும் பாலா அந்தப் படக்காரர்களைச் சந்திக்கும் நோக்கத்துடனேயே வேலை செய்ய வாரம்பித்தாள். தன்னுடைய வேலையையும் கவனிப்பதோடு, தினந்தோறும் வீதி வீதி யாக அலைவது ஏதேனும் தகவல் கிடைக்குமா என்று பார்ப்பது இவ்விதமே சில நாட்கள் கஷ்டப்பட்டாள். ஒன்றும் புலன் கிடைக்க வில்லை. அதுவே கவலைகொண்டு சில மாதங்களைக் கடத்தினாள்.

கங்காதரன் வீட்டை விட்டு அசையவில்லை. சதா பெண் வேடத்திற்குள்ளேயே மறைந்திருந்தான். ஒரு தினம் வேலைக்குப் போய்விட்டுத் திரும்பி வருகையில் அன்று வந்த சினிமாவின் முதலாளி எதிரில் சந்தித்தான். உடனே அம்மனிதன்

வெகு வணக்கத்தோடு, மரியாதையாய் “அம்மா! வந்தனம். என்னைத் தங்களுக்கு நினைவிருக்கிறதா!” என்று கேட்டான்.

உண்மையில் அவனைப் பார்த்துச் சிலகால மாகிவிட்டதால் அவளுக்கு நினைவு முதலில் இல்லை எனினும் உற்றுப் பார்த்தவளவில் நன்றாக ஞாபகம் வந்துவிட்டது. பிறகு “ஒகோ! தாங்களா! எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கின்றதே! தாங்கள் படக்காட்சியின் எஜமானரல்லவா! பேஷ்! அன்றைய தினம் நான் உண்மையில் நடு நடுங்கிவிட்டேன்! பிறகு தங்களைக் காண்பதற்கே இல்லாதுபோய் விட்டது. கம்பெனி எப்படி நடக்கின்றது. எத்தனை நாடகங்கள் நடித்தாயிற்று?” என்று சாதாரணமாக விசாரித்தான்.

எஜமானன்.-பிறகு ஐந்து நாடகங்கள் தயாராகிவிட்டன. சினிமாப் படம்

தயாரிக்கையில் உங்களுக்கு டிக்கட்டு அனுப்புகி றேன். நீங்கள் பார்ப்பதற்கு வாருங்கள். நாங்கள் இப்படம் எடுப்பதற்காக காடுமேடுகள் எல்லாம் திரிந்துகொண்டிருக்கிறோம். ஆதலால் தான் தங்களைப் பார்க்க முடியவில்லை.

யாராரிடத்தில் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்பதே சிலருக்குத் தெரிவதில்லை. ஆனால் அவர்கள் தங்கள் சுய மதிங்பைக் கெடுத்துக் கொள்வ அடன் தங்களைச் சேர்ந்தவர்களையும் மிதவும் இக்கிட்டான நிலைமையில் வைத்து விடுகிறார்கள்.

பாலா:- ஒ! அப்படியா! நானும் என் சகோதரியும் உங்கள் கம்பெனியின் நடிப்பைப் பார்ப்பதற்கு ஆவல்கொண்டோம். ஆனால் எங்கே நீங்கள் இருக்கின்றீர்கள் என்பதே எங்களுக்குத் தெரியா தாகையினால்

சந்திக்கக்கூடவில்லை. மற்றொரு சமயம் பார்ப்பதற்குக் கூடுமானால்,

எஜமானன்;- ஏன் அப்படி கூடுமானால் என்கிறீர்கள். இப்போது ஒரு ரஸமான நாவல் வெகு அழகாக இருக்கின்றது. எங்கள் கம்பெனியில் உள்ள ஒரு நடிகன் தானே எழுதி நடித்து எடுக்கப்படுகிறது. அது நாளை நடிக்கப்படும். அதற்கான இடங்கள் தயார் செய்து வைத்திருக்கிறோம். அதைத் தாங்கள் பார்ப்பதாயின் நாளைக் காலையில் வரலாம். இதோ விலாசம்.

பாலா.- நாவல் எழுதக்கூடிய திறமையுள்ளவர்களே உங்களுக்கு நடிகராக இருப்பது மிக்க சிலாக்கியமானதல்லவா! அவர் யார்? அவருடைய பெயரென்ன!

எஜமானன்.- அவர் பெயர் சுப்பிரமணியனாம், வெகு நல்லவர். வெகு

நல்ல மாதிரி தரிங்கள் நாளை வந்தால் அந்தக் கதையில் அவரே நடிப்பார்; பார்க்கலாம்.- என்றான். “சரி நாங்கள் வருகிறோம்” என்று கூறி உத்தரவு பெற்றுக்கொண்டு பாலா வீடு சென்றாள். இங்கு நடந்த விஷயங்களை பாலா தன் பெற்றோருக்குக் கூறினாள்.

இது கேட்ட பெற்றோரும் நீலாவும் சந்தோஷப்பட்டு அன்று காலை நேரத்தை எதிர்பார்த்துக் கொணடிருந்தார்கள். அழகான காலை நேரம் வந்தது. பாலா, நீலா, கோமதி மூவருமட்டும் ஓர் வண்டி யமர்த்திக்கொண்டு கடிதத்தில் கண்ட விலாசத்திற்குச் சென்றார்கள். கோமதியின் தேக நிலைமை வெகு கேவலமாக விருக்கிறதெனினும் இங்கு ஒருகால் தன் புத்திரனைக் காணக் கிடைக்குமோ என்று எதிர்பார்க்கும் ஓர் வாஞ்சையினால் அதைக் கவனியாது புறப்பட்டாள். ’அன்பு செய்யாத காரியம்

அவனியில் உண்டா?”

சிலர் செய்யும் தப்பான காரியத்தைப் பற்றிப் பிறர் சொன்னால், சிலர் தங்கள் தப்பை ஒத்துக்கொண்டு தங்களை திருத்திக் கொள்கின்றார்கள். வேறு சிலர் தாங்கள் செய்ததே சரியென்று விதண்டா வாதம் செய்கிறார்கள், மற்றும் சிலர் அந்த விஷயத்னித மறைத்துவிட்டு ஏதோ விளையாட்டுத்தனமாகச் செய்ததாகச் சொல்லி சிரிக்கின்றர்கள். அவரவர் மனோ பாவத்திற்குத் தக்கபடி நடக்கின்றார்கள்.

இவர்களைக் கண்டதும் எஜமானர் வெகு மரியாதையாக வரவேற்று உட்காரச் செய்தார். இக்கதையின் முதல் சில பாகங்கள் ஏற்கெனவே நடந்துவிட்டதால், விட்ட இடத்திலிருந்து நடிக்க ஆரம்பமாயிற்று. அன்று ஆரம்பக் கதையில்,- ஒரு வீட்டு வாசலில் அனேகக்

கூட்டம் நிறைந்திருக்கின்றது. அப்போது அக்கூட்டத்து மத்தியில் ஒரு பையன் அழுதுகொண்டு நிற்கிறான். போலீஸ்காரன் பையனைப் பிடித்துக் கொண்டு “இப் பையனா திருடினான்?” என்று கேட்கிறான். அங்கிருப்பவன் “ஆமாம். ஆமாம்.” என்று பதில் சொல்கிறான். அந்த பையன் எதிரிலிருக்கும் ஒரு குழந்தை “இவன்தான் என் காப்பைக் கழட்டியது” என்று சொல்கிறது.

இந்த சம்பவத்தைக் கண்ட்கோமதிக்கு தன் மகன் ஆதியில் காப்புத் திருடிய சம்பவம் நினைவிற்கு வந்து துக்கம் பொங்கிவிட் டது. அதே சம்பவம் இங்கு நிகழ்வதாகவே தோன்றியது. தன் துயரத்தை அடக்கிக்கொண்டு பின்னும் கவனிக்கையில் ஓர் பெண்மணி மெல்ல நடந்து வருகிறாள். அவள் அந்த சம்பவத்தைக் கண்ட தும் அலறுகிறாள். அந்தப் பையன் “அம்மா!

நான் இனிமேல் திருடவில்லை. அம்மா!” என்று அழுகின்றது. ஆனால் போலீஸ் காரன் பையனைப் பிடித்துக்கொண்டு போகிறான். உடனே அந்த வீட்டுக்காரர்கள். சகல தட்டுமுட்டு சாமான்களையும் வீதியில் எடுத்து எறிந்துவிடுகிறார்கள். அந்தப் பையனின் தாயார். புலம்பியபடியே இரு பெண் குழந்தைகளையும் ஒரு ஆண் குழந்தையையும் அழைத்துக் கொண்டு அழுதுகொண்டே வெளியே போகிறாள்.

எப்பொழுதும் பொய் சொல்வதே தங்கள் நியாயமான தொழில் என்று சிலர் நினைக்கின்றனர். ஒரு விஷயத்தைப் பேபரில் தாங்களே நேரில் பார்த்த தாகச் சாதிக்கின்றனர். பிறகு அந்த விஷயம் பேபரில் இல்லாமல் தாங்கள் சொன்னது முழுப் பொய்யென்று நிரூபிக்கப் பட்டுவிடின் தங்கள் மானம் போய் விடுமே என்கிற

எண்ணமே அவர்களுக்குண்டாவதில்லை. மானம் என்றால் ஆகாசம் என்கிற ஒரு அர்த்தம்தான் அவர்களுக்குத் தெரியும் போலும்.

இந்த இடத்தைப் பார்த்ததும் கோமதிக்கு இது தன்னுடைய கதைதான் என்று நன்றாகத் தெரிந்துவிட்டது. அதற்குமேல் அவள் துக்கம் தாங்க முடியவில்லை. இடையில் தான் சென்று ஏதே னும் கேட்டால் தனது உருவமும் அப்புகைப் படத்தில் விழுந்து விடுமாகையினால் இன்னும் என்ன நடக்கின்றது பார்க்கலாம் என்று பொறுமையாக உட்கார்ந்திருந்தாள்.

போலீஸ்காரன் அழைத்துச்சென்ற பையனை நன்றாக உதைக்கின்றார்கள்; ஜெயிலில் போட்டு விடுகின்றார்கள். சில வருடங்கள் கழித்துப் பையன் விடுதலையடைகிறான். விடுதலை

யடைந்ததாகக் கதையில் வரும் போது முன் நடித்த பையனின்றி வேறு ஒருவன் நடிக்கின்றான். அவனைப் பார்த்தவுடனே கோமதிக்கு திடுக்கிட்டது. அப்போது நீலா, “அம்மா! இவனைத்தான் நான் சொன்னேன். இவன் முகத்தைப் பாரு. அக்கா! இவன் முகத்தைப் பாரு. இவன் நமது தாயாரின் ஜாடையாகவே இருக்கின்றான் பாரு.” என்று காட்டினாள்.

பாலாவும் கோமதியும் உற்று நோக்கி “ஆம்; ஆம். இவன் கேசவனல்ல! இவன் மருதப்பாவைப் போலிருக்கின்றது,”ஹா! மருதப்பன்தான் மருதப்பன் தான் ” என்று தம்மை மீறி பேசிக் கொண்டார்கள். இதற்குள் நீலா “அம்மா! இவன் பெரிய அண்ணனா, சிறிய அண்ணனா?” என்றாள். அதற்கு கோமதி “அம்மா! இவன் தான் பெரிய அண்ணன். இவனை நான் சென்று

அணைத்துக்கொள் கிறேன்" என்று பறந்தாள். நீலாவும், பாலாவும், " அம்மா! பொருள் நம்முடையது என்று தெரிந்துவிட்டது. இனிமேல் நம்மிடம் சேர்ந்துவிடும் சமயம் கிட்டிவிட்டது. இந்தக் கதையோ நமது சொந்த கதையாக இருக்கிறது. இதை எழுதியவனோ யாரோ சுப்பிரமணியனாம். அவனுக்கு நம்முடைய உளவுகள் எப்படித் தெரிந்தன. எந்த மட்டில் தெரிந்திருக்கிறது என்று இன்னும் சற்று நேரம் கவனிப்போம் இரு. இப்போது இடையில் கலைத்துவிட்டால் அவர்களுக்கும் கலைந்துவிடும். ஒருகால் படத்தில் நாமும் விழுந்து விடுவோம். ஆகையினால் நீ பேசாமலிரு" என்று அடக்கினார்கள்.

சிலருக்குப் பிற ஸ்திரீகளுடன் தாங்கள் தாராளமாகப் பேசவேண்டுமென்கிற ஆசை. ஆனால் தம் வீட்டு ஸ்திரீகள் அவர்களது நெருங்கிய உறவினருடன் பேசினாலும் அது

பெருங் குற்றமாம். இது என்ன நியாயமோ?

பிறகு நாடகத்தில் விடுதலையான பையன் வெளியே வந்ததும் நேரே தன் வீட்டிற்குப் போகும்படியாகச் சொல்லியனுப்புகிறார்கள். பையன் வீட்டிற்குச் செல்லாது வேறு எங்கேயோ சுற்றி அலைகின்றான், சில சோதாக்களுடன் சேர்ந்து தத்தாரியாகத் திரிகின்றான். அவர்களோடு வேறு ஒரு வீட்டில் திருடுகிறான். அந்த பணத்தைக் கொண்டு துன்மார்க்கமான பல வழிகளிலும் செலவிடுகிறான். அவன் தன்னுடைய சோதாக்களுடன் பின்னும் ஒரு வீட்டில் திருடி தண்டனை யடைகிறான். அதிலிருந்து மீட்சி யடைந்த பிறகு, ஒரு குழந்தை நிறைய நகைகளோடு ஒரு கோயிலுக்குச் சென்று வழி தப்பிவிடுகிறது. அது அழுதுகொண்டே இருக்கையில் அக் குழந்தையைப் பார்த்த இவன் அதைத் தூக்கிக் கொண்டு ஓரிடத்திற்கு

வந்து நகைகளை எல்லாம் கழட்டிக்கொண்டு குழந்தையைக் கிணற்றில் தள்ளப்போகிறான்.

அச் சமயம் அவனை யறியாத ஓர் விதமான உணர்ச்சி உண்டா கின்றது. “ஆ! இக் குழந்தை என் சகே தரி பாலாவின் சாயலாகவன்றோ இருக்கின்றது. குழந்தையைக் கிணற்றில் தள்ளிக் கொலை செய்வதற்கா நம் மனந்துணிந்து விட்டது. ஐயோ! திருட் டுப் புத்தியிலிருந்து கொலைக்குமா வந்து விட்டோம். குழந்தை பரிதாபமாக அழுவதைக் கண்டும் இரங்காமல் அதன் நகைகளைக் கழட்டினோம். குழந்தையைக் கிணற்றில் தள்ளப் போகிறோமா! சீச்சீ1 கொலை செய்ய வேண்டாம். அதிலும் பால் மணம் மாறாத குழந்தையைக் கொலை செய்ய வேண்டாம். குழந்தையோ கிருஷ்ண விக்ரகம் போன்ற ஆண் குழந்தையாக விருக்கிறது. ஐயோ! என் தாயார் எனக்குப் பல விதமான

புத்திகளைக் கூறி எத்தனை விதத்தில் என்னைத் திருத்த முயன்றும் என் திருட்டு மதி என்னைக் கடைசி வரையில் விடாது பாழாக்கி விட்டதே! ஒருவித பாபமும் செய்யாத, உலகமே அறியாத ந்த பச்சைக் குழந்தையைக் கொலை செய்வதால் அதன் பெற்றோரின் வயிறு எவ்விதம் துடிக்கும்? அதன் ஆத்மா எவ்விதம் தத்தணிக்கும்? அடடா! இந்த யோசளை எனக்கு திடீரென்று உண்டானதற்குக் காரணம் யாதாக இருக் கும்?" என்று வெகு நேரம் யோசிக்கின்றான். திருடிய நகைகளை எல்லாம் ஒரு முறை பார்க்கிறான். திருட்டு ஆசையினால் அவைகள் மிக்க அழகாக விளங்குகின்றன. குழந்தையின் முகத்தைப் பார்க்கிறான். அவனை பறியாத விதமான உணர்ச்சி ஒன்று போராடுகின் றது. அவ் வுணர்ச்சிக்குக் காரணம் அவனுக்கே தெரியவில்லை. இவ்

விதமான யோசனையுடன் சற்று நேரம் குழம்பிக் கொண்டே இருக்கையில் அவ் வழியாகச் சென்ற ஒரு பீட் சேவகன் இங்கு இவன் குழந்தையையும், நகையையும் வைத்துக் கொண்டு நிற்பதைப் பார்த்து விடுகிறான்.

ஒரு விஷயத்தைப் பற்றி இருவருக்குள் தர்க்கம் நேர்ந்த பிறகு அதைப் பற்றிப் பிறரிடம் சொல்ல தேருகையில் இருவரும் வெவ்வேறு விதமாகச் சொல்கிறார்கள். இதிலிருந்து எப்படி உண்மையைக் கண்டு பிடிப்பது?

அவ்வாறு பார்த்ததும் இவன் பழய கே-டி என்று தெரிந்து விடுகின்றது. உடனே அங்கு ஓடோடி வந்து இவனைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு “அடேய் திருட்டுப் பயலே! நீ இதுபரியந்தம் பலதரம் ஜெயிலிலிருந்தது போதாதென்று இப்போதும் உன் பழக்கத்தை விடாது ஆரம்பித்ததோடு குழந்தையைக்

கிணற்றிலுமா போட்டுக் கொலை செய்யப் போகிறாய்!” என்று கூறி அவனை பலமாகப் பட்டார் பட்டார் என்று அடித்து ” அடேப் திருட்டு நாயே! உன்னுடைய திருட்டுப் புத்தி உன்னை விட்டுப் போகவில்லையா !” என்று கூறிக் கொண்டு அவனை இழுத்துக் கொண்டு குழந்தையுடன் போலீஸ் ஸ்டேஷனுக்குச் செல்கிறான். அங்கு குழந்தை யாருடையதென்று விசாரித்து அதற்குரித்தான வர்களையும் வரவழைத்து வழக்கு விசாரணை செய்து அந்தக் குழந்தையைக் கொல்ல முயன்ற குற்றத்தில் அவனுக்குத் தண்டனை விதிக்கிறார்கள்.

ஒரு முக்கியமான காரியத்தைச் செய்வதற்கு நாம் எல்லா வகையிலும் தயாராயிருந்தும் அது நம்மை யறியாமலேயே தாமதப் படுகின்றது. இதனால் தான் ஆன்றோர் ”அடுத்து முயன்றாலும்

ஆகுநாளன்றி எடுத்த கருமங்கள் ஆகா“ என்றனர் போலும்.

அப்போது அவன் எதுவுமே வாய் திறவாது பிரமித்து கிலி பிடித்து விடுகிறான். தான் பெருங் கொலைசெய்ய எண்ணிய தப்பித்தத்தை எண்ணித் திடுக்கிட்டு பெருமூச்செறிகின்றான். அப்போது அவன் தாயை எண்ணிப் புலம்புகிறான். பிறகு அவனை சிறைச் சாலையிலடைத்து விலங்குமிட்டு விடுகிறார்கள். அவ்விதம் சிறைச் சாலையிலிருக்கையில் அவனுக்கு மாவு அரைத்தல், செக்கு இழுத் தல், கவலையில் தண்ணீர் பாய்ச்சல், நெல்லு குத்தல் முதலிய பல வேலைகளைச் செய்யும்படியாக தண்டனை விதிக்கின்றார்கள்.

இதற்கு முன்பு அவன் சிறைச்சாலையிலிருக்கையில் இத் தகைய

தண்டனை எதுவும் அனுபவித்தறியவில்லை. ஏதோ சாதாரணமான வேலையைச் செய்து வந்தான். ஆதலால் அவனுக்கு இப் போதுதான் சிறையில் படும் துன்பம் நன்றாகத் தெரியலாயிற்று. இயந்திரக் கல்லைப் பிடித்து ஒரு தினம் மாவு அரைக்கையில் அவ னால் தாங்க முடியாமல் கோவெனக் கதறியழுது "ஹா! கடவுளே! நீ ஒருவன் இருக்கின்றாய் என்பதை இதுகாறும் தெரியாத பாவியாகி விட்டேனே! என் தாயே! குண பூஷணமே! பொறுமையில் சிறந்த புனிதவதியே! உன்னுடைய பொன்னுரையைக் கேளாது மூர்க்கனாய்த் திரிந்து அஷ்ட சகவாசம் செய்து துன்மார்க்கனாகி விட்டேனே! ஆ! என் அன்னையே! என் வினையன்றோ உன்னை மதியாது எதிர்த்துப் போராடும்படியாகச் செய்தது!" என்று கதறுகின்றான்.

இந்த பாகத்தைப் பார்த்துக் கொண்டே

இருக்கையில் கோமதி யின் மனம் துக்கத்தினால் பொங்கி “ஆ! என் கண்ணே! மருதப்பா!” என்று கத்தக் கூடிய நிலைமைக்கு அவள் வந்து விட்டாள். இதையறிந்த பாலா “அம்மா! நாம் இங்கு இதை கவனிப்பதை அவன் அறிந்தால் மனம் முறிந்து வெட்கத்தினாலும் துக்கத்தினாலும் துன்பப்படுவான். ஆதலால் நாம் இருப்பதை இப்போது காட்டிக் கொள்ளக் கூடாது. மேலும் இவ் விஷயத்தை எல்லாம் நாம் அறிய வேண்டியது கடமையல்லவா! அவன் வெறுமனே வாயினால் சொல்லக்கேட்டு அறிவதைவிட இவ்விதம் பார்ப்பது நல்லது. இந்தக் கதையை பகிரங்கமாக நடிக்கையில் இதைப் பார்க்கும் இவனைப் போன்ற ஆசாமிகளும் துன்மார்க்கத்திலிறங்காமலும் ஈடுபடாமலும் இருக்கலாம்; இறங்கியவர்களும் திருந்தலாம். நாம் இப்போது சற்று

பொறுமையை வகித்தோமானால் மற்றையோருக்குப் பெரும் உபகாரத்தைச் செய்தவர்களாவோம். மேலும் இப்போது அவன் நடிக்கின்றானே யொழிய உண்மையில் கஷ்டப்படவில்லையம்மா ! இதை முதலில் கவனி. அண்ணா! இப்போது நம்மைப்போல எதேச்சாதிகாரமாகத் தானிருக்கிறான். ஆகையினால் சற்று நிதானி.” என்று தேற்றினாள். பிறகு கோமதியும் சற்று பொறுமையோடு அமர்ந்தாள்.

எல்வளவு அன்யோன்ய ஸதி பதிகளாயினும், அண்ணன் தம்பிகளாயினும், தகப்பன் பிள்ளையாயினும் சரி, பண விஷயத்தில் மனஸ்தாபம் ஏற்படா திருப்பது மிகவும் அர்லபம். இதற்குக் காரணம் மனிதரிடமுள்ள பாசத்தை விடப் பணத்தினிடம் அதிகமிருப்பது தான்.

பிறகு மாவு அரைக்கும் மனிதன்

தன்னால் கேழ்வரகு அரைக்க முடியாமல் தத்தளிக்கின்றான். அதிகாரிகள் கொடுத்த நேரம் கடந்து விடுவதால் அதிகாரி சவுக்கு கொண்டு வந்து "ஏ கொலைகாரப் பாவியே! இன்னும் மாவு அரைக்கவில்லையா! இத்தனை நேரம் என்ன செய்தாய்! ஏன் அரைக்கவில்லை?" என்று கூறிக் கொண்டே சுளீர் சுளீர், என்று அடிக்கின்றான். அவன் அந்த அடியின் வேகத்தைத் தாங்காது "ஆ! கடவுளே! கடவுளே! எனக்கு இன யாவது நல்ல புத்தியைக் கொடுப்பாயா! ஐயோ! அம்மா!" என்று கதறி மூர்ச்சையாகிறான்.

தான் பகலிலுங்கூட ஓயாது தூங்குவது. எவ்வளவு முக்கியமான காரிய மாயினும் பிறர் தன்னை எழுப்பினால் நரஸிம்மாவதாரம் எடுப்பது. ஆனால் தான் யாரிடமாவது ஒரு காரியமாகப் போகையில் அவர்கள் அயர்ந்து தூங்கிக் கொண் டிருந்தால் அவர்களை

உடனே எழுப்பும்படிச் சொல்வது. இதென்ன நியாயமோ?

அடுத்த நாள் செக்கு இழுக்கும்போது கண்ணீர் வடிகின்றது. “ஐயோ! கடவுளே! என்னைப் போன்ற துர்ப்புத்தியுள்ளவர்களை இனி உலகத்தில் பிறப்பிக்காதே. அவர்களை நல்வழிப்படச் செய்து விடு. நான் படித்து என்னுடைய அறிவை விருத்தி செய்து கொண்டிருந்தேனேயானால் இவ்விதம் சிறையில் சிறுமைப்பட வேண்டுவதில்லையே! என் போன்ற இளம் வாலிபர்களே! நீங்கள் ‘கடவுள் ஒருவன் இருக்கிறான். ஆக்குவதும் அழிப்பதும் அவன்தான். அவனால்தான் உலகமிருக்கின்றது’ என்று உங்கள் அறிவு உங்களுக்குத் தெரிந்த உடனேயே நம்புங்கள். என் போன்று பாபத்திற்குப் பங்குதாரி யாக வேண்டாம். துஷ்ட சகவாசம் செய்யவேண்டாம். சிறு பிரா யத்தில் கோலியாடித் திரிய

வேண்டாம். தாயின் சொல்லை அலக்ஷயம் செய்ய வேண்டாம். என் போன்று செக்கு இழுக்கும் மனிதனாக வேண்டாம்” என்று தன் போக்காகக் கதறுகின்றான்.

இதைக் கண்ட அதிகாரி, “அடேய் திருட்டு நாயே ! உன் வேலைபைக் கவனியாது ஏதேதோ உளறுகின்றாயா! யாருக்கடா இங்கு புத்திமதி கூறுகின்றாய்! உன்னெதிரில் இருப்பவர்கள் உன் போன்ற பழைய-கேடிகள் என்பதை மறந்து உளறுகின்றாயோ? உன் பவிஷுக்குப் பெரிய வேதாந்தம் படிக்கின்றாயே! உன் வேதாந்த மூட்டையைத் தூரே கட்டி வை; அதை அவிழ்க்க செக்கு இழுக்கும் இடம் சரியல்ல! உம், நட!” என்று அதட்டி உதைக்கின்றான்.

அதற்கு அடுத்த நாள் கவலையில் தண்ணீர் பாய்ச்சுகிறான். மேலும், பள்ளத்திலும் ஏறி ஏறி இறங்குவதற்குள்

சிரமம் தாங்காது மூர்ச்சையாகி விடுகிறான். பிறகு மறுதினம் வண்டி இழுக்கிறான். இவ்விதமான கஷ்டங்களைச் சிறையில் படுகையில் கொஞ்ச கொஞ்சமாய் புத்தி மாறுதலை யடைந்து தன் குற்றத்தை உணர்ந்து சதா கதறியவாறு தன் காலத்தைக் கடத்துகிறான். "எப்போது நான் விடுதலையடைந்து என் தாயைக் காண்பேன்?" என்கிற ஏக்கம் பிடித்துவிடுகின்றது. தன் சகோதரிகளையும் சகோதானையும் நினைத் துப் புலம்புகிறான். விசனத்தினாலும் கடின வேலையினாலும் உடம்பு எலும்புக் கூடாக ஆய் விடுகின்றது. சிறைச்சாலையிலேயே நடக்கவும் மாட்டாது மிக்க மெலிந்து போய் விடுகிறான்.

ஆயிரக் கணக்கான ரூபாய் விலையுள்ள பொருள்களை ஆயிரம் தம்பிடியும் பெறுமானமில்லாத காவற்காரன், தட்டான்,

வண்ணான் முதலியவர்களிடம் நாம் ஒப்புவித்து ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளச் செய்கிறோம். ஆனால் அவர்களுக்குக் கூலி கொடுக்கையில் இன்னும் சில தம்பிடிகள் சேர்த்துக் கொடுத்து அவர்களைத் திருப்தி செய்து அவர்கள் இன்னும் அதிக நம்பிக்கைக்குப் பாத்திரமுள்ளவர்களாயிருக்கச் செய்ய நமக்கு மனம் வருவதில்லை.

சதா! “அம்மா! அம்மா!” என்று வாய்ப்பிதற்றுகிறான். பிறகு விடுதலை தினம் இன்னும் இரண்டு நாட்கள் தான் இருக்கின்றன என்ற செய்தி தெரிந்ததும் எங்குமில்லாத உற்சாகம் பொங்கிவிடுகின்றது. “என் தாயைக் கண்டு களிக்கும் நாள் சமீபித்துவிட்டது; இனி என்னுயிர் போனாலும் நான் தாயின் வாக்கை மறுப்பதில்லை, நான்

இங்கிருந்து விடுதலை யடைந்தவுடனே முதல் முதல் தாயின் அருகில் ஓடி அவள் பாதத்தில் விழுந்து பலகோடி தண்டனிட்டு அவளிடம் நான் செய்த குற்றத்திற்காகக் கன்னத்திலறைந்துகொண்டு மன்னிப்புக் கேட்கப் போகிறேன். என் செல்வச் சோதரிகளை வாரியணைத்து முத்தமிடப் போகிறேன். நான் பட்ட கஷ்டங்களை எல்லாம் என் சகோதரனுக்கும் மற்ற சிறுவர்களுக்கும் கூறி அவர்களுக்கு நற்புத்தி புகட்டப்போகிறேன். என்னுடைய சகல துர்க் குணங்களையும் இச் சிறைச்சாலையிலேயே குழி வெட்டி மூடிவிட்டுப் போய் விடப் போகிறேன். தேவாதி தேவா! ஸ்ரீ பார்த்தஸாரதி! எனக்கு இனிமேல் இத்தகைய மதியை அளிக்காதே!" என்று பல விதமாக எண்ணமிட்ட வண்ணம் அந்த இரண்டு நாட்களையும் ஒரு நிமிடத்தை ஒரு யுகமாகக்

கடத்தினான்.

ஆகா! அன்னையின் அன்பிற்கு ஒரு உவமை யுண்டா! அந்த தனிச் சுடரின் இன்ப மனுபவியாதவர்கள் பாபாத்மாக்கள் என்பதற்கு ஐயமே இல்லை. “அன்னையோடு அறுசுவை உண்டியும் போம்; தாயோடு போயிற்று அன்பு; தேரோடு முடிந்தது திருநாள். தாயில்லாப் பிள்ளையோ வாயில்லா ஊமையோ!” என்றெல்லாம் ஆன்றோரால் கூறப் பட்ட பழமொழிகள் பொய்த்து விடுமா! அந்தோ! தாயைப் போன்ற பாசத்தைக் காட்டி, ஊட்டி வளர்த்து விட்ட செவிலித் தாயின் அன்பே பெருத்த மலை போன்றிருக்கையில் தாயின் உண்மையான அன்பு கூறவேண்டுமா? தாயைப் பிரிந்து வருந்திய அந்த மனிதனுக்குத் தாயைப் பார்க்கப் போகின்றோம் என்கிற பெரிய ஆசை உண்டானதும் இழந்த பலமும், நீங்கிய தெம்பும்

களைத்தெழுந்தது. அவன் அங்கம் அன்பின் வலுவால் பெருத்தது. விடுதலை செய்யும் நேரத்தை எதிர் பார்த்துக் கொண் டிருந்தான்.

சந்தோஷமும் திருப்தியும் இல்லாத புகழும் பணமும் மாத்திரம் இருந் தால் அவை எப்போதும் பரிமளிக்க மாட்டா. மனச் சாந்தி யிருந்தால் தான் சந்தோஷம் ஏற்படும். மனச் சாந்தியானது, சுகம் துக்கம் இரண்டிலும் ஆழ்ந்து அநுபவித்த பிறகே உண்டாகும். அது சில நாட்களிலும் மாதங்களிலும் அடைய முடியாது.

அந்த நேரம் வந்தது. அதினரிகள் அவனை அழைத்து அனேக புத்திமதிகள் கூறி "இனிமேல் இத்தகைய காரியம் செய்தால் தீவாந்திர சிக்ஷை விதிக்கப்படும்" என்று கூறியனுப்புகின்றார்கள். அவனும் "நான் இனி சத்தியமாக இவ்வித காரியத்தைச் செய்வதில்லை. இனி இப் பக்கமே நான்

ஜென்மத்திற்கும் வருவ தில்லை.” என்று கூறிவிட்டு வெளியே வருகிறான்.

அவன் விடுதலையாகி வெளியே வந்த உடனே தன் வீட்டை நோக்கி ஓடுகிறான். “அம்மா! அம்மா!” என்று கத்திக் கொண்டே உள்ளே நுழைகிறான். அவன் முதல் தரம் திருடிச் சிறைக்குச் சென்ற அன்றே வீட்டை விட்டு விலக்கப்பட்ட கோமதியின் செய்தி இப்போது அவனுக்கு என்ன தெரியும்? ஆதலால் அங்கு ஓடி அவளை அழைக்கின்றான். இவன் திருட்டு மதி மாறித் திருந்தியவன் என்பதை அறியாத வீட்டுக்காரர்கள் “சீச்சி! கே-டீ! வீட்டிற் குள்ளே வராதே! உன்னுடைய அம்மாளை அன்றே விலக்கி விட் டோம். நீ இங்கு நிற்காதே; ஓடிப்போ! அகப்பட்டதைச் சுருட்டிக் கொள்ளலாம் என்று வருகிறாயோ ஓடு பயலே!” என்று கடிந்து கூறுகிறார்கள்.

அயலாரை ஏமாற்றிப் பணம் சம்பாதிக்கும் சிலர், சமூக சேவைகளில் சுய நலம் பாராட்டாது ஈடுபட்டுள்ளவர்களை ’எல்லாம் அவர்கள் மாதச் சம்பளம் பெற்றுக் கொண்டு வேலை செய்கிறார்கள்” என்கிறார்கள். அவர்களுக்குள்ள அற்ப குணம் மற்றவர்களுக்கும் இருப்பதாகத் தோன்றும்படிச் செய்கின்றது போலும்.

இது கேட்ட பையன் வெகு தாழ்மையோடு “அம்மா! நான் என் புத்தி பிசகினால் தப்பிதம் செய்து விட்டேன்; திருடி விட் டேன். இப்போது என் புத்தி சரியாகி விட்டது. இனி நான் எந்தப் பொருளைக் கண்டாலும் செத்த பிணத்திற்கு ஒப்பாக நினைப்பேன். இது சத்தியம். என் மேல் சந்தேகப் படவேண்டாம். என் தாயார் எங்கே! என்னருமை கேசவனும் சகோதரிகளும் எங்கே? அவர்களை எங்கே அனுப்பினீர்கள்? அவர்கள் வேறு எந்த

வீட்டிலிருக்கி? தயவு செய்து அதைக் கூறுங்கள்” என்று கெஞ்சிக் கேட்கிறான்.

இவன் வார்த்தையைச் சிறிதும் நம்பாத வீட்டுக்காரர்கள் “போடா திருட்டுப் பயலே! உன் அம்மாளை நாங்கள் அனுப்பிய பிறகு பார்க்கவே இல்லை. அவர்கள் எங்கு சென்றார்களோ! எக்கதி யானார்களோ? எங்களுக்குத் தெரியாது, நீ முதலில் வெளியே போ!” என்று தூரத்தி விடுகிறார்கள். அவ்வளவு தான் அவன் மனம் முறிந்து விடுகின்றது. ‘அம்மா! அம்மா! உன்னைப் பார்க்க எண்ணிப் பேராவல் கொண்டுவந்த எண்ணமெல்லாம் மண்ணாகி விட்டதே! ஹா! உன்னை நான் இனி எங்கு தேடுவேன்! கேசவனையும், நீலா, பாலாவையும் எங்கு காண்பேன்! என் தாயே! அருமைத் தாயே! ஆருயிர்த் தாயே! என் இன்பத் தாவே! இணையிலா சகோதரிகளே! ஈடில்லாக்

கேசவா!' என்று புலம்பிக் கொண்டே அலைந்தான்; திரிந் தான். எங்கெங்கோ விசாரித்தான். ஒரு தகவலும் தெரியவில்லை. அவன் தெரிந்தவர்கள் வீட்டிற்குச் சென்றால் உடனே அவர்கள் வெறுப்பும் பயமும் கொண்டு அவனைத் துரத்துவதிலேயே நாட்ட மாகித் துரத்தியும் விடுகிறார்கள்.

" புஸ்தகம் அஸ்த லக்ஷணம் " என்கிற பழமொழிப்படி சிலர் எப் போதும் மிகவும் உயர்ந்த புத்தகங்களை வைத்துக் கொண்டிருப்பது. ஆனால் அவற்றைப் படித்து அவற்றிலுள்ள நீதிகளின்படி நடப்பது என்பது கிடை யாது. சிலர் அதோடு நிற்காமல் படிப்பது புராணம்; இடிப்பது சிவன் கோயில் என்கிறபடிச் செய்கின்றார்கள்.

இவ்விதமே சில தினங்கள் அலைந்தும் பலன் கிடைக்காமையியினால் புலம்பிக் கொண்டே வெகு தூரம் போய்விட்டான்.

நடக்கும் இடம் தெரியாமல் அலைந்து திரிந்து “அம்மா! அம்மா!” என்று அலற்றிக் கொண்டே போகிறான். காலையிலும் மாலையிலும் கிராமத் தில் சிறு பிள்ளைகள் கோலி முதலிய ஆட்டங்கள் ஆடிக்கொண்டு திரிவதைக் கண்டதும் இவனுடைய பாலியப் பருவத்து நினைவு வந்து விடுகின்றது. அந்த பிள்ளைகள் விளையாடும் இடத்திற்குச் சென்று அவர்களுக்கு நல்ல புத்திகளைப் புகட்டி தனது சகல விதமான அனுபவங்களையும் எடுத்துக் கூறி அவர்களை வீணாக விளையாடாமல் திண்ணைப் பள்ளிக்கூடத்திலாவது படிக்கும் படிக்குச் சொல்லுகிறான். தானும் ஒரு திண்ணைப் பள்ளிக் கூடத்தில் படிக்க எண்ணங்கொண்டு சேர்ந்து படிக்கிறான். பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளை எல்லாம் கூட்டிக் கொண்டு இவன் தினந்தோறும் அங்கிருக்கும் ஒரு

பிள்ளையார் கோயிலுக்குச் சென்று பிள்ளையாரின் எதிரில் நின்று,

விக்கினம் தீர்த்திட வா வா வா!
ஆனைமுகனே வா வா வா!
ஷண்முகப் பிராதா வா வா வா!
விகாயக மூர்த்தியே வா வா வா!
அம்பிகை பாலா வா வா வா!
சக்தி கணபதி வா வா வா!

என்று பாடலாக வினாயகர் பேரில் சொல்லிக் கொடுப்பதும், பிறகு ”திருடக் கூடாது; பெரியாரை உதாசீனம் செய்யலாகாது. தாயின் வாக்கின்படி நடக்க வேண்டும். வீண் பொழுது போக்கலாகாது.' என்று அனேக நற்புத்திகளைப் போதிப்பதோடு தன்னுடைய சரிதையை அவர்களுக்கு ஓர் கதை போலச் சொல்லி ஆனந்தமாகப் பொழுதைக் கழிக்கச் செய்வான். இவன் பெரிய தடியனாக விருந்து கொண்டு

திண்ணைப் பள்ளிக்கூடத்தில் படிப்பதனால் எல்லாப் பிள்ளைகளும் அவனைப் பரிகஸிப்பார்கள். எனினும் அவன் நல்லவிதமாக புத்தி புகட்டிக் கதை சொல்லுவதால் அவனைச் சுற்றிக் கொண்டிருப்பார்கள்.

அன்பு என்பது மனிதரிடத்தும், வளர்க்கும் மிருகங்களிடத்தும் மாத்திரம் இருப்பதில்லை. கடியாரம், பேனா, மோட்டார், குடை, செருப்பு முதலிய வஸ்துக்களின் மீதுள்ள அன்பினால் சிலர் அவற்றின் பிரிவாற்றாமைக்கு மிகவும் வருந்துகின்றார்கள்.

அவன் தினம் சில வீடுகளில் தண்ணீர் தூக்கிக் கொடுப்பது, துணி துவைப்பது, முதலிய வேலைகளைச் செய்து ஒவ்வொரு வேளை ஒவ்வொரு வீட்டில் சாப்பிட்டுக் காலத்தைத் தள்ளியவாறு நன்றாக எழுதவும் படிக்கவும் தெரிந்து கொண்டான். தன்

தாயையும் சகோதர சகோதரிகளையும் எங்கு தேடியும் தகவலே கிடைக்காது வருந்தி மெலிந்து விட்டான். ஒரே இடத்தில் இருந்தால் எவ்விதம் அவர் களைத் தேடுவது என்ற எண்ணம் உதித்ததால் ஊர் ஊராகத் தேடத் தீர்மானித்து அவ்விதமே சுற்றி அலைய வாரம்பித்தான். எங்கு சென்றாலும் ஒருவிதமான தகவலும் கிடைக்கவில்லை.

மனம் முறிந்து விரக்தி மேவிட்டு விடுகின்றது. எந்த ஊருக்குச் சென்றாலும் தன்னாலான உதவியைப் பொது ஜனங்களுக்குச் செய்ய வேண்டுமென்கிற தீவிரமான எண்ணம் உண்டாகிவிட்டதால் ஏழைகள் அனேகர் தொழில் செய்வதைக் கண்டு அதில் மிக்க வயதானவர்கள், கர்ப்பிணிகள், அங்கஹீனர்கள் முதலியவர்களுக்குத் தன்னாலான உதவியைச் செய்வதும், அவர்களோடு

உண்டு அன்று பொழுதைப் போக்குவதுமாக இவ்விதம் பல ஊர்களில் சுற்றி அலைந்து சில வருடங்களைக் கழித்தான்.

ஒரு தினம் ஒரு மலைப் பிரதேசத்திற்கு வருகிறான். அங்கு மலைமீது பெரிய ஒரு குகையும் அக் குகைக்குள் ஒரு கோயிலும் இருப்பதாகவும் அக் கோயிலுக்குள் ஒரு சாமியார் இருக்கிறார். அவர் ஜோஸியம் சொல்கிறார்; யார் அந்த மலையில் தைரியமாக ஏறி குகைக்குள் பயமின்றி சாமர்த்தியசாலியாக வருகிறார்களோ அவர்களுக்குச் சாமியார் பூர்ணமாக அனுக்ரகம் செய்து ஜோஸியமும் சொல்லி யனுப்புகிறாராம்; ஆனால் அவ்விதம் யாரும் நடந்தது கிடையாது. இத்தனை வருஷத்திற்காக இரண்டொருவரே தான் சென்று திரும்பியதாகக் கேள்வி. மற்ற அனேகர் இடையிலேயே மலை ஏற

முடியாமலும், ஆகார வசதி இல்லாமலும், மழை, வெய்யில், இரவு, இருட்டு, மிருக பயம் முதலிய அனேக கஷ்டங்களினால் முற்றும் ஏறமாட்டாது திரும்பி விட்டதாயும், சிலர் இறந்து விட்ட தாயும், சிலர் துஷ்ட மிருகங்களுக்கு இரையாகி விட்டதாயும் பலர் சொல்லக் கேட்டான்.

தாங்கள் வெகு அன்பாக நினைத்துள்ள பொருள் தங்கள் எதிரில் படுங்கால் அதை ஆவலோடு எடுத்துக் கொள்வதற்கு மனம் தாவுகின்றது. அன்பின் ஆவேசமும் எழுகின்றது. அடுத்த நிமிஷம்" இந்தப் பொருள் அயலாருடையதாயிற்றே" என்கிற நினைவு தோன்றியவுடன் அப்படியே கண்ணீர் வடிய தலை சாய்ந்து விடுகின்றது, அந்தோ! என்ன பரிதாபம்!

அதைக் கேட்டதும் அவன் "எது எப்படியாவது இருக்கட் டும். மலையின் உச்சிக்குச் சென்று சாமியாரைப் பார்க்காமல்

வருவதில்லை.” என்ற வைராக்கியங் கொண்டு மலையில் ஏறுகிறான். அப்போது மலைப் பக்கம் போவோர் வருவோர்கள் “ஐயா போகாதே! போகாதே!” என்று தடுத்து பயமுறுத்துகின்றார்கள். அதையும் கவனியாது சிறிது தூரம் ஏறுகையில் சினிமாப் படம் பிடிப் பவர்கள் அம்மலையில் சில முக்கியமான சீன்களைப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இவன் தைரியமாய் ஏறி வருவதைப் பார்த்து, ‘நீ யார்! எங்கே மேலே ஏறிப் போகிறாய்?’ என்கி றார்கள். அவன் தான் போகும் காரணத்தைக் கூறிவிட்டு மீண்டும் ஏறுகிறான்.

சினிமாக்காரர்கள் அவனைத் தடுத்துக் கூறியும் கேளாது பின் னும் ஏறுகிறான். இரவு சமீபித்து விட்டது. துஷ்ட மிருகங்களின் ஆரவாரம் இவனுக்கு அதிக பயங்கரமாக இருக்கின்றது. எந்த திக்கை நோக்கினும்

கர்ஜனையே கேட்கின்றது. நாய், நரி முதலியவைகளின் ஊளை பிடுதலும், குரைப்பதும், இன்னு மற்ற மிருகங்களின் தொனிகளும் கேட்கக் கேட்க மார்பு படபடவென்று துடிக்கின்றது. தலை சுழலுகின்றது. அந்த மிருகங்களெல்லாம் இவனைத் தூரத்திக்கொண்டு வருவதாகவே மனத்தில் பீதி உண்டாகின்றது அப்பீதியினால் கால்கள் நடக்கமாட்டாது தத்தளிக்கின்றன.நடுக்கலுற்று விவிலத்துப் போய்விட்டன. உடனே அவன் அம்மலை மேலிருந்த ஓர் மரத்தடியில் உட்காருகிறான்.

“நாளை முதல் நாம் எல்லாக் காரியங்களையும் வெகு ஒழுங்காகச் (Systematically) செய்ய வேண்டும்” என்று சிலர் முதல் நாள் தீர்மானித் துக் கொள்வது. ஆனால் மறுநாள் உதயமானதும் வழக்கப்படியுள்ள சோம்பேறித் தனமும் தாமத குணமும்தான்

முன் வந்து நிற்கின்றன. ஆகையால் எது செய்வதாயினும் இன்றே செய்தல் நன்று, நாளை, நாளை என்பது வீணே.

அவ்வாறு உட்கார்ந்த சிறிது நேரத்திற்கெல்லாம் ஒரு பெரிய சர்ப்ப த்வனி ‘புஸ்’ என்று கிளம்புகின்றது. அந்தோ! அந்த ஓசை பைக் கேட்டு மிரண்டு எழுந்து விலகி நிற்கிறான். இருளோ கப்பிக் கொண்டிருக்கிறது. ஆகாயத்தில் சிறு சிறு நக்ஷத்திரங்களே ஆங்காங்கு காணப் படுகின்றனவே யன்றி வேறு விதமான பிரகாசம் எதுவுமே இல்லை. இத்தகைய பயத்தோடு அவன் ”ஏ கருணா நிதே! காருண்ய மூர்த்தே! உன்னையன்றி வேறு துணையில்லை. ஐயனே! ஆபத் ரக்ஷகா ! இந்த சர்ப்பத்தின் சீற்றம் எனக்கு மிக்க பயத்தை உண்டு பண்ணுகிறதே! நீ ஓர் மடுவில் சர்ப்பத்தை கையில் எடுத்து

ஆட்டியதாக என் திண்ணைப் பள்ளிக்கூடத்து வாத்தியார் சொல்லிக் கேட்டிருக்கிறேனே! அத்தகைய சர்ப்பத்தை நீ இப்போது புற்றுக்குள்ளனுப்பி விடுவது கஷ்டமா! உன்னால் ஆகாத காரியமும் உலகில் உண்டா!

("ஐயா பழனிமலை வேலா' மெட்டு)

1. ஐயா! ஏழுமலையின் வாலா! எனைக்காத்திடுவாய் சர்வேசா!
   உய்யும் வழி உன்னருளன்றோ! இதை உனக்கறிவித்தல் நன்றோ-
2. வையம் அளந்த திருபாதா! பையவே வரலாகாதா!
   ஐயனே என்மேல் வாதா! இது அருளோ அறைவாய் நீதா!-
3. பீதாம்பர துளஸி ஹாரா! பேராதரிக்கும் ஒய்யாரா!
   சாதக அசுர சம்ஹாரா! ஜெய கல்யாண

சேஷகிரி வீரா-ஐ

என்ற பாடலைப் பாடிக்கொண்டே பகவானைத் தோத்திரஞ் செய்து நின்றான்.

ஒருவரைப்பற்றி அவதூறாகப் பேசுவதே சிலருடைய சுபாவம். வேறு சிலர் அதைக் கேட்டு, அது உண்மையா அல்லவா என்பதைத் தெரிந்து கொள்ளாமலே மற்றவரிடம் பரவச் செய்வது. மற்றும் சிலர் “அவர்கள் பெரிய மனிதர்களாயிற்றே பணக்காரராயிற்றே) அதனால் உண்மையாகத்தான் -இருக்கும்” என்று நம்பி விடுவது. பிறகு குற்றஞ் சாட்டப்பட்டவரைச் சந்தித்து உண்மையான நிலைமையை அறிந்த பிறகு வருத்தப்பட்டு “ஐயோ! பணக்காரர் (பெரிய மனிதர்கள்) சொன்னாரே என்று நம்பினேன்” என்பது. இக் காலத்தில் பணம் இருப்பவர்களெல்லாம்-குணமில்லாதவர்கள்—பெரிய மனிதர் போலும்.

இரவு ஏற ஏற பயங்கரம் அதிகரித்து விட்டது. மரத்தின் கீழே அனேக புத்துகள் இருப்பதாக அவன் காலுக்குத் தெரிந்ததும் மாத்தின் மேலே ஏறிக்கொண்டான், ”ஹா! என் தாயே! உன் வார்த்தையை மதியாததின் பலன் இது. எங்கு அலைந்தும் உன்னைக் காணாமல் கலங்கிய நான் அந்த குகையிலிருக்கும் மகானின் தரிசனத்தினாலும் உத்தம வாக்கின் பலனாலும் உன்னைக் கண்டு களிக்க லாமென்று நான் கிளம்பி விட்டேன்! என்னுயிர் இடை வழியே சென்றாலும் சரி; அன்றி நான் எக்கதியானாலும் சரி. உன்னைக் காணும் வழியை அடைகிறேன். அம்மா! அம்மா!..ஹா! என் தாயை நான் காண்பதற்கு, அந்த மாயவனின் தாளை மறவாது துதித்தாலன்றோ நமக்குத் தாயின் சேவை கிடைக்கும்! இல்லையேல் தாயை எங்ஙனம் அடையக் கூடும். மாதவா! கேசவா!

மது சூதனா!

(தன்யாசி ராகம். ஆதி தாளம்)

1. காரிருள் சூழ்ந்தாலும், கடலொன்று சேர்ந்தாலும்,
   காருண்ய மூர்த்தியின் கழல் மறவேன்.
   பாரெங்கும் புரண்டாலும், வாரிதி வரண்டாலும்,
   தாரக நாமனின் தாள் மறவேன்.

2அஞ்சன வண்ணனின் கஞ்ச மலாடியில்
நெஞ்சம் பதித்திடும் நேர் மறவேன்.
கஞ்சனை வென்று, சஞ்சலம் போக்கியே
கண்ணன் அடி மறவேன்.

கருணாகரா! கக வாகனா!" என்று திண்ணைப் பள்ளிகூடத்து வாத்தியார் கற்றுக் கொடுத்த பாடல்களைப் பாடித் துதிக்கின்றான், இரவு பூராவும் தத்தளித்தான்; அவனைத் தாங்காமல் தூக்கம் சுழற்றுகின்றது. விடியற்

காலம் வந்து விட்டது. கீழே இறங்கி ஒரு மாத்தடியில் “எதுவரினும் நீயே துணை” என்று நம்பிப் படுத்து விடுகிறான். நன்றாக அயர்ந்து தூங்கி விடுகிறான். பொழுது விடிந்ததே தெரிய வில்லை.

பிறகு கண் விழித்துப் பார்க்கிறான். ஒரு டேராவின் உள்ளே படுத்திருப்பதாகத் தெரிந்து சுற்று முற்றும் பார்க்கிறான். நல்ல நாகரிகமான சிலர் இவன் முன்பு இருக்கக்கண்டு வியப்புற்று “ஐயா! நீங்கள் யார்! என்னை யார் இந்த இடத்திற்குக் கொண்டு வந்தது? எனக்கு விவரங் கூற வேண்டும்” என்றான். அப்போது பிற்பகல் 3 மணி இருக்கும். இதுகேட்ட அவர்கள் “ஐயா! உடம்பு இப்போது ஒன்றுமில்லையா! சரியாகி விட்டதா! வலி எப்படி இருக்கின்றது?” என்று கேட்கிறார்கள்.

அதைக் கேட்டதும் அவன் ஆச்சரியமுற்று

“என்ன! எனக்கு உடம்பா! என்ன உடம்பு! என்ன வலி! ஐயா! எனக்கு ஒன்றும் விளங்க வில்லையே! நான் விடிவதற்கு முன்னமேயே நன்றாகப் படுத்து நித்திரை போய் விட்டதுதான் எனக்கு நினைவிருக்கின்றது. வேறு ஒன்றும் நினைவில்லை. இப்போது முற்பகலா, பிற்பகலா!” என்று தன் தேகத்தை முற்றும் பார்க்கிறான். காலில் ஒரு கட்டு இருப்பதை அப்போதுதான் காண்கிறான். உடனே “இதென்ன கட்டு?” என்று கேட்கிறான்.

அதற்கு அவர்கள் ”அப்பா! நீயோ வயதில் சிறியவனாகவே காணப்படுகின்றாய்! நீ நேற்று மலை ஏறும்போது நாங்கள் படம் பிடித்துக் கொண்டிருந்தது உனக்கு நினைவிருக்கலாம். எங்களில் சிலர் உன்னை ஏறவேண்டாம் என்றதற்கு நீ மறுத்து எங்களை லக்ஷயம் செய்யாமல் போய் விட்டாய்! நாங்கள் இந்த மலையிலும் மலை அடிவாரத்திலும்

முக்கியமான சில சீன்களை சப்தத்தோடு கூடிய படம் பிடிக்க வந்திருக்கிறோம். ஆறுமாத காலமாக நாங்கள் சுற்று கிறோம். இன்று காலையில் மலையின் மேல் பாகத்தில் ஒரு சுனை இருக்கின்றது; அதைப் படம் பிடிக்கச் செல்கையில் நீ மரத்தடியில் படுத்திருந்தாய்! ஒரு பாம்பு உன் காலில் கடித்து விட்டுப் போவதைக் கண்டு, உடனே உன்னை எழுப்பாமல் இருக்க ஒரு பச்சிலையை உன் மூக்கில் முகரச் செய்தோம். அப்படியே மற்றொரு பச்சிலையின் காற்றை உனக்குள் செலுத்தினோம். வேறொரு பச்சிலையைக் கடித்த விடத்தில் கட்டினோம். இம் முறைகள் ஓர் பெரிய மகானின் மூலம் நாங்கள் பெற்றுக் கொண்டுதான் இந்த மலை வாசத்திற்குப் பயமின்றி வந்தோம்.

பிறகு உன்னை இங்கு கொண்டு வந்து விட்டோம். உன்னை யறியாமலேயே இரு

முறை வாந்தி எடுத்தாய் ; அதில் நீல மாக விஷம் வெளியே வந்தது. பிறகு ஒரு பச்சிலையைக் கொடுத்தோம். இப்போது நீ தெளிந்து எழுந்தாய். விஷம் இல்லை; இறங்கி விட்டது என்று அர்த்தம், இனிப் பயமில்லை, பிழைத்துக் கொண்டாய் ! நீ இனிமேல் இவ்விதம் தனிமையில் செல்லவேண்டாம். அந்த குகையில் செல்வது சாமானியமன்று. நாங்கள் ஆயிரமாயிரமாய்ச் செலவு செய்து ஏரோப்ளேனில் பறந்து சென்று பார்த்தும் பயனில்லாது போய் விட்டது. ஆகையினால் நீ இந்த பெரிய காரியத்தில் இனி பிரவேசிக்காதே உன்னுடைய வரலாறு என்ன! நீ ஏன் இவ்விதம் கிளம்பினாய்?” என்று கேட்கிறார்கன்.

சிலருக்கு நல்ல கல்வி யறிவு, அநுபவ ஞானம், வாக்கு சாதுர்யம், இளகிய மனம், தயாள குணம், பெருந்தன் மையான

போக்கு, பல பேர் மெச்சி புகழக் கூடிய தன்மை எல்லாம் ஒருங்கே அமையப் பெற்றிருக்கின்றன. ஆனால் பூர்வ ஜன்மாந்திர வாசனையினாலோ அல்லது இந்த ஜன்ம கர்ம வினையினாலோ அவர்களை யறியாமல் ஒரு பொருளின்மீது உயிர் லயித்து விடுகின்றது. அப் பொருளோ கிட்டாப் பொருள். கிட்டாதாயின் வெட்டென மற என்கிற வாக்கை அறிந்திருந்தும் அப் பொருள்பால் கொண்ட அபார அன்பினால் அதைப் பெறவும் மார்க்கமின்றி, மறக்கவும் கூடாமல் தத்தளித்து வருந்துகின்றார்கள்.

இதுகேட்ட அந்தப் பையன் மிக்க ஆச்சரியமும் திகைப்பும் அடைந்து “ஆ! என்னையா பாம்பு கடித்தது!.. நீங்கள் இந்த ஏழைப் பரதேசியின் மீது அன்பு வைத்து இத்தகைய உதவி செய்ததற்கு நான் என்ன கைம்மாறு செய்வேன்

?” என்று கூறித் தனது கதை முழுதும் கூறுகிறான்; இது கேட்ட அவர்கள் இவன் மீது. அனுதாபங் கொண்டு “அப்பா! நீ எங்கள் கம்பெனியிலேயே ஒரு நடிகனாகச் சேர்ந்துவிடு. நாங்கள் ஊரு ஊராக சுற்றக்கூடியவர்கள். அங்கெல்லாம் நீயும் வரலாம். அங்கு உன் தாயாரையும் தேடலாம். ஆகையினால் வருகிறாயா! எங்களாலாகிய உதவியைச் செய்கிறோம்.” என்கிறார்கள். அதற்குப் பையன் சம்மதப்பட்டு “ஐயா! நான் உங்களிஷ்டப்படியே நடக்கின்றேன்” என்று உறுதியாய்க் கூறிவிடுகின் றான். பிறகு பையனை அவர்கள் அழைத்துக் கொண்டு போகிறார்கள். அவர்களோடு சென்று அவன் நடிக்கக் கற்றுக் கொள்கிறான்…

என்றது வரையில் அன்றைய நடிப்பில் முடிந்தது. இந்தக் கதை மலைப் பிரதேசத்தில் நடப்பதற்காகவே அதற்குத் தகுந்த இடமாக

அமர்த்திக் கொண்டார்கள். “இம்மட்டுடன் இன்று நின்று விட்டது. இனிமேல் வெளிச்சம் குறைந்து விட்டது. நாளைய தினம் தான் நடிக்கப்படும். இது பேசும் படமாகத் தயாரிக்கின்றோம்” என்று முதலாளி பாலாவினிடத்தில் வந்து தெரிவித்தான்.

இதுகேட்ட பாலா, “ஐயா! உங்களிடம் நான் ஒரு விஷயம் தனிமையில் பேசவேண்டும். அதற்கு அனுமதிக்கப்படுமா?” என்று வெகு நயமாகக் கேட்டாள். அதற்கு இசைந்த எஜமானனிடம் பாலாவும் கோமதியும் சென்று “ஐயா! இந்த, கதையை இப்போது நடித்தவரே கற்பனையாக எழுதினாறா? அன்றி வேறு யாரேனும் எழுதியதை இவர் நடிக்கின்றாரா! அது உண்மையில் நடந்ததா” என்று கேட்டாள்.

எஜமா:- அம்மா! எனக்குத் தெரிந்த மட்டில் அவரே கற்பனையாக எழுதியதாகத் தெரிகின்றது. அவர் முன்பு வேறு ஒரு படக்

கம்பெனியில் நடித்துக் கொண்டிருந்தார். அக் கம்பெனி இருவரால் சேர்ந்து நடத்தப்பட்டதால் சண்டை வந்து விட்டதாம். அதனால் கம்பெனி கலைந்து விட்டது. அதன் மானேஜர் எனக்குத் தெரிந்தவராதலால் நான் ஒரு கம்பெனி வைக்க ஆசையுற்று, இந்த தீவிலேயே நடத்த உத்தேசித்து நல்ல நடிகர்களை அனுப்ப வேண்டுமென்று எழுதினேன். அவர் சிலரை அனுப்பினார். அவர்களில் இவரும் ஒருவர். “நான் ஒரு கதை வெகு ருசிகரமாக எழுதி இருக்கிறேன்! அதை நடிக்க வேண்டும்” என்று கேட்டார். சரி, என்று இசைந்து இப்போது நடிக்கின்றோம். ஏனம்மா! எதற்காகக் கேட்டீர்கள்?

எந்தெந்த காலங்களில் எந்தெந்த ராகங்களை வாசிக்க வேண்டுமென்பதை மேளக்காரர்கள் முக்கியமாகத் தெரிந்துகொள்ள வேண்டும். காலை

நேரத்தில் சுபமாக வீடு கட்டிக் கிரகப் பிரவேசம் செய்கையில் துக்ககரமான முகாரி ராகத்தைச் சிலர் வாசிக்கின்றார்கள். ஐயோ! இதென்ன அசம்பாவிதம்! இதன். காரணம் இரு திறத்தினரும் காலம், ராகம் முதலியவற்றின் குணங்களை அறியாமையே. இப்படியே ஒவ்வொரு விதத்திலும் நம் நாட்டில் யாவும் சீர் குலைகின்றன.

பாலா:- எதற்கு மில்லை; கதை வெகு ருசியாகவும், ஸ்வாரஸ்ய மாகவும் இருக்கிறதே! இத்தகைய கதையை யார் எழுதினார்கள் என்கிற ஆச்சரியத்தினால் கேட்டேன். நாங்கள் அவரை நேரில் பார்க்கலாமா! இந்த கதைக்கு முடிவு இன்னும் ஏற்பட்டிருக்காதென்று நினைக்கின்றேன்! ஆகையினால் எனக்கு ஓர் அருமையான கற்பனை தோன்றுகின்றது. அதை அவரிடம் தெரிவித்து முடிவு செய்விக்க நினைக்கிறேன்.

எங்களால்தான் முடிவும் நடக்கவேண்டும்.” என்றாள்.

இதைக் கேட்ட மானேஜருக்குச் சிறிது சந்தேகம் உண்டாகி யது. அதை வெளியிடாது “சரி; அதற்கென்ன! தாராளமாய்ப் பார்க்கலாம்” என்றார். உடனே நீலா, பாலா, கோமதி மூவரும் எஜமானரோடு சென்றார்கள். அப்போது மருதப்பா கடவுளின் படத்திற்கு எதிரில் மண்டியிட்டு வணங்கியவாறு, “ஹா! கடவுளே! தேவாதி தேவா! என் அன்னையை நான் காணாமலேதான் உயிர் விடுவேனோ! என்னருமை உடன்பிறந்தோரைப் பார்க்காத பாவியாவேனே! என்னுடைய சரிதையை இன்று நடித்ததும் என்னைத் தாங்காத துக்கம் வந்து விட்டதே! நானாக வேண்டுமென்று இழந்து விட்ட என் வானிதியங்களை எங்கு தேடுவேன்! இனி என்று அடைவேன்?” என்று கண்ணீரை ஆறாய் விட்டுக் கதறிக்

கொண்டிருந்தான். அது வரையில் பொறுமையாயிருந்த கோமதி அதற்குமேல் இழந்து “ஹா! என் செல்வா! மருதப்பா! மருதப்பா! இதோ நான் வந்து விட்டேனடா! கண்மணி” என்று அவன் கனவிலும் கருதாதவாறு அவனை இறுகத் தழுவிக் கொண்டாள். நீலாவும், பாலாவும், ‘அண்ணா!’ என்று ஆலிங்கனம் செய்து கொண்டார்கள். இந்த அற்புதமான காட்சியைக் கண்ட எல்லோரும் வியப்பே வடிவமாக நின்றார்கள்.

“நாம் இந்த காரியத்தைச் சாதித்தோம். நம்மால்தான் இந்த காரியம் நடக்கின்றது” என்கிற அகம்பாவ சிந்தையைப் போக்கி, என்று நாம் இரண்டு கைகளையும் விட்ட திரௌபதியைப் போல ‘நம்மாலாவது ஒன்றுமில்லை; எல்லாம் அவனால்தான் நடக்கும்.’ என்கிற தீர்மானத்தை அடைந்து அவனை ஸ்மகரிக்கின்றோமோ அன்றுதான்

அவன் நம்மைக் காப்பாற்றுவான். இது வீண் கதையல்ல; கண்டறிந்த அநுபவமே.

## 8-வது அதிகாரம் - உயிரினும் இனியது உண்மைக் காதல்

கடிதத்தைப் படித்துக் கதி கலங்கிய பரிமளவல்லி தனது கண்களையே நம்பாமல் திரும்பத் திரும்ப பலமுறை படித்தாள்; "நண்பரே! இதென்ன விபரீதமான கடிதமாக இருக்கின்றதே! இதை யார் எழுதி இருப்பார்கள்! எனக்கு முன்பு அதிகப் பிரஸங்கியாய் எழுதிய மனிதர்கள் யாரேனும் தங்களையும் மிரட்ட எண்ணி இவ்விதம் செய்திருப்பார்களா! எனக்கும் ஒன்றும் புரியவில்லையே!" என்று பரிதாபமாகச் சொன்னாள். இது கேட்ட கேசவன் "பரிமளா! எது எவ்வித மிருப்பினும் சரி! உனக்கு ஒரு விதமான தீங்கும் நேரா வண்ணம் காப்பாற்றுவதே என் கடமை என நான் நினைக்கிறேன். ஆதலால் அது விஷயத்தில்

நான் இங்கு வராது நிற்பதே நலம், கடவுளின் இஷ்டம் போலத்தான் யாவும் நடக்கும். அவன் திருவுள்ளம் நாம் பிரிய வேண்டியதுதான் என்று ஏற்பட்டதால் நாடகத்திலிருந்து நம்மைப் பிரித்து விட்டார். ஆகையினால் இது பற்றி வருத்தப்படாதே! நான் இனி இங்கு அடிக்கடி வராது விலகிக் கொள்கிறேன். வருந்தாதே பரிமளா!" என்றான்.

நம் உறவினரோ, சினேகிதரோ, மற்றவர்களோ நம்மை நன்றாக அறிந்திருந்தும் நம்மைப் பற்றி இழிவாகப் பேசி நமது மனத்தைப் புண்படுத்தினாலும் நாம் பொறுமையை இழந்து கோபாவேசத்திற்கு அடிமையாகக் கூடாது.

பரிமளா:-ஐயோ ! வருந்தாது சந்தோஷமாக இருப்பதற்கு இந்தக் கடிதம் வரவில்லையே! இது ஆளைக் கொலை

செய்வதற்காக வந்த எமனோலையே யாகும் என்றே என் மனத்தில் படுகின்றது. நான் என்ன விதமாகத் தேறுதலை யடைவேன்? நண்பரே! இக் கடிதத்தையும் நமது எஜமானரிடத்தில் காட்டி விடுதல் நலமென்று எனக்குத் தோன்றுகின்றது. நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

கேசவன் :- நானும் அதைத்தான் தீர்மானித்துள்ளேன். முதலில் உன்னிடம் காட்டிவிட்டுப் போகவே வந்தேன், நீ கவலைப் படாதே! நான் இக் கடிதத்தை எடுத்துக் கொண்டுபோய் அவரிடம் காட்டித் தகவல் தெரிந்து கொண்டு மேற்கொண்டு என்ன செய்யலாம் என்பதைக் கவனிக்கலாம். பரிமளா! ஏன் கண்ணீர் பெருக்குகின்றாய்? வேண்டாம்! நாம் நாடக உறவு கொண்டோம்; அந்நடிப்பு முடிவுற்றது என்று மனந்தேறவேண்டும். விசனித்தலால்

பயன் உண்டா!” என்று கூறிச் சமாதானம் செய்துவிட்டுக் கடிதத்துடன் கிளம்பி பொன்னுசாமியின் வீட்டை யடைந்தான்.

பொன்னுசாமிக்கு கேசவனின் வருகை எப்போதும் சர்வ சாதாரணமாகையினால் அவன் அதைப்பற்றி வியப்புறவில்லை எனினும் கேசவனின் முகம் மாறுபட்டிருப்பதைக் கண்டு “கேசவா! என்ன ஒருவாறாக இருக்கிறாய்! விஷயமென்ன்?” என்று கேட்டார். கேசவன் பொன்னுசாமியிடம் சகஜமாக இருக்கக் கூடியவனாகையினால் ”பெரியவரே! விஷயத்திற்கென்ன குறைவு! இதோ இக் கடிதத்தைப் பாருங்கள்’ என்று அதைக் கொடுத்தான்,

பொன்னுசாமி கடிதத்தைப் பார்த்து வியப்புற்று “ஒகோ! எந்தவிதம் செய்தால் பலிக்குமென்று எண்ணி இப்போது இவ்விதம் ஆரம்பித்திருக்கிறார்களா? இருக்கட்டும்.

கேசவா! இதைப் பரிமளா பார்த்தாளா! அவளிடம் காட்டினாயா?” என்றார்.

நமக்குள் மறைந்து கிடக்கும் குறைவுகளைத் திருத்தவோ அல்லது அவற்றை ஒழிக்கவோ கடவுளால் அனுப்பப்பட்ட தூதர்கள் அவர்கள் என்று நினைத்து பொறுமை வகிக்க வேண்டியது நமது கடமை. அப்படி நாம் முற்றிலும் மனத் தூய்மையுடனிருந்தால் அவர்களின் தீச் செயல்களுக்குத் தக்க பலனை கடவுளே அளிப்பார்.

கேசவன்:- ஆம். தந்தையே! காட்டினேன்; கண்டு அவள் மிக்க விசனிக்கின்றாள்.

பொன்னு:-ஐயோ! ஏன் அவசரப்பட்டுவிட்டாய்! இதைக் கண்டு அவள் மனம் கலங்காமலிருக்குமா! இளம் தளிராகிய அவள் மனத்தை வாட்ட விட்டாயே!

இதைக் காட்டாதிருந்தால் உனக்கென்ன குறைவு? போடா போ! அசட்டுப் பையா! உனக்குள்ள அன்பு எம்மட்டும் உள்ளதென்று நான் அறிவேன். ஆனால் இதை நீ காட்டியதே பிசகு. என்னிடம் முதலில் காட்டிய பிறகு இதைப்பற்றி யோசிக்கலாகாதா! கேசவா! பரிமளா இப்போது நாடகத்திலிருந்து நின்றுபோய் சுமார் ஒரு வருடமாகப் போகின்றது. இவ்வொரு வருடகாலமாகவே கம்பெனியில் வருமானம் குறைந்து கொண்டே வருகிறது. நடிகர்களும் ஏதோ ஒருவிதமான மாறுதலுடன் இருக்கின்றார்கள். இவைகளை நாம் கவனியாமலிருப்பினும் எனக்கு நன்றாகத் தெரிந்து விட்டது. கேசவா! நீ இக் கடிதத்தை சாதாரணமாக நினைத்துக் கொள்வதற்கில்லை. ஏனெனில் வேண்டு மென்றே உங்களிருவருக்கும் தீங்கிழைக்கும் நோக்கத்துடன் இதை வெகு குரூரமாக எழுதி

இருப்பதாய்த் தெரிகிறது. ஆகையினால் எனக்கு ஒன்று தோன்றுகின்றது. அதாவது துப்பறியும் ராஜாராம் நாயுடுவினிடத்தில் இக் கடிதத்தைக் காட்டி அவர் என்ன சொல்கிறாரோ அப்படியே நடப்போம். இதில் உனக்கென்ன தோன்றுகின் றது?" என்றார்.

நமது பெற்றோரும். நம்மை வளர்த்தோரும், நமது உயிரினுமினிய நண்பராயிருந்தோரும் யாவரும், ஒரு அருவியானது குதித்துக் கூத்தாடிக் கொண்டு சமுத்திரத்தில் சேருவது போலும், பெரிய பிரவாகமுள்ள ஆற்றில் அகப்பட்டுக்கொண்ட ஒரு பழைய மரக்கலமானது அதன் அலைகளினால் ஆட் டிக் குலுக்கப்பட்டுக் கடைசியில் சமுத்திரத்தில் போய்ச் சேருவது போலும் மாயமாய்ப் போய் விட்டார்கள்- ஹா! ஈசா! நீயாவது அவ்விதம் மாயமாகச் செல்லாது என் மனத்துள் என்றும் இருப்பாயா?

இதுகேட்ட கேசவன் “தந்தையே! உங்களுடைய அபிப்பிராயத்திற்கு மிஞ்சி எதுவும் நான் கூற வல்லவனா! தங்கள் இஷ்டம் எப் படியோ அப்படியே நடக்கட்டும். என்னுடைய மனத்தில் தோன்றுவது ஒன்று தான். அதாவது, என்னால் பிறருக்கு ஒரு விதத்திலும் தீங்கு வரக் கூடாது. கபடமறியாத அக் கன்னிக்கு என் பொருட்டு ஒருவிதமான சங்கடமும் நேராமலிருந்தால் அதுவே எனக்குப் போதும்.” என்றான்.

பிறகு பொன்னுசாமி அக் கடிதத்தை வாங்கிக்கொண்டு நேரே ராஜாராம் நாயுடுவின் வீட்டிற்குச் சென்றார். நாயுடு அவரை வரவேற்று விசாரித்தார். நமது பொன்னுசாமியும் யோக க்ஷேமம் விசாரித்த பிறகு தன் காரியத்தை வெளியிட்டுக் கடிதத்தையும் காட்டினார்.

நாயுடு:- (கடிதத்தைப் பார்த்து

விட்டு) ”இதென்ன சில்லரை விஷயம். இதற்காகக் கவலைப்பட வேண்டாம். நான் பார்த்துக் கொள்கிறேன். பையன் நடித்து நான் பார்த்திருக்கிறேன். மிக்க யோக்கியமானவனென்று தோன்றுகின்றது.

பொன்னு:- ஆக்ஷேபனை என்ன! மகா யோத்யன். அபார புத்தியுடையவன். ஒழுக்கந் தவறாதவன். தெய்வ பக்தி யுடையவன். என்மீது உயிரையே வைத்திருப்பவன். என்னுடைய வார்த்தையை ஓர் இம்மியளவும் தட்டாதவன்.

நாயுடு:-ரொம்ப சந்தோஷம். நான் இப்போது ஒரு அவசர காரியத்தின் நிமித்தம் வெளியில் செல்கிறேன். பிறகு தங்களைப் பார்க்கிறேன்.- என்று கூறிப் போய் விட்டார். பொன்னுசாமியும் விடை பெற்றுக்கொண்டு பரிமளாவின் வீட்டிற்குச் சென்றார்.

வெளிச்சமும் உஷ்ணமும் ஒரே சூரியனிடத்து உண்டாயினும் வெளிச்சம் அதிக வேகமாகப் பல இடங்களிலும் பரவுவது போல நமது மனத்திலிருந்து ஒரே காலத்திலுண்டாகும் பலவித உணர்ச்சிகளில் ஒரு சிலவே விரைவில் வெளிப்பட்டு அவற்றினால் ஏற்படும் நன்மை தீமைகளை உண்டாக்குகின்றன.

அப்போது பரிமளா ஏக்கம் பிடித்து உட்கார்ந்திருந்தாள். பொன்னுசாமி அவளுக்கு வேண்டிய தைரிய மொழிகளைக் கூறிப் பின் வீடுபோய்ச் சேர்ந்தார். அன்று முதல் கேசவன் இவர்கள் வீட்டிற்கு வருவதில்லை. அவன் தன் வேலையைக் கவனித்துக் கொண்டு வெளியிட முடியாத விசனத்தை உள்ளடக்கியவாறு இருக் கிறான். பரிமளவல்லியைப் பார்க்காத துக்கத்தைக் கூறமுடியாது. கேசவனின்

மனத்தில் அவன் தாயாரைக் காணாது தவிக்கும் பெரும் விசனத்தோடு இதுவும் சேர்ந்தது. இதனால் உடம்பு இளைத்து உருக வாரம்பித்தது.பரிமளவல்லியினிடம் காதல் கொண்டான்; ஆனால் அதை வெளியிடவும் அஞ்சித் தவிக்கின்றான். இராப்பகலாக அதையே எண்ணி ஏக்கங்கொண்டு தவித்து ஒரு தினம் அதே சிந்தாக்ராந்தனாய் உட்கார்ந்திருக்கையில் திடீரென்று நான்கு பேர் அவ்வறையில் பிரவேசித்து “அடேய் கேசவா! நான் சொல்கிறபடி ஒரு நிமிடத்தில் இக்கடிதத்தை எழுதித் தருகிறாயா! அன்றி உன்னை சுட்டுவிடட்டுமா?” என்று சுற்றிக்கொண்டார்கள்.

இந்த எதிர்பாராத சம்பவத்தினால் கேசவன் நடுநடுங்கிப்போய் அப்படியே அசைவற்று உட்கார்ந்துவிட்டான். அவனது ஆவி துடிக்கின்றது. அங்கம் பதறுகின்றது.

செய்வதறியாது விழித் துக்கொண்டே "ஐயா! இதென்ன அக்ரமம், நீங்கள் யார்? இப்படிக் கள்வரைப் போல வந்து கடிபிடி செய்கிறீர்களே! நான் யாருக்கு என்ன கடிதம் எழுதவேண்டும்? அதைத் தெரிவியுங்கள்." என்று வணக்கமாகக் கேட்டான்.

இதற்குள் அந்நால்வரும் "அடேய்! என்ன தைரியம் உனக்கு? உன் முகத்திற்கெதிரில் துப்பாக்கி இருக்கையில் நீ ஏதோ சாவதானமாகக் கேட்கிறாயா! உம். நாங்கள் சொல்வது போலவே எழுது. இல்லையேல் சுட்டுவிடுவோம். உம்;'" என்று அதிகாரமாய் அட்டகாலம் செய்தார்கள். அதற்குள் ஒருவன் கேசவனின் தலை மயிரைப் பிடித்துக்கொண்டான். அப்போது அதிக அகாலமும் ஆய்விட வில்லை.இரவு 8 மணி தானிருக்கலாம். கேசவன் இருக்கும் அறை மூன்றாவது மாடியில் ஓர் தனித்த

அறையாதலால் அங்கு பக்கத்தில் எவரும் சகாயத்திற்கில்லை; அப்படியும் அவன் விடாது கோவெனக் கத்தவாரம்பித்தான்.

எப்பொழுதும் மோட்டாரிலேயே சுற்றும்படியான நிலைமையிலிருந்தாலும் ஒரு சமயம் தான் கேவலமாகக் கருதும் ரிக்ஷா வண்டிக்காரனிடம் சுருட்டு பற்றவைக்க வெற்றிப் பெட்டி கேட்கும்படி நேர்ந்து விடுகின்றது. ஆனால் அப்பொழுதும் அதிகார தோரணையே முன் வந்து நிற்கின்றது.

உடனே இரு கரங்கள் அவன் குவளையைக் கெட்டியாகப் பிடித் துக் கொண்டன. கேசவனுக்கு மூச்சுத் திணறும்படியாக ஆய்விட்டதால் தத்தளிக்கின்றான்; "உம். எழுது; எழுது." என்று ஒரு பேனாவை அவன் கையில் கொடுத்து வற்புறுத்தினார்கள். அவன் சமிக்ஞைபினால் "விடுங்கள் எழுதுகிறேன்" என்றதும், குவளையை

விட்டார்கள். "உம் எழுது" என்று கூறியதும் கேசவன் எழுத வாரம்பித்தான்.

"என் பிரியமுள்ள பரிமளா!

இந்தக் கடிதம் கண்ட தக்ஷணம் இவர்களோடு கிளம்பிச் சென்று விடு. இவர்கள் என் மனிதர்கள். விவரம் பிறகு நான் உன்னை நேரில் கண்டு சொல்கிறேன்.

இங்ஙனம்
கேசவன்."

என்று அவர்கள் சொல்லிக்கொண்டு வருகையில் அதைக் கேட்கும் போதே கேசவனின் உள்ளம் துடிதுடித்தது, "ஏதோ பெரிய மோச வலையை விரிப்பதற்கே இவ்விதம் இவர்கள் செய்கிறார்கள்" என்று நன்றாகத் திட்டமாகத் தெரிந்துகொண்ட உடனே, அக்கடிதத்தை முற்றும் எழுதி முடிப்பதற்குள் வெகு துணிகரமாக

சடக்கென்று கிழித்து எறிந்துவிட்டு "கிராதகப்பதர்களே! என்னுயிர் போனால் பாதகமில்லை. நான் என்னுயிரைத் திருணமாக மதிப்பவன் என்பதை நீங்களறியீர்கள் போலும், என்னுயிரினுமினிய பரிமளவல்லியை கொடிய பாதகர்களாகிய உங்கள் கையில் நான் காட்டிக்கொடுக்க மாட்டேன். என்னைத் தயாராகச் சுட்டுக் கொல்லலாம்." என்று வெகு முடுக்காக மாரைக் காட்டி நின்றான்.

ஒரு நல்ல காரியத்தைச் செய்யப் பிரயத்தனப்படுபவர்களுக்குப் பலவித இடையூறுகளும், துன்பங்களும் நேருவது சகஜம். ஆனால் அவை யாவும் அவர்களது மனோதைரியத்தையும், உண்மையான பக்தியையும் சோதிப்பதற் காகக் கடவுளால் உண்டாக்கப் படுகின்றன என்று நிளைத்து, அவற்றால் சற்றும் மனந்தளராமல் ஒரே

பிடியாகத் தனது உயிர் போவதாயிருந்தாலும் தான் எடுத்துக் கொண்ட காரியத்தினின்றும் பின் வாங்காதிருந்தால் கடவுள் அதை எப்படியும் பூர்த்தி செய்து வைப்பார். இதற்கு உதாரணம் காதால் கேட்கும் துருவன், பிரகலாதன்• கதைகள் வேண்டியதில்லை; நாம் கண்ணால் பிரத்யக்ஷமாக இக் காலத்திலேயே காணலாம்.

எழுத வாரம்பித்ததும் சந்தோஷங்கொண்ட நால்வரும் எதிர்பாராத இச் செய்கையினால் மிக்க வியப்புற்றார்கள். ஒருவன் பேனாக் கத்தியை எடுத்தான். அதற்குள் கேசவன் “அடேய் திருட்டு நாய்களே! நீங்கள் முதலில் சுடாமலிருக்கையிலேயே தோடா இல்லாத் துப்பாக்கி என்பதை நானறிந்து கொண்டேன். பேடிகளே! இப்போது கத்தியை எடுத்துக் குத்தப் போகிறீர்களா! இதற்கு நான் சளைத்தவனன்று. தாராளமாகக் குத்துங்கள்.”

என்று கூறிக் கொண்டே தன் மேஜைமீதிருந்த பிகிலை எடுத்தான். அதற்குள் கேசவன் கையில் பேனாக் கத்தியால் குத்தப்பட்டது. அதையும் அவன் பொருட்படுத்தாமல் பிகிலை வெகு விசையாக ஊதினான். மீண்டும் பேனாக்கத்தியினால் அவனது தேகத்தில் அனேக இடங்களில் குத்திவிட்டு “பயலே! நீ இம்முறை தப்பினாய்; இனிமேல் தப்ப மாட்டாய் இரு” என்று கூறிக்கொண்டே அவர்கள் ஓட்டமெடுத்தார்கள்.

கேசவனின் மனத்திலுள்ள ஆவேசத்திலும் பரிமளவல்லிக்கு நேரவிருந்த ஆபத்தும் அவன் மனத்தில் பூரணமாகப் பதிந்து வேலை செய்வதால், இந்த கத்திக் குத்தையும் அவன் லக்ஷியம் செய்ய வில்லை. ரத்தம் பலவிடங்களிலும் ஒழுகுகின்றது. அதை அலம்பித் துடைத்துக்கொண்டு கீழே இறங்கி ஓடி வந்தான் எஜமானர் திருப்பதிக்குச்

சுவாமிதரிசனார்த்தம் சென்றிருப்பதால் அவர் இல்லை. தான் இனி அரை நாழிகையும் தாமதிக்கலாகாதென்று எண்ணியவனாய் அவன் ஒரு வண்டியமர்த்திக்கொண்டு நேரே ராஜாராம் நாயுடுவின் வீட்டிற்குச் சென்று நடந்த சகலமான விஷயங்களை யும் விடாது கூறினான்.

அதைக் கேட்ட நாயுடு ”கேசவா! நீ விசனப்படவேண்டாம். நீ பரிமளாவினிடத்தில் எத்தகைய காதல் கொண்டிருக்கிறாய் என்பது எனக்கு நன்கு புலப்படுகின்றது. உன்னுயிரையும் திருணமாய் மதித்த உத்தமன் உனக்கு ஒரு குறைவும் வராது. இனிமேல் நான் ஒரு ஆளை உன் வீட்டில் காவல் வைக்கின்றேன்: அவன் உன் வீட்டிலிருப்பதாகப் பிறரறியாவாறு அவன் இருப்பான். ஏதேனும் விசேஷமிருப்பின் எழுதியனுப்பு: முக்கியமாயின் நேரில்

வந்து கண்டு பேசு. நீ என்னிடம் சம்மந்தம் வைத்துக்கொண்டிருப்பதே ஒருவருக்கும் தெரியவேண்டாம்: ஜாக்கிரதையாய் நடந்துகொள்.’ என்று எச்சரித்து அனுப்பிவிட்டார்.

அவரிடம் விடை பெற்றுக்கொண்ட கேசவன் அங்கிருந்து நேரே பரிமளாவின் வீட்டிற்கு வந்தான். அப்போது இராக்கால மாகையினால் எங்கும் நிச்சப்தம் குடிகொண்டுவிட்டது. பரிமளவல்லியின் வீடு தாழ்ப்பாள் போடப்பட்டிருந்தது. கதவை இடித்தான். உடனே கதவு திறக்கப்பட்டது. கேசவன் கதவைத் திறந்த வேலைக்காரியை நோக்கி “அம்மா! உன் சின்ன எஜமானியம்மாள் இருக்கிறார்களா!” என்று கேட்டான். “இருக்கிறார்கள்” என்ற பதில் வந்த உடனே, அவ்வறைக்குச் சென்று ஓசை செய்யாமல் கதவைத் திறந்துகொண்டு

உள்ளே கவனித்தான்.

பரிமளா அப்போது நித்திரை கொள்ளாது புரண்டபடியே "ஓ கடவுளே! எந்த ஊரிலேயோ கிடந்த என்னை இங்கு கொணர்ந்து, உவமையிலா உத்தமனாம் கேசவனோடு நடிக்கச் செய்து, ஆழ்ந்த அன்பையும் உண்டாக்கி, அதை வேரூன்றச் செய்துவிட்டு என்னுடைய விதியின் கொடுமையினால் என் அன்பனைப் பிரித்தும் வைத்துவிட்டாயே! இது தகுமா! அந்தோ! இன்ப வடிவமான கேசவனின் திருமுகத்தைப் பார்த்து எத்தனை நாட்களாகி விட்டன! என்னுயிரையே பிரித்திருப்பதாகவன்றோ தோன்றுகின்றது. ஹா! கேசவா! கேசவா! என்ன அழகிய பெயர்! ஒருதரம் நாமத்தை உச்சரித்தாலும் கர்ம வினை நீங்குமே! என் பாபம்தான் அத்தகைய உத்தமனைப் பிரித்துவிட்டது." என்று மனத்திற்குள்ளேயே எண்ணமிட்ட வண்ணம்

“ஹா! கேசவா! கேசவா!” என்ற பாகத்தை மட்டும் உரத்துக் கூறிக்கொண்டிருப்பதைக் கண்ட கேசவனுக்கு இன்ன தென்று விவரிக்க இயலாதவிதமான ஆநந்த உணர்ச்சி யொருபுறம் பொங்குகின்றது. மற்றொரு புறமோ, “என்ன ஆகுமோ!” என்கிற ஏக்கம் வதைக்கின்றது. பரிமளவல்லியின் உண்மையான மனோபாவத்தை பகிரங்கமாக இதுபிரியந்தம் அவன் அறியாதிருந்தான். இப்போது அது நன்றாகத் தெரிந்துவிட்டதால் அவனுக்கு அது விஷயத்தில் நிரம்ப சந்தோஷம் உண்டாகிவிட்டது.

சிலர் தெருவில் நடக்கையில்தான் தமது குடும்ப விஷயங்களைப் பற் றியோ அல்லது வேறு விஷயங்களைப் பற்றியோ பற்பல விதமான சிந்தனைகள் செய்வது வழக்கம். அவர்களது மனோ ராஜ்யத்தினால் வழிமாள்வது தெரியாம லிருப்பது ஒரு

அநுகூலமாயினும், வழியில் பலவித ஆபுத்துக்களுக்குத் தாங்கள் இலக்காவதுடன் பார்ப்பவர்களுக்குப் பைத்தியக்காரன் போலத் தோன்றுவது அவர்களுக்குத் தெரிவதில்லை.

தேகத்தில் கத்தியினால் பட்ட குத்துக்களும் வலி தெரியா தொழிந்தன. அவன் மெல்ல கட்டிலினருகில் சென்றான். “பரிமளா! நான் அகாலத்தில் உன்னுடைய அனுமதியின்றி அநாகரிகமாய் உள்ளே வந்ததற்காக என்னை மன்னிக்கவேண்டும்.” என்று மரியாதையாகக் கூறி நின்றான். அதுவரையில் தன் போக்காகப் படுத் திருந்த பரிமளா இந்த குரலைக் கேட்டவுடன் அம்ருத தாரையைப் பருகியது போல மிக்க குதூகலத்துடன் எழுந்து கேசவனைக் கண்ட தும் உண்டாகிய மலர்ந்த முகத்துடனும், அடங்கா நகைப்புடனும் ’வாருங்கள்! வாருங்கள்! நான் மன்னிப்பதா! பேஷ்!

பெரிய வார்த்தைகளை எல்லாம் பேசுவது அழகா!...... என்ன இது தேகத்தில் கட்டுக்கள்! ரத்தக்காயங்கள்........ கறைகள்!.... ஐயோ! யாது ஆபத்து விளைந்துவிட்டது?” என்று அலறியவாறு கேட்டாள்.

சிலர் மற்றவர்களைப்பற்றி “அவர்களுக்கு எல்லாவித சௌகரியங்களு மிருக்கையில் சில காரியங்களைச் சரியாய் செய்வதில்லை” என்று குறை கூறு கின்றார்கள். ஆனால் அவர்களிடம் நெருங்கிப் பழகினால்தான் அவர்களது கஷ்டங்கள் தெரிகின்றன. அப்புறம் அவர்களைப்பற்றி புகார் கூற இடமிருப்ப தில்லை. இக்கரைக்கு அக்கரை பச்சை என்பது போல் யாவும் வெளித் தோற்றம்தான்.

கேசவன்:- (இனிமேல் தைரியமாய் அழைக்கலாம்) கண்ணே! பரிமளா! இந்த அடையாளங்கள் - கட்டு காயங்கள்- ரத்தக்

கரை கள் யாவும் என் காதலின் பரிசுகள்! என்றும் மறத்தல் கூடாத முத்திரை மார்க்குகள். பரிமளா! நடந்த விஷயத்தை நீ கேட்டால் மிக்க மனமுருகுவாய்; பயப்படுவாய். என்னுயிரினுமினிய உன்னைக் காத்தல் பொருட்டு இக் குத்துக்களையும் தாங்கிக் கொண்டேன். உயிரை விடவும் துணிந்தேன். என் இன்ப வடிவமாகிய உனக்கு ஒருவித ஆபத்தும் நேராதிருப்பின் அதுவே எனக்குப் போதும்- என்று கூறி நடந்த விஷயத்தை விரிவாக உரைத்தான்.

இதைக் கேட்ட பரிமளா திடுக்கிட்டு, நடு நடுங்கி “ஹா! கத்தி யினால் குத்தியதா இது? ஐயோ! என் பொருட்டாகத் தங்களுக்கு இத்தகைய பெரிய அபாயம் நேர்ந்து விட்டதே! இந்த அபசாரத்திற்கு நான் என்ன செய்வேன்?” என்று வருந்தி வாடி நின்றாள்.

கேசவன்:- கண்மணி ! நீ வருந்துவது

சற்றும் அழகல்ல! இப்போது நடந்த சம்பவங்களைத் திருப்பி வைத்துக் கொண்டு பார்ப்போம். என்னைப் பற்றி உன்னிடம் அத்தகைய சம்பவம் ஏற்படின் நீ என்னைக் காட்டிக் கொடுத்துவிட்டு வேடிக்கை பார்ப்பாயா !உனக்கு மனம் துணியுமா! அதை நன்றாக யோசித்துப் பாரு.

பரிமள:- நான் என்ன பதில் பேசுவேன்? என் உயிரைக் கொடுக்கவும் அஞ்சமாட்டேன்; ஆனால் தங்களைக் காட்டிக் கொடுக்க மாட்டேன். இது பரஸ்பர அன்பின் தோற்றங்கள். தாங்கள் சிரமப் படுவதையும், என் பொருட்டுக் கத்திக் குத்து பட்டதையும் காண மனஞ் சகியாமல் இவ்வாறு கூறுகிறேன். நண்பரே! இந்த ரணங்களின் பாதையை எவ்விதம் தாங்குகின்றீர்கள். எந்த சண்டாளர்கள் அவ்விதம் செய்தார்கள் என்பதை யறிய ஆள் அடையாளம் தெரிய

வில்லையா! ஐயோ! நாமிருவரும் பாதேசிகள் என்பதை யறிந்து நமக்குத் தீங்கு செய்கின்றார்கள். நம்முடைய எஜமானர் கட இச் சமயம் இங்கில்லையே! என்ன செய்வது?

யாராயினும் சரி,நம் வீடேறி வந்த பிறகு, நமக்கு எவ்வளவு காரியங்கள் இருந்த போதிலும், வந்தவர்களை உபசரித்து, நமக்கு அசௌகரிய மிருப்பின் மற்றொரு சமயம் வரும்படியாகச் சொல்வது நல்லதேயன்றி அவர்களைப் பரா முகமாக நடத்தி அவர்கள் மனத்தைப் புண்படச் செய்வது யுக்தமல்ல.

கேசவன்:- கண்ணே! நான் இவ்வேளையில் இங்கு வந்ததற் குக் காரணம் தெரிந்து கொண்டாய்; இன்று நடந்த சம்பவத்தைப் பார்த்தால் வேண்டுமென்று உனக்குத் தொந்தரவு செய்வதற்காகத் தான் அக் கடிதத்தை என்னை விட்டு எழுதச் செய்தது. அதை உன்னிடம் காட்டினால் நான்

அனுப்புவதாக நீ நினைத்து அவர்களோடு வந்து விடுவாய் என்கிற சூழ்ச்சியை எண்ணிச் செய்திருப்பதாகத் தெரிகிறது. ஆதலால் உனக்கு எந்த சமயம் எத்தகைய தீங்கு விளையுமோ தெரியவில்லை. நமது எஜமானர் வந்த உடனே இவ் விஷயங்களைத் தெரிவிக்கின்றேன். அவர் எவ்விதம் செய்யும்படியாகக் கூறுகிறாரோ அவ்வழியே செய்வோம். எந்த சமயத்தில் யார் வந்து உன்னையழைத்தாலும் நீ சடக்கென்று ஏமாந்து சென்று விடாதே! வந்திருப்பவர்கள் யாரென்பதை முக்கியமாகத் தெரிந்து கொள். உன்னால் கூடுமானால் அவர்களிடம் பேசி விஷயமும் அறிந்து கொள். இன்று செய்தது போல என்னிடம் வந்து மிரட்டினாலும் நான் என்னுடைய உயிரையாவது விடுவேனேயன்றி உன்னைக் காட்டிக் கொடுக்க மாட்டேன்.

உன்னைப்பற்றி என்னிடம் கேட்டதுபோல உன்னிடம் என்னைப்பற்றி கேட்டால் நீ பயப்படாதே. தைரியமாய் மறுத்துவிடு; அன்றி பயந்துகொண்டு எழுதியனுப்பினாலும் நான் அதைக்கண்டு நம்பிவிடமாட்டேன். அதற்குத் தக்க வகையில் ஏற்பாடு செய்வேன்; கண்மணீ! உனது நித்திரை பங்கமாகின்றது.

பரிமள:-அன்பரே! எனது நித்திரை பங்கமானால் அதனால் பாதகமில்லை. உங்களுக்கு ஒருவிதமான ஆபத்தும் நேராமலிருந்தால் அதுவே போதும்! நான் கோருவது அதுதான். இரவு பகலாகக் கடவுளை வேண்டியவண்ண மிருக்கிறேன். எனது எண்ணத்தில் சதா இக் கவலையே அதிகரித்து விட்டது. இதனால் ஊணுறக்கமும் கொள்வதில்லை. சதா சிந்தித்த வண்ணமே இருக்கிறேன்; என்ன செய்வேன்? கடவுள் நமக்கு ஒருவிதமான ஆபத்துமில்லாமல்

காப்பானா!

நாம் யாரிடத்தும், எக் காலத்திலும் ஒரு அனுகூலத்தை எதிர்பார்ப்பது கூடாது. ஏனெனில் அது கிடைக்காவிடில் அதிக ஏமாற்ற மடைய வேண்டி வருகின்றது. ஆகையால் பலனை அதிக ஆவலுடன் எதிர் பார்க்காமல் நமது கட மையைச் செய்ய வேண்டியது.

கேசவ:- பரிமளா! இவ்விதம் கவலைப் படுவதெல்லாம் நமது அஞ்ஞானத்தினால்தான். உண்மையான ஞானமும் பக்தியும் இருக்குமாயின் பாரத்தை அவன் சரணத்தில் அர்ப்பணம் செய்துவிட்டு நாம் அவனை நம்பி இருந்தால் நமக்குக் கவலை இல்லை, இந்த வேதாந்தம் பிறருக்குப் போதிப்பது எல்லோருக்கும் எளிதுதான்; என் மனம் மட்டும் கவலையற்று, சலனமற்று இருக்கின்றதென்று நினைக்கின்றாயோ! என்னுடைய மனத்திலிருக்கும் வேதனையை

வெளியிடவே. முடியாது. என்னருமைத் தாயைக் கண்டு களிக்கும் நாளை என்னுள்ளம் எதிர் பார்ப்பதை - அந்த ஆவலை- சர்வேசன்தான் அறிய வேண்டும். கண்மணீ! உன்னுடைய உண்மையான மனோபாவத்தை இன்று நன்றாகத் தெரிந்துகொண்ட ஒரு சந்தோஷந்தான் என் இதயத்தில் பொங்குகின்றது. அச் சந்தோஷம் நிலைப்பதற்குக் கடவுளின் கருணை எவ்வித மிருக்கிறதோ! நானோ அனாதைச் சிறுவன்; நீயும் சிறுமி. உன்னுடைய நிலைமை கேவலமாக விருந்ததெனினும் நீ இப்போது நல்ல நிலைமைக்கு வந்து விட்டாய்; என்னுடைய நிலைமையோ, அன்றையதற்குச் சிறிது மாறுபட்டிருப்பதாகத் தோன்றினாலும், மன வருத்தத்திற்கு மாறுதல் எற்படவில்லை என்பதை என்னுள்ளமன்றே அறியும்! பரிமளா! என்னுடைய விசனத்தைச் சிறிது போக்கி

எனக்கு உற்சாகத்தை யளித்தது எந்தப் பொருள் எனின், அபார உணர்ச்சிக்கு ஆஸ்பதமாகிய சங்கீதமும் ஆநந்த மிக்க நடிப்பும் ஆகும், அதோடு உன்னுடைய அருமையான சினேகம் விளையாட்டுப் பருவமாகிய களங்கமற்ற நிலைமையில் சேர்ந்ததும் என் மனமடைந்த ஆநந்தம் இன்றும் கூறத் திறமன்று.

ஒரு புருஷனும் ஸ்திரீயும் தாராளமாகப் பேசினால் சிலர் அவர்கள் ஏதோ கல்மிஷமான எண்ணத்துடன் பேசுவதாக வம்பளக்கின்றார்கள். இதற்குக் காரணம் அச் சிலரது மனத்தின் பரிசுத்த மின்மையேதான்.

ஆனால், கண்ணே! இனிமேல் நான் தாராளமாக மனத்தை விட்டுக் கூறலாம். என்னுடைய மனத்தில் உண்டாகிய ஆழ்ந்த அன்பு பூர்ணமாய் என் இன்ப வடிவமாகிய உன் மேல் காதல் உருவங் கொண்டு கனிந்து

விட்டது. இதுநாள் வரையில் நான் அதுபற்றி வெளியிடவும் வெட்கினேன்; அஞ்சினேன்; நீ என்ன நினைப்பாயோ! உன்னுடைய உண்மையான போக்கு எதுவோ! அதை யறியாது நான் எனது காதலைக் காட்டிக் கொள்ளக் கூடாது என்று நினைத்தேன். அதே போல இன்று வரையில் நடந்து வந்தேன்; நான் இன்று இங்கு வந்ததும் நீ யறியாவாறு உன்னை 5 நிமிடம் கவனித்தேன். உன் வாயினின்றும் உன்னை யறியாது வெளியான சிற்சில வார்த்தைகளைச் செவியுற்ற பிறகு உன் மனோபாவத்தை அறிந் தேன். கண்மணி! நான் சென்று வருகிறேன். வெகு நேரம் பேசிக் கொண்டிருந்தால் உன்னுடைய தேகம் கெட்டு விடும்.

பரிமளா:- அன்பரே! நீங்கள் உங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவித்தது போல நானும் வியக்தமாகத் தெரிவிக்க வேண்டியது

கடமையல்லவா! நான் சிறு பிராயத்தில் நடித்த அளவிலேயே ஏதோ ஒருவிதமான சினேகம், அன்பு முதலியன உதித்தன. எனக்குக் குருவாகவும் இருந்து தாங்கள் சங்கீதம் முதலியவை கற்றுக் கொடுத்ததும், அன்யோன்ய பாவம் அதிகரித்திருந்ததும் என் தாயாரறிந்த விஷயமே! எனக்கு வயது வந்த பிறகு தங்களையே மணக்க வேண்டுமென்ற வேட்கை யுதித்தது. அதை வெளியிட உங்களைப் போலவே அஞ்சி லஜ்ஜையுற்றேன், என் தாயார் ஒரு தினம் தன் மனப் பூர்வமாக என்னைத் தங்களுக்கே மணம் செய்விக்க விருப்ப மிருப்பதாயும் தாங்கள் சம்மதிப்பீர்களோ, மாட்டீர்களோ என்று சந்தேகம் கொண்டிருப்பதாயும் இவ் விஷயத்தை எஜமானரிடத்திலேயே நேரில் தெரிவித்து காரியத்தை முடிக்க வேண்டுமென்றும் சொல்லி “உனக்கு இது

விஷயத்தில் சம்மதந் தானா?” என்று என்னைக் கேட்டாள். என்னை மணப்பதற்குச் சம்மதமில்லையாயின் எனது சகோதரி சகுந்தலாவை மணப்பதற் குப் பிரியப்பட்டால் அவளைக் கொடுத்து விடுவதாகவும், எவ்விதமாவது உங்களுடைய சம்பந்தம் செய்து கொள்ளவேண்டு மென்றும் கூறினாள். இதைக் கேட்ட என் மனம் மெத்த மகிழ்வுற்றது. என்னுடைய சுக துக்கத்திற்குப் பாத்யதையுடைய என் அன்னையின் மனத்தைக் களிப்பிக்கவேண்டியது என் கடமை யாதலால் நான் என் மனத்திலுள்ளதை விவரித்துக் கூறியதோடு “அம்மா! என்னை மணக்கச் சம்மதப்படவில்லையாயின் நானே என் சகோதரியை மணம் செய்விக்கின்றேன்; எனக்கு அதுபற்றி சற்றும் பொறாமை இல்லை.” என்று உறுதியாகக் கூறி விட்டேன். என் தாயார் மெத்த சந்தோஷங்

கொண்டாள். எஜமானரின் வருகைக்கே காத்துக் கொண்டிருக்கிறாள். எல்லாம் அவனருள்.

ஒரு நல்ல காரித்தைப் பத்து பேர்கள் சேர்ந்து செய்தால் அது நன்றாக நிறைவேறுவதுடன் மற்றவர்களுக்கும் உற்சாகத்தை உண்டாக்குகின்றது. அஃதில்லாமல் ஒவ்வொருவரும் தனித்தனியாகச் செய்து, தனிப் புகழ்பெற வேண்டுமென்று விலகி விட்டால் அக் காரியம் கெடுவதுடன் எல்லோருக்கும் கௌரவக் குறைவுதான் ஏற்படுகின்றது. அதனாலேயே பெரியார் ” ஒன்று பட்டால் உண்டு வாழ்வே, நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே” என்றார் போலும்.

கேசவன் :- கண்ணே! பழம் நழுவிப் பாலில் விழுந்தது. அது ஈழுவி வாயில் விழுந்தது போலாயிற்று. ‘இந்த

சந்தோஷகரமான விஷயத்தைக் கேட்டு முழு மனத்துடன் ஆநந்திப்பதற்கு என் தாயார் இல்லையே!’ என்கிற துக்கம் தொண்டையை அடைக்கின்றது. எத்தனை பேர் இருந்தாலும் ஒரு அன்னைக்கு ஈடாகுமா! என்பார்கள். அது போல என் தாயார் ஒருத்தி இருந்து அனுபவிக் கும் ஆனந்தத்திற்குச் சமானம் எது வரும்? அன்பே! “பசி; பசி” என்று வாடி, வருந்தி, கத்திக் கொண்டிருந்த சகோதரிகளையும் தாயாரையும் பிரிந்த அக் கால நினைவு இப்போதும் என் கண் முன்பு தோன்றுகின்றது. நளனையும் தமயந்தியையும் சனி பகவான் பிரித்தது போல என்னையும் என் தாயார், சகோதரிகள் ஆகியவர் களையும் விதி பிரித்து விட்டதே! நளனுக்கு ஏழரை வருடமானதும் சேரும்படியாகப் பிராப்த மிருந்தது. நான் அக் கதியுமற்று தவித்துக் கொண்டிருக்கிறேன். எனது இந்த துயரம் தீர்ந்து விட் டால்

நான் முற்றும் கவலையற்றுக் களிப்புறும் மனிதனாவேன்.என் இன்னமுதே! இன்று நமக்கு நற்காலம், தீயகாலம் இரண்டும் சேர்ந்திருந்ததாகவே நினைக்கிறேன். ஏனெனில் இவ்விதமான ஆபத்து எனக்கு சம்பவித்ததனாலேதான் நான் இந்த வேளையில் இங்கு வரவும், அன்பு பரஸ்பரம் உள்ளது என்பதைத் தெரிந்து கொள்ளவும் ஆயிற்று. நான் சென்று வருகிறேன்; பயப்படாதே. எந்த நேரத்திலும் கடவுளைத் தொழுது வேண்டு. அவன் காப்பாற்று வான்!" என்று கூறிப் புறப்பட்டான்.

நாம் யாரிடத்தில் அதிக அன்பு செலுத்தி பெரியவர்களாக மதிக்கின்றோமோ அவர்களிடம் நமது மனத்தை விட்டுப் பேசவும், தாராளமாக இருக்க வும் முடிவதில்லை. ஏதேனும் தடங்கல் ஏற்பட்டு விடுகின்றது.

இது கேட்ட பரிமளா "அன்பரே! சென்று

வாருங்கள். நீங்களும் கூடுமான வரையில் ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள் ளுங்கள். என்னுயிர் உங்கள் கையீல் தானிருக்கிறது என்பதை மறக்காதீர்கள்; இந்த காயங்களுக்குத் தக்க சிகிச்சை செய்யுங்கள். அடிக்கடி சந்திப்பதை மறந்து விடாதீர்கள்." என்று விடை பகர்ந் தாள். பிறகு கேசவன் அவ்விடம் விட்டுப் புறப்பட்டு வெளியே வந்து தன் விடுதிக்குப் போய்ச் சேர்ந்தான். அன்றிரவு நித்திரையே கொள்ளவில்லை. அன்று நிகழ்ந்த சம்பவத்தையே எண்ணி எண்ணி இன்பமும் துன்பமும் அடைந்தவாறு இரவைக் கடத்தினான்.

சில தினங்களாயின. எஜமானர் ஊரிலிருந்து வந்தார். வந்த உடனே கேசவன் நடந்த விஷயங்கள் சகலமானவற்றையும் தெரிவித்தான். இது கேட்ட எஜமானர் திடுக்கிட்டு "அப்புறம் எதுவும்

நடக்கவில்லையா! பரிமளா சௌக்யமாக இருக்கிறாளா?” என்றார்.

கேசவன்:- சௌக்யமே.தந்தையே! நமது துப்பறியும் நாயுடுகாருவினிடம் நான் சொல்லியதற்கு அவர் தங்களுடன் கலந்து சில விஷயங்களை யோசித்துச் செய்ய வேண்டுமென்று நேற்று தெரிவித்தார். இன்று அவர் தங்களைக் காண வந்தாலும் வருவார்.

காண ஆநந்தமாய் நடந்த “பிரஜானுகூலன்” வெள்ளித் திருவிழா வைபவம் தமிழ் நாட்டுத் தமிழ்ப் பத்திரிகை யுலகத்திற்கே பெரும் புகழ்ச்சி யைக் கொடுத்தது. எல்லாப் பத்திரிகைகளும் அதனதன் சுவையில் நடை பெறி னும் நீடித்து நடக்கும் பாக்கியம் கிடைப்பதுதான் அரிது.

பொன்னு:- நானே அவர் வீட்டிற்குச் செல்ல உத்தேசித் திருக்கிறேன். நேரில்

பேசிக் கொள்கிறேன். இந்த காயத்திற்கு என்ன செய்தாய்! இன்னும் சில ரணங்களிருக்கின்றனவே!

கேசவன்:- இனிமேல் அதற்கென்ன பயம், முதலில்தான் மிகவும் பாதை செய்தது. இதற்காகக் காய்ச்சலும் வந்தது. ஜன்னி கண்டு விடுமோ என்றும் பயந்தேன். இதை நான் வெளியிடவில்லை. பரிமளா இதனால் மிக்க விசனிப்பாள் என்று பயந்து பேசாமலிருந்து விட்டேன. ஆனால் நாயுடுகாரு என்னைத் தனிமையில் விட சம்மதிக்காமல் தன்னுடன் அழைத்துச் சென்று இரண்டு நாட்கள் அவர் வீட்டிலேயே சிகிச்சை செய்தார். அதன் பிறகு நான் வீட் டிற்கு வந்து விட்டேன். அந்த மகானுபாவனைப் போல உலகத்திலேயே இல்லை எனலாம். வெகு உத்தமர். பரோபகாரத்தையே முதன்மையாகக் கருதுகின்றவர். நன் என்னுடைய தாயார்

விஷயத்தையும் அவரிடம் தெரிவித்தேன்; அதற்கும் முயற்சி செய்வதாகச் சொன்னார்." என்றான்.

பிறகு பொன்னுசாமி "நான் சென்று வருகிறேன்" என்று கூறிவிட்டு நாயுடுவின் வீட்டிற்குச் சென்றார். நாயுடு இவரை வர வேற்று உபசரித்து "எப்போது வந்தீர்கள்!" என்று கேட்டார்.

பொன்னு:- நான் இன்றுதான் வந்தேன், விஷயம் இன்னும் ஒன்றும் தகவல் தெரிய வில்லையா! நான் சென்று வருவதற்குள் விபரீத சம்பவங்கள் நடந்து விட்டதாமே! இதிலேதேனும் விளங்கிற்றா! இது எதோ பூடகமாகவே வேலை நடக்கின்றதே! உங்களுக்குக் கூடப் பிடி கிடைக்கவில்லை எனில் விஷயம் எப்படியாகும். எனக்கு இதே கவலையாக இருக்கிறது. பையன் உடம்பில் காயத் தைப் பார்த்தீர்களே! என்ன

அனியாயம்,!

நாயுடு:-நண்பரே! இந்த விஷயத்திற்கே தாங்கள் பதறிப் போய் விடுகிறீர்கள். இதைப் போன்று பத்து பங்கு சிக்கலான வழக்கில் நான் அகப்பட்டுக் கொண்டு தத்தளிப்பதைத் தாங்கள் நேரில் பார்த்திருந்தால் என்ன நினைப்பீர்களோ! இவ்விதமான சிக்கல் எங்களுக்கு மிக்க சகஜமாகி விட்டது. ஏதோ கூடிய வரையில் நான் ஒருவாறு கண்டு பிடித்திருக்கிறேன். ஆனால் இப்போது வெளியிட மாட்டேன். எனக்கு ஒன்று தோன்றுகின்றது. அதாவது, பரிமளாவின் மீது கேசவன் தன்னுயிரையே வைத்துக் காதல் கொண்டிருக்கிறான் என்பதை நான் பல விதத்திலும் தெரிந்து கொண்டேன். அதை அவனுடைய கத்தி காயத்தினால் இன்னும் நன்றாக நிதர்சனமாகத் தெரிந்து கொண்டேன். அந்த பெண்ணும் அப்படியே என்பதை

அறிந்தேன். கேசவனின் வாயினாலும் இருவருடைய மனோபாவத்தையும் அறிந்து கொண்டேன். ஆகையினால் அவர்களுடைய விவாகத்தை நாம் சீக்கிரத்தில் முடித்து விட்டால் என்ன! அவளை யபகரிக்கவோ, அன்றி அவனை அபகரிக்கவோ பகைவர்களின் சூழ்ச்சியாக விருக்கின்றது. நாம் விவாகத்தை நடத்தி விட்டால் அவ்வளவு பாதகமில்லை என்று தோன்றுகின்றது. உங்கள் அபிப்பிராயமென்ன!

ஒரு விதமான முகாந்திரத்தைக் கொண்டு பல பத்திராதிபர்களின்' தரிச னம் கிடைக்கின்றது. அவர்களின் அறிமுகமும் உண்டாகின்றது. பிறகு பழகிய சினேகிதர்களாகவும் நேருகின்றது.

பொன்னு:என்னுடைய அபிப்பிராயம் தாங்கள் கேட்க வேண்டுமா? தாங்கள் எப்படிக் கூறுகின்றீர்களோ அதன்படிக்கு நான்

நடக்கத் தயாராக இருக்கிறேன். தங்களுடன் நானும் இதைப் பற்றிப் பேசவே வந்தேன்; தாங்களே இவ்விஷயத்தைப் பிரஸ்தாபித்து விட்டீர்கள். எனக்கும் மனம் வெறுத்து சலித்து விட்டது. இது பரியந்தம் செய்த ஸ்தாபனங்கள் போதும். இனி மேல் நான் திவ்ய க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை சென்று சுவாமி தரிசனம் செய்து கங்கை நீராடி வாவேண்டும்; பிறகு திருப்பதி க்ஷேத்திரத் திலேயே சில காலம் மலைமீதே தங்கி இருக்க மனம் ஆவல் கொண்டிருக்கின்றது. ஆதலால் அவ்விதம் செய்யத் தீர்மானித்து விட் டேன்; இவர்களுடைய விவாகத்தை யொருவாறு முடித்து விட்டு, என்னிடமுள்ள செல்வத்தை எப்படிச் செய்ய வேண்டுமோ அப்படி ஒருவழி செய்து விட்டு, நான் கூடிய சீக்கிரத்திலேயே புறப்பட நினைக்கிறேன். அதற்குள் இந்த விபத்துக்களும் ஒழியும், நான் என்னாலான

நன்மைகளைச் செய்து விடுவது என் கடமை.

எத்தனை தீவிரமாக ஓர் சாரியத்தைச் செய்ய நினைக்கின்றோமோ அத்தனை தடைகள் அதற்கு வந்து விடுகின்றன. இதற்குள் வம்பர்களின் வாக்கோ தோன்றியவைகளை எல்லாம் கொட்டி யளக்கின்றன. வம்பு பேசும் மனி தர்களுக்குக் காரியத்தில் கலந்து கொள்ள வருவதற்கு என்னவோ மதி இல்லை. அவர்களில் சிலர் பெரிய படித்த பட்டதாரிகளாம். ஐயோ | புத்தியின் லக்ஷணமே!

நாயுடு:- அப்படியாயின் மெத்த சந்தோஷம்; நாம் இக் காரிய த்தை விரைவில் செய்து முடித்து விடுவோம்: பிறகு மற்றதைக் கவனிப்போம். பொறாமைத் தீ கொண்டு இவ்விதம் கலகம் செய்கின்றார்கள்; நீங்கள் அந்தப் பெண்ணின் தாயாரிடம் கலந்து யோசனை செய்யுங்கள்; அவர்களுடைய

சம்மதியைப் பெற்ற பிறகு நாம் மேல் கொண்டு செய்வோம்.

அப்புறம் பொன்னுசாமி விடை பெற்றுக் கொண்டு வீட்டிற்கு வந்தார்; கேசவனை பழைத்து, “அப்பா கேசவா! நானும் நாயுடுவும் ஒரு காரியம் நிச்சயம் செய்தோம். நீயும் பரிமளாவும் கொண்டுள்ள ப்ரேமை எத்தகைய தென்பதை நான் அறிந்துள்ளது போலவே நாயுடுவும் தெரிந்து கொண்டிருக்கிறார். ஆதலால் உங்களுடைய திருமணத்தை விரைவில் முடித்து விடுவதென்று நாங்கள் தீர்மா னித்து விட்டோம்; அது விஷயத்தில் உன்னுடைய அபிப் பிராயத்தையும், அவர்களுடைய அபிப்பிராயத்தையும் கலந்து கொண்டு செய்ய எண்ணுகிறேன்; நீ என்ன சொல்லுகிறாய்; உன் சம்மதமெப்படி?” என்றார்.

இவ்விதமாக அவர் கேட்பார் என்பதைக்

கனவிலும் நினைக்காத கேசவனுக்கு வியப்பும் சந்தோஷமும் உண்டாயது. எனினும் தன் தாயின் துயரம் ஒருபுறம் குப்பென்று கிளம்பியது. அந்த நிலைமையில் அவன் எஜமானனிடத்தில் லஜ்ஜையோடு “தந்தையே! நான் என்ன சொல்லப் போகிறேன்! தங்கள் இஷ்டம் எப்படியோ அப்படியே காரியம் நடக்க வேண்டியதே என் கருத்து. என்னை இதுபரியந்தம் பிதாவைப் போல ரக்ஷித்து வரும் உங்கள் அடிமை யல்லவா நான்!” என்றான்.

அக் காரியம் முடிந்தபின் அந்த வம்பர்களை மற்றவர்கள் “என்ன அப் போது என்னவோ வம்பளந்தீர்களே, இப்பொழுது என்ன ஆயிற்று பார்த் தீர்களா?” என்று கேட்டால் அதற்கு அவர்கள் “ஐயோ, பாவமே! நான் ஒன் றும் சொல்ல வில்லையே! யாரோ சொன்னதைத்தான் சொன்னேன்” என்று

தாங்கள் முன் வம்பளந்ததையே மறைக்க முயல்கின்றார்கள்.

பொன்:- என்ன இப்படிப் பேசுகிறாய்? நான் சொல்லியது எல்லாம் உனக்குச் சட்டமாக விருப்பின் நான் பரிமளாவை மணக்க வேண்டாமென்றால் நீ நின்று விடுவாயா?

.

கேசவன் - தந்தையே! என்னுடைய சுகத்தையும் துக்கத்தையும் கோரும் தாங்கள் என் விஷயமாகச் செய்யும் எந்த காரியமும் எனக்குப் பிரதிகூலமாக இருக்காதென்கிற உறுதியை நான் கொண்டிருக்கிறேன். தங்களுடைய சித்தம் அவ்வாறிருக்குமாயின் அதுவே கடவுளின் சித்த மென்று நினைத்து நான் கிட்டாதாயின் வெட்டென மற என்றதை எண்ணிப் பேசாமலிருப்பேன்.

பொன்னு:-கேசவா! பேஷ்; நன்றாகப் பதிலுரைத்தாய்; உன்னுடைய

மனோபாவத்தை நானறிந்தது போல வேறு யாருமறிந்திருக்க மாட்டார்கள். உன்னை நான் எவ்விதத்திலும் களிப்பிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். உன் மனமறிந்தும் நான் வேண்டு மென்றே கேட்டேன்; ஏன் கண்ணீர் வடிக்கின்றாய்? என்ன விசனம்?

கேசவன்:- விசனம் என்ன வென்பது தாங்களறியாததன்றே! என்னுடைய அன்னையைக் காணாது நான் கலங்கியபடியே விவாக சந்தோஷமடைய வேண்டி இருக்கின்றதே. என் தாயார் இருந்தால் எத்தனை ஆனந்தமாக விருக்கும். அதை நினைத்தால் விசனம் பொங்குகின்றது.

யார் எப்பொழுதும் மற்றவர்க்கு சிரிப்பையும், சந்தோஷத்தையும் உண் டாக்குகின்றார்களோ அவர்கள் தங்கள் மனத்திலும் முழு சந்தோஷத்தை அடைகின்றார்கள். ஆனால்

சிடுமூஞ்சிகளோ தங்களுக்கு எல்லாவித சௌகரியங்களிருப்பினும் எப்பொழுதும் சந்தோஷமென்பதே அடைவ தில்லை.

பொன்னு:- வாஸ்தவம்; உன் தாயாரை உயிருடன் பறி கொடுத்தது பற்றி நானும் விசனிக்கின்றேன்; நான் எத்தனையோ விதத்தில் அந்த அம்மாளைப் பற்றித் தேடியலைந்தும் ஒருவிதமான தகவலும் தெரிய வில்லையே என்று கவலையாகத் தானிருக்கிறது. உம். என்ன செய்வது? கடவுளின் கருணை இது. இந்த விசனம் என்றைக்கும் நீங்காதது. உன் தாயாரை நேரில் கண்டால்தான் அத் துயர் தீரும். ஆகையினால் இதையே எண்ணி மேலேயாக வேண்டியதை நிறுத்துவது முடியாது. உன்னுடைய நலனைக் கோரியே நான் இதை சீக்கிரத்தில் முடித்து விட நினைக்கிறேன். நான் இப்போது பரிமளாவின் வீட்டிற்குச்சென்று விஷயத்தை வெளியிட்டு

அவர்களுடைய அபிப்பிராயத்தைப் பெற்று வருகிறேன்-என்று கூறி விட்டுப் பரிமளாவின் வீட்டிற்குச் சென்றார்.

பரிமளா, அவள் சகோதரி, தாயார் ஆகிய மூவரும் பேசிக் கொண்டிருந்தார்கள். பொன்னுசாமியைக் கண்டதும் “வாருங்கள் உட்காருங்கள்” என்று அவரை அமரச் செய்தார்கள். “என்ன விசேஷம்? ஏதேனும் தகவல் தெரிந்ததா!” என்று பரிமளாவின் தாயார் கேட்டாள்.

இதைக்கேட்ட பொன்னுசாமி “தற்போது பெருத்த சந்தோஷ சமாசாரத் தகவலை கொண்டு வந்திருக்கிறேன். அது உங்கள் எல்லோருடைய மனத்திற்கும் மிக்க பிடித்தமாயிருக்குமென்று நம்புகிறேன்; அதாவது நான் புண்ணிய க்ஷேத்திர யாத்திரை செய்யச் செல்வதென்று தீர்மானித்துள்ளேன். தற்போது நடக்கும்

சச்சரவுகள் யாவும் செல்வத்தையும், செல்வர்களையும் பொருத்தியதாக இருக்கின்றன; ஆதலால் அதற்கு ஒரு வழியைச் செய்து விடுவது உசித மென்று தோன்றுகின்றது. பரிமளாவுக்கும் கேசவனுக்கும் விலங்கு பூட்டி விடலாமென்று நினைக்கின்றேன்; உங்கள் யோசனை என்ன? இஷ்டம் எப்படி? தெரிவித்தால் மெத்த சந்தோஷம்.” என்றார். இந்த எதிர் பாராத வார்த்தையைக் கேட்ட பார்வதியம்மாள் மெத்த சந்தோஷமடைந்து “ஐயா! தாங்கள்தான் எங்கள் குலத்தைக் காக்கும் புண்ணியவானாகையினால் தாங்கள் சொல்வதற்கு இரண்டாவது கிடையாது என்பது நான் கூற வேண்டுவதில்லை. பரிமளாவை உங்கள் புதல்வியாகவே நான் தீர்மானித்திருக்கிறேன். கேசவனின் சம்மதத்தைக் கேட்டுத்

தெரிந்துகொண்டீர்களா? என் மனப் பூர்வமாய் இந்த விவாகம் என்று நடைபெறும் என்று நான் கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறேன். இன்றே எனக்கு சுதினம்.” என்றாள்

இருபத்தைந்து வருஷங்களாக ‘ஒருவரின் நிழல் மற்றவர்’ என்று சொல்லும்படி இணைபிரியாதிருந்த தம்பதிகளே ஒரு சத்லிஷயத்தை முன்னிட்டுப் பல மாத மாதங்கள் பிரிந்திருக்க பரஸ்பரம் மனமுவந்து, அதற்கு வேண்டிய மனோ திடத்தை அடைகின்றார்கள். காலத்திற்குத் தகுந்த புத்தியை கடவுள் அளிக்கின்றார்.

பொன்:-அம்மா! கடவுளின் கிருபையினால் உங்கள் விருப்பம் ஈடேறி விடும் என்பதே எனது நம்பிக்கை: என்னுடைய கடமையில் இதையும் ஒன்றாக நான் தீர்மானித்திருக்கிறேன்; கேசவனது சம்மதத்தைப் பெற்றே நான்

இங்கு வந்தேன்; மணமகளின் சம்மதம்தான் தெரியவில்லை - என்று பரிகாஸமாக நகைத்துக் கொண்டே 'பரிமளா ! கேசவனை மணக்க உனக்குச் சம்மதமில்லை எனில் தெரிவித்துவிடு; பயப்படாதே! வேறு நல்ல வானாசுப் பார்த்து நான் விவாகம் செய்து வைக்கின்றேன்." என்றார்.

பரிமள:- (குனிந்த தலை நிமிராமல் அபாரமான லஜ்ஜையுடன்) கடவுளுக்குத் தமது பக்தர்களின் மனோபாவம் நன்றாகத் தெரியும். அவ்வாறு தெரிந்தாலும் அவர்களைச் சோதியாமல் தன் பொன்னடி தருவதில்லை: அதுபோன்றே உலகத்துச் செயலும் இருக்கின்றது.

பொன்:- செல்வீ! பரிமளா! உன் உதாரணம் வெகு பொருத்த மானது, என் கண்ணே! நீ ச ற்றும் பயப்படாதே. கேசவனையும் உன்னையும் நான் ஒருபோதும் பிரிக்க

மாட்டேன்; உங்கள் காதலின் மகிமையை நான் அறிவேன்.

தனது பாதி உயிராக மதித்துள்ளவர்களைப் பிரிந்திருக்க மனோதிடம் ஏற்படுகையில் தன்னுடன் கூடவே இருக்கும் குழந்தைக்குச் சற்று தலைவலி வந்துவிடின் அதைக் கண்டு சகிக்கக் கஷ்டமாயிருக்கின்றது. அவர்களது மனோ திடத்தைச் சோதிப்பதற்கே அவ்வித நிகழ்ச்சி ஏற்படுகின்றது போலும்.

என் வாழ்நாளில் நான் சண்டாளனா யிருந்துவிடினும் அதன் உயர்வு இப்போது எனக்கு நன்கு தெரிகின்றது. என் குணவதியின் உயிர் பறிபோனதே அதற்குச் சான்றாகும். கண்ணால் கண்டும் காணாதவனாய் - குருடனாய் — அவ் வுத்தமியை உயிர்ப் பலி கொடுத்தேன். ஆகையினால் நான் உங்களை அதிக நாள்

பிரித்து வைக்கவும் சம்மதிக்காது சீக்கிரமே விலங்கிட்டுச் சிறைச் சாலையிலடைத்துவிட வாரண்டு தயார் செய்வதற்கே வந்தேன். நான் சென்று புரோகிதரை அழைத்து முகூர்த்த நாள் குறிப்பிட்டு விடுகிறேன். அதன் பிறகு மற்ற ஏற்பாடுகளைச் செய்து விடுகிறேன். உங்கள் திருமணத்தை ஸ்ரீ வெங்கடேசப் பெருமாள் சன்னிதானத்தில்தான் செய்ய வேண்டுமென்று என் மனத்தில் தோன்றுகின்றது. அவ்விடத்திலேயே செய்து விடுகிறேன். உங்களுக்கு ஆக்ஷேபனை இல்லையே!” என்றார். அதற்கவர்கள் ‘இல்லை’ என்றதும் உடனே அவ்விடத்தில் விடைபெற்றுக் கொண்டு வீடு வந்து சேர்ந்தார்.

அன்றே தமது புரோகிதரை அழைத்தார், அவர் வந்து நாள் பார்த்து, தை மாதம் 27-ம் தேதி முகூர்த்தம் வைத்துக் கொடுத்துச் சென்றார். லக்னப் பத்திரிகையும் எழுதித்

தயாராகி விட்டது. பரிமளாவுக்கும் கேசவனுக்கும் விவாகம் என்ற விஷயம் ஊர் முற்றும் எல்லோருக்கும் தெரிந்து விட்டது. இதே பேச்சாக எல்லோரும் பேசிக் கொள்ளத் தொடங்கினார்கள். விவாகத்தை பொன்னுசாமி வெகு விமரிசையாக நடத்தத் தீர்மானித்து நாயுடுவுடனேயே கலந்து யோசித்துப் பலவிதமான ஏற்பாடுகளும் செய்ய லானார்.

கேசவனுக்கு விவாக தினம் குறிப்பிட்ட வுடனே தன் தாயாரின் நினைவும், சகோதரிகளின் நினைவும் அபாரமாக உண்டாகி விட் டன. விவாகத்திற்கு இன்னும் 20 நாட்கள் தானிருக்கின்றன. இன்பமும் துன்பமும் சம இடையாகக் கேசவனின் மனத்தில் பாதிக்கின்றன. தன் தாயைக் கண்டு பிடிக்கும் வரையில் விவாகம் செய்து கொள்ள வேண்டாமென்று ஒத்தி வைக்க

எண்ணினாலோ ‘இத்தனை வருடங்களாக ஒரு விதத் தகவலும் கிடைக்காததுபோல இன்னும் எத்தனை வருடங்களாகுமோ!’ என்று தோன் றியதால், கடவுளின் செயல் எவ்வித மிருக்கிறதோ அவ்விதமே நடக்கட்டும் என்று மனந் தேறினான்.

தலையணை யண்டையில் பேனா, பேபர், விளக்கு யாவும் இருந்தும் மனத்திலுண்டாகும் எண்ணங்களை எழுதுவதற்குச் சோம்பல் தடுத்துவிடுகின்றது. தூங்கி எழுந்தபிறகு போனது போனதுதான்.

ஒரு தினம் கேசவன் தனக்கு வந்த கடிதங்களைப் பிரித்துப் படித்துக் கொண்டே இருக்கையில் அதில் கீழ் வருமாறு ஒரு கடிதம் இருந்தது.

”என் ஆருயிர்ச் செல்வனான கேசவனுக்கு அனேக ஆசீர் வாதம். என் கண்ணே! கேசவா!

உன்னை ஈன்ற தாய் ஒருத்தி இருக்கிறாள் என்பதே உனக்கு மறந்து விடும்படியாக நமது போதாக்காலக் கொடுமை நம்மைப் பிரித்தது. பாழும் ஏழ்மையே அதற்குக் காரணம். என் கால விதிகளை எல்லாம் நான் பிறகு கேரில் சொல்கிறேன். நீ அங்கிருப்பதாக இன்றுதான் நீ கேள்விப்பட்டு, இக் கடிதம் எழுத ஒரு பைசா காசில்லாமல் தத்தளித்து எப்படியோ பிச்சை எடுத்து இதை எழுதலானேன் நானும் உன் சகோதரிகளும் படும் கஷ்டம் கூறத் திறமன்று. நான் இக் கடிதத்தில் அச்சிட்டுள்ள இலக்கமுடைய வீட்டில் இருக்கிறேன்; அவ் வீட்டுக்காரரர் பெண்ணுக்கு விவாகம்; அந்த வீட்டில் நாங்கள் வேலை செய்து கொண்டிருக்கிறோம்; ஆகையி னால் க் இக் கடிதம் கண்ட தக்ஷணம் இவ்விடம் வரவும். தாமதிக்காதே.

இங்ஙனம்

உன் அன்னை கோமதி”

ஒரே காரியத்தை சிலர் “எப்படியும் ஜயமடைவோம்” என்ற தன்னம் பிக்கையுடன் ஆரம்பிக்கின்றார்கள்; வேறு சிலர் கடவுளின் மீது பாரத்தைப் போட்டுவிட்டு யாதொரு பலனையும் கருதாது செய்கின்றார்கள்; மற்றும் சிலர் சுய நம்பிக்கையுமில்லாது, கடவுளிடத்தும் நம்பிக்கையில்லாது ஒரு விதமனப் பீதியுடன் செய்கிறார்கள். முதல் கோஷ்டியினருக்குக் கடவுன் உதவுகிறார்; இரண்டாவது கோஷ்டியாருக்கு வெற்றியைத் தாமே அளிக்கின்றார். ஆனால் கடைசி கோஷ்டியினருக்கு அபஜயமே ஏற்படுகின்றது. அவரவர்கள் மனோ பாவத்துக்குத் தகுந்தபடியேதான் யாவும் நடக்கும்.

அக் கடிதத்தைப் படித்த உடனே கேசவனுக்கு அப்படியே ஆநந்தம் பொங்கி விட்டது. “தன் தாயின் தரிசனம் தனக்குக்

கிடைக்குமா!” என்று எங்கித் தவித்ததற்கு மாறாக உடனே கடிதத் தைக் கண்டதும் ஆநந்த பாஷ்பம் பெருக அப்படியே மெய் சிலிர்த்து விட்டான்.

## 9-வது அதிகாரம் - விவாக மகிழ்ச்சி- விபரீத நிகழ்ச்சி

பரிமளா தனக்கு விவாகம் சமீபித்து விட்டதால் மட்டற்ற மகிழ்ச்சியடைந்து அந்த நாளை ஆவலோடு எதிர் பார்த்துக் கொண்டிருந்தாள்.விவாகமானதும் தான் முன்னர் நாடகத்தில் நடித்த பாத்திரங்களைப்போல தினசரி வாழ்க்கை நடத்தப் பெரும் ஆர்வங் கொண்டிருந்தாள். அது விஷயமாகவே யோசித்துக் கொண்டிருக்கையில், பொன்னுசாமியும் பார்வதியம்மாளும் கல்யாண விஷயமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

அச் சமயம் கேசவன் வெகு வேகமாகவும் தன்னை மீறிய ஆநந்தத்துடனும் ஓடி வந்து, வெகு வணக்கத்துடன் அக் கடிதத்

தைத் தன் எஜமானர் கையில் கொடுத்து "தந்தையே! நமக்குச் சந்தோஷ காலம் பிறந்து விட்டது. இக் கடிதத்தைப் படித்துப் பாருங்கள்'' என்று கூறினான். உடனே பொன்னுசாமி கடிதத்தைப் படித்துப் பார்த்துப் பேராநந்தமடைந்து"கேசவா! உன் பக்கத்தில் கடவுள் எப்படி மறைந்து வேலை செய்கிறார் பார்த்தாயா! பரிமளாவின் அதிருஷ்டம்தான் எத்தனையோ வருடங்களுக்கு முன்பு மறைந்துவிட்ட தாயார் இவ்விதம் விவாக சமயத்திற்குச் சரியாக வந்து சேருகிறாள். ஆகா! என்ன ஆநந்தம்! கேசவா! உன் மனம் குளிர்ந்ததா ! நீ இப்போதே புறப்பட்டு, வண்டி எப்போது புறப்படுகின்றது என்பதை விசாரித்துப் பிரயாணத்திற்குச் சித்தமாயிரு. நான் இதோ சென்று பணங் கொண்டு வருகிறேன்" என்று கூறி விட்டுத் தன் வீட்டை நோக்கிச் சென்றார்.

கேசவன் பரிமளாவிடம் சென்று, “பரிமளா! நான் ஊருக்குச் சென்று வருகிறேன்; என் தாயார் எனக்குக் கடிதமெழுதி இருக்கிறாள். நமது எஜமானர்;சொல்லியது போல உன்னுடைய மகிமை தான் - பாக்யந்தான்- உன் மாமியார் விவாகத்திற்கு வந்து விடுகிறார்கள்; கண்ணே! பரிமளா! நான் சென்று என் தாயார், சகோதரிகள் ஆகியவர்களுடன் உடனே திரும்பி விடுகிறேன். எந்தக் காலத்திலும் நம்மிருவரையும் நிழல் போல ஆபத்துச் சூழ்ந்து கொண்டே இருக்கின்றது. நீ ஜாக்ரதையாக இரு; கவலைப்படாதே. தைரியமாக இரு, ‘நமது திருமணத்தைக் கண்டு களிப்பதற்கு என் தாயார் இல்லையே! அனாதையைப் போல நான் மணம் செய்து கொள்ள நேர்ந்ததே!’ என்று மிக்க விசனக் கடலில் ஆழ்ந்திருந் தேன். இச்சமயம் கடவுள் என் கவலையைத் தீர்க்கவே இக்

கடிதத்தை எனக்கு அனுப்பினார். என்னுள்ளம் மகிழ்கின்றது. எல் லாம் இறைவனருள்” என்றான்.

பரிமள:- என் அன்பரே! எத்தகைய சந்தோஷம் தங்களுக்கு வந்த போதிலும் அதில் நானும் சமபாகம் பெற்றவளன்றா! தாங்கள் அன்று தெரிவித்தபோது என் மனம் என்ன சங்கடத்தை அடைந்தது தெரியுமா! அதைச் சொல்வதற்கே முடியாது. இப்போதுதான் பேராநந்தமாயிற்று. தாங்கள் எனக்குச் சொல்லியதுபோலத் தாங்களும் ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளுங்கள்; சீக்கிரம் வந்து விடுங்கள்.

எவ்வளவு உயரிய பதவியிலிருந்தாலும் தன்னை விடத் தாழ்ந்த ஸ்திதியி லுள்ளவர்களின் வார்த்தைக்குப் பயந்து நடக்கவேண்டிய சந்தர்ப்பம் சில சமயங்களில் நேர்ந்துவிடுகின்றது.

கேசவன்:-நான் எதற்காகத் தாமதிக்க வேண்டும்? அங்கு சென்று அவர்களை அழைத்துக் கொண்டு உடனே திரும்ப வேண்டி யதுதான்; கடவுளின் அனுக்ரகம் பூர்ணமாக இருக்கும் பரியந்தம் குறைவென்ன! நான் சென்று வாட்டுமா! கண்மணி!” என்றான்.

அன்பு மீறிய பரவசத்தினால் அவர்களை யறியாமலேயே இருவர் கரங்களும் சந்தித்துக் கொண்டன. அடுத்த நிமிடம் கேசவன் தனிப்பட்டு வெளியே சென்று பிரயாணத்திற்கு ஆயத்தமானான். எஜமானரும் அவன் செலவுக்குப் பணத்தைக் கொடுத்து “அப்பா! சென்று ஜாக்ரதையாகத் திரும்பு. பணம் போதாவிடில் கடிதம் எழுது; நான் மணியார்டர் செய்கிறேன். ஜாக்கிரதை. இந்த தகவலை நாயுடுவிடம் தெரிவித்து விடலாமென்று அங்கு சென்றேன். நாயுடு ஊரிலில்லையாம்; வந்து விட்டேன்!

ஜாக்ரதை!” என்று கூறி வண்டி ஏற்றி அனுப்பி விட்டார். பிற்கு கேசவன் அன்னையைப் பார்க்கச் செல்லும் பேராவலினால் தூண்டப்பட்டு “எப்போது தாயி னருகில் செல்வோம்?” ”என்று எதிர்பார்த்தபடியே ரயிலில் செல்கிறான்.

சரியாய் இரவு 11 மணிக்கு அவன் செல்ல வேண்டிய ஊரில் ரயில் நின்றதும் இறங்கினான். முன்னே பின்னே சென்றறியாத ஊராகையினால் ரயிலடியிலேயே ஒரு வண்டியமர்த்திக் கொண்டு கடிதத்தில் குறிப்பிட்டுள்ள வீட்டிற்குக் கொண்டு நிறுத்தச் செய்தான். வண்டியும் அவ்வாறே வந்து நின்றது. அப்போதுதான் கலியாண வீட்டில் எல்லோரும் சாப்பிட்டு விட்டு வீதித் திண்ணையில் பேசிக் கொண்டே படுத்திருந்தார்கள்.

கேசவன் வண்டியை விட்டு இறங்கி,

விவாக வீட்டிற்குச் சென்றான். எல்லோரும் புதிய மனிதர்களாகையினால் திடீரென்று தன் விவரத்தைக் கூறத்தியங்கினான். அங்குள்ளவர்கள் “நீங்கள் யார்? எங்கே வந்தீர்கள்? சம்மந்தி வீட்டாரைச் சேர்ந்தவர்களா, அவர்கள் அடுத்த வீதியில் இருக்கிறார்கள்.” என்றார்கள்.

சிலருக்கு, கடித மெழுதுவதில் வெகு ஆசை. ஆனால் எவ்வித வக்கணை யுடன் எழுதவேண்டு மென்பது தெரியாமலும், இடம், காலம், மனிதர் முதலிய எதையும் கவனியாமலும் தோன்றினவாறெல்லாம் எழுதி விடுகி றார்கள். அதனால் சில சமயம் நிலைமையுண்டாய் விடுகின்ற தென்பதை அவர்கள் அறிவதில்லை.

கேசவ:- சம்மந்தி வீட்டுக்கு வரவில்லை. இந்த வீட்டில் வேலை செய்யும் அம்மாளைப் பார்க்க வந்தேன். அவர்கள்

இங்கிருக்கிறார்களா? இருந்தால் தயவு செய்து கூப்பிடுங்கள் - என்றான். இதைக் கேட்ட அவர்கள் இங்கு வேலைக்காரி இல்லை; அவள் வீட்டிற்குப் போய் விட்டாள். அவள் விடியற்காலந்தான் வருவாள். ஆகையினால் இங்கு படுத்துக் கொண்டிரும், காலையில் பார்க்கலாம்," என்றார்கள்.

கேசவன் அதற்கிசைந்து வீதித் திண்ணையில் ஒரு புறமாகப் படுத்தான். அவனுக்குத் தூக்கமே கொள்ள வில்லை. ஏதேதோ எண்ண;மிட்டவாறு படுத்திருக்கிறான். "எப்போது விடியற்கால மாகும். எப்போது தன் தாயைக் காணலாம்?" என்கிற பேராவலினால் மிக்கக் களிப்புடன் எதிர் பார்த்தபடியே கண்ணயர்ந்தான்.

நள்ளிரவு ; நடுநிசி. மணி சுமார் இரண்டிருக்கலாம். அச்சமயம் உட்புறத்தில் பெண்கள் படுத்திருக்கும் இடத்தில்

அபாரமான கூக்குரல் உண்டாயது. “ஐயோ! ஐயோ! திருடன்! திருடன்! பிடியுங்கள்! பிடியுங்கள்!” என்று உண்டான சத்தத்தைக் கேட்ட எல்லோரும் கண் விழித்துக் கொண்டு “எங்கே! எங்கே! எங்கே திருடன் !” என்று கூவிக்கொண்டே விளக்குகளைக் கொளுத்திக் கொண்டு நாற்புறமும் தேட வாரம்பித்தார்கள்.

வீடு பூராவும் தேடியலைந்தார்கள்; ஒருவரையும் காணவில்லை. பெண்கள் எல்லோரும் தங்கள் நகைகளைக் கவனித்துக் கொண்டு “ஐயோ என் சங்கிலியைக் காணவில்லை, என் சரடு காணவில்லை. என் ஒட்டியாணம்....என் ஐடைபில்லை.... என் ஜடைபில்லை, என் ராக் கடி.... காசுமாலை.... வைரமாட்டல்... வைரக்கம்மல்.... ஐயோ! குழந்தை யின் கைவளையல்கள், கொலுசு, வெங்கி; ஒன்றும் காண வில்லையே!”

என்று பலபேர் பலவிதமாகக் கூக்குரலிட்டுக் கத்தினார்கள்.

பத்து மாதம் சுமந்து பலவித கஷ்டங்களுக்காளாகிப் பெற்று அதிக வாத்ஸல்யத்துடன் வளர்க்கும் குழந்தையாயினும், தான் ஒரு முக்கியமான காரியத்தில் ஈடுபட்டிருக்கையில் அக் குழந்தை ஏதாவது தடை செய்தால் தன்னை யறியாது கோபமும் வெறுப்பும் முதலில் பொங்கி, அப்புறமே சாந்த முண்டாகின்றது போல, சில சமயங்களில் நமது உறவினர்களாலோ, சிநேகி தர்களாலோ ஏதாவது ஒரு காரியத்திற்கு இடைஞ்சல் ஏற்படின் மேற்கண்ட உணர்ச்சிகள் நம்மை யறியாது உண்டாகின்றன.

வீதியில், பெருத்த கலாட்டா நடப்பது போலப் பலவிதமாகப் பேசிக் கொண்டார்கள். ரயிலில் வந்த அலுப்பினாலும், மனத்தில்

கொண்டிருந்த கவலையினாலும் நமது; கேசவன் தன்னையறியாது தூங்கி விட்டதால் இந்த கலபையில் கூட கண் விழிக்க வில்லை. வீதியிலேயே பலமாகப் பேசிக் கொண்டு தாறுமாறாக ஓடியலைந்த சத்தம் கேட்ட பின்னர் விழித்துக் கொண்டு எழுந்தான்; என்ன விஷயம் இங்கு நடந்த தென்பதே அவனுக்குத் தெரியாதாகையினால் தலையணையாக வைத்திருந்த தன் மேல் துணியை எடுத்துக் கொண்டு எழுந்து உட்கார்ந்தான்.

அவ்வாறு துணியை எடுக்கையில் அதனடியில் இருந்த ஒரு சிறிய மூட்டை பொத்தென்று கீழே விழுந்து, முடிச்சு அவிழ்ந்து அதனுள்ளிருந்த நகைகள் பிரகாசமாய்ச் சிதறின. அப்போது அருகிலிருந்தோர் அவைகளைக் கவணித்தது போலவே நமது கேசவனும் "இதென்ன நகைகள்!"

என்று திடுக்கிட்டான். நகை களைக் கண்டதுதான் தாமதம், அருகிலிருந்தவர்கள் “ஆ! இதோ! இதோ! நகைகளுடன் கள்ளன் அகப்பட்டுக் கொண்டான்.’’ என்று கூச்சலிட்டுக் கொண்டே கேசவனின் கையைப் பிடித்துக் கொண்டார்கள். உடனே எல்லோரும் அவ்விடத்தில் வந்து சூழ்ந்து கொண்டு, நகைகளையும் எடுத்து வைத்துக் கேசவனைக் கெட்டியாகப் பிடித்து வளைத்துக் கொண்டு”அடேப் திருட்டுப் பயலே! இப்போ தல்லவோ உன்னுடைய மோசம் தெரிகின்றது. “வேலைக்காரி இருக் கிறாளா!’ என்று வேஷம் போட்டுக் கொண்டு பெரிய மனிதன் போல வந்து இத்தகைய வேலையைச் செய்ததுமல்லாமல், பரம யோக்யன் போன்று நிம்மதியாக இத்தனை நாழிகை பரியந்தம் படுத்துக் கொண்டிருந்து மெல்ல நழுவிவிட நினைத்தாயோ! அடேய் திருட் டுப் பயலே!”

என்று கண்டபடிப் பேச வாரம்பித்தார்கள்.

ஒரு பாபமும் அறியாத நிரபராதியான கேசவன் தீயை மிதித்தவன் போலத் துள்ளினான். “ஹா! கடவுளே! இதென்ன சோதனை! ஒரு குற்றமும் மனத்தினாலும் எண்ணியறியாத எனது தலைமீது இவ்வித பேரிடி போன்ற அபாண்டத்தை இடித்து விட் டாயே!....ஐயா ! ....இதென்ன அக்ரமம்! நான் ஒரு பாபமும் அறிய மாட்டேன். இங்கு நான் உண்மையில் வேலைக்கார அம்மாளைக் காண்பதற்கு வந்தேன்.வந்த விடத்தில் அவர்கள் இல்லாமையினால் இங்கு படுத்துக் கொண்டேன். அதுதான் எனக்குத் தெரியும். மற்றபடி நான் ஒருவித குற்றமும் அறியேன். கடவுள்மீது ஆணை யாக நான் நிரபராதி. வீணே மனத்தைப் புண்படுத்தும் வார்த்தைகளைக் கூறாதீர்கள். இந்த நகைகளை யாரோ

வேண்டுமென்று என் தலைமாட்டில் கொண்டு வைத்திருக்கிறார்கள்” என்று கூறினான்.

அது கேட்ட மற்றையோர், ”போடா போக்கிரி நாயே! திருட்டுக் கழுதைகளெல்லாம் தான் தப்பித்துக் கொள்ளும் வழியைக் கூறாமல், நான் திருடினேன் என்று சொல்வார்களா! வேண்டு மென்று உன் தலைமாட்டில் நகையைத் திருடி வைத்தார்கள்!! சீச்சீ! திருட்டு நாயே! பாரும் கவனியாமல் மூட்டையை அமுக்கிக் கொண்டு போகும் எண்ணத்தோடு வெகு சாதுவைப் போல இத்தனை கூக்குரல் அமர்க்களத்திலும் வாய் திறவாது உறங்குகிறவன் போல நடித்ததை உன் மூட்டையே வெளியாக்கிவிட்டது. மூட்டையைக் கவனித்துவிட்டதால் நீ ஆணையும் செய்து தப்பிக்க வழி செய்வாய்; அதற்கு மேலும் பேசுவாய். பாம போக்யன் போல வேலைக்காரியைத் தேடிக் கொண்டு

வந்த திருட்டுப் பயலல்லவா நீ! என்று தாறுமாறாகக் கூறுகையில் ஒருவன் ஓடிச் சென்று போலீஸ் சேவகனை அழைத்து வந்து விட்டான்.

சிலர் தங்கள் ஆகாரம், நியமம், நிஷ்டை முதலியவற்றை ஒரு வாம்புக் குட்படுத்த முயன்று அவ்வாறு செய்தும் விடுகின்றார்கள். ஆனால் அவர்கள் தூக்கம் என்னும் பேயின் வசப்பட்டுவிடின் எல்லாம் கோணலாய் விடுகின்றன. தூக்கத்திற்கு அடிமையாகாமல் அதைத் தன் வயப்படுத்தினாஅல்லது எந்தக் காரியத்திலும் சித்தி பெற இயலாது.

அங்கு வந்த போலீஸ் சேவகன் கேசவனைப் பிடித்துக் கொண்டு விறைக்கப் பார்த்தான். இதற்குள் கேசவன் தாங்கமாட்டாத துயரத்தோடு ‘ஐயோ! அனியாயமே! அக்ரமமே! இவ்விதம் பழி சுமத்துவது தருமமா! பாவிகளே! எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்துகொண்டு

வேண்டுமென்று என்னை இவ்விதம் பழிக்குப் பாத்திரமாக்குகின்றீர்கள்! நான் ஒரு பாபமும் அறியாதவன். நான் யாரென்பதை யறியாது இவ்விதம் தாறுமாறான வார்த்தையை உபயோகிக்கின்றீர்கள். என்னுடைய பெயரைத் தமிழுலகமே அறியும், நற்குண நாடக சபையில் நடிக்கும் கேசவன் நான்தான் என்பதை அறியுங்கள்; பொன்னுசாமியினுடைய புகழை, அவர் செய்துள்ள தர்மங்களின் கீர்த்தியை நீங்கள் அறியாதிருக்க மாட்டீர்கள். அவருடைய சிஷ்யனாகிய நானா இத்தகைய ஹீனமான வேலை செய்வேன் என்பதை நினைத்துப் பாருங்கள். இதோ இக் கடிதம் எனக்குக் கிடைத்தது. என் தாயாரைக் காணக் கூடிய பேராவலோடு நான் வந்தேன். ஐயா! போலீஸ் உத்யோகஸ்தரே! நீரேனும் இதைச் சரியாகப் படித்துப் பாரும்." என்று வெகு வீராவேசத்

தோடு கூறி, கடிதத்தைக் கொடுத்தான்.

கடிதத்தை வாங்கிப் படித்த சேவகன், கேசவனின் சரிதையை விசாரித்தறிந்து கொண்டான். பிறகு வீட்டுக்காரர்களை நோக்கி “ஐயா! இவ் வீட்டு வேலைக்காரி எங்கே? அவளையும் விசாரித்துப் பிறகு நான் சொல்கிறேன்” என்றான். வீட்டுக்காரன் வேலைக்காரி வீட்டிற்கு ஆளையனுப்பி அவளை அழைத்துவரச் செய்தான். அவளைப் போலீஸார் விசாரித்ததில் கேசவனுக்கும் அவளுக்கும் ஒரு விதமான சம்பந்தமும் கிடையாதென்று விளங்கி விட்டது.

சில பிச்சைக்காரர்களைக் காண்கையில் அவர்களுக்கு ஏதாவது கொடுக்க வேண்டுமென்று கை தானாக ஜோபிக்குள் செல்கின்றது; ஆனால் அதே க்ஷணத்தில் மனமானது அதைத் தடுத்து கையை விலகச்செய்துவிடுகின்றது. இரண்டும்

ஏகோபித்து பணத்தை எடுப்பதற்குள் பிச்சைக்காரர்கள் வேறிடம் சென்று விடுகிறார்கள்.

அவ்வாறு விளங்கியதும் கேசவன் திடுக்கிட்டான். உடனே போலீஸ் சேவகன், “ஓகோ! இப்போது தெரிகின்றது. நீ ஒருக்கால் அகப்பட்டுக் கொண்டால் இக் கடிதத்தைக் காட்டித் தப்பித் துக் கொள்ள வழி செய்யலாம் என்று இதை முன் கூட்டியே எழுதி வைத்திருக்கிறாய். இதில் கண்டபடி ஒரு விஷயமும் நிஜமல்ல என் பதை நன்றாகத் தெரிந்து கொண்டாய் விட்டது. நீ நாடகத்தில் நடிப்பவனாய் இருக்கலாம். பொன்னுசாமியின் சிஷ்யனாயுமிருக்கலாம். எப்படி இருப்பினும் நீ இதோ கையுங் களவுமாக அகப்பட்டுக் கொண்டிருப்பதிலிருந்து தப்ப முடியுமா என்று கேட்டுக் கொண்டே இருக்கையில் ஒரு கிழவி,”ஐயோ! யம்மாடி!

யப்பாடா! என் போதாக் காலத்திற்குத்தான் விஷயம் இப்படி என்று தெரியாமல் ஒப்புக் கொண்டேன். அடே பாவி! நீ திருடன் என்று தெரியாமல் போயிற்றே! அடே சண்டாளா! என்னைச் சந்தியிலே இழுக்க வாடா பார்த்தே! நானு தெய்வமேன்னு கிடக்கறேன்....

ஐயா! போலீஸ்கார ஐயா! நான் ஒரு பாபமும் அறியமாட்டேன். நானு இந்த வீட்டில் கல்யாணத்துக்காக வேலை செய்ய வந்திருக்கிறேன். பத்துப் பாத்திரங்கள் தேய்த்து வைத்துவிட்டு வீட்டிற்குப் போய் படுத்துக்கொண்டேன். வேலை செய்த அலுப்பினால் தூங்கி விட்டேன். நடு நிசியில் தூக்கம் விழித்தது. அப்போது இந்தப் பாவி என்னருகில் வந்து “ஆயா! இந்த மூட்டையை வைத்துக் கொண்டிரு; நான் காலையிலே வாங்கிக்கிறேன்” என்றான். எனக்குத் தூக்கக் சலக்கத்திலும், இருட்டிலும் ஒன்றும்

தெரிவில்லை; இவன் தோட் டக்காரன் என்று எண்ணி ‘பக்ஷண மூட்டையா?’ என்றேன். ‘ஆமாம். வைத்துக் கொண்டிரு; அவுக்காதே” என்றான். ’சரிதான்’ என்று நினைத்து வாங்கி தலைபின் கீழே வைத்துக் கொண்டு படுத் தேன்; இப்போ கண்ணை விழித்துக் கொண்டு பார்த்தால் திருட்டு சமாச்சாரம் கேள்விப் பட்டேன். மூட்டையில் பார்த்தால் நகைகள் காணப் பட்டன. பக்ஷணமில்லை அப்போதே என் வயிற்றில் இடி இடித்தது; ஒடி வந்தேன். இந்த கம்மனாட்டித் தடியன் செய்த வேலை இது,” என்று பெரிய ராமாயணம் போலப் பேசிக் கொண்டே வந்து நகை மூட்டையை போலீஸ்காரனிடம் கொடுத்தாள்.

ஒரு முக்கியமான விஷயத்தைக் குறித்து விவரமாகவும் உருக்கமாகவும் எழுதவேண்டுமென்று பல நாட்களாகக் கோடிப்பது; ஆனால் அதைக் கடைசி தினம்

வரையில் தாமதப் படுத்திப் பிறகு அதிக அவசரத்தில் அரை குறையாக எழுதி திருப்தியில்லாமல் முடித்துவிடவேண்டி வருகின்றது.

இந்த சம்பவம் சேசவன் மனத்தை ஈட்டி போலக் குத்தியது. கோபம் பொங்கி எழுந்த பார்வையுடன் “அடீ சண்டாளீ! உன் முகத்தையேனும் நான் பார்த்தேனா! பைசாசமே! நீ யாரோ! உன்னை நான் பார்த்தது மில்லையே! நீதான் இத்தனை நகைகளையும் திருடி என் தலைப் பக்கத்தில் பாதி நகைகளை மூட்டையாகக் கட்டிப் போட்டுவிட்டு நீ மிச்ச நகைகளை வைத்துக் கொண்டு வேண்டு மென்று இவ்வித சதி செய்திருக்க வேண்டும்! நான் என் தாயாரைக் காண வேண்டி இவ்விடம் வந்த நிரபராதி என்பதைக் கடவுள்தான் அறிவார்! சீச்சீ! துஷ்டையே! பழி சுமத்தாதே. இத்தனை

வயதை விழுங்கிவிட்டு மதியற்ற முண்டமாகப் பேசுகிறாயா!” என்றான்.

இதற்குள் அருகிலுள்ளோர்கள் ”ஐயோ பாவம்! கிழவியை ஏன் திட்டுகின்றாய்! அவன் உண்மையில் திருடி இருப்பின் அவளாக நகைகளைக் கொண்டுவந்து தாக்கல் செய்வாளா! மேலும் இக் கிழவி இவ்வூரிலேயே இருக்கிறவள். இவளை வெகு நாட்களாக நாங்களறிவோம். இவள் வெகு நல்லவள். இவள் அத்தகைய வேலை செய்யமாட்டாள்.’’ என்று கூறினார்கள்.

கிழவி “அடே படுபாவி ! நீ செய்த வேலை ஜெரிப்பதற்கு என்னையும் துணைக்கு இழுக்கின்றாயா! சீச்சீ! உன் திருட்டுத் தனத்தைச் செருப்பாலடிக்க; நீ பெரிய யோக்யனன்று, ஐயா! போலீஸ்காரரே! நான் இதை உண்மையில் பக்ஷண மூட்டை என்று தான் எண்ணினேன்; அதோடு

தூக்கக் கலக்கத்தில் எனக்கு ஒன்றும் தெரியவில்லை; இந்த திருடன் சொல்கிறதைக் கேட்காதீர்கள்! இவன் தன் அம்மாளைத் தேடுவதாயும், அக்காளைத் தேடுவதாயும் பொய் சொல்லிக் கொண்டு நகைகளைத் திருடவே வந்திருக்கிறான்.” என்றாள்.

ஒரு வேலையை அவசரமாகச் செய்ய வேண்டுமென்ற எண்ணத்துடன் அதில் அநுபவமும் அக்கரையுமில்லாதவர்களிடம் கொடுத்துவிட்டுப் பிறகு அவர்கள் சரியாகச் செய்யவில்லையே, அதனால் நஷ்டமுண்டாய் விட்டதே!” என்று வருந்துவதில் பயன் யாது? சற்று நிதானமாயினும் நம்பிக்கை யுடையவரிடம் வேலை வாங்குவதுதான் உத்தமம்,

இதற்குள் பொழுதும் விடிந்து விட்டது. கேசவனை நோக்கி போலீஸா கேசவனை நோக்கி “ஐயா! நீங்கள் தற்போது குற்றவாளி

தான்” என்று பலவித சாக்ஷிகளுடன் நகையும் கையுமாகப் பிடிபட்டிருப்ப தால் நாங்கள் உம்மை போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் செல்கிறோம். உங்களுடைய குற்றமற்றத் தன்மையை நீர் நிரூபிக்கும் பரியந்தம் நாங்கள் எங்கள் கடமைப்படிக்கு உம்மை ஜெயிலில்தான் வைத்திருப்போம். இந்த நகைகளின் மொத்த மதிப்பு ஆறாயிரம் ரூபாயிக்கு மேலிருக்கும். ஆகையினால் இது சாமானிய சில்லரைத் திருட்டல்ல! உம்மை நாங்கள் கைதியாக்கி விட்டோம்.” என்று கூறி அவனுடைய வார்த்தையைச் சற்றும் எதிர் பார்க்காமல் அவனை ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்றார்கள்.

அந்தோ! மகா உத்தமனும், பரம சாதுவுமான கேசவனின் மனம் படும் பாட்டை நாம் விவரித்து எழுதுதல் சாத்யமாகுமா! கோபாக்கினி  ஒருபுறம் கொழுந்துவிட்டு

எரிகின்றது. "இது வேண்டுமென்றே யாரோ செய்த சதியாலோசனை தான்!'' என்பது நன்றாக விளங்கிவிட்டது. விசனம் தாங்காது அவன் மூர்ச்சையானான்; பின்னர் தெளிந்து எழுந்தான்."ஹா! கடவுளே! உன்னை நம்பிய எனக்கு இந்த தண்டனையையும் படாப்பழியையும் நீ கொடுப்பது தருமமா! ஐயோ! நான் ஒன்று நினைத்தால் நீயொன்று செய்து விட்டாயே! என் அன்னையைக் கண்டு களிக்கும் பேராநந்தத்துடன் என்னை வரச்செய்து தீராத ஆபத்துக்கு இலக்காக்கிவிட்டாயே! திருடன் என்கிற அவமானத்தை எனக்குப் பகுமானமாய்க் கொடுத்துவிட்டாயே! என் செய்வேன் சர்வேசா!" என்று முட்டிக் கொள்கிறான்.

வயது முதிர்ந்த சிலர் தங்களுக்கு உற்சாகத்தை உண்டாக்கக்கூடிய சில காரியங்களைத் தாங்களே செய்வதற்கு

அஞ்சியோ சங்கோஜப்பட்டோ சிறியவர் களைச் செய்யச் சொல்லித்தாம் இன்புறுவது. ஆனால் அதன் பலனாக அவர்கள் மிரட்டப்படுகையிலோ தண்டிக்கப்படுகையிலோ தாங்கள் அதில் சம்பந்தப்படா தவர்கள்போல நடந்துகொள்வது; இதுவும் ஒரு கௌரவம்போலும்.

போலீஸ் அதிகாரியை அழைத்து "ஐயா! நான் நிரபராதி, என்னை மோசமாக யாரோ வரவழைத்து இந்த கதிக்கு ஆளாக்கி இருக்கிறார்கள். ஆகையினால் இந்த அனியாய தகவலை என்னுடைய எஜமானருக்கு முதலில் தந்தி கொடுத்து வரவழைக்கவேண்டும். நான் நிரபராதி என்பதை நிரூபிக்காமல் தண்ணீரும் குடிப்ப தில்லை என்கிற விருதம் நான் எடுத்துக்கொள்ளப்போகிறேன். எனக்கு

விவாகத்திற்கு நாள் வைத்திருக்கிறது.. இன்னும் 15 நாட்கள்தான் இருக்கின்றன. இத்தருணத்தில் வேண்டுமென்றே என்னை இக்கதிக்கு உள்ளாக்கும் நோக்கத்துடனேயே யாரோ செய்திருக்கிறார்கள். ஆகையினால் உடனே அவர் விலாசத்திற்குத் தந்தியடியுங்கள்; இந்த உபகாரமேனும் செய்யுங்கள்." என்று வேண்டினான்.

அந்த அதிகாரி அதற்கிசைந்து பொன்னுசாமிக்கு இவ்விஷயத்தைத் தந்தியடித்தார். பொன்னுசாமி பரிமளாவுக்கு விவாக பூஷணமாய்க் கொடுக்க வைர நெக்லேஸ் செய்வதற்கு வைரங்கள் பொறுக்கிக்கொண்டு இருக்கையில் இந்தத் தந்தி வந்தது, பொன்னுசாமி தந்தியை உடைத்துப் பார்த்ததும் தன்னையறியாது "ஹா! மோசம்!" என்று கத்திக்கொண்டே கல்லாய்ச் சமைந்தான்.

இந்த விபரீதமான செய்தியைக் கேட்ட வைரக்காரன் விசன முற்று வைரத்துடன் வீடு சேர்ந்தான். “ஐயோ! அனியாயமே! இங்குள்ள எதிரிகள் இங்கு வேலை செய்து பலிக்காமையினால் இவ்வித மோசமும் செய்துவிட்டார்களே! கேசவா! ஒண்டியாக அங்கு அகப்பட்டுக்கொண்டாயே! அன்னையைக் காண்பதாக அன்பு வலையை வீசி அதில் சிக்கவைத்து விட்டார்களே! இதைப் பரிமளா அறிந்தால் உயிர்துடிப்பாளே! ஐயோ! அனிபாயமே!” என்று பொன்னுசாமி தனக்குள் முட்டிக்கொண்டான். உடனே எழுந்து நாயுடுவுக்கு டெலிபோன் செய்து அவரை வரவழைத்தான்.

சிலர் தங்கள் சாமானை விலையாக்குவதற்காகக் கும்பலில் கூடியுள்ளவர்களில் யார் யாருக்கு எந்தெந்த பெயரைக்கேட்டால் ஒரு உணர்ச்சி

ஏற்படுமோ அந்தப் பெயர்களையெல்லாம் ஒரு பொருளுக்கிட்டு அவர்களை மயக்கி விலையாக்கு- கின்றார்கள். இது ஒரு வியாபாரதந்திரம்

நாயுடுவும் வந்து இந்த விபரீதமான விஷயத்தைக் கேட்டு உள்ளம் துடித்தார்........“ஐயா! நான் ஊரிலில்லாத சமயம் பார்த்துத்தான் இந்த காரியத்தை எவனோ வேண்டுமென்று செய்திருக்கிறான். இதில் சற்றும் சந்தேகமே இல்லை. அக்கடிதமும் அவன் கையிலேதான் இருக்கின்றது. சரி; நாம் உடனே புறப்படுவோம். இவ்விஷயத்தை பரிமளாவுக்குத் தெரிவித்தால் மிக்க விசன மடைந்து தானும் வருவதாதத் தொந்தரவு செய்வாள். தெரிவிக்காவிடிலோ பத்திரிகையில் அறிந்து பரம வேதனையடைந்து நம்மையும்

காணாமையினால் என்னவித மாறுதலை யடைந்துவிடுவாளோ! ஆகையினால் இதை அவளிடம் கூறித் தைரிய மொழிகள் சொல்லிவிட்டுத்தான் நாம் செல்லவேண்டும். ஆகையினால் வாருங்கள்; பரிமளாவின் வீட்டிற்குச் செல்வோம்" என்றார். உடனே இருவரும் பரிமளவல்லியின் வீட்டை அடைந்தார்கள்.

இந்த விபரீதமான விஷயத்தை யறியாத பரிமளா இருவரையும் சந்தோஷத்துடன் வரவேற்றான். பிறகு பொன்னுசாமியின் மனத்துயரத்தை முக மாறுதலினாலறிந்து கொண்ட பரிமளா "தந்தையே! இதென்ன முகம் ஏதோ ஒருவகையான மாறுதலடைந்திருக்கின்றது! அதோடு சுண்களும் நீரை உதிர்க்கின்றனவே! விஷயமென்ன?" என்று பரபரப்புடன் கேட்டாள்.

நாயுடு:- பரிமளா! நீ நல்ல புத்திசாலி;

சாமர்த்தியசாலி. உனக்கு அதிகம் சொல்ல வேண்டியது எதுவுமே இல்லை: கடவுள் ஒரு மனிதரைப் பிறப்பிக்கின்றார்: அவ்வாறு பிறப்பித்தால் அவர்களுக்கு சுகமும் துக்கமும் கலந்து சரிசமமாகப் பங்கு செய்துதான் வைக்கின்றார். சுகம் வரும்போது அதிகமாய்ப் பொங்கிவிடலாகாது; துக்கம் வரும்போது அடியோடு இடிந்துவிடலாகாது. ஆகையினால் இச்சமயம் நீ எங்களைவிட அதிக தைரியசாலியாயும், நம் பிக்கையுடனும் இருக்கவேண்டும். சற்றும் அதைரியமோ, மனத் தாங்கலோ அடைவது கூடாது.

நாம் ஒருவரைப் பிரிந்திருக்கையில் அவர்களிடமிருந்து கடிதம் வரவில்லையே என்று மனக்கவலை யடைவதுடன் அவர்களைப்பற்றி குறைகூறுவது. பிறகு நேரில் விசாரிக்கையிலோ அவர்கள் முன்னதாகவே எழுதினதாகவும் அதற்குப்

பதில் வரவில்லையேயென்று அவர்கள் கஷ்டப்பட்டதாகவும் அறிகின் றது. நடுவிலுள்ளமனிதர்களால் இரண்டு பேருக்கும் மனக்கஷ்டம் நேருகின்றது.

பரிமளா :- நாயுடுகாரு! என்ன இது பெரிய பீடிகை போடுகின் றீர்களே! எனக்கு விஷயம் ஒன்றுமே விளங்கவில்லையே! கடவுளின் சிருஷ்டியும் இன்பமும் துன்பமும் எல்லோருக்கும் சமத்வம்தானே; விஷயத்தை விளங்கக் கூறுங்கள்.

நாயுடு:-அவசரப்படாதே. இதோ இந்த தந்தியை நீயே படித்துப்பார்; பார்த்ததும் பதறாதே. இதில்தான் உன் மனோ வலிமையின் உறுதியைக் காணவேண்டும். கடவுள் இருக்கிறார். அவர் கிருபையில் யாதொரு குறைவும் வராது என்று கூறித் தந்தியைக் கொடுத்தார்.

பரிமளா தந்தி என்றதுமே திடுக்கிட்டவாறு, அதை வாங்கிப் படித்துப் பார்த்தாள். நாயுடு எத்தனை பீடிகைபோட்டு பேசி யிருந்தும் “ஹா! கேசவனுக்கா இந்த விபத்து! இத்தகைய அபாண்டப் பழி வந்தது! ஐயோ!....நாயுடுகாரு தந்தையே!” என்று ஏதோ பேச வாயெடுத்தாள். அதற்குள் நாயுடு தடுத்து ”பரிமளா! என்ன இது! நான் இதுகாறும் சொல்லியதை எல்லாம் மறந்தனை போலும், நாங்களிருவரும் சொல்கிறபடியே நீ நடக்கவேண்டும். வீணாகக் கலங்காதே! அவன் நிரபராதி என்பதைக் கடவுள். அறிவார். அவர் கிருபையினால் அதைக் களைவதற்கு என்னை ஏவியு மிருக்கிறார்; ஆகையினால் நிதானி; பதறாதே. உன்னுடைய அன்பு எவ்வளவு தூரம் வேரூன்றியிருக்கின்றது என்பதை நான் அறிவேன்.இவ்விஷயத்தில் திடீரென்று பத்திரிகையில் பார்த்து என்ன

நிலைமையை அடைவாயோ என்று நான் இப்போது உனக்கு முத வில் தெரிவித்தேன். இதோ இப்போதே நாங்கள் அவ்விடம் செல்கிறோம். நீ பயப்படாதே. கேசவன் நிரபராதி என்பதை நான் கட்டாயம் நிரூபிக்கின்றேன்; இது நிச்சயம். நீ எந்த விஷயத்திலும் கவலைப்படாதே. கடவுளையே நம்பு. அவரையே இடைவிடாது பிரார்த்தனை செய்துகொண்டு ஜாக்ரதையாக இரு. எனக்கு ஒருவிதமான ஆபத்துமில்லா திருக்கும்பொருட்டு இங்கு என் ஆட்களைக் காவல் வைத்துச் செல்கிறேன்; இவ்விடத்திலும் ஏதேனும் விஷயம் உனக்குத் தெரிந்தால் ஜாக்ரதையாகக் கவனித்துக்கொள். உன் சாமர்த்தியத்தால் நீ உன்னைக் காத்துக்கொள், கண்ணீர் விடாதே!

நமக்குக்கிடைத்துள்ள நேரத்தைக் கொஞ்சங்கூட வீணாக்காமல் உலக

விஷயங்களைப் பற்றிக் கூடியமட்டும் விசாரித்தறிந்துகொள்ளவேண்டும். அஃதில்லா விடில் சில சமயங்களில் ஒரு சிறிய விஷயத்தைப்பற்றி அறியாதிருத்தலால் ஒரு நாள் முழுதும் வீணாகிவிடுவதோடு எல்லாக் காரியங்களும் கெட்டுவிடுகின்றன.

பொன்னு:-கண்ணே! பரிமளா! என் மன நிலைமையில் எனக்குப் பேசவுங் கூடவில்லை. வெண்ணெய் திரளும் சமயம் தாழி உடை வது போல உங்கள் கல்யாண சமயத்தில் இத்தகைய கஷ்டம் வந்து விட்டது. நமக்கு நாயுடு இருக்கையில் யாதொரு குறைவுமில்லை. நீ பயப்படாதே. வருத்தப்படாதே, தைரியமாயிரு. நாங்கள் சென்று வருகிறோம்.

பரிமளா:- என் தந்தையே! நாயுடுகாரு! நீங்கள் சொல்லியது போலவே நான் தைரியமாக இருக்கிறேன். இந்தப் பழி

நீங்குமா! கேசவன் விடுதலையடைந்து விடுவாரா!.... தங்களுடன் நானும் வருகிறேனே, அவ்விடம் வந்து அவரைப் பார்த்துவிட்டு உடனே திரும்புகிறேன். என்னையும் அழைத்துச் செல்லலாகாதா!

நாயுடு:-பரிமனா! நீ என்ன விஷயமறியாதவளைப்போலப் பேசுகின்றாய். நீ இச்சமயம் அங்குவருவது கூடாது, நாங்கள் சென்று காரியத்தைக் கவனிக்கவேண்டும், நேரமாகிவிட்டது. உனக் குத் தேறுதல் கூறத்தான் நாங்கள் வந்தோம். ஆகையினால் அகக் கண்ணால் கேசவனைப் பார்த்துவிடு. தடுக்காதே! நாங்கள் சென்று கடிதம் எழுதுகிறோம்.-என்று கூறிவிட்டு இருவரும் விடை பெற் றுச் சென்றார்கள்.

ஒரு காரியத்தில் இறங்கினால் ’அதில் ஐயமுண்டாகுமோ ஆகாதோ என்று ஐயப்பட்டுச் சமயத்தில் பின்

வாங்குவதைவிடக் கேவலமானது வேறொன்று மில்லை. அதைவிட முதலிலேயே அதில் ஈடுபடாமலிருப்பது கௌரவமானது.

பரிமளாவோ கூறவியலாத விசனத்துடன் எண்ணாததும் எண்ணி ஏக்கங்கொண்டு "கேசவனை மீண்டும் முன்போலக் காணப் போகின்றோமா!" என்று மனம் உடைந்து விட்டாள். அவளுடைய தாயாரும் சகோதரியும் அவ் விஷயத்தைக் கேட்டு விசனித்தார்கள். "என் மனோராஜ்யமெல்லாம் வீணாகி விட்டதே! குழந்தையைச் சந்தோஷமாக திருமணக் கோலத்துடன் கண்டு களிக்க எண்ணிய எண்ணம் வீணாயிற்றே! ஐயோ! கேசவனா இத்தகைய காரியம் செய் திருப்பான்! அவன் காலில் ஒட்டிய தூசுகூட இவ்விதம் செய்யாதே! உத்தமனென்றால் அவனுக்கன்றோ தகும்!" என்று பார்வதியம்மாள் புலம்புகின்றான்,

பரிமளா இவ் விஷயத்தினால் அன்றே

சித்தம் சிதறியவன் போன்று ஆய்விட்டாள். அவள் ஆகந்தத்திற்கு ஏதோ பங்கம் வந்து விட்டதாகவே தோன்றி விட்டது. “ஆ! கடவுளே! என் அன்பனுக்கு ஒரு விதமான விபத்தும் நேராமல் காப்பாற்ற வேண்டும். மகா உத்தமன் குணசீலன் என்பதை யறிந்து நீ இத் தகைய அனியாயப் பழியை அவன் மீது சுமத்துவது தருமமா! இது உன் கருணைக்கு அழகா! அப்பனே! தீன சரண்யா! கேசவனுக்குற்ற மாசை யொழித்துக் காப்பாற்றுவாய்!” என்று வேண்டிக் கொண்டு படுத்து விட்டாள். அவளது மனத்திற்கு எவ்விதம் இருள் மயமான துக்கம் வந்து மூண்டு விட்டதோ அதே போல உலகமே இருள் மூடியவாறு அவளுக்கு ஆய்விட்டது. எந்தவிடத் தில் நோக்கினும் கேசவனின் முகம் சோகத்தினால் வாடி வதங்கிக் கண்ணீர் பெருக நிற்பதாகத் தெரிகின்றது. இத்தகைய கோரமான நிலைமையில் அன்று பொழுது

போயிற்று.

எப்போது தனக்குக் கடிதம் வரும் என்று எதிர் பார்த்துக் கொண்டே இருந்தாள்: மறுநாள் பிற்பகல் பரிமளாவின் அறையில் விசனமே வடிவமாய் உட்கார்ந்திருக்கையில் வேலைக்காரி வந்து “அம்மா! யாரோ ஒருவர் தங்களுடன் முக்கியமான விஷயம் பேச வேண்டுமாம். அதற்காக வந்திருக்கிறார். கேசவன் விஷயம் என்றும் சொல்லச்சொன்னார்” என்றாள்.

அவசியமான சில விஷயங்களைப்பற்றி ஒருவருடன் பேசுவதற்காகச் சென்றும் சமயத்தில் முக்கியமானதை மறந்துவிடநேருகின்றது. மறதியே நமக்குப் பெரும் எமனாகின்றது. அதற்காக எப்பொழுதும் பேசவேண்டிய விஷயங்களைப்பற்றி முன்னதாகவே ஒரு குறிப்பு எழுதி வைத்துக்கொள்வது

அதியவசியமாகும்.

இது கேட்ட பரிமளா கேசவன் விஷயம் என்றதும் மிக்க களிப்புற்று நாயுடுவின் ஆளாகவிருக்கு மென்று தனக்குள் தீர்மானித்து “உள்ளே வரச்சொல்லு” என்றாள். உடனே வெகு ஆடம்பரத்துடனும் படாடோபமான அலங்காரத்துடனும் ஓர் உல்லாச புருஷன் அவ்வறையில் நுழைந்தான். பரிமளா விசனமே உருவான பதுமையைப்போல தலைவிரிகோலமாக விருந்தாள். இந்த ஆடம்பர அலங்காரத்தையும், ஒய்யார நடையையும் பார்த்த உடனே அவளுக்கு மனம் சப்பென்று சலித்து ஓர்விதமான வெறுப்பு உண்டாகி விட்டது. “உட்காருங்கள்’’ என்று ஒருபுறமாகத் திருப்பிக்கொண்டு கூறி”தாங்கள் யார்? கேசவன் விஷயமாக என்ன பேசவேண்டும்? அதை உடனே தெரிவிக்கலாம்” என்று

முடுக்காகக் கேட்டாள்.

அது கேட்ட அந்த மனிதன் நகைத்துக்கொண்டே ”பரிமனா! என்ன இது! கேசவன் விஷயமென்று கூறும்போதே இத்தகைய ஆத்திரமும், பரபரப்பும் உண்டாகின்றதே! ஐயோ பாவம்! நீ என்ன செய்வாய்! அவனிடத்தில் நீ நன்றாக ஏமாந்துவிட்டாய். இதோ இந்த பத்திரிகையில் வெளிவந்துள்ள விஷயத்தைப் படித் துப் பார்.'' என்று கூறித் தினசரி பத்திரிகையைக் கொடுத்தான்.

கேசவன் அபாண்டப் பழி பெற்றுள்ள விஷயந்தான் பத்திரிகையில் வெளியாகி இருக்கும் என்பது பரிமளாவிற்கு நன்றாகத் தெரியுமாதலால் அவள் அதைப்பற்றிச் சிறிதும் கலக்கமடைய வில்லை எனினும் அதுவிஷயத்தைப் பற்றி எவ்விதம் பத்திரிகையில் வெளியாகி இருக்கிறது

பார்ப்போம் என்று படிக்கலானாள்.

=========== சிறந்த நடிகன் திருடனாக மாறினான் கலியாண வீட்டில் களவு

========

நாம் ஒரு காரியத்தைச்செய்கையில் அதனால் சில நிர்ப்பந்தங்களையடைய வேண்டி நேருமென்று நினைத்து அவற்றிற்குத் தக்க ஏற்பாடுகளைச் செய்கிறோம். பிறகு காரியம் ஒரு விக்கினமு மின்றி நிறை வேறினதும் நாம் அனாவசியமாகச் சில ஏற்பாடுகளைச் செய்தோம் என்று நினைத்துக் கொள்கிறோம். நாம் அவ்வளவு முன்ஜாக்கிரதையுடன் இல்லாவிடில் என்ன நேர்ந்திருக்குமோ என்பதைக் கவனிப்பதில்லை.

"நேற்று இரவு பசுபதி முதலியார் வீட்டில் சுமார் இரண்டு மணிக்கு ஆறாயிரம் ரூபாய் பெறுமான நகைகள் களவாடப்பட்டன.

பசுபதி முதலியாரது குமாரத்தியின் கலியாணத்திற்காக அனேக ஸ்திரீகள் ஆபரணங்களுடன் வந்திருந் தார்கள். அவர்கள் அணிந்திருந்த ஆபரணங்களில் பலருடை யது களவாடப்பட்டன. கள்ளன் நகைகளைக் கழற்றிய போது ஒருவர் கண்விழித்துக்கொண்டு கூக்குரலிட்டவுடன் எல்லோருமாக எழுந்து பார்த்துப் பெரிய கலபை உண்டாகி விட்டது. அந்த வீட்டுத் திண்ணையின் கோடியில் படுத்திருந்த ஒருவன் எழுந்த உடனே அவன் தலைப்பக்கமுள்ள நகை மூட்டை கீழே விழுந்தது. அப்போதே அவன் தான் கள்ளனென்று அறிந்து அவனைப் பிடித்துப் போலீஸ்காரர் வசம் ஒப்புவித்தார்கள். அவன் திருடிய நகைகளை இரண்டு மூட்டைகளாகக் கட்டி ஒன்றை தன் தலைப்பக்கமும், மற்றொன்றை ஒரு

கிழவியிடமும் கொடுத்திருந்தான். கிழவி திருட்டு நகை என்றறிந்ததும் அதைப் போஸீஸாரிடம் தாக்கல் செய்துவிட்டாள். பிறகு விசாரித்ததில் அந்த திருடன் பிரபல நாடகக் கம்பெனியாகிய நற்குண நாடக சபை யின் கீர்த்தி வாய்ந்த நடிகன் கேசவன் என்று தெரிந்தது. அதன்மேல் பின்னும் ஆராய்ச்சி செய்ததில் அவனுடைய ஜீவிய சரிதையும் கிடைத்தது.

நாம் ஒரு ஊருக்குச் சென்றால் அங்கு நமக்குத் தெரிந்துள்ளவர்களை யெல்லாம் ஒரு தடவை பார்க்கவேண்டுமென்ற அவா ஏற்படுகின்றது ஆனால் அவர்கள் நமது ஊருக்கு வருகையிலோ நம்மை எட்டிப்பார்ப்பதே கிடையாது. அன்பு பாஸ்பாம் இருந்தாலன்றோ விருத்தி யடையும்.

அவனுடைய தந்தை வேசிக்கள்ளனாம்; குடிகாரனாம். அவ னுடைய அண்ணன்

பக்காத் திருடனாம். அவன் தாயார் இருக்குமிடம் தெரியாமல் ஓடிவிட்டாளாம். தந்தையைப் போலவும் தமயனைப்போலவும் கெடாதிருக்கும் பொருட்டு நாடகக் கம்பெணிக்காரர் நற்புத்தி புகட்டியும் பலனின்றி தனது அல்ப புத்தியினால் திருடவரம்பித்துவிட்டான். அவனைப் போலீஸார் கைது செய்திருக்கிறார்கள். அவனுடைய எஜமானருக்குத் தந்தியடித்திருக்கிறது. உன்னதமான கீர்த்தி யுடன் நாடக மேடையில் நடித்த மனிதன் திருடியது மிக்க வியப்பாக இருக்கிறது. மற்ற விவரம் பின்னர் வரும்"

என்று வரைந்திருந்ததைப் படித்த பரிமளா முன்னர் தெரிவித்தது போல எதுவும் பதில் பேசாது பத்திரிகையைக் கொடுத்து விட்டாள். பத்திரிகையை வாங்கிக் கொண்ட மனிதன் பரிமளா, "உன் கேசவன் பவிஷு

எப்படியிருக்கிறது பார்த்தாயா! உனக்கு நான் இதற்கு முன் பல கடிதங்கள் எழுதியும் ஒன்றுக்கும் பதில் போடாது அலக்ஷ்யம் செய்தாய்! ஆனால் அப்போது திருட னாகத் தோன்றாத கேசவனின் நேசம் உன்னை யவ்வாறு செய்தது. இனிமேல் அந்த எண்ணம் மடியும் காலம் வந்து விட்டது. ஆதலால் தான் நான் நேரில் வந்தேன். பரிமளா! இனியேனும் என் கேள்விக்குப் பதில் சொல்லத் தடை செய்ய மாட்டாயல்லவா! மைனர் ஜமீந்தார் என்று வரைந்த பிரபு நான்தான்." என்று வெகு அட்ட காசமாய்க் கேட்டான்:

இதைக் கேட்ட பரிமளாவுக்கு அளவிட வியலாத வெறுப்பு உண்டாகி விட்டது. அவள் இந்த வார்த்தையை எதிர் பார்த்தாள். ஆகையினால் மன அதிர்ச்சி யடையவில்லை. வெகு உக்ரகத்தோடு பேசத் தொடங்கி "சீச்சி! வெளியே போ! மீசை முளைத்த

ஆண் பிள்ளைகளாக உங்களை எல்லாம் ஈசன் பிறப்பித்தானே! அக்ரமப் பதரே! ஒரு பெண்பிள்ளை கடிதமெழுதாது எப்போது உதறித் தள்ளினாளோ, அதிலிருந்து மானமுள்ளவர்களாயின் மறுதரம் பேசுவார்களா! கேசவன் கதி யாதாயினும் உங்களைப் போன்றவர் களுக்கு என்ன வந்தது? இத்தகைய வார்த்தையை என்னிடம் பேச வேண்டாம்.” என்று கூறிக் கொண்டே கட்டில் பக்கமாயிருந்த ஒரு பொத்தானை அழுத்தினாள்.

தூக்கம், மறதி இவ்விரண்டுக்கும் அடிமையாயுள்ளவர்களின் கதி அநோகதி தான். அவற்றை நமக்கு அடிமையாக்கினால்தான் காம் எந்தக்காரியத்திலும் வெற்றியடைய முடியும்.

உடனே இரு வீரர்கள்’உள்ளே நுழைந்தார்கள். அவர்களிரு வரும்

நாயுடுவின் கையாட்கள். உடனே ஒருவன் துப்பாக்கியை, வந்த மனிதனின் முகத்திற்கு நேரே காட்டியபடி நின்றான். மற்றொருவன் சிறிய காமராவினால் ஒரு போட்டோ எடுத்து விட்டான். அதே சமயம் பரிமளா வெகு வீரத்துடன் எதிரில் வந்து “அடேய் திருட்டுப் பயலே! இந்த இடத்தை நீ என்ன வென்று எண்ணிக் கொண்டு வந்தாய்! இப்பொழுது நான் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்லப் போகின்றாயா, அன்றி துப்பாக்கிக்கு இரையாகப் போகின்றாயா! இந்த நிமிடத்தில் உன்னுடைய உயிர் உன் வசமில்லை; என் கையில் இருக்கின்றது. ஜாக்ரதை.” என்று கூறி விட்டுப் புகைப் படம் எடுத்த ஆசாமியை நோக்கி “ஐயா! அவனுடைய ஜேபிகளில் உள்ள கடிதங்களை வெளியில் எடும்” என்று ராணிபோல ஆக்ஞாபித்தாள்.

அச்சமயம் பரிமளவல்லியின் முகத்தில் தோன்றிய வீரத் தன்மை பொருந்திய ஜாஜ்வல்யமான களையைக் கண்டு அவ்விரு வீரர்களும் பிரமித்தார்கள். அல்லி ராணியாக அவள் முன்னர் நடித்ததை அப்போது அவளுடைய தோற்றம் நினைப்பூட்டியது. உடனே அந்த மனிதன் வந்த ஜமீந்தாருடைய சட்டையிலுள்ள சகலமான பைகளையும் பார்த்து அதிலுள்ள கடிதங்களை எடுத்துப் பரிமளாவினிடத்தில் கொடுத்தான். பரிமளா அவைளைப் படித்துக் கொண்டே வருகையில் முக்கியமான கடிதங்கள் சில கிடைத்தன. அவைகளில் ஒன்று பின் வருமாறு:-

இந்த காலத்தில் வெளிடம்பம் உள்ளவர்களே சுகமாகக் காலந்தள்ளுகி றார்கள். எவ்வளவு செல்வமும் செல்வாக்குமிருந்தாலும் வெளிப்பகட்டில்லா விடில் அவர்கள் பல விதமான

தொல்லைகளுக் குள்ளாகின்றார்கள்.

“கனம் ஐயா! நீங்கள் சொல்லியதுபோல நான் இங்கு கல்யாண வீட்டிற்கு வந்து சேர்ந்து விட்டேன். இடம் வெகு சௌகர்யமாய் இருக்கிறது. நீங்கள் சொல்லிய படியே. அவன் தாயார் எழுதுவதுபோல எழுதி நேற்றைய தினமே தபாலில் போட்டு விட்டேன். அது போய்ச் சேர்ந்திருக்கும். இனி கவலை வேண்டாம்; என்னுடைய முதல் வேலையைச் செய்து விட்டேன். அதற்காக எனக்குச் சேர வேண்டிய மிச்சம் 500 ரூபாயை உடனே அனுப்பவும்; இல்லையேல் ஆபத்துதான்; ஜாக்ரதை!
முத்தன்”

அதைப் படித்ததும் பரிமளாவின் ரத்தம் கொதித்தது. வீர கர்ஜனை செய்தவாறு ;“அடே சண்டாளா! நான் நினைத்த வாறே முடிந்திருக்கிறது. மோசக்காரப் படுபாவி!

வீனாச காலத் திற்குத் தான் விபரீத புத்தி! சீச்சி! வெட்கங் கெட்ட சோதாப் பயலே” என்று திட்டியபடியே மற்றொரு வீரனையும் துப்பாக்கி யைப் பிடிக்கச் செய்து வேறொரு கடிதத்தைப் படிக்கலானாள்.

”ஜம்புலிங்கம்!

என்னுடைய வார்த்தையை இப்போதாவது கேட்டு நடக் கப் போகிறாயா இல்லையா! ஊரார் வீட்டுப் பெண்ணை உன் : காலில் கட்டி விட்டு நாங்கள் பெருத்த கஷ்டத்தை அடைகின்றோம். இங்கு சாப்பாட்டிற்கு மில்லாது திண்டாடுகையில் உனக்கு தினம் நாடகம் என்ன! கூத்து என்ன! உன் அனியா யத்தைக் காதில் கேட்கக் கூடவில்லை. நீ இவ்விதமே செய்து கொண்டிருந்தால் தற்கொலை செய்து கொண்டு உயிரை விடப் போகிறேன். நீ செய்யும் அனியாயம் உனக்கு இப்பொழுது தெரியா விடினும் கடவுளின்

முன்பு நீ ஒரு நாளைக்கு ஒப்புக் கொள்ள வேண்டு மென்பதை மறக்காதே! உன்னுடன் பிறந்த சோதரியை வயிறெரியச் செய்யும் பரிபவம் ஒன்றே போதுமானது. ஜாக்ரதை உடனே நீ இங்கே வந்து சேரு.

இங்ஙனம்

சோமு”

தினம் பத்திரிகைகளும் புத்தகங்களும் படிப்பதால் உலக ஞானம் விருத்தி யடைவதோடு ஒன்றினின்று வேறொரு விஷயம் மனத்தில் தோன்றுகின்றது. அதோடு பல திறப்பட்ட மனிதர்களுடன் பழகி அவர்களது கடையுடைபாவனை களைக் கவனிப்பதால் உண்டாகும் ஞானம் அபாரமானது. இதை எந்தப் பள்ளி யிலும் கல்லூரியிலும் கற்க முடியாது.

மற்றொன்று.

”உன்னைச் சகோதரன் என்று வாயினால் கூறவும் காத்தினால் எழுதவும் என் மனம் கூசி வெறுக்கின்றது, உடன் பிறந்தவனென்று பெயர்கொண்ட உதவாக் கட்டையே! ஆதியிலும் என்னை அடியோடு கெடுத்தீர்கள். நம்முடைய ஏழ்மை நிலைமையின் கொடுமையினால் என்னை ஒரு தனம் படைத்த கிழவனுக்குக் கொடுத்து என்னைப் பாழ்ப்படுத்தி விட்டீர்கள். கிழவனின் பொருளைக் கொள்ளை யடிக்க எண்ணியே என்னைக் கொள்ளை கொடுத்தீர்கள்! கிழவனின் பணத்தையும் கரைத் தாய்! கிழவனையும் எமனுலகம் அனுப்பினாய் இரண்டு குழந்தைகளுடன் சந்தியில் நின்ற கைம்பெண்ணைக் கலங்கச் செய்கிறாய்!

என்னுடைய சகல வாழ்வையும் பாழ்ப்படுத் தினாய்! என்னிடம் மிச்சமிருந்த சில நகைகளையும் திருடன் போல எடுத்துக்

கொண்டு சென்றதுமன்னியில் அது விவரத்தைக் கேட்டதற்கு நிர்த்தாக்ஷண்யமாய் நல்லதங்காளைப் போல குழந்தைகளைக் கிணற்றில் தள்ளி நீயும் விழு’ என்று கையும் மனமும் துணிந்து எழுதினாய்! அடேய் படுபாவி! உன் மனம் துணிந்தது போல உடன் பிறந்த பாசத்தினால் என் மனம் இன்னும் துணிவு கொள்ள மாட்டேனென்கிறது, இதுவே கடைசிக் கடிதம் என் வீட்டையும் அடகு வைத்தாய். அதற்கு வரி கட்ட என்னிடம் ஒரு காசும் இல்லை. வீட் டுக் கடன்காரன் வீட்டை ஏலத்திற்கு விடுவதாக நோட்டீஸ்
கொடுத்து விட்டான்; படு பாவி உன்னால் நான் உயிரிழக்கப் போகிறேன். இனி மேல் நான் தயை தாக்ஷண்யம் பார்க்கப் போவதில்லை. என்னுடைய மனம் முறிந்து விட்டது. நான் கட்டாயம் இனி மேல் உன் மீது வழக்கு தொடுக்கப் போகிறேன்;

அம்மட்டு மின்றி நீ அந்த நாடகக்காரப் பொன்னுசாமி யைக் கொலை செய்ய நினைத்திருக்கும் பாதகருடன் சம்பந்தம் வைத்துக் கொண்டிருப்பதை நான் போலீஸாரிடம் உளவு கூறி உன்னைச் சந்தி சிரிக்கச் செய்வேன்! உன்னுடைய இந்த சதியாலோசனையை இன்றுதான் அறிந்தேன்! நீ இக்ஷணமே அதிலிருந்து விலகிக் கொள். இல்லையேல் அனியாயமாய் மாண்டு விடுவாய் ! உன்னுடைய மோசம் வெளியான விவரத்தை நேரில் தெரிவிக்கின்றேன். உடனே இவ்விடம் வந்து என் பணத்திற்கு ஓர் வழி செய். இல்லையேல் நீ அதோகதி யாவாய்.

இங்ஙனம்
உன் சோதரி"

நெருங்கிய உறவினராயிருந்தும் நமக்கு எதிரிடையாகவே பேசி நமது

பெயருக்கு இழுக்கைத்தேடி வைத்துவிட்டு, நம்மிடம் அதிக பிரீதியுள்ளவர்கள் போல சிலர் நடிக்கின்றார்கள். அப்படியிருக்தும் அவர்களுக்கு நம்மாலான உதவி ஏதேனும் செய்ய மறுக்க நமது மனம் இடந்தருவதில்லை.

மற்றொரு கடிதம்

"என் ப்ராண நாதா!

இது பரியந்தம் உங்களுக்கு ஒரு கடிதங்கூட எழுதாம லிருந்த நான் இக் கடிதம் எழுதுவது கண்டு நீங்கள் வியப்புறலாம். இன்றுதான் ஒரு முக்கியமான விஷயம் தெரிந்ததால் நான் இதை எழுதலானேன். நீங்கள் அக்ரமமாக ஜெமீந்தார் என்கிற பட்டத்துடன் பரிமளாவை அபகரிக்க எண்ணி இருப்பதாக உங்கள் சினேகிதன் பாலனால் தெரிந்து கொண்டேன். அந்த அக்ரமத்திலிருந்து உங்களை விடுவிக்கும்

பொருட்டும், பரிமளா யார் என்பதை உங்களுக்கு எடுத்துரைக்கும் பொருட்டும் நான் இக் கடிதம் எழுதலானேன்.

அடிக்கடி தன் வீட்டிற்கு வருபவர் சில காலம் வராவிடில் அவருக்கு என்ன அசௌக்கியமோ என்று காரணத்தைத் தெரிந்துகொள்வோமென்ற எண்ணம் முன்னகருக்குத் தோன்றாது அவரைப்பற்றி தப்பபிப்பிராயங்கொள்கிறார். பிறகு உண்மையான நிலைமையை அறிந்ததும் வருந்த நேரிடுகின்றது.

எனது தாயாருடன் பிறந்த மாமன் சொக்கலிங்கம் என்பவர் மகா பரிசுத்தவானாயும், சீலராயும் இருந்தார். அவருடைய பாரியாளான பார்வதியம்மாளும் வெகு நற்குணவதியாய் இருந்து வந்தாள். அவர் மிலிடரி வேலையிலிருந்தார். கோமளா சிறு குழந்தையாக இருக்கையில், அவரது

மனைவி கர்ப்பவதியாயிருந்தாள். அச்சமயம் அவர் ஓர் யுத்தத்திற்குச் சென்று சண்டை செய்யும்படியாக மேலதிகாரிகளிடமிருந்து உத்தரவு வந்து விட்டது. அதையவர் பார்த்ததும் இடி விழுந்தவர் போலானார். “நான் யுத்தத்திற்குச் சென்றால் இனி திரும்புவதேது! என் காலம் முடிந்து விட்டது. ஐயோ! மனைவியையும் குழந்தையையும் நடுச்சந்தியில் விட்டுவிடுகிறேனே!” என்று மிக்க விசனித்துப் புலம்பினார். அதிகாரிகளின் உத்தரவுப்படி நடக்காவிடில் உடனே கடுந்தண்டனை யடைய நேரும். ஆதலால் தன் முடிவை யறிந்தே சென்றார்; சென்றவிடத்தில் மாண்டார்.

பிறகு என் மாமி கருப்பமாயிருந்தது பெண் குழந்தையாகப் பிறந்தது. இரு குழந்தைகளுடனும் நிற்க நிழலின்றி தத்தளித்து என் தாயாரிடம் அண்டினாள்.

அக் காலத்தில் என் தாயார் அவள் மாமியார், மாமனாரின் ஆக்கினைப்படி நடக்க வேண்டிய நிலைமையிலிருந்த- மையினால் அவள் பயந்து நடுங்கி நடந்தாள். கொஞ்ச நாளாகியதும் என் பாட்டியும் தந்தையும் அவர்களைத் திட்டி விரட்டி விட்டார்களாம். அன்று மனத் துயரத்துடன் சென்ற என் மாமியும் இரு குழந்தைகளும் சென்றவிடம் தெரியாமல் போய் விட்டது. இன்று விவரம் விசாரித்ததில் கோமளாவென்ற பெயரை பரிமளாவென்று மாற்றிக் கொண்டிருப்பதாயும் அவள் ஏழ்மையின் கொடுமையினால் நாடகத்தில் நடித்ததாயும், அவள் மகா உத்தமி என்றும் தெரிய வந்தது. அதை அறிந்ததும் என் மனம் தத்தளிக்கின்றது. என் தாயார் தள்ளாத கிழவியாகிவிட்ட போதிலும்

ஒருவரைப்பற்றி முதலில் ஒருவித நல்ல

அபிப்பிராயம் ஏற்பட்டுவிடின் அவர்கள் அதற்கு மாறாக நடந்து கொண்டாலும் ஏதோ கால வித்தியாசத்தினால் அவ்வாறு நடந்தார்களென்று சிலர் தேத்தாவு செய்துகொள்கிறர்கள். மற்றும் சிலர் அவர்கள் வேண்டுமென்றே அவ்வாறு நடந்துகொண்டார்களென்று தங்கள் முதல் அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்கிறார்கள்.

தன் அண்ணியையும் அண்ணன் குழந்தைகளையும் பார்க்க நாளை புறப்படப் போகிறாள். நீங்கள் அவர்களை ஏதாவது செய்து பெரும் பாபத்திற்கும் துன்பத்திற்கும் ஆளாக வேண்டாம். அவள் சாதாரணமான நாடகக்காரியல்ல வென்பதை இனிமே தெரிந்து கொள்ளுங்கள். இந்தக் கடிதத்தை நிராகரித்தால் உங்கள் கதி வெகு பயங்கரமாக முடியும். என் தாயார் அங்கு வரும் முன்னர் உங்களுக்கு இச் செய்தி எட்ட வேண்டு

மென்கிற எண்ணங்கொண்டு இதை எழுதினேன். உஷார்! உஷார்!!

இங்ஙனம்
உங்கள் மனைவி

என்ற கடிதத்தைப் படித்ததுதான் தாமதம் பரிமளாவின் மனம் அப்போதடைந்த மாறுதலுக்கும் உணர்ச்சிக்கும் உவமை கூறவே சாத்தியமன்று! தன் பிதாவின் சரிதை தெரிந்ததனால் இன்ன தென்று கூறவியலாத நிலைமையை அடைந்து, அப்படியே நாற்காலியில் அமர்ந்தாள். அவள் மனத்தில் உண்டாகிய உணர்ச்சிகளை வெளியில் காட்டிக் கொள்ளாமல் உள்ளடக்கிக்கொண்டு வெகு உக்ரத்தோடு "அடேப் அக்ரமப்பதரே! இக்கடிதங்களையெல்லாம் படித்து விஷயத்தையறிந்தபின்னரா இங்கு துர் எண்ணங் கொண்டு வந்தாய்! சீச்சி! மடையா! இப்போது இந்த முதல் கடிதத்தின் தகவல்

என்ன? எனக்குத் தெரியவேண்டும். அதை விவரமாகத் தெரி வக்காவிடின் உன்னுயிர் போய்விடும். என்னைச் சாமான்ய நாடகக் காரி என்ற துர் எண்ணங்கொண்டல்லவா நீ இந்தவிடத்திற்கு வந்தாய்! நான் நாடகவேடந்தாங்கி நடிப்பதுபோலவே உன்னைக் கொன்றுப் போடுகின்றேன். கேசவனை இத்தகைய குற்றத்தில் சிக்க வைத்ததற்கு நீதான் காரணம் என்பது இக்கடிதம் விளக்கிவிட்டது. உண்மையைக் கூறு" என்று ஒரு விழி விழித்தாள்.

சிலர் பாடவேண்டுமென்ற ஆசையினால் தங்கள் காதால் கேட்டதை, பதங்களும் உச்சரிப்பும் சரியாக இருக்கின்றனவா என்பதைக் கொஞ்சமும் கவனி யாது, தமக்குத் தோன்றியவாறு இழுக்கிறார்கள். இதனால் அந்த பாட்டிற்கே அகௌரவம் ஏற்படுவதைப் பற்றி அவர்கள் நினைப்பதே இல்லை.

முதலில் மிக்க தடதடலான உற்சாகத்துடன் வந்தவன் அங்கு நடக்கும் எதிர்பாராத சம்பவத்தினால் நடுநடுங்கி விலவிலத்துப் போய்விட்டான். அவன் உயிர் முக்கால் பாகமும் போய்விட்டதென்று கூறலாம்; துப்பாக்கியைப் பார்த்தவுடனே தலை தொங்கி விட்டது. இந்நிலைமையில் பரிமளாவின் மனோ உறுதியையும் வீரதீர பராக்கிரமத்தையும் கண்டு பிரமித்தான். அவளுடைய கேள்விகளும், அதிகார தொனியும் அவனைக் கலக்கிப் பயமாகிய சாகரத்திலாழ்த்தின. ஆகையினால் அவன் என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் சிறிது நேரம் தத்தளித்தான். பிறகு தன்னுயிர் நிலைக்க வேண்டு மென்கிற பயத்தினால் பரிமளாவின் முகத்தைப் பரிதாபகரமாக நோக்கினான். தன்னுடைய கேவலமான நிலைமையை நன்றாகத் தெரிந்துகொண்டான். “சீச்சீ! இந்த அநியய

காரியத்திற்கு உடந்தையாகிவிட்டோமே!” என்று வருந்தியவாறு பரிமளாவை நோக்கி “அம்மணி! நான் செய்தது தப்பிதந்தான்; என்னை விட்டுவிட வேண்டும். இது என்னுடைய குற்றம் மட்டுமல்ல. இதில் சம்பந்தப்பட்டுள்ளவரின் பெயரைக் கூறினால் நீங்களே நம்பமாட் டீர்கள்; அவரால் நாங்கள் கெட்டோம். நான் உண்மையைக் கூறிவிடுகிறேன். தாங்கள்மட்டும் தனித்திருக்கையில் அதை வெளியிடுகிறேன்”

பரிமளா-ஒகோ! இனி உன்னுடைய விஷயத்தில் ரகஸ்யம் வேறு வேண்டுமா!........ சரி; வீரர்களே! இவனை இவ்வறையிலேயே போட்டுப் பூட்டிவிடுங்கள்! என் எஜமானரும் நாயுடுவும் வந்தபிறகு தான் இவனை விடவேண்டும்; ஜாக்கதை.- என்று கூறி அவனை அவ் வறையிலேயே போட்டுப் பூட்டிவிட்டாள்.

ரயில், மோட்டார் முதலியவற்றில் போகும் போது அந்தந்த கட்டணத்திற்கு வேண்டியதைச் சில்லரையாக வைத்துக்கொள்வதே உசிதம். இல்லாவிடில் சில சமயங்களில் சில்லரைக்காக கால தாமதமாவதுடன் அவசரத்தில் அதை வாங்க மறந்துவிடவும் நேருகின்றது. சில புண்ணியவான்கள் அம் மாதிரி சமயத்தில் சில்லரை வைத்துக் கொண்டும் இல்லை யென்று சொல்லி முழுப் பணத்தையும் வாயில் போட்டுக் கொள்கிறார்கள்.

பிறகு பரிமளா தன் தாயாரிடம் சென்று வெகு சாதாரண மாகப் பேசுவதுபோலப் பேசத்தொடங்கி “அம்மா! நான் நேற்றிரவு ஓர் கனவு கண்டேன், அக்கனவு எனக்கே ஆச்சரியமாயிருக்கிறது. அதாவது, - ஏதோ ஒரு உருவம் என் முன்பு தோன்றுகின்றது. அதைப் பார்த்து நான் பயப்படுகிறேன்; அந்த

உருவம் பயப்படாதே! கண்ணே! கோமளா!. நான் தான் உன் பிதா. நான் அநியாயமாய்ச் சண்டையில் இறந்துவிட்டேன். உன் தாயின் கருப்பத்திலிருந்த குழந்தையும் பெண் சிசுவாகப் பிறந்ததாகக் கேள்வியுற்றேன். உங்களைப் பார்க்க நான் ஓடிவந்தேன். நான் உன்னையொன்றும் செய்யமாட்டேன்; பயப்படாதே" என்று கூறி மறைந்தது."அம்மா! நான் எத்தனை தரம் கேட்டாலும் நீ தந்தை யின் விஷயத்தைக் கூறுவதே இல்லையே! இந்த கனவில் தெரிந்த விஷயம் உண்மையா அம்மா! என் தந்தை சண்டையிலா உயிர் துறந்தார்?" என்று கேட்டாள்.

இதைக் கேட்டதே பார்வதியம்மாளுக்கு மனம் திடுக்கிட் டது. "இது உண்மையில் கனவாகவிருக்குமா! அன்றி இவளுக்கு உண்மை எப்படியாவது தெரிந்துவிட்டதா!" என்ற பெருத்த சந்தேகம் உண்டாய்விட்டது.

அவ்வாறு உண்டாகிய சந்தேகத்தை அறிந்த பரிமளா “அம்மா! உன்னுடைய முகமே கனவு உண்மையென்று எடுத்துக் காட்டுகின்றது. இனி இவ்விஷயத்தை ஒளித்து என்ன பயன்? எங்களுக்கு அதை அறிவித்தால் விசனமென்று நீ நினைக்கின்றாய்; அது எந்த காலத்திலாவது தெரியவேண்டாமா! அவரவர் செய்த பாப புண்ணியத்திற் கேற்றவாறு தானம்மா எதுவும் அமையும்: இந்த விஷயம் உண்மையா, அல்லவா?” என்று குழந்தையைப் போலக் கேட்டாள்.

ஏழ்மை நிலைமையிலுள்ளவர்களுக்குத்தான் தம்மை விடக் கேவலமான ஸ்திதியிலுள்ளோருக்குத் தம்மாலான வரையில் உதவ வேண்டு மென்கிற எண்ண முண்டாகின்றது. ஏனெனில் அவர்கள் கஷ்டத்தை அநுபவித்திருப் பதால் மற்றவர்கள் எப்படி கஷ்டப் படுவார்களென்பதை யறிய

இடமிருக் கின்றது.

பார்வதி- கண்ணே! இந்த விஷயம் நீ கனவிலறிந்ததாக எனக்குத் தோன்றவில்லை. இவ்விவரங்கள் உனக்கு யார் மூலமாகவோ தெரிந்திருக்கவேண்டும். கண்மணி! பரிமளா! இனிமேல் நானாகவே விஷயத்தை யறிவிக்கலாமென எண்ணினேன். உன் தந்தையின் கடமை யொன்று உளது. அதை நிறைவேற்றுதற்கு உனக்குத் தக்க தருணம் வரும்போது நான் விஷயத்தை உரைக்க நினைத்தேன். அதற்குள்ளாகவே நீ யறிந்துவிட்டாய்.

பரிமளா:- அம்மா! என் தந்தையின் கட்டளையா! அது யாது! அதை என் எனக்கு இதுகால பரியந்தம். எடுத்துரைக்க வில்லை.உடனே அதைத் தெரிவி.

பார்வதி - பரிமளா! என்னுடைய கதையை

நான் சொன்னால் பட்ட மரமும் பால் வடிக்கும்; செத்த பிணமும் உயிர் பெற்று எழுந்து விசனிக்கும். ஆதிமுதல் நான் சிறுமைப்பட்டது கணக்கு வழக்கில்லை. உன் தந்தையினால் பதமடைய நினைத்தேன்; அதுவும் என் துரதிருஷ்டத்தினால் மண்ணாகிவிட்டது. உன் தந்தை எந்த வேலையும் கிடைக்காமல் மிக்க வருத்தப்பட்டுக்கொண்டிருந்தார். அத் தருணம் மிலிடரியில் வேலை கிடைத்தது. அதில் சேர மனமில்லாமலேயே சேர்ந்தார். சேர்ந்த சில காலத்திற்குப் பிறகு மிலிடரி கூட்டத்தார் மிருகங்களைக் கொல்வதற்காகவும் மற்றவர்களுக்கு துப்பாக்கி சுடுவதற்குக் கற்றுக் கொடுப்பதற்காகவும் காட்டிற்குச் சென்றார்கள். அதில் உன் தந்தையும் ஒருவராவர். அவர் ஒரு பன்றியைச் சுடுவதற்குத் துப்பாக்கியைப் பிரயோகித்தார்; அந்த துப்பாக்கிக் குண்டு பன்றிமேல்

விழாமல் காட்டில் விறகுதலையன் ஒருவன் சென்றான்; அவன்மீது பட்டுவிட்டதாம். உடனே அவன் உயிர் துறந்தானாம். அந்த எதிர்பாராத கோரமான கொலையைத் தன் கையினாலேயே செய்துவிட்ட கலக்கம் அவரைப் பெரும்பாலும் வாட்டிவிட்டது; வேலையை விட்டுவிடவே நினைத்துவிட்டார்.

அத் தருணமே சண்டையும் வந்துவிட்டது. அதற்கு அவர் கட்டாயமாகச் செல்லவேண்டியிருந்தது. இல்லையேல் அவரை அவர்களே சுட்டுக் கொன்றுவிடுவார்களாம். அவர்கள் கையினால் இறப்பதைவிட அங்கு சென்றுதான் சாவது மேல் என நினைத்து ”இனி நான் திரும்ப மாட்டேனென்றும், ஒருக்கால் திரும்பினால் பெருத்த புகழும் பதவியும் கிடைக்கும் என்றும் அப்படித் திரும்பாது இறந்துவிட்டால்

எனது குடும்பத்திற்கு சர்க்கார் ஏதேனும் பொருள் உதவி தருவர் என்றும் அங்ஙனம் பொருள் கிடைத்தால் என் கையினால் கொல்லப்பட்ட மனிதனின் குடும்பம் என்னால் அதோகதியாகி விட்டதாகையினால் அந்தத் தொகையை அவர்களுக்குக் கொடுத்து விடு என்றும், நீ எவ்விதமாயினும் பிச்சை எடுத்துச் சாப்பிடு என்றும் கூறிச் சென்றார்.

இந்தக் காலத்தில் எந்த காரியமாகச் சென்றாலும் அங்குள்ள பணியாளர்களின் கையில் வெள்ளையப்பனை வைத்தால் தான், அக் காரியம் நிறைவேறுகின்றது. நமது கடமையை சரிவரச் செய்வோமென்கிற எண்ணம் அவர்களில் பெரும்பாலோருக்கு இருப்பதில்லை.

அவர் சென்ற சில மாதத்திற்குள்ளேயே உயிர் நீத்தார். அவருடைய வாக்கின்படியே நான் அவருக்காகக் கொடுக்கப்படும்

தொகையை அந்த விறகுதலையனுடைய குடும்பத்திற்கே கொடுத்து வருகிறேன். இந்த விஷயத்தை இதுபரியந்தம் நான் பிறரிடமும் வெளியிடவில்லை; உங்களிடமும் கூறவில்லை. உன்னுடைய விவாகம் வரையில் அல்லது மைனர் நீங்கும் வரையில் தான் அந்தத் தொகை கொடுக்கப்படும் என்றும் பிறகு கொடுக்கப்படாதென்றும் முதலிலேயே சர்க்காரின் அறிக்கையாதலால் அந்தத் தொகை இன்னும் சில நாட்களோடு நின்றுவிடும். அதன் பிறகு அவர்களுக்கு நம்மால் ஏதேனும் உதவி செய்யவேண்டிய விஷயத்தை நாம் கவனிக்க வேண்டும். பரிமளா! உனக்குக் கடவுள் தன் அனுக்ரகத்தினால் அளவற்ற செல்வத்தைக் கொடுத்திருக்கிறார். சர்க்காரின் தொகை நின்றவுடன் அந்தத் தொகையை நாம் நமது ஆயுள்கால பரியந்தம் அவர்களுடைய

குடும்பத்திற்கு ஆதரவு அளித்துவிட்டால் உன் தந்தையின் ஆன்மா சாந்தி யடைந்துவிடும். அவருடைய உதிரத் தில் பிறந்ததற்காக நீ இதைச் செய்யக் கடமைப்பட்டிருக்கிறாய். இதை உன்னிடம் சரியான சமயத்திலேயே சொல்ல வேண்டுமென்பது எனது எண்ணம், இன்று தெரிவித்தேன்” என்றாள்

நாம் யார் முன்பு அவர்கள் வீட்டில் கை கட்டி, வாய் புதைத்து அவர்கள் ‘உட்கார்’, என்று சொல்கிற வரையில் நின்று கொண்டிருக்க வேண்டி யிருக் கின்றதோ, அவர்களுடனேயே சில சமயங்களில் சமமாக உட்காரவும், மற்றும் சில சமயங்களில் காம் உட்கார்ந்து அவர்கள் நிற்கும் படியாகவும் நேருகின்றது. இடம், காலம் முதலியவை பல வித மாறுதல்கள் உண்டாக்குகின்றன.

இது கேட்ட பரிமளா மிக்க பரபரப்புடன் “அம்மா! இது விஷயத்தில் நீ மிக்க தாமதம்

செய்து விட்டாய். இவ் விவரம் எனக்கு முந்தியே தெரியுமாயின் நான் இத்தனை நாளைக்கு என்னால் கூடிய எத்தனையோ உபகாரம் செய்திருப்பேனே! நமது போஷகர் வந்த பிறகு அதற்குத் தக்க வழி நான் செய்கிறேன்; கவலைப்பட வேண்டாம்” என்று தேற்றினாள்.

பிறகு நாயுடுவுக்கு உடனே வரும்படியாக ஒர் தந்தி அனுப்பினாள். கேசவனின் உருவமே அவன் கண் முன்பு தோன்றிக் கொண் டிருந்தது. அதே விசனத்துடன் கடவுளை வேண்டிக் கொண்டிருக்கை யில் “பார்வதீ! என் செல்வமே! கோமளா! எத்தனையோ வருடங்களுக்கு முன் பறிகொடுத்துவிட்ட உங்களைப் பார்க்கும்படியாக இன்று நேர்ந்ததே!” என்று பரிமளாவின் அத்தை கூறிக் கொண்டே வந்து பரிமளாவைக் கட்டிக் கொண்டாள். அவளுடன் அவளது மகளும்,

மகனும் வந்தார்கள். உள்ளே அடைபட்டிருக்கும் மனிதன் அவ்விருவரையும் சாளரத்தின் வழியாகப் பார்த்த உடனேயே அவனது வயிற்றில் இடி இடித்தது. அவன் தன் கதி இதோடு முடிந்து விட்டதாகவே எண்ணிச் சோர்ந்து விட்டான்.

சிலரைக் கண்டதும் காணாதது போலச் சில சமயம் நழுவி விடுபவர்கள் பிறகு ஒரு சமயத்தில் அவர்களோடு நெருங்கிப் பேச நேர்ந்து விட்டதும் தங்களது முந்தின நடத்தைக்காக வருத்தப் படுகின்றார்கள்.

# 10-வது அதிகாரம் - கிலியே கொல்லும்-புலியே வெல்லும்

நாயுடுவும் பொன்னுசாமியும் அங்கிருந்து நேரே அவ்வூர் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றார்கள். அங்கு அடைத்திருக்கும் கேசவன் விசனத்தினால் குன்றிப்போய் தன்னிரை அழிந்து சவம் போலக் கிடந்தான். அவர்கள் அங்கு சென்று கேசவனைத் தட்டி எழுப்பித் தங்கள் வரவைத் தெரிவித்தார்கள். இதை யறிந்த கேசவன் சிறு குழந்தையைப்போல விம்மி விம்மிப் புலம்பியபடியே “நாயுடுகாரு! தந்தையே! என் கதி அதோகதியாகி விட்டதே! நாள் இனி என்னவிதம் மானத்துடன் உயிர் வாழ்வேன்? அனியாபப்பழி என் தலைமீது வந்து விட்டதே! ஐயோ! எந்த சண்டாளர்கள் என்னை வேண்டுமென்றே இவ்விதம் செய்தார்களோ

தெரியவில்லையே! நாயுடுகாரு! இந் பெரும் தீயினின்றும் தப்ப முடியுமா! என் பழி நீங்குமா ! இவ் விஷயம் பரிமளாவுக்குத் தெரியுமா! ஆ! அவள் இதைக் கேள்வியுற் றால் என்ன நினைப்பாள்! என் கதியை எண்ணி நான் அழுவதா! என்னை மனப் பூர்வமாக நேசித்த சிறுமியின் முன்பு ஓர் திருட னென்று பட்டம் பெற்ற பரிபவத்தை எண்ணி வருந்துவதா!" என்று ப்ரலாபிக்கத் தொடங்கினான்,

இவனுடைய பரிதாபத்தைக் கண்ட நாயுடுவும் பொன்னு சாமியும் முதலில் கண்ணீர் உதிர்த்தார்கள். பிறகு தாங்களே அதைரியப் படுவதாக கேசவன் நினைத்து விடுவானோ என்று எண்ணி கேசவனின் மனத்தைத் தேற்ற அவனுக்குத் தைரியம் கூறத் தொடங்கினார்கள்.

வெளியிலிருந்து பார்ப்பவர்களுக்குச் சிலர் தாங்கள் தங்களது பெரியோருக்கு

அடங்கி ஒடுங்கி நடப்பதாகக் காண்பித்துக் கொள்கிறார்கள். ஆனால் அனுபத்திலோ நடத்தை வேறு மாதிரிதான்.

நாயுடு:-கேசவா! நீ இந்த அபாண்டத்திற்கு வருந்துவது சகஜந்தான் எனினும் உன் மனத்தில் கடவுளிடத்து நம்பிக்கையும், தைரியமும் வேண்டும். இம்மாதிரியான குற்றங்களை நான் தீர்த்திருப்பது கணக்கில்லை. இந்த விஷயத்தில் நீ சிறிதும் பயப்படவேண்டாம். இதைவிட வேறு என்ன சொல்லப்போகிறோம், தைரியத்தைக் கைவிடாதே! பரிமளாவுக்கு விஷயம் நன்றாகத் தெரியும் அவளும் தைரியம் கூறும்படித் தான் தெரிவித்தாள். “நமக்கு இத்தகைய குற்றப் பழி வந்துவிட்டதே இனிமேல் பரிமளா நம்மை மணம் செய்து கொள்வாளா!” என்று நீ நீனைக்கிறாய். உன் மீது குற்றம் ஒருக்கால் நீங்காமல்

தண்டனை அடைந்து விட்டாலும் பரிமளா உன் விடுதலைக்குக் காத்திருந்து உன்னையே மாலையிடுவாளேயன்றி வேறு விதமாக அவள் மனம் மாறாது. இது சத்தியம். என்னிடம் அவள் சொல்லியனுப்பினாள். ஆகையினால் நீ மெலிய வேண்டாம்.

பொன்னு:- கேசவா! என்னுடைய இரு கண்களும் நீங்களிருவரும் என்று நம்பியுள்ள நான் அக்கண்ணில் ஒன்றிற்குப் பழுது வரும்படியாக நான் கண்டு சகிக்கமாட்டேன். உடனே அதைத் தீர்க்கும் முயற்சிதான் செய்வேன். எனக்குள்ள பொருள் எல்லாவற்றையும் இவ்வழக்கில் தோற்றாலும் தோற்பேன்; உன் மீது சார்ந்துள்ள அநியாயப் பழியைத் தீர்த்துவிட நான் பின்வாங்க மாட்டேன். இது விஷயத்தில் நீ கவலையே கொள்ள வேண்டாம். என்றைக் கிருப்பினும் பரிமளா உன்னுடைய பரிமளாதான்.

அவளைப் பற்றி நீ பயப்பட வேண்டாம். கடவுள் நம்மைக் கைவிட மாட்டார்: அவரையே தியானம் செய்து கொண்டிரு.

நாயுடு :- கேசவா! நான் கேட்கும் சில முக்கியமான விஷயங்களுக்குப் பதில் சொல்லு, நீ கல்யாண வீட்டிற்கு வந்த உடனே உன்னோடு யார் யார் எப்படிப் பேசினார்கள் என்ன நிலைமையில் நடந்து கொண்டார்கள்?

செக்குமாடு போலத் தனக்கு உழைத்துத் தனது மிருகாவேசத்திற்குப் பாத்திரமாக இருக்கும் வரையில்தான் வேண்டும் மனைவி. அதன் பலனாக அவள் நோய் வாய்ப்பட்டுத் தனக்கு உதவ அருகதை யில்லாவிடில் அவளை ஒழித்து விட்டு வேறெருத்தியின் கழுத்திற்குக் கயிற்றைத் தேடப் புத்தி போகின்றது சில புண்ணியாத்மாக்களுக்கு. மனைவி ஒரு மெஷினா?

கேசவன்:- பெரியவரே! நான் வந்த உடனே இத்தகைய விபரீதம் நடக்கு மென்று கனவிலும் கருத வில்லையாகையினால் அங்கு எதையுமே கவனிக்கவில்லை, நான் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளபடியே சாதாரணமாக ’’வேலைக்காரி எங்கே?” என்று விசாரித்தேன். அவர்களும் சகஜமாகத்தான் பதில் தெரிவித்தார்கள். நான் படுத்துக் கொண்டேன். களைப்பினால் தூங்கி விட்டேன், பிறகு திடீரென்று கூக்குரல் கிளம்பியது. நான் அலறிக் கொண்டு எழுந்தேன். என் துணிகளை உதறியபோது அதிலிருந்து ஒரு துணி மூட்டை பொத்தென்று விழுந்தது. விழுந்த உடனே அங்கிருந்த ஒரு கருத்த மனிதன் “இதோ நகைகள். இதோ திருடன்” என்று கூறிக் கொண்டே என்னைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான். நான் அப்படியே ப்ரமித்துப்போய், தம்பித்து விட்டேன்.

விவரமே எனக்குப் புலப்படவில்லை. பிறகு நடந்த வரலாற்றிலிருந்து இங்கு திருட்டு நடந்ததாகத் தெரிந்தது. உடனே சேவகன் வந்து விட் டான். எனக்கு வந்த கடிதத்தைக் காட்டியும் அவர்கள் நம்ப வில்லை. நான் வேண்டு மென்று தயார் செய்த கடிதமென்று கூறி மறுத்து விட்டார்கள். பிறகு இங்கு அடைத்து விட்டார்கள். இதுதான் எனக்குத் தெரிந்த விவரம்." என்றான்.

அப்புறம் நாயுடு அவனோடு சில முக்கியமான விஷயங்களைப் பற்றிப் பேசிவிட்டுத் தைரியங்கூறிப் பின்னர் இருவரும் போலீஸ் அதிகாரிகளிடம் சென்றார்கள். அதிகாரியைக் கண்டு "ஐயா! இந்த வழக்கில் குற்றவாளியாக நீங்கள் கொண்டுவந்துள்ள மனிதன் உண்மையில் குற்றவாளியேயல்ல வென்பதை நாங்கள் திட்டமாய்க் கூறுவோம்.

நீங்கள் இந்த விஷயத்தில் நன்றாக ஆராய்ச்சி செய்ய வேண்டும். அந்தப் பையனுடைய யோக்கியதையைப்பற்றி நீங்கள் அறிந்திருக்கலாம். அவன் மகா உத்தமன். அவனுடைய தாயாரைத் தேடிக்கொண்டு இங்கு வந்திருக்கிறான் என்பதை நீங்கள் அக்கடிதமூலம் தெரிந்திருப்பீர்கள். அவனுடைய பரிசுத்தத் தன்மையைக் கூடுமானவரையில் விளக்கிக் காட்டுவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். ஆகையினால் இது எதோ சாமானியமான திருட்டுக் கேஸ் என்று எண்ணி உடனே விசாரணை செய்துவிட லாகாது.எங்களுக்குச் சில தினங்கள் தவணை கொடுக்கவேண்டும். பிறகு நீங்கள் உங்கள் இஷ்டப்படிக்கு விசாரணை செய்யலாம்." என்று கேட்டார் நாயுடுகாரு,

நாம் நமக்கு மிகவும் ஆப்தமானவர்கள்

என்று கருதியும், அவர்கள் நம்மீது உண்மையான அன்புடன் இல்லையேயென்று வருந்தி நமக்கு அவர்கள் மீதுள்ள அன்பைக் குறைக்கக் கூடாது; ஆனால் அதை அதிகப் படுத்தி அவர் களே தங்களது குறையை உணர்ந்து திருந்துவதற்குச் சந்தர்ப்பம் அளிக்க வேண்டும். அப்படியும் அவர்கள் திருந்தாவிடில் அவ்வளவுதான் பிராப்த மென்று தேத்தரவு கொள்ள வேண்டியதுதான்.

துப்பறியும் ராஜாராம் நாயுடுவை அறியாதார் யாருமில்லை. போலீஸ் இலாகாவிலேயே வெகுகாலமாகத் துப்பறியும் உத்யோகத்திலிருந்து வெகு சிக்கல் முக்கலான விஷயங்களை எல்லாம் விளக்கிக்காட்டி ஜெயம்பெறச் செய்திருக்கும் நாயுடுவை போலீஸாரே அறிவது வியப்பா! எனினும் அந்த அதிகாரி ”ஐயா! நாயுடு காரு! இந்த வழக்கு விஷயமோ மகா

சிறிது; கேவலமானது. தங்களைப்போன்ற துப்பறியும் புலிகளுக்கு இந்த துக்டா வழக்கில் வேலை என்ன இருக்கின்றது. பெருத்த கொலையா! கொள்ளையா! மோசடியா! நரசோரமா! ஒன்றுமில்லை பாருங்கள்; ஓர் சிறிய எலியை அடிப்பதற்கு - பிடிப்பதற்கு - ஓர் புவியைக் கொண்டு வருவதுபோல இருக்கிறது இது. இந்த வழக்கில் குற்றவாளி கையும் களவுமாகப் பிடிபட்டிருக்கையில் இதில் மறைவிடம் என்ன விருக்கிறது. இதற்கு முந்தி அவன் வெகு உத்தமனா இருந்திருக்கலாம். தற்போது ஏதோ போதாக் காலக் கொடுமையினால் இந்த வேலையைச் செய்திருக்கலாம். மேலும் அவன் இதில் ஒரு கிழவி யைக்கூட சம்பந்தப்படுத்த நினைத்தான்.

தனக்குத் தெரிந்தவர்களைக் காணும்போதெல்லாம் அவர்களுடைய யோக

க்ஷேமங்களைப் பற்றி விசாரியாமலிருந்து விட்டு தனக்கு அவர்களால் ஏதேனும் காரியமாக வேண்டியிருக்கையில் மாத்திரம் அவர்களிடம் அடிக்கடி சென்று வெகு உருக்கத்துடன் விசாரிப்பது! இது என்ன சுய நலமோ!

அவள் விவரமறிந்ததும் நேரிலேயே வந்து நடந்ததை ஒப்பித்துவிட்டாள். இந்த வழக்கை நாளையே எடுப்பதாகத் தீர்மானித்திருக்கிறது. தாங்கள் கேட்பதால் இன்னும் 5 நாட்கள் தவணை கொடுக்கின்றோம். அதற்குள் உங்களா லாகிய வேலையைச் செய்யலாம்" என்றார்.

நாயுடு :- வெகு சந்தோஷம், எந்த விஷ்யம் மிகவும் அல்பமாக இருக்கின்றதோ அதில்தான் பெருத்த விஷயம் அடங்கி இருக்கும். ஒரு பாம்பு வருகிறது. எல்லோரும் பயந்து அதை அடித்து எறிந்து விடுகிறார்கள்.

“பாம்புதான் இறந்துவிட்டதே இனி என்ன” என்று நினைக்கின்றோம். அதை அடிக்கையில் அதன் தேகத்திலிருந்து ஒரு துளி விஷம் நாம் உட்கொள்ளும் எந்தப் பொருள் மீதிலாவது தெறித்திருக்கலாம். அதை எவரும் அறியாமல் அந்தப் பொருளைப் புசித்த வளவில் அடியோடு மோசம் வந்துவிடுகின்றது. அதற்காகத்தான், “பாம்பை அடித்தோமே அதன் விஷம் எங்கும் தெறிக்காமலிருந்ததா! அருகில் சாமான் எதுவும் இல்லையா! அதை அடித்தத் தடியை அலம்பி சுத்தம் செய்தோமா! அந்தக் கையோடு வேறு எதையேனும் தொட்டு விட்டோமா!” என்பது போன்ற விஷயங்களைத் தான் நாம் முக்கியமாகக் கண்டு பிடிக்க வேண்டும். அது போலவே கேசவனுக்கு விரோதிகள் இக் காரியத்தைச் செய்திருக்கலாம்; அதை ஆராய்ச்சி செய்யாமல் தீர்ப்பு செய்து விட்டால்

அது எத்தனை மனிதர்களின் உயிரை வதைக்கும். எனக்குச் சிறிய விஷய மாயினும் சரியே, பெரிய விஷயமாயினும் சரியே, எல்லாம் சமத்வந் தான். நிரபராதிகளைத் தண்டிக்காமல் விடுதலை செய்யும் தொழில் என்னுடையது. அதையே இப்போதும் மேற்கொண்டுளேன். இதோ இந்த கடிதங்களைத் தாங்கள் தயவு செய்து படித்துப் பார்த்தால் நான் இந்த வழக்கில் சம்பந்தப்படுவது சரியா, தப்பிதமா என்பது தெரியும்" என்று கூறிக் கேசவனுக்கு வந்த கடிதத்தையும் பரிமளாவுக்கு வந்த கடிதங்களையும் அவரிடம் கொடுத்தார்.

ஒரு கடியாரத்தில் எல்லா சிறிய யந்திரங்களும் சரியாக வேலை செய்யினும். முக்கியமானது (Main spring) கெட்டுவிடில், கடியாரம் நின்று விடுகின்றது; ஆனால் சில குடும்பங்களில் குணங்களில் முக்கியமான

அன்பு என்பது பரஸ் பாமாக இல்லா விடினும் சில சந்தர்ப்பங்களை உத்தேசித்து ஏதோ ஒருவாறு அக்குடும்ப காரியங்கள் கடை பெறுகின்றன.

அதிகாரி அவைகளைப் படித்துப் பார்த்தார். "நாயுடுகாரு! இதென்ன கடிதங்கள்! இதற்கும் திருட்டுக்கும் சம்பந்தம் எதுவும் இருப்பதாகத் தோன்றவில்லை. ஏதோ அந்தப் பெண்ணை மணஞ் செய்துகொள்ளும் விஷயத்தில் இது சிறிது சம்பந்தப் பட்டிருக்கின்றது. அதற்கு இவ்வழக்கு எப்படி சான்றாகும்?" என்றார்.

நாயுடு:-ஐயா! தாங்கள் எல்லாம் தெரிந்தவர்கள். தங்களுக்கு நான் தெரிவிப்பது சரியேயன்று: இந்தக் கடிதங்களைப் படித்த பிறகு, நடந்த விஷயங்களை ஒன்றுகூட்டி ஒத்திட்டுப் பாருங்கள். கேசவன் பரிமளாவை விவாகம் செய்துகொள்ளலாகாது என்பதைத்

தடுக்கின்றது. பரிமளாவின் அன்பையும், மனோ பரிபக்குவத்தையும் கண்டு அவள் சாமான்யமாய்த் திரும்பமாட்டாள். கேசவனிடத் தில் ஒரு கசப்பை ஏற்படுத்தி மனத்தை முறியச் செய்துவிட்டால் அவள் தங்களை மணக்கலாம் என்கிற ஓர் யோசனையுடன் இந்த காரி யத்தைச் செய்திருக்கலாகாதா!

அதிகாரி.- நாயுடுகாரு! தாங்கள் சொல்வது ஒருபக்கம் சரி என்றாலும் நகைப்பு உண்டாகின்றது. இக்கடிதங்கள் வருவதும் இவைபற்றிய சம்பவங்கள் நடந்ததும் வேறு ஊர், இந்தவிடத்தில் நடந்த திருட்டுக்கும் அதற்கும் எவ்விதம் பிணைக்க முடியும்! இந்த ஊரும் வேறு; கல்யாண வீட்டாரும் அன்னியர்கள். சம்மந்தி வீட்டாரும் புதியவர்கள். இவர்கள்தான் அந்த விஷயத்தில் சம்மந்தப் பட்டவர்கள் என்பதை

நீங்கள் எப்படி எதிர் பார்க்கலாம்?

நாயுடு-ஐயா! மன்னிக்கவேண்டும். நான் என் மனத்தில் தோன்றியதைச் சொன்னேன். இதுவிஷயத்தில் தாங்கள் எனக்குக் கொடுத்த தவணைக்குள் நான் என்னால் கூடியவரையில் தாங்கள் கேட்ட கேள்விகளுக்கு விடையணிக்கின்றேன்; தயவுசெய்து அந்த நகை மூட்டைகளிரண்டையும் எனக்குக் காட்டவேண்டும்" என்றார்.

கடன்காரர்களுக்குப் பதில் சொல்ல முடியாமலும், வெளியில் தலை காட்ட முடியாமலும் புருஷன் தத்தளிக்கையில் பெண்ஜாதி 40-50 ரூபாய் களைக் கொட்டி பட்டுப் புடவையில் மினுக்குவது, தனது புருஷனுக்கு ஏற்படும் கஷ்டத்தில் தனக்கும் சம பாகம் உண்டென்கிற எண்ண மிருப்பின் அவ்வாறு செய்வாளா?

உடனே அதிகாரி இரண்டு நகை மூட்டைகளையும் கொண்டு வந்து காட்டினார். நாயுடு நகைகளைக் கவனித்ததைவிடத் துணியையும், அத்துணியில் வண்ணான் சலவை செய்கையில் குத்தி இருக் கும் முத்திரையையும் நன்றாகக் கவனித்தார். அந்த துணி கைக் குட்டையினும் பெரிய அளவு உடையது. அதன் ஓரத்தில் பச்சை நூலினால் ஸ்ரீராமஜெயம்- என்ற எழுத்துக்கள் வேலை செய்யப்பட்டிருந்தன. இத்தகைய அடையாளங்களையும் மனத்தில் பதிய வைத்துக்கொண்டார். பிறகு “நான் சென்று வருகிறேன்” என்று அதிகாரியிடத்தில் உத்தரவு பெற்றுக்கொண்டு வெளியே இருவரும் சென்றார்கள்.

அவர்கள் எங்கே செல்வது என்பதை யறியாது சற்றுத் தியங்கினார்கள். ஒரு ஒட்டலில் சென்று தங்கள் போஜனத்தை

முடித்துக்கொண்டு கேசவனுக்கும் இவர்களே போஜனம் கொண்டு அளித்தார்கள். ஒரு நிமிட நேரத்தையும் வீணாக்கக்கூடாதென்கிற நோக்கத்துடன் நாயுடுகாரு அந்த ஓட்டலிலேயே ஒரு அறையைச் சில தினங்களுக்கு அமர்த்திக்கொண்டார், பொன்னுசாமியை அவ் வறையில் இருக்கச் செய்துவிட்டு நாயுடு மட்டும் கல்யாணவீட்டிற்குச் சென்றார். அன்று கல்யாண வீட்டில் நாட்டியக் கச்சேரியாகையினால் திரள் திரளாக ஜனங்கள் கூடியிருந்தார்கள். நாயுடுதான் இன்னான் என்று ஒருவரும் தெரிந்துகொள்ளா வண்ணமாக மாறு வேடத்துடன், நாட்டியம் பார்க்கச் சென்றவர்போலப் போனார். அவர் மிக வும் ஏழ்மை நிலையில் உள்ள மனிதனாகக் காணப்பட்டார்: நாட்டியம் வெகு

திறமையாக நடந்து கொண்டிருக்கிறது. அங்குள்ள சகலமான மனிதர்களையும் கவனிப்பதிலேயே நாயுடு கண்ணுங் கருத்து மாயிருந்தார். ஆண் பெண் அடங்கலும் வெகு அருமையான நாட்டி யத்தைக் கவனித்து மகிழ்ந்துகொண்டிருந்தார்கள். அந்த சத்திரம் வெகு பிரம்மாண்டமான தாகையினால் அதற்கு நான்கு பக்கங்களிலும் வாசற்படிகள் பங்களாவைப்போல அமைந்திருந்தன.

"நமது சமூகத்தில் ஸ்திரீகளுக்குச் சுதந்தர மில்லை அவர்கள் புருஷரின் அடிமைகளாக இருக்கிறார்கள்" என்று பழிப்பவர்கள் ஆராய்ந்து பார்த்தால், அநேக குடும்பங்களில் தமது சுய மதிப்பை இழந்து, தேக நலத்தையும் கருதாது, நாய் போல உழைத்துக் கிடைக்கும் வருமானத்தைப் பெண்ஜாதி யிடம் கொடுத்து விட்டுத் தாளம் போடும் புருஷர்களின் தொகையே அதிக மென்பதை அறிந்து

கொள்வார்கள்.

சிறிது நேரங் கழித்து நாயுடு வெளியே வந்தார். கல்யாண வீட்டிற்கு இரண்டு வண்டிகள் விறகு வந்து, புறக்கடைப் பக்கமரக இறங்கியது. அதைப் பார்த்த நாயுடு சடக்கென்று தன் மேல் துணியைத் தலைக்குக் கட்டிக்கொண்டு வண்டியருகில் சென்று விறகுகளைக் கட்டுகட்டாகத் தோள்மீது தூக்கிக்கொண்டுபோய் சமையல் கட்டில் போடும் வேலையாட்களுடன் சமையல் கட்டிற்குள் நுழைந்து விட்டார். அங்கிருக்கும் மனிதர்களுக்கு விறகுதொட்டிக்காரன் அனுப்பிய ஆள்போல நடித்துவிட்டார். அங்கிருந்த சமையல்காரனை நோக்கி “ஐயா! பசிக்கின்றது; கல்யாண வீட்டில் பலகாரங்கள் ஒன்றுமில்லையா?” என்று வெகு தளுக்காகக் கேட்டார்.

இதுகேட்ட சமையல்காரன் உள்ளே இருந்து

சில பலகாரங்களைக் கொடுத்துவிட்டு "எத்தனை ஜனங்கள் நாட்டியம் பார்க்கிறார்கள்! எங்கள் தலையெழுத்து அடுப்பங்கரையில் சாகவேண்டி இருக்கிறது. ஆகா! பாடல் என்ன அருமையாகக் காதில் விழுகின்றது!" என்றான்.

நாயுடு:-ஐயா! நீங்கள் சென்று நாட்டியம் பாருங்கள் : நான் இங்கு சமையலைக் கவனிக்கின்றேன். நானும் தவசுப்பிள்ளையாக இருந்து அடுப்பங்கரை உத்யோகத்தில் மெடல் பெற்றவன் தான். பிறகு அதை வெறுத்துவிட்டு இப்படித் திண்டாடுகிறேன். நான் கட்டைத்தொட்டி எஜமானனுக்குத் தெரிந்தவனாகையினால் அவர் என்னைக்கூட நமோதாக அனுப்பினார், நான் இங்கு பார்த்துக்கொள்கிறேன். நீங்கள் சற்று நேரம் நாட்டியம் பார்த்துவிட்டு வாருங்கள்; அடுப்பில்

என்ன போட்டிருக்கிறீர்கள்?

ஒருவருடைய படிப்பிற்கும், பணத்திற்கும், செல்வாக்கிற்கும் மாத்திரம் கௌரவமும் மரியாதையும் ஏற்படுவதில்லை. எல்லாவற்றையும் விட முக்கிய மானது குணம் அதில்லாவிடில் யாவும் அழிந்து விடும். வேத பாராயணஞ் செய்தும் எவ்வளவோ உயர்ந்த பதவி யிலிருந்தும் நற்குணம் இல்லாததனாலன்றோ ராவணன் அழிந்தான் என்பதைச் சிலர் கவனிப்பதில்லை,

சமையற்:- ஐயோ பாவம்! நாங்கள் பணத்தை வாங்கிக்கொள்வது; நீங்கள் சமையல் செய்வதா! வெகு அழகு. அடுப்பில் உருளைக் கிழங்கு வறுவல் ஆகின்றது. கத்தரிக்காய் சாம்பார் ஒரு அடுப்பில் கொதிக்கின்றது. ராத்திரி பலகாரம் பூரி, அல்வா போட வேண்டுமாம். பூரி செய்துவிட்டோம்; அல்வா செய்யவேண்டும்.

எங்க ளுக்கு ஏதய்யா சுகம்!

நாயுடு - ஐயா! மனித ஜென்மம் எடுத்த நாம் ஒருவருக்கொருவர் இந்த சில்லரை உதவிகூடச் செய்யாவிடில் என்ன உபயோகம்? எனக்குச் சம்பளமில்லையே என்று நீங்கள் யோசிக்கவேண்டாம். தினம் சாப்பாடு, பலகாரம் கிடைத்தால் போதும். நான் உங்களுக்கு உதவி செய்கின்றேன். என்னை யார் என்று வீட்டுக்காரரர்கள் கேட் டால் “என் உறவினள் ஊரிலிருந்து வந்திருக்கிறான்: ஒத்தாசைக்கு அழைத்துக் கொண்டுவந்தேன்” என்று கூறிவிடுங்கள். இதனால் எனக்குச் சிரமமில்லை” என்று பின்னும் ஏதேதோ வெகு தந்திரமாகப் பேசி அவர்களை இணங்கச்செய்துவிட்டார்.

பிறகு அவர்கள் சம்மதித்து அவரிடம் கரண்டியைக் கொடுத்தார்கள். நாயுடு வெகு சுருசுருப்பாக வறுவலை வறுக்கவாரம்பித்தார்.

அல்வா செய்வதற்கும் அடுப்பில் தயார் செய்யத் தொடங்கினார். மற்ற சமையல்காரர்கள் சற்று வெளியில் சென்று நாட்டியம் பார்ப்பதும், உள்ளே வந்து சமையலைக் கவனிப்பதுமாக இப்படியே செய்யலானார்கள். நாயுடு விதியே என்று தன்னைப் பிறர் சந்தேகிக்காதபடி சமையலை வெகு மும்முரமாகச் செய்தார்.

தற்காலத்தில் நாகரிக மென்றால், நிமிடத்திற்கு நிமிடம் உடைகளை மாற்றி வேஷம் போட்டுக் கொண்டு வெளிப்பகட்டாக நடமாடுவதும், உள்ளொன்றும் புறமொன்றும் பேசுவதும் தான் என்று சிலர் கருது கின்றார்கள். நிரந்தரமான நாகரிகம் யாதெனில் சத்திய நெறி வழுவாது, எளியோரிடத்தில் அன்பு செலுத்தி, எல்லாம் வல்ல இறைவனைத் தொழுது, திரிகரண சுத்தியாகநடப்பதுதான்.

அன்று சுச்சேரி முடிந்தது. பிறகு போஜனமும் முடிந்தது. ஒவ்வொருவரும் தாம்பூலம் போட்டுக்கொள்ளும் சமயத்தில்மட்டும் நாயுடு அவர்களறியாதவாறு மறைந்து கவனித்து வந்தார். சிலர் வெற்றிலையைத் தமது வேட்டியிலேயே துடைத்துக் கொண்டார்கள்; சிலர் சவுக்கத்தில் துடைத்தார்கள். சிலர் கைக்குட்டையால் துடைத்தார்கள். இதைக் கவனிப்பதற்கே அவர் மறைந்திருந்தார். சற்று நேரம் கவனித்துப் பின்னர் தன் வேலைக்குச் சென்று விட்டார்.

அந்த விவாகம் மிகவும் பெரிய மனிதர் வீட்டி தாகையினால் இரவில் எல்லோருக்கும் பால் வழங்கப்பட்டது. அந்த வேலையில் நாயுடுவும் பங்கெடுத்துக் கொண்டார். அவர் மெத்தையில் உள்ளவர்களுக்குப் பால் கொண்டுபோகையில் வராண்டாவின் ஒரு பாகத்தில் இருவர் தனிமையில்

பேசிக்கொண்டிருப்பதைக் கண்டார். அன்று கல்யாண வீட்டில் பேசியது முற்றும் முதல்நாள் திருட்டு நடந்த விஷயமாகவே இருந்தது. “இன்னும் என்ன நடக்குமோ!” என்று பெண்களெல்லாம் பயந்து நடுங்கியே பேசிக்கொண்டார்கள். நாயுடு அவ்விருவர் மட்டும் தனித்துப் பேசுவதால் சற்று சந்தேகங்கொண்டு அவர்களுக்குப் பாலை எடுத்துக்கொண்டு அவர்களின் பின்புறத்தில் மெதுவாகச் சென்றார்.

அச்சமயம் அவர்களில் ஒருவர் “என்ன செய்வது? காரியம் வெகு விபரீதமாகி விட்டதே! என் மனைவி திட்டமாகக் கூறுகின்றாள். நான் எப்படி அதை வெளியிடுவேன்?” என்று பேசிக்கொண்டே திரும்புகையில், நாயுடுவைப் பார்த்துவிட்டார். அவர்களுக்குப் பாலைக் கொடுத்துவிட்டு நாயுடு, பாத்திரங்களைப் பெற்றுக்கொண்டு

அவர்கள் யார் என்பதை நன்றாகக் கவனித்துக் கொண்டு திரும்பிவிட்டார். அவர்கள் எந்த இடத்தில் படுத்துக்கொள்கிறார்கள் என்பதையே நாயுடு வெகு சூக்ஷ்மமாகக் கவனித்துக் கொண்டார்.

ஒரு ஆயிரம் ரூபாய் நஷ்டம் திடீரென்று ஏற்படின் ’இன்னும் அதிக நஷ்டம் ஏற்படுவதற்கு முன்னர் விழித்துக் கொண்டோமே;” என்று மனத்தைச் சாந்தி செய்து கொண்டு அதற்கப்புறமாது முன்ஜாக்கிரதையாக நடந்து கொள்வதுதான் உத்தமம், கைதவறின பண்டத்தைக் குறித்துக் கவலை கொள்வதில் பயனென்ன?.

மணி 11 ஆயிற்று. எல்லோரும் படுத்துக்கொண்டார்கள்; பிறகு நாயுடு சமையல் கட்டிற்கும் வீதிக்கும் அலைவதுபோல் நன்றாக மனிதர்களைக் கவனித்துக் கொண்டார். முதல் நாள்

திருட்டு நடந்த கலபையினாலுண்டான பயத்தினால் ஒருவருக்கும் நித்திரையே கொள்ளாது எல்லோரும் பேசிக்கொண்டே இருந்தார்கள். மெத்தையில் தனிமையாகப் பேசிக்கொண்ட ஆசாமிகள் மட்டும் படுக்கையில் படுப்பதாகப் படுத்துவிட்டு உடனே எழுந்து போய்விட்டார்கள். அவ்வளவு ஜாக்ரதையாகக் கவனித்தும் அவர்கள் எங்கே போனார்கள் என்பதை யறியா நாயுடு ஏமாந்து விட்டார்:

அவர்களைக் காணாமல் போனதும் நாயுடு “ஐயோ! ஏமாந்து விட்டோமே!” என்று ஏக்கங்கொண்டு அவர்கள் படுத்த அறைக்குச் சென்று பார்த்தார். அவர்களுடைய படுக்கை போட்டபடியே இருந்தது. அவர்களுடைய பெட்டி ஒன்று இருந்தது. நாயுடு அதன் மீது நோக்கங் கொண்டு மெல்ல அவ்வறையில் புகுந்து உள்புறம் தாளிட் டுக்கொண்டு

அப் பெட்டியை மாறு சாவியினால் திறந்து பார்த்தார்; அந்த மனிதர்களில் ஒருவர் இஞ்சினீயர் என்பது அதிலிருந்த சில கடி தங்களினால் தெரிந்து கொண்டார்: அதில் மற்றபடி எந்த சந்தேகாஸ்பதமான விஷயமும் கிடைக்கவில்லை. பொன்னுசாமி நாடகக் கம்பெனியின் பாஸ் ஒன்று மட்டும் பொன்னுசாமியின் கையெழுத்துடன் இருந்தது, இந்த பாஸ் இங்கு இருப்பதால் அவருக்கு வேண் டியவர்களாகவோ அன்றி வேறு ஏதேனும் சம்மந்தப் பட்டவர்களாகவோ இருக்கவேண்டும் என்பது மட்டும் தெரிந்துகொண்டு அந்த பாஸை மட்டும் எடுத்துக்கொண்டு வெளியே வந்துவிட்டார்.

ஒரு வருஷ முழுதும் மிகவும் கஷ்டப்பட்டு வாசித்துப் பள்ளியில் நல்ல பெயரெடுத்தாலும் பரீக்ஷை யன்று எதிற் பாராத தேக அசௌக்கிய மேற்பட்டு விடின் ஒரு

வருஷத்துப் படிப்பும் ஒரே வேளையில், வருஷாத்திரப் பயிர் வெள்ளத்தில் அடித்துக் கொண்டு போவதுபோலப் போய்விடுகின்றது

பிறகு வீட்டை விட்டு வெளியே சென்று அந்த தவசுப்பிள்ளையின் கோலத்தை மாற்றிக் கொண்டு நேரே ஒட்டலுக்கு வந்தார். ஒட் டலில் பொன்னுசாமி நித்திரையே கொள்ளாமல் “நாயுடு எங்கே சென்றாரோ இன்னும் வரவில்லையே!” என்ற யோசனையோடு மிக்க விசனத்தை யடைந்து அவரது வரவை எதிர் பார்த்திருந்தார். அப்போது நாயுடு வந்ததைக் கண்டு பொன்னுசாமி “விஷயமென்ன?” வென்று விசாரித்தார்.

நாயுடு நடந்த சகலமான வரலாற்றையும் கூறி அவர் எடுத்து வந்த பாஸைக் காண்பித்தார், பொன்னுசாமி அந்த பாஸைக் கண்டு ஆச்சரியமடைந்து “ஆகா!

இது நாகலிங்கத்துக்கு நான் கொடுத்த பாஸாயிற்றே! அவர் மகா உத்தமர். எஞ்சினீயர் வேலையில் இருப்பவர். அவர்தான் கேசவன் நம்முடைய கம்பெனியில் சேருவதற்கு முன்பு காப்பாற்றியவர். அவனைத் தமது வீட்டில் வேலைக்கு வைத் துக்கொண்டு ஆதரித்தவர். கேசவனிடத்தில் மிக்க அன்புடையவர். அவனுடைய பாடலையும், நடிகத் திறமையையும் கண்டு மெத்த சந் தோஷமடைந்து பல தரம் பரிசுகள் கொடுத்திருக்கிறார். அவருடைய அபிமானத்திற்காக ஓர் பாஸ் கொடுத்தேன்: அவர் இந்த விஷயத்தில் சம்மந்தப்பட்டவர் என்று நீங்கள் சந்தேகிப்பது சரியா?” என்றார்.

.

நாயுடு:-நான் சந்தேகிக்கக் காரணம் இருக்கின்றது. நன்மையிலோ தீமையிலோ இவருடைய சம்பந்தம் இருக்கின்றது.

அதாவது, நேற்று போலீஸ் அதிகாரி காட்டிய நகைகள் கட்டின கைக் குட்டையைப் பார்த்தீர்களே நினைவிருக்கிறதா! அந்தக் குட்டையில் வரிசைக் கிரமமான நம்பரை நெசவுக்காரனே போட்டிருக்க வேண்டும். ஏனெனில் இரண்டு கைக்குட்டைகளிலும் ஒன்றில் 10 ஒன்றில் 8 என்று இருந்தது, பிறகு அங்கு பெண்கள் கூட்டத்தில் ஒரு அம்மா தன் முகத்தைத் துடைத்துக் கொண்டார்கள். அந்தக் குட்டையில் நம்பர் 7 இருந்தது. அதேமாதிரி அச்சு, அதேமாதிரி பெயர் போட்டது. அதைக் கண்ட மற்றொரு பெண்பிள்ளை “இந்த கைக்குட்டை வெகு அழகாக இருக்கிறதே! இது எங்கே வாங்கினாய்?” என்று கேட்டாள். அதற்கு அந்த அம்மாள், “போதும் வெட்கக்கேடு, நான் எந்த கல்யாணத்திற்குச் சென்றாலும் ஒரு டஜன் கைக்குட்டை வாங்கிக்கொண்டுதான்

வருவேன். அதேபோல இந்த விவாகத்திற்கும் வருகையில் இதே மாதிரியாக ஒரு டஜன் கைக் குட்டைகள் ஒரே சதுரமாக நெசவு செய்தது கடையில் பார்த்து மிக்க ஆவலோடு வாங்கிக்கொண்டு வந்தேன். நேற்று கல்யாண தடபுடலில் இரண்டு குட்டைகள் எப்படியோ கெட்டுப் போய்விட்டன. என் எஜமானர் ஒன்று வைத்துக் கொண்டிருக்கிறார். இன்னும் மற்றவை என் பெட்டியில் இருக்கின்றன" என்றார்கள்.

அதே மாதிரி கைக்குட்டையினால் தாம்பூலத்தை இந்த பாஸின் சொந்தக்காரரர் துடைத்தார். பிறகு அவர் பேசியதும் ஒரு விதமாக இருந்தது. அதனால்தான் நான் சந்தேகிக்கின்றேன். இந்தக் கைக்குட்டைகளினால் அந்த நகைகளை முடிவானேன்? மேலும் திருடவேண்டு மென்று வந்த கள்ளனாயின் ஒரு நகைகளும் விடாது

இந்தக் கைக் குட்டையில் மூட்டை கட்டி இவன் படுத்திருக்கும் இடம் தேடியலைந்து வந்து அங்கு வைப்பானேன். இது எனக்குச் சந்தேகமாகவே இருக்கிறது. மேலும் அவ்விருவரும் அங்கு படுக்கையில் காண வில்லையே! எங்கே எழுந்து சென்றிருப்பார்கள்....எதற்கும் நாளைய தினம் இந்த சந்தேகங்களை நிவர்த்தி செய்துகொள்கிறேன்” என்றார்.

ஒரு சிறிய நெருப்புதானே என்று அலக்ஷ்யமாக விட்டு விட்டால் அது ஒரு பெரிய நதியின் வெள்ளத்தினாலும் அணைக்க முடியாதபடிப் பரவி விடுவது போல ஒரு பொய்யான அவதூறுச் சொல்லை முதலிலேயே தடுக்கா விடின் அது ஊர் முழுதும் பரவி உண்மை வெளியாகும் போது கூட சீக்கிரத்தில் மறைவதில்லை.

அன்று மறுநாளும் சமையல்காரனாகவே

நடித்து,இரவு மிகுந்த சாப்பாடுகளை எல்லாம் வேலைக்காரர்களுக்குப் போடுகையில் நகை மூட்டையைக் கொடுத்த வேலைக்காரி யாரென்பதை விசாரித்தறிந்து கொண்டு அவளுக்குச் சாப்பாடு போடுகையில், அவளோடு ஏதோ பேச்சுக் கொடுத்துக் கொண்டே இருந்தார் நாயுடு. அவன் நோம்பிக் கொண்டிருக்கையில் அவனருகிலேயே நின்று வேடிக்கையாக “ஆகா! அந்த நகை மூட்டையை நீயாயிருக்கவே கொடுத்து விட்டாய். இன்னொரு திருட்டு முண்டையா யிருப்பின் அதைக் கொடுப்பாளா ! நீ நல்லவள். உன் கையில் எப்படித்தான் அம் மூட்டை யைத் தைரியமாய்க் கொடுத்தான் பாரேன்! ஆச்சரிய மாயிருக்கின்றது” என்றார்.

சிலர் விநியோக சமயத்திற்குக் கோயிலுக்குப் போலது போல, சிலர் கலியாண வீடுகளுக்கு தேங்காய், தக்ஷிணை

கொடுக்கும் போது போகிறார்கள். இரண்டு கோஷ்டியினரும் தங்களுக்கு வேண்டியதைத் தண்டிக் கொள்ளச் செல்கிறார்களே தவிர வேறொரு விதப் பற்றும் அவர்களுக்கு இல்லை.

அது கேட்ட கிழவி “திருட்டுக் கழுதைகளுக்குப் பயம் வேறு இருக்கிறதா?” என்றாள்.

நாயுடு:-ஆயா! அந்த மனிதனை நீ இதற்குமுன் பார்த்திருக்கிறாயா! அவனை உனக்குத் தெரியுமா!

கிழவி:- நான் என்ன சொல்வேன்! எனக்கு நல்ல தூக்கம். இந்த மூட்டை நகையா அன்றி பக்ஷணமா என்று எனக்குச் சத்யமாகத் தெரியாது. தோட்டக்காரன் எப்போதேனும் மூட்டை ஏதேனும் கொடுப்பான். அதுதான் என்று நினைத்தேன். என் கையில் கொடுத்தது

தோட்டக்காரன் தான் என்று எண்ணி வழக்கம் போல வாங்கிக் கொண்டேன். இந்த திருட்டு கலபை ஏற்பட்ட பிறகுதான் எனக்கு விஷயம் தெரிந்தது. அந்த திருடன் இப்படிச் செய்தானே என்று நான் மிக்க ஆச்சரியப்பட்டுவிட்டேன்.

நாயுடு:- ஆயா! கோபித்துக் கொள்ளாதே. நான் என் காதில் பட்டதைச் சொல்கிறேன். நேற்று இரண்டு போலீஸ்காரர்கள் பேசிக் கொண்டார்கள். அதாவது,- அந்தக் கிழவியேதான் நகையைத் திருடிவிட்டு இரண்டு மூட்டைகளாகக் கட்டித் தான் ஒன்று அமுக்கி விடலாம்; மற்றொன்றினால் இன்னொருவன் அகப்பட்டுக் கொள்ளட்டும் என்று செய்து விட்டாள். பிறகு வீட்டுக்காரர்களுக்கோ, யாருக்கோ தன் மீது சந்தேகம் உண்டாகி விட்டதை யறிந்த கிழவி தான் சாது போல தப்பித்துக் கொள்ளும்பொருட்டு

இரண்டு மூட்டைகளையும் அவன் தலைமீது போட்டு விட்டாள். அந்தக் கிழவி தான் திருடினவள். அந்த வீட்டில் துணி துவைப்பதும் கிழவி தான். அந்த கல்யாணத்திற்கு வந்திருக்கும் ஒரு பெரிய எஞ்சினீயர் ‘தன் பெண்டாட்டியினுடைய கைக்குட்டைகள் இரண்டு காணப்படவில்லை என்று போலீஸில் எழுதி வைத்திருக்கின்றார்களாம். அதை அந்தக் கிழவிதான் துணி துவைக்கும் போது திருடிக் கொண்டாள். அந்த கைக் குட்டையிலேயே அந்த நகைகளைக் கட்டி இருப்பதால் திருடினவள் கிழவிதான் என்பது வியக்தமாகின்றது. அவளை இன்று கைது செய்து விட வேண்டும்.” என்று பேசிக் கொண்டார்கள், ஐயோ;பாவம்!” என்று நாயுடு மேலே சொல்வதற்குள், கிழவியின் முகம் பிணம் போலாய்விட்டது. “ஐயோ! சாமி! கடவுளே! அடே படு பாவி!” என்று கத்த

வாரம்பித்தாள்.

வயது அதிகமாக ஆக சபல புத்தியை ஒழித்து, மனத்தைப் பரிசுத்தப் படுத்திப் பகவானைத் துதிப்போமென்கிற எண்ண மில்லாமல் சிலர் ’’யௌவனம் திரும்பாதா” என்று ஏங்கி மனத்தைத் தீய வழியிலேயே செலுத்திப் பாப மூட்டையைப் பெரிதாக்கிக் கொள்கிறார்கள்.

இதைக் கண்ட நாயுடு, “ஏ ஆயா! என்ன இப்படி கத்து கிறாயே! இது கல்யாண வீடல்லவா.... அதோ வீதியில் போலீஸ்காரன் வந்திருப்பதாகத் தெரிகின்றது. ஆகையினால் நீ இங்கு சத்தம் செய்யாதே. புறக்கடைத் தோட்டத்திற்கு வா” என்று அவளுக்குச் சரியானபடி பயத்தைக் காட்டி அவளை இழுத்துக் கொண்டு தோட்டத்திற்கு ஓடினார். கிழவிக்கு நடக்கக் கூட மாட்டாமல் கால்கள் தத்தளிக்கின்றன. “ஆயா! நீ தள்ளாத வயதில்

ஏன் இப்படிப்பட்ட வேலையைச் செய்தாய்?” என்றார்.

கிழவி:- ஐயோ விதியே! அனியாயமே! நான் என் கைலவச்சி பத்து வெரலாலே எதையும் திருடினவள் அல்ல. எனக்கு அந்த எண்ணமே இல்லை. ஐயோ! இப்படி எல்லாம் இவ்வளவு தூரத்திற்கு வருமுண்ணு நான் பார்க்கவில்லையே. என் விதியேண்ணு நான் இருந்தேன்; ஒரு கம்மனாட்டி வந்தான். அவன் எனக்கு முன்னே பின்னே தெரியாது. என் மகள் “என் புருஷன் அடிக்கிறான், இம்சை செய்கிறான். 50 ரூபாய் கொண்டு வந்து கொடுத்தல்தான் உன்னை வைத்துக் கொள்வேன்; இல்லா விட்டால் ஆத்தா வீட்டிற்குப் போ!” என்று வைகிறான்” என்று என்னிடம் சொல்லி யழுதாள்.

அதை அந்தப் பாவிமகன் பார்த்திருந்தான். அவன் “உன் கையில் 50 ரூபாய்

கொடுக்கிறேன்; நான் கொடுக்கும். ஒரு மூட்டையை, நான் எவனைத் திருடனென்று சொல்கிறோனோ, அவன்தான் என்னிடம் கொடுத்ததாயும், தூக்கக் கலக்கத்தில் பக்ஷண மூட்டை தோட்டக்காரன் கொடுத்தான் என்று நினைத்து வாங்கியதாயும் சொல்லி விடு."அவன் ஏற்கெனவே திருடன். அவ னைப் போலீஸார் பிடிப்பதற்கு இது தான் வழி. அவனை வெறுமனே விட்டு விட்டால் இன்னும் திருட்டு விபரீதமாகும். அந்தத் திருட னைப் பிடித்துக்கொடுப்போருக்கு 500 ரூபாய் இனாம் கொடுப்பதாகப் போலீஸார் சொல்லி இருக்கிறார்கள். ஆகையினால் அதில் ஒரு நூறு ரூபாய் உனக்குத் தருகிறேன். இதில் எந்த விதத்திலும் நீ அகப்பட் டுக் கொள்ள மாட்டாய்; நான் பார்த்துக்கொள்கிறேன். நான்தான் இப்படிச் சொன்னதாக நீ ஒருவரிடமும் சொல்லாதே" என்று கூறினான்.

‘திருடனைப் பிடிப்பதற்குத்தானே’ என்று நான் ஒப்புக் கொண்டேன். ஐயோ! நான் என்ன செய்வேன்? போலீஸ்காரனா வந்து விட்டான்!” என்று கிழவி பெரிய ஒப்பாரி வைத்து அழ வாரம்பித்து விட்டாள்.

’’உறவினரை விடச் சிநேகிதர்களுக்குத் தான் உதவுவதோ” என்று பழிக்கின்றார்கள் சிலர். அவர்கள் நடந்து கொள்ளும் மாதிரியினால் தான் உதவி புரிய மற்றவர்களுக்கு எண்ண முண்டாகுமேயன்றி உறவு அல்லது சிநேகித முறைக்காக மட்டுமல்ல வென்பதை அவர்கள் அறிவதில்லை.

நாயுடுவுக்கோ, சந்தோஷம் பொங்குகின்றது. அவர் கிழவிக் குச் சமாதானம் செய்தவாறு “ஆயா! நீ பயப்படாதே. நான் உன்னை என் தாயார் போலப் பாவிக்கின்றேன். ஆகையினால்

உன்னை நான் காப்பாற்றுகிறேன். நீ எந்த சமயத்திலும் நான் சொல்வதுபோலக் கேட்க வேண்டும் அதாவது உனக்கு ரூபாய் கொடுத்த அந்த மனிதனை நீ அழைத்துக் கொண்டு பகல் 2 மணிக்கு உன் வீட்டிற்குச் சென்று அவனோடு”எனக்கு நூறு ரூபாய் போதாது, இன்னும் வேண்டும்” என்று கேட்டுக் கொண்டே இரு. அப்போது இரண்டு போலீஸ்காரர்களுடன் நானும் வருகிறேன்; நீ சற்றும் பயப்படா மல், அவர்களைக் கண்டு பயந்தவள் போல நடித்து “ஐயா! நான் ஒரு பாபமும் அறியேன்; இவர் நூறு ரூபாய் கொடுத்தது போதாது என்றுதான் கேட்டேன்; வேறு ஒன்றுமில்லை.” என்று கூறி, நடந்த சகலத்தையும் சொல்லி விடு. உன்னை விட்டு விட்டு அந்த மனிதனைப் பிடித்துக் கொண்டு போய் விடுவார்கள்; நீ அப்படிச் செய்யாவிட்டால் உன்னையே

பிடித்து விடுவார்கள். ஜாக்கிரதை. இதை வெளியிட்டாலும் உன்னைப் பிடித்து விடுவார்கள்” என்று நன்றாகக் கடுக்காய் கொடுத்து விட்டார்.

ஸினிமா, டிராமா முதலியவற்றிற்கு முதல் நாளே போவதை விடச் சில நாட்கள் கழித்துப் பொது ஜன அபிப்பிராயத்தைக் தெரிந்து கொண்ட பிறகு போவதே உசிதமானது. ஏனெனில் இக் காலத்தில் மிகவும் கேவலமானவற்றைப் படாடோபமான விளம்பரங்களினால் பிரசித்தி பெறச் செய்கிறார்கள் சிலர்.

தன் வேலை முடிந்து விட்டதால் அவர் நேரே பொன்னுசாமியினிடம் வந்தார். அப்போது நாயுடு எதிர்பாராவிதமாய் அங்கு எஞ்சினீயர் வந்து, பொன்னுசாமியினிடம் பேசிக்கொண்டிருப்பதைக் கண்டு வியப்புற்று அமர்ந்தார். நாயுடுவைப் பார்த்த

பொன்னுசாமி “நாயுடுகாரு! உங்களைத்தான் நாள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். இவர் என்னுடைய சினேகிதர். நான் இங்கு வந்திருப்பதறிந்துவிசாரிக்க வந்தாராம். அதோடு இவர் கேசவனிடத்தில் மிக்க பற்றுடையவர். கேசவனுக்கு வந்துற்ற ஆபத்தை அன்று நேரில் கண்ணால் கண்டனராம்; அவர் வேறு என்ன செய்யக் கூடும். போலீ ஸாரிடத்தில் ரகஸியமாக ‘அவன் மகா;யோக்யன். என்னிடத்தில் வேலைக்கு இருந்தான். அவனைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும்” என்று எத்தனையோவிதம் எடுத்துக் கூறினாராம். அதற்குப் போலீஸார் “முன்னர் யோக்கியனாய், உத்தமனாய் இருந் திருக்கலாம்; இன்று நடந்த விஷயத்திற்காகவன்றோ நாங்கள் கைது செய்தோம்; ஆகையினால் விட முடியாது” என்று கூறி விட்டார்களாம்.

அவரும் உங்கள் வருகைக்குத்தான் எதிர் பார்த்திருக்கிறார்; என்ன விஷயம்! ஏதேனும் அனுகூலமாயிற்றா!” என்றார்.

“சிலர் முகத்தில் விழித்தாலும், அன்றி புறப்படுகையில் அவர்கள் எதிரில் வந்தாலும் அன்றைய காரியங்கள் யாவும் பாழ்தான்” என்பது வெறும் மூடக் கொள்கை யல்ல.” என்பது ஒரு பட்டறிந்த அநுபவ சாலியின் அபிப்பிராயம்.

நாயுடு வெகு சந்தோஷமடைந்து, எஞ்சினீயரின் கைகளைக் குலுக்கி வந்தனம் செய்து விட்டு, “ஐயா! நான் தங்கள் விஷயத்தில் செய்த காரியத்தை நானே கூறி மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன்; இந்த வழக்கு ஒருவாறு முடிந்து விட்டது. குற்றவாளி பிடிபட்டு விட்டான்” என்று கூறும்போதே எஞ்சினீயர் “என்ன! என்ன! குற்றவாளி பிடிபட்டானா! உண்மையாகவா!

உண்மையாகவா! நிரபராதி யான கேசவன் தப்பினானா! ஆ! கடவுளின் கிருபையே கிருபை” என்று பூரித்தார். நாயுடுகாரு! நீங்கள் குற்றவாளியைக் கண்டு பிடித்து விடுவீர்களென்று எனக்கு நம்பிக்கையுண்டு. தாங்கள் குற்றவாளி யார் என்று பகிரங்கமாகக் கூறுவதற்கு முன்பு நானும் அதுவிஷயமாகக் குற்றவாளி இன்னானென்று கூறுகிறேன். இவ்விஷயத்தை உங்களிடம் தெரிவிக்கவே நான் வந்தேன். நான் கண்டுபிடித்த குற்றவாளியும், நீங்கள் பிடித்தவனும் ஒரே ஆசாமியா என்பதைப் பார்க்கவேண்டும். என்னுடைய பந்துவின் வீட்டு விவாகத்திற்கு நாங்கள் வந்தோம். நகைகள் களவாடப்பட்டுக் கண்விழித்தபோது என் மனைவி திருடனை நன்றாகப் பார்த்துவிட்டாளாம், அவனை இன்னாரென்றும் தெரிந்துகொண்டாளாம்,

அவளுக்குக் குலை நடுக்கம் எடுத்துக் கொண்டதாம். அதாவது- அந்த திருடன் என் தந்தையின் இளைய மனைவியின் புதல்வன். எனது தம்பி என்று சொல்வதற்கும் வெட்கமாக இருக்கின்றது. அந்தப் பையன் தாயாரின் உபதேசத்தினால் எங்களுடன் பகைத்துக்கொண்டான். எங்களுக்கும் அவர்களுக்கும் பேச்சு வார்த்தையே கிடையாது. அவன் தத்தாரியாயும் சோதா வாயும் திரிகின்றான். அந்த சனியனும் விவாகத்திற்கு வந்தது.

ஒரு மணி நேரத்தை மூடர்களோடு கூட கழிக்க வேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டு விடின் “என்ன மணி இன்னும் கழிய வில்லையே” என்று ஏங்கிப் பிறகு மிகவும் சந்தோஷமான மனத்துடன் அவர்களைப் பிரிகிறோம், ஆனால் அதே நேரத்தைப் படித்த அறிஞர்களிடம் செலவிடில் “இதற்குள் ஒரு மணி நேரம் பறந்து

விட்டதே”! ’என்று கலங்கி அவர்களைப் பிரிய மனமில்லாது வருந்த கேரிடுகின்றது.

இவன் இக்காரியம் செய்வதைப் பார்த்து நடுங்கிய என் மனைவி உடனே என்னை எழுப்பி என்னிடம் விஷயத்தைக் கூறினாள். நான் எப்படி இதை வெளியிடுவதென்று யோசிக்கையில் கேசவனைக் குற்றவாளி என்று கண்டுபிடித்து அழைத்துச் சென்றுவிட்டார்கள்: பிறகு இதுவிஷயமாக நான் என் நண்பரிடம் யோசித்ததில் அவர் “இதை நாயுடுவினிடமே தெரிவித்து. அவரே துப்பறிந்து கண்டு பிடித்ததாகக் காரியம் நடக்கட்டும்; குற்றமற்ற கேசவன் விடுதலை யாகட்டும்” என்று கூறினார். இதுதான் விஷயம்” என்றார்.

அவர் அவ்வாறான விஷயங்களைக் கூறப்போகிறார் என்று கனவிலும் கருதவில்லை- யாகையினால், நாயுடு

மெத்த சந்தோஷித்தார். "ஐயா! நான் தங்கள் விஷயத்தில் சந்தேகித்தது ஒருவாறு அனு கூலமாகவே முடிந்தது" என்று தான் சமையல்காரனாகச் சென்றது முதல் இதுவரையில் நடக்கு சகலமான விஷயங்களையும் கூறி "தங்கள் பெட்டியைத் திறந்து பாஸ் எடுத்ததற்காக மன்னிக்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

இதைக் கேட்ட எஞ்சினீயர் "என்ன! என்ன! தாங்களா நேற்று எனக்குப் பால் கொடுத்தது! சாப்பாடு பரிமாறியது! என்ன ஆச்சரியம்! உங்கள் தொழில் முறையில் நீங்கள் செய்தது குற்றமென்ன! இத்தகைய குட்டையை அடையாளங் கண்டுகொண்டு இந்த விஷயத்தைக் கண்டுபிடித்ததுதான் வியப்பு! தங்களைப்போன்ற பெரிய உத்யோகஸ்தர்களுக்கு இந்த வழக்கு ஒரு பிரமாதமா! ஐயா! எப்படியாவது

கேசவன் விடுதலையடையப் பெற்றால் போதும் என்று நான் இரவுபகலாக எங்கினேன்: இந்த இரண்டு நாட்களாக எனக்குத் தூக்கமே பிடிக்கவில்லை. சரி; இவ்விஷயத்தைப் போலீஸாரிடம் தெரிவித்து அவர்களையும் உடன் அழைத்துச்சென்று அந்த ஆசாமியைப் பிடித்துவிடுங்கள். நான் ஊருக்குப் போய்விடுகிறேன். எனக்குச் செய்தி பத்திரிகையில் தெரிந்ததாகவே நடிக்கின்றேன். நான் கேசவனைப் பார்த்துவிட்டுப்போகப் பிரியப்படு கின்றேன்" என்றார்.

ஒருவரிடத்து உண்மையான அன்பு ஏற்பட்டுவிடின் அவர்களுக்கு இஷ்டமான பொருளைக் கொடுப்பதற்காகக் கடும் வெயிலையும், கொடும் மழையையும், தெடுந் தூரத்தையும் கவனிக்க மனம் இடந்தருவதில்லை. ஆனால் மனப் பற்று

இல்லா விடில் பக்கத்திலுள்ளதை எடுக்கவும் கை நாடுவதில்லை.

உடனே நாயுடு கேசவன் இருக்கும் இடத்திற்கு எஞ்சினீயரை அழைத்துச் சென்றார், கேசவன் தன்னுயிரே தன் உடலில் இல்லா தவன்போலத் தத்தளித்தவாறு கடவுளை நோக்கி,

1. எனக்கெனச் செயல்வேறிலை யாவுமிங் கொருநின்
றனக்கெனத் தகுமுடல் பொரு ளாவியுக் தந்தேன்.
மனத்தகத்துள வழுக்கெலா மாற்றி யெம்பிரானீ
நினைத்த தெப்படி யப்படியகுளுத னீதம்.
2. பாராயோ வென்று யாமெல்லா மையா
பகருமுன்னே தெரியாதோ பாவி யேன்முன்.

வாராயோ வின்ன மொருகால மானாலும் மலர்க் காலேன் சென்னிமிசை வைத்திடாயே! -தாயுமானார்.

என்ற பாடல்களைப் பாடித் துதித்துக்கொண்டே கண்ணீரைக் கானாறாய் ஓடவிட்ட வண்ணம் இருக்கிறான். பரிமளாவின் உருவம் அவன் அகக்கண்ணிற்குத் தோன்றி “எதற்கும் பயப்படவேண்டாம்; அஞ்சவேண்டாம்’’ என்று தைரியம் கூறுவது போன்றிருந்ததினால் சற்று ஆறுதலையடைகிறான். இந்த சமயத்தில் நாயுடு முதலியவர்கள் அங்கு போய்ச் சேர்ந்தார்கள். அவர்களைக்கண்டதும் கேசவன்”என் அன்பர்களே! ஏதேனும் வழி பிறந்ததா ! ஹா ! என்னை ஆதரித்த ஹ! எஞ்சினீயரல்லவா! வாருங்கள்; என்னுடைO நிலைமையைப் பாருங்கள். அதோகதியாகிவிடக் காலம் வந்துவிட்டது.

என் சரிதை எல்லாம் தாங்களறிந்திருப்பீர்களன்றோ! ஒரு பாபமும் அறியாத என்னை இக்கதிக்கு ஆளாக்கவேண்டுமென்று எந்தச் சண்டாளன் கறம் வைத்திருந்தானோ!” என்று புலம்பினான்.

“என்று நமக்கு விடுமுறை கிடைக்கும்; அன்று படிப்புக்கும் விடுமுறை யளித்துவிட்டு வீட்டில் தண்ட போது போக்கித் துவம்சம் செய்யலாம்” என்று கோருவர் சிறுவர்கள். ஆனால் பெரிவர்களோ இந்த உபத்திரவ மில்லா மலரிப்பதற்காகவாவது விடுமுறை விடாமலிருக்க மாட்டார்களா?” என்று வேண்டுவர்.

எஞ்சி:-கேசவா! உன்னுடைய காலவித்யாசத்தினால் ஏதோ ஒரு விதமான பழி சார்ந்தது எனினும் மகா பெரும் புவியாகிய நாயுடு இருக்கையில் உனக்கு ஒரு வித குறைவுமில்லை. நாயுடு முகத்தில் சிரித்த

களை பொங்குகின்றது. அதுதான் உன் ஜெயத்தை எடுத்துக் காட்டுகின்றது. நீ பயப்பட வேண்டாம். உன்னுடைய பழி நீங்கியது. குற்றவாளியை நாயுடு கண்டு பிடித்து விட்டார்.” என்ற வாக்கியத்தைக் கேட்ட உடனே கேசவன் “ஹா! நான் நிரபராதி என்பது நிரூபிக்கப் பட்டதா! என் பழி அகன்றதா! கடவுளே நாயுடு உருவமாக வந்து இக் காரியத்தைச் செய்திருக் கிறார். இது நிச்சயந்தானா! என் அன்பர்களே! பிதாவே! இது உண்மைதானா! அல்லது என் மனம் தேறிக் களிக்கும் பொருட்டு இந்த வார்த்தையைக் கூறுகின்றீர்களா! உடனே உண்மையைக் கூறுங்கள்” என்று தத்தளித்தவாறு கேட்டான்.

கேசவனின் பதைப்பைக் கண்டு வியப்புற்ற நாயுடு “கேசவா! நான் பொய் யுரைப்பதாக நீ எத்தனை விஷயங்களில்

கேள்வி யுற்றிருக்கிறாய்?. நான் என் வேலையில் வெற்றி பெற்றாலொழிய பொய்யுரைத்துப் பசப்புகின்றவன் நான் அல்ல வென்பதை நீ அறியாயா! செல்வா! உன் தலை மீது விழுந்த அபாண்ட இடி விலகியது. உண்மைக் குற்றவாளியை இன்னும் சிறிது நேரத்தில் பார்க்கப் போகிறாய். ஆத்திரப்படாதே! உன் பரிமளா உனக்கே தான் என்பதை இனியேனும் நம்பு, அந்த மாதாசியும் தாமரை யிலை நீர்த்துளி போல் தத்தளித்துக் கொண்டிருப்பாள். நாங்கள் சென்று வருகிறோம். நீ பல நாடகங்கள் நடித்த பிரபல நடிகனல்லவா! ராமதாஸ் வேடத்தில் சிறையில் இருந்தாய்; மாணிக்க வாசகராய்ச் சிறையிலிருந்தாய். இன்னும் எத்தனையோ நாடகங்களில் சிறையி லிருந்ததாக நடித்திருப்பது போல இதுவும் ஒன்று என நினைத்துக் கொள். கேசவா!

பயப்படாதே. நாங்கள் சென்று வருகிறோம்" என்று கூறி விட்டு நேரே போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று 'குற்றவாளி யகப்பட்டு விட்டான்; பிடிப்பதற்குத் தயாராக என்னுடன் வாருங்கள்" என்றார் நாயுடுகாரு.

பத்திரிகை வரும் நேரத்தை வெகு ஆவலுடன் எதிர் பார்த்துக் கொண்டிருக்கையில் அது வந்தவுடன் தாக்ஷண்யப்பட்டவர்கள் "இதோ ஒரு நிமிஷத்தில் தருகிறேன்." என்று எடுத்துக் கொண்டு போய் பிறகு கொடுக்காமலே இருந்து விட்டால் எவ்வளவு மனக் கஷ்ட முண்டாகிற தென்பதை அவர்கள் கவனிப்பதேயில்லை.

இதைக் கேட்டதே அதிகாரி வியப்புற்று "குற்றவாளி யகப்பட்டு விட்டானா! குற்றவாளி வேறு யாரையா !... கேசவனை விடுவிக்கும் பொருட்டு யாரையேனும் பிடித்துத் தயார்

செய்து விட்டீர்களா!” என்றார்.

நாயுடு:- ஐயா! என்னுடைய உத்தியோகம் அதுவல்ல. பொய்க் கேஸ்கள் பலவும் ஜோடித்து வழக்கை நடத்தி ஜெயமும், அப ஜெயமும் அடைவது வேறு பேர்வழிகள் என்பது உங்கள் மனமறியும். உண்மைக் குற்றவாளியைக் கண்டு பிடிப்பதற்குத்தான் நான் தொழில் பூண்டேன். சரியாக பகல் இரண்டு மணிக்கு என் னுடன் வாருங்கள்’” என்று கூறி விட்டு ஓட்டலுக்குச் சென்றார்.

அப்போதுதான் நாயுடுவுக்கு ஒரு தந்தி வந்திருந்தது. அவர் அந்த தந்தியை வாங்கிப் பார்த்தார்.

“என்னரிய தந்தையே! நாயுகோரு! நீங்களிருவரும் உடனே வர வேண்டியது. விஷயம் வெகு முக்கியமானதும் அவசரமானதுமாகும். என்னுடைய

வந்தனத்தையும் தைரியத் தையும் கேசவனுக்குத் தெரிவிக்கவும்.
பரிமளா”

என்றதைப் படித்த இருவரும் “பரிமளாவுக்கு ஆபத்து ஒன்று மில்லை. ஏதோ நல்ல விஷயந்தான் கிடைத்திருக்கிறது. அதனால் தான் இவ்விதம் தந்தி படித்திருக்கிறாள்” என்று எண்ணி, உடனே நாயுடுகாரு பரிமளாவுக்குக் கீழ்வருமாறு தந்தி யடித்தார்.

“செல்வீ பரிமளா !
உன் தந்தி கிடைத்தது. அது கிடைப்பதற்கு முன்பே துப்பு விளங்கி விட்டது. கேசவன் நிரபராதி என்பதை நிரூபித்தாய் விட்டது. குற்றவாளி பிடிபட்டான். நாங்கள் சீக்கிரத்தில் வந்து சேருகிறோம். கவலைப்படாதே!
நாயுடு”

தினந்தோறும் பத்திரிகை படிக்காவிடில் நமது ஊரில் நடக்கும் முக்கியமான விஷயங்களை யறிவதற்கில்லாமற் போய் விடுகின்றது. அதனால் சில சமயங்களில் அநாவசியமான கஷ்ட நஷ்டங்கள் உண்டாகின்றன. சிலர் தினம் பத்திரிகை படித்தும் முக்கியமான விஷயங்களைக் கவனிப்பதே இல்லை.

சரியாக மணி இரண்டடித்தது. போலீஸ் ஜெவான்களும் இன்ஸ்பெக்டரும் வந்தார்கள். நாயுடுகாருவும் அவர்களுடன் வேலைக்காரக் கிழவியின் வீட்டிற்குச் சென்றார். அப்போது கிழவியும் அந்த ஆசாமியும் நாயுடுவின் எச்சரிகைப்படிக்குப் பேசிக் கொண்டிருந்தார்கள். நாயுடு போலீஸாரிடம் “ஐயா! சற்று இவர்கள் சம்பாஷணையைக் கவனியுங்கள்” என்றார்.

கிழவி:- அடேய் படுபாவி! அந்த ஆசாமியை

நீ திருடன் என் றும், வெகு நாளைய கொள்ளைக்காரன் என்றும், அவனைப் பிடித்துத் தருபவர்களுக்கு 500 ரூபாய் இனாம் போலீஸார் கொடுப்பதாக விளம்பரம் செய்திருப்பதாயும், அதனால் அவன் மீது பழியைச் சாட்டிப் போலீஸாரிடம் ஒப்புவிக்க வேண்டு மென்றும் கூறினாயே! இந்த முழு மோசத்தை நம்பி நானும் விஷய மறியாது இதில் மாட்டிக் கொண்டேனே!

குற்றவாளி:-நீ ஏன் இதற்குப் பயப்படுகிறாய்? அந்தப் பயல் தான் திருடன் என்று பிடித்து விலங்கு போட்டாயிற்று. இனி என்ன கவலை! உனக்கு வேண்டுமானால் நீ கேட்டது போல இன் னும் நூறு ரூபாய் தருகிறேன். இந்த விஷயத்தைப் பற்றிக் கவலையை விட்டு விடு, பயப்படவும் வேண்டாம்- என்றான்.

அப்போதுதான் போலீஸாருக்கு ஒருவித

சந்தேகம் உண்டாகியது.

சிலர் ஒருவரிடத்துச் செல்கையில் ’” ஒன்றுமில்லை; வெறுமனேதான் வந்தேன்” என்று சொல்லிக் கொண்டே யிருந்து விட்டுத் தான் வந்த காரியத் தைப் பற்றிச் சொல்லாமலிருந்து, அவர் வெளியில் போன பிறகு கையைப் பிசைவது:

அவர்கள் உடனே உள்ளே சென்று, “ஐயா! இனி கவலையே கிடையாது, எல்லாம் களிப்பாகவே முடிந்தது. நீர் போலீஸாரின் விளம்பரப்படிக்குக் கள்ளனைப் பிடித்துக் கொடுத்ததற்காக உங்களுக்கு மரியாதை செய்து அரசாங்கத்தினரின் விருந் தினராக அழைத்துச் செல்ல வந்தோம். வாரும். எழுந்திரும். ஏ கிழவி! எழுந்திரு.’” என்று அதட்டியபடி அந்த ஆசாமியைப் பிடித் துக் கொண்டார்கள்.

இவர்களைக் கண்ட கிழவி நடு நடுங்கிப் போய் ’ஐயா! நான் ஒரு பாபமும் அறியேன். நூறு ரூபாய் போதாது. நீ மட்டும் போலீஸாரிடம் ஐந்நூறு ரூபாய் வாங்கிக் கொள்கிறாயே! அதில் இன் னும் நூறு ரூபாய் கொடு. நான் அந்த மூட்டையைக் கொண்டு கொடுத்துக் கூறியதனாலன்றோ அவன் குற்றவாளியாக மதிக்கப் பட்டான்!” என்று தருமமாகக் கேட்டேன். நீங்களே அதை எனக்குக் கொடுத்து விடுங்கள். இவனுக்கு நான் சகாயம் செய்தும் இவன் என்னை ஏமாற்றப் பார்க்கிறான்.” என்றாள்.

அந்த மனிதனுக்கோ உயிர் உடலை விட்டுக் கிளம்பியது போலவே ஆய்விட்டது. நெருப்பை மிதித்தவன் போல தத்தளிக்கின்றான்; எனினும் திடீரென்று வெறி கொண்டவன் போலச் சீறி, அங்கு வந்திருப்பது போலீஸார் என்றதையும் மறந்து, தன் மடியில்

வைத்திருந்த கைத் துப்பாக்கியை எடுத்து சற்றும் எதிர் பாராத விதமாகக் கிழவியின் மீது ஒரு வெடியும், போலீஸ் இன்ஸ்பெக்டர் மீது ஒரு வெடியும் டப் டப் என்று இமைப் பொழுதில் சுட்டான். இந்த அசுர செய்கையைக் கண்டு எல்லோரும் பிரமித்து இமைப் பொழுது கலங்கி விட்டார்கள்.

சிலர் “நமஸ்காரம்” என்று வாயாற் சொல்கையில், கைகளை வேறு விதமாகக் காட்டுவது; அவர்களது முகமோ இரண்டுக்கும் சம்பந்தமில்லாத விதம் கோணுகின்றது. இப்படி ஒவ்வொன்றும் ஒவ்வொரு மூலைக்கு நவக்கிரகங்கள் போன்று வக்கரித்துக் கொண்டால் அவர்கள் மேற்கொண்டுள்ள காரியம் அதற்குத் தகுந்தாற் போலத்தான் நடக்கின்றது.

# 11-வது அதிகாரம் - பகலவனைக் கண்ட பனி

வெகு காலங்களுக்கு முன்பு விட்டுப் பிரிந்த தன் மகனைக் கண்டதும்,
பெற்ற பாசம் மூடிக் கொண்ட கோமதி மருதப்பனை வாரியணைத்துக் கொண்டு நின்ற காட்சியைக் கண்டு வியந்த மற்றையோர் ” ஆ! இவருடைய அன்னை நீங்களா! உங்கள் குமாரரா இவர்! என்ன ஆச்சரியம்! இவர் பெயர் சுப்பிரமணிய யென்றல்லவோ எங்களிடம் தெரிவித்தார்; மருதப்பனா இவர் பெயர். அம்மணி! அன்று உங்கள் வீட்டிற்கு இவரும் வந்து நடித்தனரே! அப்போது ஒருவருமே கவனிக்க வில்லையே! இவர் உங்களை விட்டு எப்படிப் பிரிந்திருந்தார்; விஷயம் விளங்கவில்லை! எனக்கு விளங்கக் கூறுங்கள்” என்று மானேஜர் கேட்டார்.

இது கேட்ட கோமதி “ஐயா! என் குழந்தையைத் தாங்கள் இது பரியந்தம் காப்பாற்றியதற்கும், எங்கள் வீட்டிலேயே வந்து நடித்து எங்களுக்கு நாங்கள் இழந்த புதையலை எங்களிடம் சேரும் படியாகச் செய்ததற்கும், நான் எவ்விதம் வந்தனம் செய்வதும் கைம்மாறு செய்வது மென்பதே தெரியாமல் தவிக்கின்றேன். தங்களிடம் எங்கள் வரலாற்றைக் கூறாது வேறு யாரிடம் கூறுவேன்!” என்று ஆதி முதல் அன்றைய வரையில் நடந்த சகலமான விஷயங்களை யும் கூறி

கெட்ட பழக்கங்களுடையவர்கள் அஃதில்லாதவர்களைத் தங்கள் நிலைமைக்குக் கொண்டு வந்து சமத்வம் பாராட்ட விரும்புவது போல, தாழ்ந்த ஸ்திதியிலுள்ளவர்கள் தங்களை விட மேலான நிலைமையிலுள்ளோரைத்
தங்களது நிலைமைக்குத் தாழ்த்திவிட

வேண்டுமென்று விரும்புகின்றார்களேயன்றி, தாங்கள் தமது ஊழல்களைத் துறந்து விட்டு உன்னதப் பதவியை அடைவோமென்கிற எண்ணம் கொள்வதில்லை.

“ஐயா! இவன் கதை போல வரைந்து நடித்தது முற்றும் இவனுடைய சொந்த சரிதை யாகும். இவன் முதன் முதல் திருடி எங்களை விட்டுச் சென்ற பிறகு இது வரையில் நடந்த விஷயங்களையே இப்போது உங்களுக்கோர் கதையாக நடித்து விட்டான். என் வீட்டில் வந்த போது நாங்கள் கவனிக்கவில்லை எனினும், எனது சிறிய மகள் கவனித்துக் கூறியதன் பேரில்தான் நான் சினிமாப் படம் பிடிக்கையில் பார்க்க வேண்டு மென்று என் மூத்த குமாரத்தி பாலாவை கேட்கச் சொன்னேன். ஐயா! எங்கள் கதை இன்னும் எஞ்சியதையும் கூடச் சேர்த்துக் கொண்டு நடிக்கலாம். எப்படி பிறந்து, எப்படி வளர்ந்து, கடைசியில் எங்கு கூலி வேலைக்குத்

திண்டாடி எங்கள் கற்பை காத்துக் கொள்ள ஒவ்வொரு நாளும் எமனுடன் இருப்பது போலப் பழகுகின்றோம் தெரியுமா ?” என்று வருந்திக் கொண்டே கூறினாள்.

இது கேட்ட மானேஜர் மிக்க ஆச்சரியமும் விசனமும் அடைந்தார். உண்மையில் அந்த மானேஜர் மகா உத்தம குணம் பொருந்தியவர்: யாருக்கும் தீங்கு செய்ய மனத்தினாலும் கருதாதவர் ஆகையினால் இவர்களின் சரிதை, அவர் மனத்தை யுருக்கியது. மருதப்பா தன் தாயைக் கண்ட தக்ஷணமே ஆநந்தத்தினால் மூர்ச்சை யானான். மூர்ச்சை தெளிந்து எழுந்தவுடன், இன்னது பேசுவதென்பதையே அறியாது தாயையும் சகோதரிகளையும் மாறிமாறிக் கட்டியணைத்து, ஆநந்தக் கண்ணீர் பெருகவிட்ட வண்ணம் தாயார் சொல்லிய பரிதாபகரமான செய்தியைக் கேட்டுக் கலங்கிப்போய் ”ஹா! அம்மா!

கேசவன் காணப்படவில்லையா! ஐயோ! என்னைத் தான் பிரிந்துப் பரிதவித்தாய் என்றல்லவோ எண்ணினேன், உத்தமனாகிய கேசவனையுமா பிரிந்துவிட்டாய்! கேசவனின் தகவல்

சில வியாபாரிகள் ஒரு குறிப்பிட்ட விகிதப்படி விளம்பரம் செய்வதாக ஒத்துக் கொண்டு விளம்பரம் வெளியான பிறகு “அவ்வளவு கொடுக்க முடியாது; கொஞ்சம் குறைத்து வாங்கிக் கொள்ளுங்கள்” என்று சொல்லிப் பணத்தைக் கொடுக்காமல் இழுக்கடிப்பது. சில பத்திராதிபர்கள் ஒரு குறைந்த விகிதப்படி விளம்பரம் வெளியிடுவதாக வாக்குக் கொடுப்பது; அப்புறம் அதை அதிகப்படுத்தித் தாங்கள் முன்னர் சொன்ன வார்த்தையை மழுப்பி விடுவது. இந்தக் காலத்தில் வார்த்தைக்கு மதிப்பே யில்லை போலும்.

இன்னுமா கிடைக்கவில்லை! என்னருமை கேசவா! உன்னைப் பார்க்கப் பேராவல் கொண்டிருந்தேனே! நீ எப்படி மாயமாய் மறைந்துவிட் டாய்!” என்று மருதப்பா புலம்பினான்.

இவைகளைக் கேட்ட மானேஜர் “அம்மணீ! நீங்கள் சொல்வதை எல்லாம் பார்த்தால் கேசவன் என்றொரு சிறுவன் நாடகத்தில் நடித்துவருகிறானே, அவனாகவிருக்குமோ! இதோ ஒவ்வொரு வேஷத்திலும் எடுக்கப்பட்டுள்ள அவனுடைய புகைப்படங்கள் என்னிடமிருக்கின்றன. நான் அந்தப் பக்கத்திலிருக்கையில் தினம் நாடகத்திற்குச் சென்றதால் இந்த புகைப் படங்களை வாங்கினேன். பையன் வெகு நன்றாகப் பாடுகின்றான், நடிக்கின்றான். இவனா பாருங்கள்!” என்று புகைப் படங்களைக் காட்டினார்.

இதைப் பார்த்த கோமதி, மருதப்பா முதலிய எல்லோரும் “ஹா! இவன் தான்! எல்லா வேஷல்களையும்விட நந்தனார் வேஷத்திலும், பட்டினத்தடிகள் வேஷத்திலும் கொஞ்சங்கூட மாறுதலின்றி நன்றாகத் தெரிகின்றது. ஆ கேசவா! என்னருமை கேசவா! நான் என்ன புண்ணியம் செய்தேனோ ஒரே சமயத்தில் இரு குமாரர்களையும் காண நேர்ந்தது! ஐயா! இதற்குக் காரணம் தாங்கள் தான்! எங்களுக்கு உயிர் கொடுத்ததே தாங்கள் தான்” என்று தாராளமாய்க் கூறுவோம்” என்று பெரு மகிழ்ச்சியோடு, உடனே அங்கு செல்வதற்கு ஓர் மார்க்கம் தாங்கள் தான் தேடித்தரவேண்டும். எங்களுக்கு வேறு கதி இல்லை. இந்தத் தோட்ட வேலையிலிருந்து விடுதலை படைய ஓர் வழி செய்யவேண்டும்” என்று பரிதாபமாகக் கேட்டார்கள்.

இதுகேட்ட மானேஜர் ”ஆகா! இந்த தோட்டத்தில் இத்தகைய அனியாயங்கள் நடக்கின் றனவா! இது பரியந்தம் இவ்விஷயங்கள் வெளியாகாமலன்றோ இருந்தன! அம்மா! நான் எப்போதும் பிறருக்கு உதவி செய்வதிலேயே நோக்கங் கொண்டவன். உங்களை எனக்கு இதுகாறும் தெரியாது. தெரிந்திருக்குமாயின்

சாகர அலைக்காவது ஓய்வு இருக்கலாம். சிலரது மனக் கவலைக்கு ஓய்வே கிடையாது. அவர்களது அக்ஞானம், அநுபவமின்மை, சந்தேகப் பிசாசு முதலியவைகளே அதற்கு முக்கிய காரணமாகும்.

இத்தகைய கஷ்டங்கள் நீங்கள் அடைந்திருக்கமாட்டீர்கள். கடவுள் எல்லாவற் றிற்கும் ஒரு கால தவணை குறிப்பிடவில்லையா! இப்போது தான்
அதற்குக் காலம் வந்தது. அம்மா! இந்த

தோட்டத்தின் சொந்தக் காரரும் எனது சிற்றப்பன்தான். என்னை எடுத்து வளர்த்தவரும் அவர்தான். ஆகையினால் நான் அவரிடத்தில் நேரில் சென்று உங்கள் விஷயங்களைக் கூறி நீங்கள் உங்கள் ஜன்மபூமியை அடைவதற்கான உத்தாவை வாங்கிக்கொண்டு வருகிறேன். என்னாலான உதவியைச் செய்ய நான் மறுக்கவில்லை. எங்கள் கம்பெனியின் விஷயத்தில் மருதப்பா காட்டியுள்ள ப்ரேமைக்கு நான் என்றும் அவருக்கும் உங்களுக்கும் உதவி செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். நீங்கள் கவலை கொள்ளவேண்டாம். உங்களுடைய ஜீவிய சரிதையைக் கேட்க என் மனம் பதறுகின்றது. என் வண்டி தயாராக இருக் கின்றது. அதிலேயே நீங்கள் வீட்டிற்குச் செல்லலாம். நான் நாளை வந்து சந்திக்கின்றேன்" என்றான்.

அந்த மானேஜருடைய நற்குணத்திற்கும், பச்சாத்தாப சிந்தைக்கும் எல்லோரும் வியப்புற்று அவருக்குப் பிரதி வந்தனம் செய்துவிட்டு, உத்தாவு பெற்றுக்கொண்டார்கள். மானேஜரும் அவர்களுடன் வண்டியில் வீட்டு வரையில் வந்து அவர்களைக் கொண்டு விட்டார். அப்போது பத்திரிகை விற்றது. அதை மானேஜர் வாங்கிப் படித்தார். அதில் அதிசயமான விஷயம் வெளியாயிருந்தது. அதாவது,-பாலாவின் பிதாமீது கொலைக்குற்றம் சாட்டுவதாகப் பயமுறுத்திய மனிதனே கொலையாளி என்பது விளங்கிவிட்டதாயும், அவனைத் தண்டித்துவிட்டதாயும் இருந்தது.

இந்த சந்தோஷச் செய்தியைக் கேட்ட எல்லோரும் பேரானந்த மடைந்தார்கள், கங்காதானுக்கு அப்போதுதான் சரியானபடி

மூச்சு வந்ததென்று கூறலாம். அந்த சந்தோஷத்துடன் தனது மூத்த குமாரனைக் கண்டதும்,

பூஜா காலத்தில் யாதொரு தடங்கலுமில்லாதிருந்தால்தான் ஒரு வழியில் நிலை நிறுத்த முடியும். அதை உத்தேசித்துப் பூஜை செய்யும் இடத்தை வீட்டின் உட்புறம், எவரும் திடீரென்று பிரவேசித்துத் தொந்தரவு செய்யாமலிருக்கும்படியாக அமைத்தல் உசிதமானது.

கேசவன் விஷய மறிந்ததும் ஆக எல்லா ஆநந்தமும் ஒன்றுகூடி அவரைப் பரவசமுறச் செய்தது. மகனைத் தழுவிக் கொண்டார். மானேஜருக்கு மனப்பூர்வமான வந்தனத்தை யளித்தார்; நன்றி யறிதலைத் தெரிவித்தார். மானேஜரும் உத்தரவு பெற்றுக்கொண்டு போய்விட்டார்.

மறுதினம் மானேஜரின் வருகையை

வெகு ஆவலோடு எல்லோரும் எதிர்பார்த்திருந்தார்கள். அந்தப் புண்ணியவான் தமக்காக எடுத்துக் கொண்ட சிரமத்தைப் பற்றி எல்லோரும் பேசிச் கொண்டு ஆனந்த சாகரத்தில் அக மகிழ்ந்தவாறு அந்த இரவைக் கழித்தார்கள்.

மறுதினம் உதயமானதும் மானேஜரின் வருகையைக் கோரியே எதிர்பார்த்திருக்கையில் அவரும் வந்து சேர்ந்தார். அவரைக் கண்ட எல்லோரும் அபாரமான சந்தோஷத்தை யடைந்து வரவேற்றார்கள். பாலா அவரை நோக்கி, “ஐயா! காயா, பழமா!” என்று குயில் போலக் கேட்டாள். மானேஜர் “அம்மா! கடவுளின் கருணை பிறந்த பிறகு காயேது! எல்லாம் பழமே! எல்லாம் ஜெயமே! இதோ இந்த பாஸ் உங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. சிற்றப்பாவுக்கு விஷயங்களை விளங்கக்

கூறி உங்களுக்கு உத்தரவை வாங்கிக் கொண்டு வந்தேன். இவ்வாரக் கப்பலிலேயே தாங்கள் பிரயாணமாகலாம். மருதப்பா! நீ எங்கள் கம்பெனியில் இதுகாறும் நடித்ததற்காகவும், உன்னுடைய ஜீவிய சரிதையையே வெகு அழகாக எழுதித் திறமையாக நடித்ததற்காகவும் நான் பெருந் தொகையை உனக்குக் கொடுக்க வேண்டியது என் கடமையாதலால் நான் கொடுக்கும் இத்தொகையைத் தட்டாது நீங்கள் பெற்றுக் கொள்ளவேண்டும்” என்று வெகு வணக்கத்துடன் சொன்னார்.

சிலர் அதிகாலையில் ஸ்நானஞ் செய்து, வித விதமான புஷ்பங்களால் பகவானை அர்ச்சித்து, வருபவர்களைத் தடபுடலாக உபசரிக்கின்றார்கள். ஆனால் அவர்களுக்கு “எப்பொழுது, யாரை எப்படிக் கெடுக்கலாம்” என்கிற யோசனை தான். இப்படிப்பட்ட

புண்ணியாத்மாக்களின் பூஜையை எப்படி பகவான் ஏற்றுக் கொள்வாரோ!

இதைக் கேட்ட மருதப்பா “எஜமானரே! தங்கள் பெருந் தன்மைக்கும், உதார குணத்திற்கும் நாங்கள் என்றும் ’நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். என்னைப்போன்ற பாப ஜென்மம் இனி யாரும் பூவுலகில் எடுக்க வேண்டாம்; அநியாயமாகக் குழந்தைப் பருவத்தில் பெற்றோரின் உரை கேளாது பெரும் சோதாக்களுடன் சேர்ந்து கோலியாடுவது, சிகரெட்டுகள் பிடிப்பது, சினிமா டிராமா முதலிய இடங்களுக்குச் செல்வது, குடிப்பது முதலியவைகளுக்குப் பணம் வேண்டுவதற்காகத் திருடுவதும்,இன்னும் குதிரைப் பந்தயம், லாட்டரிச் சீட்டு, பணங் கட்டிச் சூதாடுதல், சீட்டாடுதல் முதலிய எத்தனையோ துர்ப்

பழக்கங்களை கைக்கொண்டு கெட்டுப் போன பிள்ளைகளைக் கண்ணால் பார்த்திருப்பதோடு அவர்களால் நானும் இன்னிலைமைக்கு வந்தேன். எனக்குக் கடவுள் புத்தி, வரும்படிச் செய்தார். என்னுடைய உண்மையான ஜீவிய சரிதையை நடித்துப் பார்த்த பிறகேனும் பிள்ளைகள் கெட்டு விடாமலும், பெற்றோர்கள் அவர்களைச் சரியான வழியில் திருத்தியும் நடப்பார்களல்லவா! அந்த எண்ணத்தைக் கொண்டுதான் நான் இக்கதையை வரைந்தேன்; நானே நடித்தேன். இதற்காக நான் பணம் பெறுவது சரி இல்லை. எனினும் எங்களுடைய ஏழ்மை நிலைமையை உத்தேசித்தும், உங்கள் அன்பை நோக்கியும் நாங்கள் எங்கள் ஊருக்குச் சென்றும் திண்டாடாமல் புசிப்பதற்காகவும் வேண்டிச் சிறு தொகையை வாங்கிக் கொள்கிறேன்.

நாங்கள் ஊருக்குச் சென்றதும் ஏதேனும் ஒரு தொழிலில் அமர்ந்து என் குடும்பத்தைக் கடமையோடு காப்பாற்றுவேன், மூட்டை சுமந்தேனும், வண்டி இழுத்தேனும் காப்பாற்றுவேன். அன்றி தாங்கள் சிபார்சு செய்தால் வேறு சினிழாக் கம்பெனியிலேயே நடிக்க இசைவேன். என்னை மன்னித்து இதற்கு இணங்க வேண்டும்.” என்றான்.

நமக்கு மிகவும் ஆப்தமானவர்களிடம் பக்ஷத்திற்கொருமுறை அரை மணி நேரம்தான் பேச சந்தர்ப்பம் ஏற்படின் அவர்களோடு அநேக விஷயங்களைப் பற்றிப் பேச நினைக்கிறோம். ஆனால் அவர்களை நேரில் பார்க்கும்போது எதைப் பற்றிப் பேசுவதென்று தெரியாமல் ஏதேதோ விஷயங்களைக் குறித்துப் பேசு கையில் அரை மணி அரை நிமிடமாக ஓடிவிடுவதால், அரை மணி அரை நாளாக வாவது வளரக்கூடாதா

என்ற ஏக்கமுண்டாகின்றது.

பிறகு மானேஜர் 500 ரூபாயைக் கோமதியினிடம் கொடுத்து “அம்மா! இந்த தடவை இதை நான் செலுத்துகிறேன் எனினும் எனக்குச் சமயம் கிடைக்கும்போது நான் பார்த்துக் கொள்கிறேன். ஏதோ தோட்டத்து விஷயக் கொடுமைகளோடு எல்லாம் மறந்து விடப் போகின்றது; என் ஞாபகம் இருக்கட்டும். நான் சதா நினைத்துக் கொண்டே இருப்பேன்” என்று அவர்களிடம் வெகு நேரம் பேசிக் கொண்டிருந்து, பின்னர் விடை பெற்றுக் கொண்டு சென்றார். தங்கள் ஊருக்குப் போய்ச் சேர உத்தரவு தங்களுக்கு கிடைத்து விட்டதைப் பற்றி அவர்கள் மிக்க சந்தோஷமடைந்துப் பொங்கினார்கள். தாங்கள் கேசவனைக் காணப் போகும் நாள் என்று வரும் என்று ஏங்கித் தவித்தார்கள்.

மருதப்பா எழுதிய கதையை நடித்து

முடிப்பதற்கு அன்றும் மறுநாளும் ஆயிற்று. அதற்குள் பிரயாண சித்தமாகி விட்டார்கள். மறுதினம் கப்பல் புறப்படும் நேரம் வந்தது. கோமதி குடும்பத் துடன் சென்று கப்பலேறினாள்; மானேஜரும் அவர்களை வழியனுப்ப வந்தார், பழ வகைகளும், பலகார வகைகளும் கொடுத்தார்; அவர்கள் வெகு மரியாதையோடு மானேஜருக்குப் பலதரம் வந் தனம் செய்தார்கள். “நீங்கள் செய்த பேருபகாரத்தை என்றும் மறவோம்!” என்று நன்றி கூறினார்கள்.

கப்பலும் நகரத் தொடங்கியது. பிரிவாற்றாத விசனம் எல்லோருடைய இதயத்திலும் உண்டாகிக் கண்ணீர் வடிந்தது; கப்பலும் கண்ணிற்கு மறைந்தது. கோமதி தான் முதலில் கப்பலில் வரும் போது அடைந்த துன்பத்தையும், இப்போது குடும்பத்துடன் சந்தோஷமாகச் செல்லும் இன்பத்தையும்

பற்றிக் கூறி ஆநந்தப் பரவசமடைந்தாள்.

நமக்குப் பல தடவைகளில் பண உதவி செய்பவர்களுக்கு அவசியமான போது நாம் உதவுவதற்கில்லா அசந்தர்ப்ப மேற்படின் நாம் அதற்காக வருந்துவதுடன் அவர்கள் நம்மைப்பற்றி வித்தியாசமாக நினைத்துவிடுவார்களோ வென்றும் கவலைப்படவேண்டியிருக்கின்றது.

கப்பல் துறைமுகத்தில் வந்து நின்றது. அவர்கள் எங்லோரும் அந்த இடத்திற்குச் செல்வதென்று யோசித்தார்கள் பொன்னுசாமி நாடகக் கம்பெனிக்குச் சென்று அங்கு கேசலனைப் பார்த்து விட்டுப் பிறகு யோசிக்கலாம்" என்று நினைத்து நாடகக் கொட்டகைக்கு வர்தார்கள். அங்கிருந்த வேலையாளை நோக்கி "ஐயா! இங்கு கேசவன் என்று ஒரு சிறுவன் நடிக்கின்றானே, அவனையும் கம்பெனி

யின் சொந்தக்காரரையும் நாங்கள் பார்க்க வேண்டும். எங்கே இருக் கிறார்கள்?" என்று கேட்டான் கோமதி.

வேலையாள்:-அம்மா! நீங்கள் யார்? எதற்காகப் பார்க்க விரும்புகின்றீர்கள்? உங்கள் முகத்தைப் போலவேதான் கேசவனுக் கும் இருக்கிறது. ஆதலால் நீங்கள் அவருடைய தாயாராக இருக்குமோ! ஐயோ பாவம்! கேசவன் இராப் பகலாகப் புலம்புகின்றார். உங்களைப் பார்க்க பாக்கியம் உண்டோ இல்லையோ என்ற
சந்தேகமே அவருக்கு உண்டாகி விட்டது.- என்று அவன் முக ஜாடையில் தெரிந்து கொள்வதைக் கவனித்த கோமதி "அப்பா! நான் தான் கேசவனின் தாயார். என் செல்வன் எங்கே இருக்கிறான்? சீக்கிரம் சொல்லு" என்று பதறியவாறு கேட்டாள். இவளுடைய வாஞ்சையை அறிந்த வேலைக்காரன் மிக்க

சந்தோஷமும், ஆச்சரிய மும் அடைந்து "அம்மா! என் தாயே! நீங்கள் செய்த பாக்யமே பாக்கியம்! உங்கள் மகனை நீங்கள் விவாகக் கோலத்துடன் காணும் புண்ணியம் செய்தீர்கள், நாளைய தினம் பரிமளாவுக்கும் கேசவனுக்கும் திருப்பதியில் விவாகம். நிச்சயதார்த்தம் இன்று தான் நடக்கின்றது. வாருங்கள்; நான் அழைத்துக்கொண்டு செல்கிறேன்" என்றான், அன்றே தனி (ஸ்பெஷல்) கார் வைத்துக்கொண்டு எல்லோரும் திருப்பதிக்குச் சென்றார்கள்.
இந்த ஆநந்தமான விஷயத்தைக் கேட்ட எல்லோருக்கும் உண்டான அபார சந்தோஷத்திற்கு எல்லையுண்டா! மனம் கட்டு மீறிப் பொங்கியது.

நாம் முக்கியமான விஷயத்தைப்பற்றி யாருக்குக் கடிதமெழுதினாலும் அதன் நகல் ஒன்று கையில் வைத்திருப்பது

அதியவசியமானது. சில சமயங் களில் அசல் கடிதம் அவர்களுக்குச் சேராவிடில் நாம் நகலைக் காட்டி அவர்களுக்கு உண்மையான நிலைமையைத் தெரிவிக்க அநுகூலமாகின்றது.

விவாக வீட்டில் மேளமும், தாளமும் தடபுடல் படுகின்றது. கேசவன் திருமணக் கோலத்துடன் வீற்றிருந்தான் பரிமளா ஜகஜ்ஜோதியுடன் ஜகன்மோகன சிங்காரியாய் விளங்கினாள். கோமதி ஆவேசத்துடன் சென்று “என் கண்ணே! கண் மணியே! கேசவா! என் செல்வா!” என்று கூறிக்கொண்டே கேசவனை இறுகத் தழுவிக்கொண்டாள். நீலா, பாலா, மருதப்பா அவன் தந்தை முதலிய எல்லோரும் ஏக காலத்தில் கேசவனைக் கட்டிக் கொண்டு ஆநந்த மிகுதியால் புலம்பியபடியே “என் கண்மணியே! உன்னைத்

திருமணக்கோலத்துடன் காணச்செய்த கடவுளுக்கு அநந்தகோடி வந்தனம்.” என்று கூறினார்கள்.

இரவு பகலாக ஏக்கங்கொண்டிருந்த கேசவனுக்கு ஒரே சமயத்தில் தனது மனிதர்கள் எல்லோரையும் பார்த்த சந்தோஷத்திற்கு அளவில்லை. “அம்மா! ஒருவாய்க் கஞ்சிக்குப் பஞ்சையாயலைந்து நான் தேடிச் செல்கையில் உங்களைப் பிரிந்த நாளின் துக்க சம்பவம் என் மனத்தில் இப்போதும் நன்றாகப் பதிந்து கிடக்கின்றது. என் செல்வச் சோதரிகளே! பாலா! நீலா! அண்ணா! என் தந்தையே!” என்று பலவாறு கூறி ஆனந்த நிர்த்தனம் செய்தான்.

பொன்னுசாமி இவ்வானந்தமான காட்சியைக் கண்டு இன்பக் கண்ணீர் சிந்தியவாறு கேசவனுடைய தந்தையையும், அண்ணனையும் விசாரித்து வந்தனம்

செய்து, கோமதிக்கும் வந்தனம் செய்தார். பரஸ்பரமான ஆனந்தக் கொந்தளிப்பு அடங்குவதற்கே அரைமணியாயிற்று. பார்வதியம்மாள் வந்து சம்மந்தியம்மாளை விசாரித்து முகமன் கூறினாள். பரிமளாவின் இன்பத்திற்கோ எல்லையேயில்லை. கேசவனின் தேகம் இரட்டிப்பாகப் பூரித்தது. அன்று பூராவும். தங்கள் பிரிவைப்பற்றிப் பேசியும், பரிமளாவைக் கண்டு களித்தும் தங்களுக்கு இத்தகைய பாக்கியம் கிடைத்ததே என்கிற அபார சந்தோஷத்துடன் கோமதி

நாம் ஒருவரைப் பார்ப்பதற்காகக் கார்டு (Visiting Card) அனுப்பி அவர்களிடமிருந்து யாதொரு பதிலும் கிடைக்காவிடில், நம்மை அவர்கள் அலக்ஷியஞ் செய்துவிட்டதாக நினைக்க இடமுண்டாகின்றது. ஆனால் உண் மையை ஆராய்கையில் நடுவிலுள்ளவர்கள் தான் தாமதத்திற்குக் காரணமென்று

வெளியாகின்றது.

தன் நோயையும் மறந்தான்.. இரவியைக் கண்ட பனி போல ஆனந்தத்தின் முன்பு நோயும் பறந்தது. அவர்கள் எல்லோரும் புதிய ஆடையாபாரங்கள் தரித்துப் புதிய மனிதர்களானார்கள்.

பொன்னுசாமி கட்டு மீறிய களிப்புடன் “அம்மா! உங்கள் வயிறு செய்த பாக்கியந்தான் கேசவனுக்குக் கண்டம் நீங்கியது. அவனுக்கேற்பட்ட மாசு அகன்று 10 தினங்களே ஆயின,” என்று அவனுடைய சகலமான விவரங்களையும் கூறி, நாயுடு குற்றவாளியைப் பிடித்துக்கொடுத்துக் கேசவன் நிரபராதி என்று ரூபித்ததையும் விளக்கினார். குற்றம் செய்த மனிதனை விசாரித்ததில் தான் ஒருவனின் தூண்டுதலினால் செய்ததாகக் கூறினான், உங்கள் மருமகள் ஒரு சோதாவை வெரு

திறமையோடு ஜெயிலில் அடைப்பது போல அடைத்துவிட்டாள். நாயுடு பிடித்த குற்றவாளி இந்த மனிதனைக் காட்டினான்.

அந்த மனிதனை நாங்கள் வந்து விசாரித்ததில் அவன் பரிமளாவின் அத்தை மருமகன் என்றும் அவன் பணத்திற்காசைப் பட்டுக் கொண்டு என் கம்பெனியில் நடிக்கும் ஒருவனின் தூண்டுத லுக்கு உட்பட்டு அவன் ஆட்டி வைத்தபடி எல்லாம் ஆடிய தாயும் என்னைக் கொலை செய்யவும்,பரிமளாவை அபகரிக்கவும், என்னு
பணங்களைத் தான் அடையவும், கேசவனை அடியோடு ஒழித்து விடவும் அந்த நடிகள் தீர்மானித்து ஆள்களை ஏவி வேலை செய்வதாயும் அதில் தானும் ஒருவன் என்றும் உண்மையைக் கூறி விட்டான்.

பிறகு நடிகனைப் பிடிக்க யத்தனிக்கையில் தன் விஷயம் வெளியாகி விட்டதை யறிந்து,

நான் இனி தப்ப முடியாதென்று தெரிந்து கொண்டு,

நம்மைப்பற்றி இழிவாகப் பேசியவர்களைக் கண்டால் அவர்களோடு பேசுவோ, அல்லது பார்க்கலோ மனம் இடந்தருவதில்லை. அவர்களுக்கும் நம்மோடு பேச முகமில்லை. இந்த நிலைமையிலிருந்து விடுபட. யாராவது. மத்தியஸ்தம் செய்யவேண்டியிருக்கின்றது. ஆயினும் முறிந்த மனம் கூடுவது கஷ்டந்தான்.

தற்கொலை செய்து மாண்டதாக அவன் கடிதத்தினாலேயே தெரிந்து கொண்டோம். ஒரு சிறு கைக் குட்டையினால் இந்த விவரங்களை நாயுடு கண்டு பிடித்தார். பரிமளாவின் சாமர்த்தியத் தினால் அந்த மனிதன் கைக்குள் சிக்கினான். இந்த உளவை உரைத்த கிழவியை மட்டும் நாயுடு விடுதலை செய்து விட்டார். எப்படியோ கேசவன்

மீதிருந்த குற்றம் நிவர்த்தியானதே எனக்குப் போதும்! என்னைக் கொல்ல நினைத்தபடி கொன்றிருப்பினும் எனக்குச் சம்மதமே! மகா பாவி யொழிந்தான் என்பதாகும். என் கண்மணிகள் சந்தோஷமான வாழ்க்கை நடத்தினால் போதும்; அதுதான் என் கோரிக்கை. குற்றவாளிகளுக்குத் தண்டனை சட்டப்படிக்கு விதித்தாயிற்று. கேசவன் ஜெயம் பெற்றது உங்கள் வயிறு செய்த பாக்யம்தான் என்றார்.

அன்று முற்றும் அது விஷயமாகவே பேச்சு நடந்தது. அடுத்த நாள் யாதொரு விக்கினமுமின்றி, குறையுமின்றி சந்தோஷ மாகவும், ஆடம்பரமாகவும் விவாகம் பரிமளாவுக்கும் கேசவனுக்கும் நடந்தேறியது. பொன்னுசாமி இத் திருமணத்தை வெகு சிறப்பாக நடத்தினார். ஆயிரக்கணக்கான எழைப் பரதேசிகளுக்குப் பல விதமான

தானங்கள் வழங்கப்பட்டன. எல்லோரும் தம்பதிகளை ஆசீர்வதித்து வாழ்த்தினார்கள். விவாக மகோற்சவம் அனேக சங்கீதக் கச்சேரிகளுடன் நடந்தேறியது. எல்லோரும் திருப்பதியில் சுவாமி தரிசனம் செய்து கொண்டு தம் ஊர் திரும்பினார்கள்.

தம்பதிகளின் இன்பத்தைக் கூற வேண்டுமா! சாக்ஷாத் பார் வதியும் பரம சிவனும் போலும், லக்ஷ்மியும் நாராயணனும் போலும், வாணி விரிஞன் போலும் மனமொத்த தம்பதிகளாய் ஆநந்தக் கட லில் மூழ்கினார்கள். நீலா, பாலா, பரிமளா, சகுந்தலா ஆகிய நால்வரும் தேனும் பாலும் போல நேசிகளாக விளையாடுவதைத் தவிர வேறு வேலை இல்லை; பொன்னுசாமியே எல்லாக் குடும்பங்களையும் நிர்வகிக்கும் தலைவரானார். இந்த ஆனந்தத்தில் நாயுடுவும் பங்கெடுத்துக் கொண்டார்.

இன்று கட்டாயம் கடிதம் எழுதுவதாக ஒருவருக்கு வாக்குக் கொடுத்தால் அவர்கள் மறுதினம் அதை ஆவலுடன் எதிர்பார்த்திருப்பார்கள். ஆனால் நம்மை மீறி ஏதாவது தடங்கல் ஏற்பட்டு அக்கடிதம் போய்ச்சேரத் தாமத முண்டாயின் அதனால் அவர்கள் நாம் வார்த்தை தவறிவிட்டதாக நினைக்கிறார்கள்.

இரண்டொரு மாதங்களாயின. கேசவலுக்கு ஒரு கடிதம் வந்தது; அது பின் வருமாறு :-

”அன்புள்ள கேசவனுக்கு அனேக ஆசீர்வாதம். க்ஷேமம்.க்ஷேமத்திற்கு எழுதவும், நான் இக் கடிதத்தை வெட்கத்தை விட்டு உனக்கு எழுதுவகில் நீயே வியப்புறலாம். ஆனால் காதலின் கனிந்த தன்மையை பரிமளாவின்பால் அனுபவித்தறிக்க அனுபவசாலியாகையினால் இதை உனக்கே

நான் எழுதுகிறேன். என்னைப் பற்றி நீ நேரில் தெரிந்திராவிடி னும் உன் பெற்றோர் மூலம் தெரிந்து கொண்டிருக்கலாம். உன் கல்யாண விமரிசையைப் பத்திரிகையில் கண்டு களித்தேன். உன் பெற்றோரை நீ அடைந்த ஆநந்தத்தைப் படித்துப் பூரித்தேன். கேசவா! என்னுடைய மனத்தை உன் சகோதரி பெருங் கொள்ளைக்காரியாய்க் கவர்ந்து விட்டாள். நீயும் உன் பரிமளாவும்தான் அந்தக் கொள்ளைக்காரியை என் வசம் பிடித்துத் தருவதற்குச் சரியான துப்பறியும் வீரர்கள் எனது எண்ணி இதை எழுதுகிறேன்; பாலாவும் சம்மதித்தால்தான் தான் சந்தோஷமடையக் கூடும். இல்லையேல் என் விதிப்படிக்கு ஆகட்டும்; என் மனத்திலுள்ளதை உன்னிடம் தெரிவிக்கத் துணிந்தது போல மற்ற யாரிடமும் துணியவில்லை. இந்த கடி தத்திற்குப் பதில் நான் தந்தியை எதிர் பார்க்கிறேன். நான்

எழுதியது குற்றமாயின் மன்னித்து இதை அடியோடு மறந்து விடு.
இன்ஙனம் ஶ்ரீ ராமன்
சினிமா கம்பெனியின் மானேஜர்.

அதைப் படிந்த கேசவன் பரமானந்தமடைந்து, பரிமளா வுக்குக் கடிதத்தைக் காட்டி “கண்ணே! பார்த்தாயா! உன்னால்தான் இக் காரியம் முடிய வேண்டுமாம்” என்று நகைத்தவாறு சொன்னான்.

இது கேட்ட அம் மின்னிடையாள் ”நாதா! இந்த விஷயத்தை நான் எதிர் பார்த்தேதான், பாலாவுடன் விவாக விஷயமாய் நாள் விளையாட்டுப் பராக்கில் பேசுகையில் அவளது மனப் போக்கை அறிந்து கொண்டேன். இதைத் தங்கள் தாயிடம் தெரிவிக்க என்ணினேன். கடிதமே வந்து விட்டது, பழம் நழுனிப் பாலில்

நமது மனத்தில் ஒருவித ஆவேசமுண்டாகி வக்கனையாக எழுதிக் கொண்டேயிருக்கையில் யாராவதுவந்து தடை செய்துவிடின் அந்த உணர்ச் சிகள் மாறிவிடுவதுடன், விஷயங்களும் மறந்துவிடுகின்றன. அப்புறம் மூளையை எவ்வளவு உடைத்துச்கொண்டாலும் முன்போன்ற உற்சாக முண்டாவதில்லை. அது மற்றவர்களுக்குத் தெரிகின்றதா?

விழுந்தாக ஆயிற்று. உங்களுடைய சகோதரியும் அன்னையும் அதோ வருகிறார்கள்; நேரில் சொல்லி விடுங்கள்” என்றாள்.

அதே நிமிடத்தில் கோமதியும், பாலாவும் அங்கு வந்தார்கள். கேசவன் பாலாவிடமே கடிதத்தைக் கொடுத்து விட்டுக் கோமதியிடம் விஷயத்தைத் தெரிவித்தான். பாலா கடிதத்தைப் படித்து விட்டு மிக்க திருப் தியும்

சந்தோஷமும் அடைந்து தன் சம்மதத்தைத் தெரிவித்தாள். பிறகு எல்லோரும் கூடி யோசித்து விவாகத்திற்கு நிச்சயம் செய்து ஸ்ரீராமனுக்குத் தந்தி யடித்து விட் டார்கள். நீலாவுக்கும் சகுந்தலாவுக்கும் இப்போது விவாகம் வேண்டாம்; இருவரும் நன்றாகப் படித்து டாக்டர் பரீக்ஷை பாஸ் செய்ய வேண்டுமென்று பிரியப்பட்டதால் அவர்களை அதே வழியில் செல்ல விட்டார்கள்.

தந்தியைக் கண்டு உள்ளங் களித்த ஸ்ரீராமன் விவாக சன்னத்டன் வந்து சேர்ந்தான். அந்த விவாகமும் விமரிசையாக பொன்னுசாமியினாலேயே நடத்தப்பட்டது. விவாகத்தையே நாடா மருதப்பா துறவி போலாகி விட்டரன். தம்பதிகள் தேனும் பாலும் போல வெகு அன்யோன்யமாயும், பேரானந்தத்தில் மூழ்கியவர்களாயும் பெரியோர்களை மகிழ்விக்கப் புத்திர

செல்வங்களை ஈன்று கொடுத்து, அபாரமான சந்தோஷத்தில் துளைந்து வருகின்றார்கள். பொன்னுசாமி பரிமனவல்லியின் குழந்தையின் மோகத்தில், வாஞ்சையில் கட்டுப்பட்டு அவர் யாத்திரையையும் மறந்து குழந்தையே குல தெய்வமென்று எண்ணி விட் டார். நாடகக் கம்பெனியும் கேசவனின் பார்வையில் நடந்து கொண்டே வருகின்றது. இன்னமும் ஆயிரக் கணக்கான எழைகளுக்கு தருமங்கள் கம்பெனி மூலம் வழங்கப் பட்டு வருகின்றன.

நன்றிக்கு வித்தாகு நல்லொழுக்கந் தீயொழுக்க
மென்று மிடும்பை தரும் - திருக்குறள்.

சுபம்!

சுபம்!!

சுபம்!!!

“பரிமளகேசவன்” முற்றிற்று

ஓம் தத்சத்

ஒரு விஷயம் அச்சிட்டு வெளியான பிறகு சிலர் பார்த்தால் “நன்றாக இருக்கின்றது” என்கிறார்கள். அதையே எழுதும்போது பார்க்க நேரிட்டால் வேறுவித அபிப்பிராயம் உண்டாகின்றது, இது வீடு கட்டும்போது பார்ப்பதை விடக் கட்டியான பிறகு பார்ப்பதுபோல விருக்கின்றது.

**தொலை நோக்கு – Vision**

தமிழ் மொழி மற்றும் இனக்குழுக்கள் சார்ந்த மெய்நிகர்வளங்கள், கருவிகள் மற்றும் அறிவுத்தொகுதிகள், அனைவருக்கும் கட்டற்ற அணுக்கத்தில் கிடைக்கும் சூழலை உருவாக்குதல்.

**பணி இலக்கு – Mission**

அறிவியல் மற்றும் சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கு ஒப்ப, தமிழ் மொழியின் பயன்பாடு வளர்வதை உறுதிப்படுத்துவதும்,

அனைத்து அறிவுத் தொகுதிகளும், வளங்களும் கட்டற்ற அணுக்கத்தில் அனைவருக்கும் கிடைக்கச்செய்தலும்.

### எமது பணிகள்

- **கணியம் மின்னிதழ்** kaniyam.com
- கணிப்பொறி சார்ந்த கட்டுரைகள், காணொளிகள், மின்னூல்களை இங்கு வெளியிடுகிறோம்.
- **கட்டற்ற தமிழ் நூல்கள்** FreeTamilEbooks.com
- இங்கு யாவரும் எங்கும் பகிரும் வகையில், கிரியேட்டிவ் காமன்ஸ் உரிமையில், தமிழ் மின்னூல்களை இலவசமாக, அனைத்துக் கருவிகளிலும் படிக்கும் வகையில் epub, mobi, A4 PDF, 6 inch PDF வடிவங்களில் வெளியிடுகிறோம்.

- தமிழுக்கான கட்டற்ற மென்பொருட்கள் உருவாக்கம்
- தமிழ் ஒலியோடைகள் உருவாக்கி வெளியிடுதல்
- விக்கி மூலத்தில் உள்ள மின்னூல்களை பகுதிநேர/முழு நேரப் பணியாளர்கள் மூலம் விரைந்து பிழை திருத்துதல்
- OpenStreetMap.org ல் உள்ள இடம், தெரு, ஊர் பெயர்களை தமிழாக்கம் செய்தல்.

மேற்கண்ட திட்டங்கள், மென்பொருட்களை உருவாக்கி செயல்படுத்த உங்கள் அனைவரின் ஆதரவும் தேவை. உங்களால் எவ்வாறேனும் பங்களிக்க இயலும் எனில் உங்கள் விவரங்களை kaniyamfoundation@gmail.com க்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்.

**வெளிப்படைத்தன்மை**

கணியம் அறக்கட்டளையின் செயல்கள், திட்டங்கள், மென்பொருட்கள் யாவும் அனைவருக்கும் பொதுவானதாகவும், முழுமையான வெளிப்படைத்தன்மையுடனும் இருக்கும். https://github.com/KaniyamFoundation/Organization/issues இந்த இணைப்பில் செயல்களையும், https://github.com/KaniyamFoundation/Organization/wiki இந்த இணைப்பில் மாத அறிக்கை, வரவு செலவு விவரங்களுடனும் காணலாம்.

கணியம் அறக்கட்டளையில் உருவாக்கப்படும் மென்பொருட்கள் யாவும் கட்டற்ற மென்பொருட்களாக மூல நிரலுடன், GNU GPL, Apache, BSD, MIT, Mozilla ஆகிய உரிமைகளில் ஒன்றாக வெளியிடப்படும். உருவாக்கப்படும் பிற வளங்கள், புகைப்படங்கள், ஒலிக்கோப்புகள், காணொளிகள், மின்னூல்கள், கட்டுரைகள்

யாவும் யாவரும் பகிரும், பயன்படுத்தும் வகையில் கிரியேட்டிவ் காமன்சு உரிமையில் இருக்கும்.

**நன்கொடை**

உங்கள் நன்கொடைகள் தமிழுக்கான கட்டற்ற வளங்களை உருவாக்கும் செயல்களை சிறந்த வகையில் விரைந்து செய்ய ஊக்குவிக்கும்.

பின்வரும் வங்கிக் கணக்கில் உங்கள் நன்கொடைகளை அனுப்பி, உடனே விவரங்களை kaniyamfoundation@gmail.com க்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்.

**Kaniyam Foundation**

**Account Number : 606 1010 100 502 79**

**Union Bank Of India**

**West Tambaram, Chennai**

IFSC – UBIN0560618

Account Type : Current Account